# அலைகள் 60

# ALAIKAL 60



வ.சிவராசா - ஜேர்மனி

1953 - 2013

60 ஆண்டுகள் அனுபவப் பகிர்வுகள்

# வ. சிவராசா - ஜேர்மனி





வெளியீடு
தமிழ் எழுத்தாளர் சங்கம் - ஜேர்மனி

# நூல் தரவு

நூலாக்கம்: ஆசிரியர் வ.சிவராசா
முதற்பதிப்பு: ஆகஸ்ட 2013
பதிப்புரிமை: தமிழ் எழுத்தாளர் சஞ்கம் - ஜேர்மனி
வெளியீடு: தமிழ் எழுத்தாளர் சங்கம் - ஜேர்மனி
அட்டைப்படம்: செல்வன். சிவாஸ்கர் சிவராசா - லண்டன்
நூல் வடிவமைப்பு: செல்வன். சிவகாந்த் சிவராசா - ஜேர்மனி
நூல் வடிவமைப்பு: திருமதி. சிவதர்சினி பிராங்ளின் - ஜேர்மனி

# Alaikal Arupathu

Autor: V.Sivarajah
Erste Auflage: August - 2013
Verlagsrecht: Tamilischer Schriftsteller Verein - Germany
Herausgeber: Tamilischer Schriftsteller Verein - Germany
Umschlaggestaltung: S.Sivasgar - London
Layout: S.Sivakanth - Germany
Layout: S.Sivatharsini - Germany

தொடர்புகளுக்கு:-

V. Sivarajah
Am Windhövel - 18a
47249 Duisburg
Germany
Tel: +49 (0) 203 807 3898
E.mail: v.sivarajah@arcor.de

Germany - 31.08.2013

# காணிக்கை!...

என்னைப் படைத்த என் தாய்-தந்தை - அமரர்கள் வயிரமுத்து-தங்கம்மா தம்பதிகளுக்கு இம்மலர் காணிக்கை!...





# இம்மலரோடு இணைந்தவர்கள்

திரு. பொ.சிறீஜீவகன் - ஜேர்மனி

திரு. அம்பலவன்.புவனேந்திரன் - ஜேர்மனி

திரு. புத்திசிகாமணி - ஜேர்மனி

திரு. விக்னேஸ்வரன் - ஜேர்மனி

திரு. ப.பசுபதி - ஜேர்மன்

திரு. மு.க.சிவகுமாரன் (வெற்றிமணி) - ஜேர்மனி

திரு. க.பொன்னுத்துரை - ஜேர்மனி

திரு. கி.பரிமளராசா - ஜேர்மனி

திரு. குலநாயகம் - ஜேர்மனி

திரு. தர்மகுலசிங்கம் - ஜேர்மனி

திரு. கண்ணன் (குரல்சஞ்சிகை) - ஜேர்மனி

திருமதி. கலைவாணி.ஏகானந்தராசா - ஜேர்மனி

திருமதி. மீனா.சிவலிங்கம் - ஜேர்மனி

திருமதி. கீதா.பரமானந்தன் - ஜேர்மனி

திருமதி. வசந்தா.ஜெகதீசன் - ஜேர்மனி

திருமதி. கெங்கா.ஸ்ரான்லி - ஜேர்மனி

திருமதி. கௌசி.சிவபாலன் - ஜேர்மனி

திருமதி. கலா.மகேந்திரன் - ஜேர்மனி

திருமதி. ஜெயா.நடேசன் - ஜேர்மனி

திருமதி. சுந்தராம்பாள்.பாலச்சந்திரன் - ஜேர்மனி

செல்வன். பிரணவன்-யோகராசா - ஜேர்மனி

செல்வன். ராகுல்-குமரன் - ஜேர்மனி

செல்வி. நந்தனா.குமரன் - ஜேர்மனி

ரூத் மிஸன் - ஜெயபுரம் - கிளிநொச்சி

மாற்றுத் திறனாளிகள் மறுவாழ்வு நிலையம்-வன்னி

ஸ்ரீ சண்முகா மகளிர் இல்லம் - திருகோணமலை

ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அருளகம் - வவுனியா

யாழ்-நாவற்குழி மகாவித்தியாலயம்

யாழ் நாவற்குழி காந்தி சனசமூக நிலையம்

திரு. வயிரமுத்து.நடராசா - பிரித்தானியா

திரு. வயிரமுத்து.சீனிவாசன் - பிரித்தானியா

திருமதி. நவஜோதி.யோகரட்ணம் - பிரித்தானியா

திரு. முல்லை அமுதன் - பிரித்தானியா

திரு. வேலணையூர் பொன்னண்ணா - டென்மார்க்

திரு. க.அருந்தவராசா - வவுனியா

திரு. தேவராஜா - கொழும்பு

திரு. மார்க்கண்டு - கொழும்பு

செல்வன். பிரியங்கன் - கிளிநொச்சி

செல்வி. சுஜீவா - கிளிநொச்சி

செல்வி. தர்ஷிகா - கிளிநொச்சி

# என்னுரை

என்னைப் பெற்றெடுத்த தந்தை-தாயாரைத் தொழுது, எனக்குக் கல்விதந்த ஆசான்களை வணங்கி, என்னை வாழ வைத்துக்கொண்டிருக்கும் தாய் மொழியாம் இன்பத் தமிழில் நனைந்து, என் உயிர் காக்கும் இப் பூமித்தாய்க்கு நன்றிகூறி என் உரையைத் தொடர்கின்றேன்.இந்த அறுபது ஆண்டுகாலப் பகுதியில் என் வாழ்நாளில் படித்தும் படியாததும், கண்டதும் காணாததும், வாழ்வியல் அனுபவங்களையும் வரலாற்றுப் பதிவுகளையும் தொகுத்து நூல் உருவில் பதிவாக்குவதில் ஈடுபட்டிருக்கிறேன். என் வாழ்வியல் வரலாற்றை, வரலாற்று பதிவுகளை நானே எழுதவேண்டிய சூழலில் உலகம் மிக வேகமாக ஓடிக்கொண்டிருக்கிறது.

அறுபது ஆண்டு கால வாழ்வில் பல பருவகாலங்களைத் தாண்டி வந்திருக்கின்றேன். இன்பம்-துன்பம், கவலை-சந்தோஷம், வெற்றி-தோல்வி, இலாபம்-நட்டம், புகழ்ச்சி-இகழ்ச்சி, உயர்வு-தாழ்வு என வாழ்வியலின் பல பக்கங்களையும் கண்டு அனுபவித்துப் பெற்ற விடயங்களைப் பதிவாக்குவதில் ஒரு முயற்சியே இந்த மலராகும். இன்றைய புலம்பெயர் அவசர இயந்திர வாழ்க்கை முறையில் காலம் விரைவாகச் சுழல்கின்றது. நம் வயதும் ஓடிக்கொண்டிருக்கிறது. பிறந்த தாயகத்தில் முப்பது ஆண்டுகள் வாழ்ந்துவிட்டு புலம்பெயர்ந்து ஜேர்மனியில் முப்பது வருடங்கள் வாழ்ந்து 31.08.2013 அன்று எனது 60வது வயது நிறைவை நினைத்து அகம் மகிழ்ந்து நினைவுகளைப் பதிவாக்குகின்றேன்.

அறுபது வருடகால அனுபவங்களை உங்களோடு பகிர்ந்துகொள்ளும் நோக்கில் "அலைகள் அறுபது" என்னும் பெயரில் நூல் ஒன்றை எழுதி வெளியிட்டு உங்கள் முன் தவழவிடுகின்றேன். படித்துப்பாருங்கள். பிடித்தவற்றை உங்கள் நட்புக்களுடன் பகிர்ந்துகொள்ளுங்கள்...விமர்சனங்களை என்னோடு பகிர்ந்துகொள்ளுங்கள்... என்றும் உங்கள் அன்போடு வாழும் இவன்!...

வ.சிவராசா

'எல்லாப் படைப்புக்களும் ஆண்டவனுடைய குடும்பம். தனது குடும்பத்தார்க்கு நலஞ்செய்வோனே எல்லாப்படைப்புக்களிலும் ஆண்டவனுக்கு அதிக விருப்பம்.'

# என் தாய்!...



பத்துமாதம் கருச்சுமந்து இரவு பகலாய் விழித்திருந்து தன் பசி பொறுத்து என்பசி தீர்த்து தன் இரத்தைத்தைப் பாலாக்கி எனக்குத் தந்தருளியவள் என் முதல் தெய்வம் என் தாயவளே!...என்கழிவுகளை நீக்கி என்னைச் சுத்தம் செய்து அழகுபடுத்தி தாய்த்தமிழையும் ஊட்டி இப்பூவுலகில் தவளவிட்ட என்தாய் என் தெய்வமே. அவளின் பெயர்தான் தங்கம்மா. அழியாத புகழ் பெற்று விலைமதிப்புக் கூடிய தங்கத்தைப் போல் என் தாயவளும் தங்க மனசு படைத்தவளே. தான் பெற்ற செல்வங்களோடு என்னையும் வளர்த்தெடுத்து கல்வியூட்டி மனிதனாக்கி திருமண பந்தத்தில் இணைய வைத்து இந்த உலகின் முதல் வழிகாட்டியாக எனக்கு ஒளி தந்தவள் என் தாயவளே.

தந்தையின் விருப்பு-வெறுப்பு, இன்ப-துன்பங்களில் பங்கு கொண்டு பிள்ளைகளை வளர்த்தெடுத்து நல்ல நிலைக்கு ஆக்கி வைத்த அந்தத் தங்கத்தின் கை, கால் எனக்காக எவ்வளவு காலம் உழைத்திருக்கும். 1920ம் ஆண்டில் பிறந்து 78 ஆண்டுகள் வாழ்ந்தபின் 1998ல் காலமானார். குடும்பமென்றால் என்ன...சமூகம் என்றால் என்ன...யார்...யாருடன் எப்படிப் பழக வேண்டும் என்ன... எப்போ... எப்படிச் செய்ய வேண்டும் என்னும் பல வாழ்க்கைப் பாடங்களை நான் முதல் அவரிடமிருந்தே கற்றுக்கொண்டேன். எங்கள் ஊரில் ஏதும் தீமையான காரியம் நடந்துவிட்டால் அவர் பெரிதாக அழுது புலம்பாமல் முதல் அவர் அந்த வீட்டின் துக்கத்தால் தோய்ந்திருப்பவர்களின் பசி ஆற்றும் பணியினில் ஈடுபடுவார். அதாவது தன்பிள்ளைகளையும் மருமக்களையும் அழைத்து பெரும் தொகையான உணவு, தேநீர் தயாரித்து அவர்களின் பசியைப் போக்குவதிலேயே குறிப்பாக இருப்பார். அந்தக் காரியம் முடியும் மட்டும் இரண்டு மூன்று நாட்களுக்கு அவர்களின் பசியைப் போக்குவதிலேயே மும்முரமாக ஈடுபடுவார். சிறுவயதில் இளவயதில் அவரின் இச்செயலை நான் பார்த்து வளர்ந்ததால் தான் எங்கள் குடும்பத்தில் பலர் பொதுப் பணி செய்வதில் முன்னின்று உழைத்து வருகிறார்கள். தாயாரின் வழிகாட்டல்கள் தான் என்னையும் இந்தச் சமூகப்பணிகளுக்கு அத்திவாரம் இட்டன என்று கருதுகின்றேன்.

எங்கள் குடும்பத்தின் மந்திரியாக, சிறந்த நிர்வாகியாக, சமூக சேவையாளராக, பொதுத் தொண்டராக விளங்கிய அவரை எனது ஊரவர் பலர் "சிறிமா" (சிறிமா பண்டாரநாயக்கா) என்றும் பட்டப் பெயர் சொல்லி அழைப்பார்கள். ஒளிவிளக்காக, கலங்கரை விளக்காக என்றும் என் மனதில் பதிந்துவிட்ட என் தாயவள் தங்கம்மா என்றும் எனக்குக் கிடைத்த விலைமதிக்க முடியாத பொக்கிஷமே!... என் வாழ்நாளில் தாயவளின் வழிகாட்டல் மிகப்பெரும் இடத்தைப் பிடித்துக்கொண்டது என்றே எப்போதும் கூறுவேன்...

# என் தந்தை



என் தந்தையின் பெயர் வயிரமுத்து. உலோகங்களில் மிகக் கடினமானது வைரம் எனச் சொல்லப்படுகின்றது. என் தந்தை அவ்வளவு மன வலிமையுள்ளவர் அல்ல. ஆனால் உடல் வலிமையுள்ளவர். வைரம் செறிந்த அழகான கட்டுடல். நிறம் சிறிது குறைவாக இருந்தாலும் அவரது உள்ளமோ மிகவும் இளகிய மனம் படைத்தவர். அவர் துக்கத்தை விட சந்தோஷப்படும் வேளைகளில்தான் அதிகம் கண்ணீர் சிந்தியிருப்பதை நான் கண்டிருக்கிறேன். 1912ம் ஆண்டு பிறந்த அவர் அந்தக் காலத்திலேயே காதலித்துத்தான் எனது தாயாரை மணம் முடித்திருக்கிறார். சீரும் சிறப்போடும் உழைத்து வாழ்ந்த எனது பெருமகன் 1985ம் ஆண்டு தனது 73வது வயதில் காலமானார்.

எனக்கு உயிர் தந்த தந்தையார் உடல் உழைப்பையே மூலதனமாகக் கொண்டிருந்தார். வறிய குடும்பத்தில் பிறந்த அவர் ஒரு கடும் உழைப்பாளியாவர். தான் பெற்ற பிள்ளைகளையும் உழைத்து வாழ வேண்டும் என வழிகாட்டியாக நின்றார். கல்வியில் அன்றைய காலத்தில் பெரிதாகப் படிக்காவிடினும் தனது இளவயதில் கூத்து, நாடகம் என்பவற்றில் நடித்திருக்கிறார். பாடியிருக்கிறார். இப்படியாகவே இவரின் கலை வாழ்வு இருந்திருப்பதை நான் அறிவேன்.

எனது தந்தையார் ஒரு விவசாயி, தோட்டக்காரன், கமக்காரன். 1965ம் ஆண்டு வன்னியில் எங்களுக்கு நான்கு ஏக்கர் அரசகாணி கிடைத்தது. அந்தக் காணியிலுள்ள காடுகளை வெட்டி, வேருடன் மரங்களையும் பற்றைகளையும் பிடுங்கி அகற்றித் துப்பரவு செய்து நெல்வயல்களாகவும் தோட்டங்களாகவும் மாற்றி வளங்கொழிக்கும் பூமியாக மாற்றிவிட்டார். வீட்டின் வருவாயைப் பெருக்கினார். இதனால் எங்கள் குடும்பம் பசி பட்டினி அறியாமலும் வாழ்ந்திருப்பதை நான் இப்பொழுது உணர்ந்து கொள்கிறேன். இவரின் இரத்தம் சிந்திய கடின உழைப்பால் வறுமையைப் போக்கினார். 1980ஆண்டுவரை வன்னியில் வாழ்ந்த அவர் கடும் நோய்வாய்ப்பட்ட படியால் திரும்ப பிறந்த ஊருக்கே வந்து தனது இறுதிக்காலம்வரை வாழ்ந்தார்.

தந்தை அவர்களை ஊரிலும் அயலூர்களிலும் வயிரமுத்து என்று கூறுவது மிகக் குறைவு. எல்லோரும் "துரை" என்றே அன்பாகவும் மரியாதையாகவும் அழைப்பார்கள். "கடும் உழைப்பிற்கு இவரே நிகர்" என்று பலருக்கு வழிகாட்டியாக விளங்கிச் சென்ற என் தந்தை எங்கள் குடும்பத்தின் ஆணி வேராக, விருட்சமாக வாழ்ந்து வழிகாட்டியிருக்கின்றார். சிறுவயதில் என்னைக் கண்டித்து வளர்த்த முறைகளையும் எண்ணும் போது இப்போதும் மிகவும் சந்தோஷப்படுகின்றேன். இன்று அவரின் சந்ததிகள் உலகெல்லாம் புகழ்பூத்து நிற்பது மிகவும் பெருமையான விடையமாகும்.

# என் மூத்த அண்ணர்...தியாகராசா

என் தந்தைக்கு அடுத்த படியாக எங்கள் குடும்பத்தின் உயர்ச்சிக்கு அரும்பாடுபட்டு உழைத்தவர். என்றும் உறுதுணையாக நின்றவர் எனது மூத்த அண்ணர் தியாகராசா அவர்களே. தியாகு என்று பலராலும் அழைக்கப்பட்ட இவர் பெயராலும் குணத்தாலும் ஒரு தியாகச் செம்மலே. தான் 8ம் வகுப்புவரை படித்துவிட்டு தனது சகோதரர்களை நல்ல நிலைக்குக் கொண்டுவரவேண்டும் என தந்தையாருடன் சேர்ந்து உழைத்து வறுமையைப் போக்கினார். சகோதரங்களை நன்றாக வாழ வகுத்துச் சென்றார்.

1934ம் ஆண்டு பிறந்த இவர் தனது 74வது வயதில் 2005ம் அண்டு காலமானர். வெளி நாடுகளில் வசிக்கும் (கனடா, பிரான்ஸ், பிரித்தானியா, சுவீஸ்) தனது பிள்ளைகளைப் பார்த்து மகிழ்ந்தார். அப்போது நோய்வாய்ப்பட்டிருந்தார். அந்தப் பொழுதுகளில் சொல்லுவார் தான் பிறந்த பொன்னான பூமியில் தான் இறப்பேன் என்று. அவர் கூறியது போல் அவரின் ஆசையும் நிறைவேறியது. தாயகம் சென்று சிலகாலம் ஊரோடும் உறவோடும் வாழ்ந்த பின்பே அவரின் உயிர் பிரிந்தது.

நாவற்குழி மகாவித்தியாலயத்தில் கல்விகற்ற இவர் சிறுவனாக இளைஞனாக வாழ்ந்த காலப்பொழுதுகளில் சிறந்ததொரு விளையாட்டு வீரனாகப் பரிணமித்திருக்கிறார். இவர் ஒரு பாடகர். கலைத்துறையில் காவடி ஆட்டக்காரர். பின்னாளில் காவடி பயிற்றுனராகவும் கடமை புரிந்து பல மாணாக்கர்களுக்குக் காவடி ஆடப் பயிற்றுவித்திருக்கிறார். அண்ணாவியார் என்று யாவரும் அழைப்பார்கள்.

இவரிடம் ஒரு மிகச்சிறப்பான விடையத்தை கண்டிருக்கிறேன். தான் திருமணம் செய்து தனிக்குடித்தனம் மனைவி பிள்ளைகளுடன் வாழ்ந்த போதெல்லாம் ஒவ்வொரு நாளும் எங்கள் வீட்டுக்கு வந்து தாயாரின் முகம்கண்டு கதைத்துப் பேசி மகிழ்ந்துவிட்டுத்தான் தூக்கத்திற்குப்போவார். அப்படியாகத் தாய் - மகன் உறவுக்கு எடுத்துக் காட்டாகவே வாழ்ந்து காட்டினார்.

தனக்குப் பின் பிறந்த சகோதரர், சகோதரிகளின் கல்வி, தொழில், திருமணம், நல்வாழ்வு எனச் சகலருக்கும் வழிகாட்டி வாழ்ந்தார். அவரின் ஆற்றல் அனுபவம் சேவைக்காக சாவகச்சேரி பனை, தென்னைவள அபிவிருத்திச் சபையின் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் பதவி வகித்து தென்மராட்சிப் பிரதேச மக்களின் மதிப்பையும் பெற்றிருக்கிறார். தியாகத்தின் சிகரமாகவும், அன்பின் அடையாளமாகவும், விளங்கிய தியாகச் செம்மலின் வழிகாட்டலும் ,முன்மாதிரியும் பொறுமையும், செயற்பாடுகளும், எனக்கு வாழ்வில் ஒரு பாடமாகவே அமைந்தது என்றே கூறுவேன்.

# என் இரண்டாவது அண்ணர்...நடராசா (J.P.)

இவர்தான் எங்கள் ஊரிலிருந்து முதன்முதல் பட்டணம் சென்று யாழ் மத்திய கல்லூரியில் கல்விகற்றவர். யாழ் நாவற்குழி மகாவித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வி, சாவகச்சேரி றிபேக் கல்லூரியில் இடைத்தரக்கல்வியையும் பின்னர் உயர்வகுப்புவரை யாழ் மத்திய கல்லூரியிலயும் படித்து கொழும்பில் அரச உத்தியோகம் பார்த்தவர். 1958ம் ஆண்டு இனக்கலவரத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்டு. வேலையையும் விட்டு ஊர் வந்து சேர்ந்தவர்.

இவர் எங்கள் வீட்டிற்கு மட்டுமல்லாது ஊருக்கும் அயலூர் மக்களுக்கும் ஒரு வழிகாட்டியாகச் செயற்பட்டிருக்கிறார். சகோதரர்- சகோதரர்களின் கல்வி, வேலை, திருமணம் எல்லாவற்றையும் முன்னின்று பார்த்து குடும்பத்தின் உயர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் பாடுபட்டவர். 1936ம் ஆண்டில் பிறந்த இவர் 75 வயது தாண்டி தற்போது தனது பிள்ளைகளுடன் பிரித்தானியாவில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்.

எங்கள் ஊரவரின் கல்வி, விளையாட்டு, பொதுச்சேவை, அரசியல், சமூக முன்னேற்றத்தின் ஆரம்ப கர்த்தாவாகச் செயற்பட்டவர். எங்கள் ஊர் 60 ஆண்டுகள் பழமை வாய்ந்த "காந்தி" சனசமூக நிலையத்தின் தோற்றத்திற்கு அத்திவாரமிட்டவர். ஆரம்ப மூலகர்த்தாவும் இவரே. சமூக ஏற்றத்தாழ்வுப் போராட்டங்களில் முன்னின்று உழைத்த இவர் இலங்கையின் பல தமிழ், சிங்கள, இஸ்லாமிய நண்பர்களையும் அரசியலாளர்களையும் நண்பர்களாக ஏற்றுக்கொண்டு தன் பொதுப்பணிகளை முன்னெடுத்திருக்கிறார்.

வன்னிப்பிராந்திய முல்லைத்தீவு மாவட்டத்தின் பாண்டியன்குளம் கமத்தொழில் சேவை நிலையத்தின் தலைவராகவும், துணுக்காய்ப் பிரதேச கூட்டுறவுச் சங்கத்தின் உபதலைவராகவும் கடமைபுரிந்திருக்கிறார். குறிப்பாக வடபிரதேசத்தில் பல துறைகளில் அறியப்பட்டார். இவர் 1977ம் ஆண்டு பாராளுமன்றப் பொதுத் தேர்தலிலும் கோப்பாய்த் தொகுதியில் போட்டியிட்டு சுமார் 8.000 அதிகமான வாக்குகளைப் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இப்படி இவரைப்பற்றி எழுதுவதென்றால் இவருக்கு ஒரு புத்தகம் எழுதலாம் என்பது எனது கருத்தாகும். தற்போது அகில இலங்கை சமாதான நீதவானகவும் கடமையாற்றுகின்றார்.

ஊரிலும் அயல்கிராமங்களிலும் ஏன் வடபகுதியிலும் நன்கு பலரால் அறியப்பட்டவர், பேசப்பட்டவர். இவரே எனது நல்வாழ்வுக்கு வழிகாட்டியாகவும் எங்கள் குடும்பத்தின் மாலுமியாகவும் இருந்து செயற்பட்டவர் என்பதை மகிழ்வோடு கூறுவேன்.

## எனது மூன்றாவது அண்ணர்...சரவணமுத்து. (J.P.)

இவரின் பெயரோடு "முத்து" அடங்கியுள்ளது. இவரின் தோற்றம், குண இயல்பு, அன்பு, பக்தி யாவும் முத்துப் போன்று பெறுமதியானதாகும். இளவயதில் வறுமை, நோய் காரணமாக உயர் படிப்பை மேற்கொள்ளாவிடினும். இறுதிக்காலத்தில் சமாதான நீதவான் என்ற அதி உயர் பதவி பெற்று சேவைபுரிந்துவிட்டு மறைந்துவிட்டார். 1938ம் ஆண்டு பிறந்த இவர். 1985ல் யாழ் பஸ் நிலையத்தில் இராணுவத்தினரின் துப்பாக்கியால் சுடப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

கடமையில் கண்ணும் கருத்துமாகச் செயற்பட்ட இவர் 20 ஆண்டுகளாக இலங்கைப் போக்குவரத்துச் சபையின் சாரதியாக முல்லைத்தீவு, யாழப்பாணம் போக்குவரத்துச் சாலைகளில் கடமை புரிந்திருக்கிறார். கடமையும் பக்தியும் ஒழுக்கமும் சேவையும் நிரம்பிய இவர் ஒரு படிக்காத மேதை என்றே சொல்ல வேண்டும் இவரின் திறனைக்கண்ட இலங்கை அரசு இவருக்கு சமாதான நீதவான் என்ற பட்டத்தையும் வழங்கிக் கௌரவித்தது. இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வரலாற்றில் சமாதான நீதவான் என்ற பட்டத்தை முதன் முதலில் பெற்றவர் என்ற சாதனையை நிலைநாட்டி ஊருக்கும் தமிழருக்கும் புகழ்சேர்த்திருக்கிறார்.

நமது ஊரில் கோவில், விழாக்கள், பொதுத்தொண்டுகள் என்றால் முன்னின்று உழைத்த அவரை வடபகுதியில் அறியாதவர்கள் யாரும் இருக்கமாட்டார்கள் என்றே கூறுவேன். இவரின் பெயரிலுள்ள முத்துப் போல் என்றும் மங்காதவர்தான் என்று கூறுவதில் மகிழ்கிறேன்.

## ஏனைய சகோதர, சகோதரிகள்...

என்னோடு உடன்பிறந்த அத்தனைபேரும் என்மீது அளவுகடந்த பிரியமுள்ளவர்களே. எங்கள் குடும்பத்தின் பெயருக்கும் புகழுக்கும், பாதுகாபிற்கும், உழைப்பிற்கும் முன்னேற்றத்திற்கும் என் சகோதரர்கள் என்றும் உயிராகவே வாழ்ந்திருக்கிறார்கள். வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். ஒவ்வொருவரிடமும் பல திறமைகள் இருந்து வந்துள்ளன. கல்வி, விளையாட்டு, கலைத்துறைகளான பாட்டு, சங்கீதம், நல்லமனம், பொதுச்சேவை, பிறருக்கு உதவுதல், ஒற்றுமை தங்கள் குடும்ப வாழ்வு எனப் பல விடையங்களிலும் சிறந்தே விளங்குகின்றனர். அரச சேவைகளிலும் பணியாற்றியிருக்கிறார்கள். இன்று தாயகத்திலும் வெளிநாடுகளிலும் எனது சகோதரர்களும் பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் பூட்டப் பிள்ளைகளும் நன்றாகவே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களில் பலர் தமிழ் ஊடகங்களில் தமது கலைத்திறன்களை வெளிபடுத்தி வருகின்றமை எங்கள் குடும்பத்திற்குப் பெருமையாகவே உள்ளது. எனது உடன் பிறப்புக்கள் என்றும் என் இரத்தத்தின் இரத்தங்களே!. அனைவரும் என்னோடு கொண்டிருக்கும் அன்புக்கு அளவே கிடையாது. "அன்புக்கும் அடைக்கும் தாள் உண்டோ"

# எனது மனைவி... எனது குடும்பம்...



பிறந்த ஊரில் கல்வியை முடித்துக்கொண்டு வன்னிப்பிராந்தியத்தில் பத்து வருடவாழ்க்கையின் பின் உரும்பிராய் மேற்கு வல்லிபுரம்-பார்வதி தம்பதிகளின் இரண்டாவது பதல்வியான இராஜேஸ்வரியை மணந்து கொண்டேன். எனது இன்பத்திலும் துன்பத்திலும் இணைந்து 33 வருடங்கள் நிறைந்துவிட்டன.

என்னோடு என்றும் துணையாய் அன்பாய் இருக்கும் எனது மனைவி யாழ்-சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் கல்வி பயின்றவர். தமிழில் நல்ல ஆர்வமும் அறிவும் கொண்டவர். கவிதை புனைவதில் வல்லவர். கலை இலக்கிய எழுத்துப் பணிகளோடு சங்கமிக்கும் இவர் எனக்குக் கிடைத்தமை அரும் பெரும் பாக்கியமாகவே கருதுகின்றேன். ஒரு ஆணின் வெற்றிக்குப் பின்னே ஒரு பெண் இருப்பாள் என்ற உண்மையை நிரூபித்து எனது இலட்சியத்துக்கும் வெற்றிக்கும் மிக முக்கிய காரணமாகவே இருந்து வருகின்றார். என்னைத் தட்டிக் கொடுத்துச் சுட்டிக்காட்டி நேர்வழிப்படுத்திவரும் தவப்பணியில் என் அருமை மனைவி என்னோடு இணைபிரியாது வாழ்ந்துகொண்டிருப்பது எனக்கு என்றும் ஆனந்தம்தான். இல்லறத்தில் நல்லறமாக விளங்கிவரும் என் இனியவள் விருந்தோம்பலிலும் சளைத்தவளல்ல. வீட்டிலும் செல்லுமிடங்களிலும் எப்போதும் இன்முகத்தோடு விருந்தோம்பலில் யாவரையும் சந்தோஷப் படும்படி தனது கடமைகளைச் சரிவரச்செய்துவிடுவார். இவ்வேளையில் அவருக்கு எனது மனம் நிறைந்த வாழ்த்துக்களும் நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். இல்லறத்தில் இணைந்த எங்களின் வாழ்வில் கிடைத்த முத்துக்கள் மூவர்.

# சிவதர்சினி (லீனா)

எங்கள் மூத்தமகள் 1982ல் பிறந்தாள். இவள் பிறக்கும்போது தாய்மாமனார் திரு. சபாரத்தினம் அப்போது இத்தாலி நாட்டில் இருந்தார். அவரின் ஆசை விருப்பத்தின் பேரில் இவளுக்கு வீட்டுப் பெயராக லீனா என்று பெயரிட்டோம். தாயகத்திலிருந்து புலம்பெயர்ந்து இங்குவந்து பாடசாலை, பல்கலைக் கழகம் மற்றும் எல்லா இடங்களிலும் அவள் பெயர் லீனா என்றே பலராலும் அழைக்கப்பட்டும், அறியப்பட்டும் வருகின்றது. நான் 1983ல் தனியாக ஜேர்மனிக்கு வந்தேன். 1984ல் தாயும் மகளுமாக ஜேர்மனிக்கு வந்து சேர்ந்தபோது முதல் முதலாக அவளைக்கண்டபோது ஓடோடிப் போய் தூக்கி முத்தமிட அவள் என்னைச் "சின்னமாமா" என்றே அழைத்தாள். அந்த ஒரு வருடப் பிரிவு என்னை அவள் மறந்து மாமா என்று அழைத்த அவள் வார்த்தையை இப்பொழுதும் நினைத்து அவளோடு கதைத்துப் பேசும்போது ஆனந்தம்தான்.



இவள் ஜேர்மனியில் பட்டப் படிப்பை (Munster University) முடித்து B.Sc. (Biomedical Engineering) விஞ்ஞானப் பட்டதாரியாக வெளியேறி தற்போது 5 வருடங்களாக அரச வைத்தியசாலை ஒன்றில் (University Hospital) ஆராய்ச்சியாளராகக் (Researcher) கடமையாற்றி வருகின்றார். எங்கள் இருவருக்கும் தமிழ்மீது அதிக அக்கறை இருந்தபடியால் மகள் சிவதர்சினியும் சிறுவயதிலிருந்தே தாய்ப்பாலுடன் தமிழையும் பருகினாள். எழுதினாள். பேசினாள். தனது சிறுவயதில் அப்போது ஜேர்மனியில் வெளிவந்துகொண்டிருந்த சிறுவர் அமுதம், ஏலையா, குரல், கடல், பூவரசு போன்ற சஞ்சிகைகளில் எழுதியதுடன் பல போட்டிகளிலும் பங்குகொண்டு பரிசுகளையும் பெற்றிருக்கிறார்.

யூஸ்பேர்க் தமிழ்பாடசாலையில் தமிழ் படித்து வந்ததுடன் 11ம் வகுப்புவரை தமிழைக் கற்றுத் தேறியிருக்கிறார். கடந்த 24 வருடங்களாக இயங்கிவரும் ஜேர்மன் தமிழ்க் கல்விச் சேவையின் பரீட்சைகளிலும் தோற்றி ஜேர்மனி தழுவிய பரீட்சைகளில் சித்திபெற்றுப் பரிசுகளையும் பெற்றிருக்கிறார். இதைவிட இச்சேவையின் ஆண்டுவிழாக்களில் பல நிகழ்ச்சிகளில் பங்குகொண்டு வருங்கால தமிழ்க் கல்விச் சமூகத்தின் வளர்ச்சிக்காக உழைத்து வருகின்றார். இந்தக் கல்விச் சேவையின் செயற்குழு உறுப்பினராகவும் இருந்து வருகின்றார். எட்டுவருடங்கள் முறைப்படி பரதநாட்டியம் பயின்றுள்ளார். ஜேர்மனி-கிறிவீல்ட் நகரத்தில் அமைந்துள்ள ஆடற்கலாலய அதிபர், ஆசிரியர். திருமதி ரெஜினி.சத்திகுமார் அவர்களிடம் பரதம் பயின்றார். தனது பல்கலைக்கழகப் படிப்பு காரணமாக பரதநாட்டிய அரங்கேற்றம் செய்யமுடியாமல் போனது சிறிது கவலைதான். இருந்தும் தமிழரின் உன்னத கலையாம் பரதத்தைப் பயின்றது பெரும் வரப்பிரசாதம் என்றே எனது குடும்பத்தவர்கள் என்றும் சந்தோசப்படுகின்றோம். இயல் இசை, நாடகம் என்னும் முத்தமிழில் சிறந்து விளங்குவது மகள் தங்தைக்காற்றும் பேருதவியாகவே கருதுகின்றேன்.

தனது ஜேர்மனியக் கல்வி, தமிழ்க்கல்வியோடு கணனித்துறையிலும் சிறந்து விளங்கும் இவள் மண் சஞ்சிகையோடும் அதிக ஈடுபாடுகொண்டுள்ளாள். மண் சஞ்சிகையின் கணனித்துறை அச்சு, வடிவமைப்பு, மொழிபெயர்ப்பு எனப் பல கணனி வடிவமைப்புக்களைச் செய்து இச்சஞ்சிகையின் வளர்ச்சிக்குச் சிறுவயதிலிருந்தே பாடுபட்டு உழைத்துவருவது சிறப்பான விடையமாகும். இதைவிட ஒரு நிழல்ப்படக் கலைஞராகவும் இளம் கவிஞராகவும் நாடகக்குழுவின் இயக்குனராகவும் தனது எழுத்து பேச்சு, நடிப்பு, ஆடல், பாடல் என பல துறைகளில் பரிணமித்து வருவது மகள் எம் குடும்பத்துக்கு ஆற்றும் அரும் பெரும் புகழாகவே கருதுகின்றோம். மேலாக கடந்த 5 வருடங்களாக தாயகத்தின் ஆதரவற்ற பிள்ளை ஒன்றைப் பொறுப்பெடுத்து வருடாந்தம் 480.00 யூரோக்களை வழங்கி மண் சஞ்சிகையூடாக மனிதநேயப் பணியையும் செய்து வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

# சிவாஸ்கர்



எனது மூத்த மகன் 1985ல் ஜேர்மனியில் பிறந்தான். ஆரம்பக் கல்வி தொடக்கம் உயர் கல்விவரை ஜேர்மனியப் பாடசாலையில் படித்து முடித்துவிட்டு தனது பட்டப் படிப்பை லண்டனிலுள்ள கிங்ஸ்ரன் பல்கலைக்கழகத்தில் (Kingston University) மேற்கொண்டார். B.Sc, MA (Graphic Design) ஆகிய இரு பட்டங்களையும் பெற்று வெளியேறினார். தற்போது லண்டனினுள்ள கம்பனி ஒன்றில் உயர் பதவி வகித்துக்கொண்டிருக்கிறார். எனக்கு விளையாட்டுத்துறையிலும் அதிக ஈடுபாடு இருந்தபடியால் இவனும் சிறுவயதிலிருந்தே இத்துறையில் அதிக ஈடுபாடு காட்டத்தொடங்கவே இங்குள்ள "SV-Wanheim" என்ற பெயர் கொண்ட விளையாட்டுக் கழகத்தில் உதைபந்தாட்ட அணியில் சிறுவயது தொடக்கம் இளைஞனாகும்வரை விளையாடியிருப்பதுடன் பல தடவைகள் அணித்தலைவராகவும் (Captain) கடமையாற்றி ஏனைய வீரர்களையும் வழிநடாத்திச் சாதனை படைத்திருக்கின்றான் இது மட்டுமல்லாமல் பட்மின்டன், ரெனிஸ், மெய்வல்லுனர் (Badminton, Boxing, Althletics) விளையாட்டுக்களிலும் தற்போது பிரகாசித்து வருகின்றார். வெற்றிக்கிண்ணங்களும் பரிசுகளும் சான்றிதழ்களும் நிறையவே பெற்றிருப்பது பெரும் மகிழ்வே.

தமிழ்க் கல்வித்துறையிலும் டியூஸ்பேர்க் தமிழ்ப்பாடசாலையில் ஆரம்ப வகுப்புத் தொடக்கம் 11ம் வகுப்புவரை தமிழைப் பயின்றுள்ளார். ஜேர்மன் தமிழ்க் கல்விச் சேவையினரால் நடாத்தப்படும் வருடாந்த தமிழ்மொழிப் பரீட்சையில் பங்குபற்றிப் பல தடவைகள் வெற்றிக் கிண்ணங்களும் பரிசுகளும் சான்றிதழ்களும் பெற்றிருக்கின்றார். ஜேர்மனியில் இயங்கிவரும் நூற்றுக்கு மேற்பட்ட தமிழாலயங்களின் வருடாந்த தமிழ்மொழிப் பரீட்சையில் தனிப்பட்ட முறையில் தோற்றி ஜேர்மனியில் முதலாவது பரிசைபெற்றார். ஜேர்மனியில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் உலகத்தமிழர் பண்பாட்டுக்கழகத்தலைவராக அப்போது இருந்த காலஞ்சென்ற வீரப்பனார் (மலேசியா) அவர்களிடம் வெற்றிக்கிண்ணமும் சான்றிதழும் பெற்றமை என்றுமே மறக்கமுடியாத வரலாற்றுச்சாதனையாகும். இவை மட்டுமல்லாமல் மண் சஞ்சிகையின் வளர்ச்சியில் கணனி தொழில்நுட்பத் துறைகளில் இணைந்து பல ஆண்டுகளாகக்: கடமையாற்றி வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்க விடையமாகும்.

# சிவகாந்த்

எங்கள் இளைய மகன் இவர்தான். இவன் 1988ம் ஆண்டு பிறந்தான். இவர் பிறந்தபோது உலக ரெனிஸ் வீரனாக செக்கோஸ்லாவியா நாட்டுவீரன் ஈவான் லிண்டில் திகழ்ந்தார். எனக்கும் ரெனிஸ் விளையாட்டில் ஆர்வம் இருந்தபடியால் அவனுக்குச் செல்லப் பெயராக இப்பெயரை சூட்டிவிட்டோம்.



இப்பெயர் இன்றுவரை எங்கள் குடும்ப உறுவுகளாலும் ஜேர்மனிய அவனது நண்பர்களாலும் அழைக்கப்படும் பெயராக மாற்றம் கண்டுவிட்டது. ஆரம்பம் முதல் உயர் வகுப்புவரை ஜேர்மனியிலேயே கல்விகற்றுவிட்டுத் தனது உயர் படிப்பை பட்டப்படிப்பை லண்டனிலுள்ள கிங்ஸ்ரன் பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டார். நான்கு ஆண்டுகளாக பட்டப்படிப்பை மேற்கொண்டு B.A. Hons (International Business) பட்டத்தைப் பெற்று 2011ம் ஆண்டில் வெளியேறி வேலை தேடுபவராகவும் (M.A.) முதுகலைமானி பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கான ஆயத்தங்களையும் செய்துகொண்டிருக்கின்றார். இவரும் டீயூஸ்பேர்க் தமிழ்ப் பாடசாலையில் 11ம் வகுப்புவரை கல்வி பயின்று வெளியேறினார். ஜேர்மனி தமிழ்க் கல்விச்சேவையின் வருடாந்த தமிழ்மொழிப் பரீட்சையில் தோற்றிப் பரிசுகளும் சான்றிதழ்களும் பெற்றிருக்கின்றார். மண் சஞ்சிகையின் கணனி தொழில் நுட்பத் துறைகளிலும் நீண்டகாலமாக இணைந்து உதவி வருகின்றார். இவரும் சிறுவயதிலிருந்தே விளையாட்டுத்துறையில் அதிக ஈடுபாடு காணப்பட்டதால் ஜேர்மனிய "SV-Wanheim" என்ற உதைபந்தாட்டக் கழகத்தின் முன்னணி வீரராகத் திகழ்திருக்கின்றார். ரெனிஸ், பட்மின்டன் விளையாட்டுக்களிலும் அதிக ஈடுபாடுகொண்டு இன்றுவரை விளையாடி வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்க விடையமாகும்.

## தாயும் பிள்ளைகளும்...

எங்கள் மூன்று பிள்ளைகளையும் கல்வியூட்டி, அறிவூட்டி, உலகத்தைக்காட்டி, நேர்வழிப்படுத்தி, நல்வழிப்படுத்தி ஆளாக்கி சமூகத்தில் நல்ல மனிதர்களாக்கிய பெரும் பொறுப்பு எனது மனைவியையே சாரும் எவ்வளவோ தியாகங்களைச் செய்து மூவரையும் வளர்த்த பெரும் பொறுப்பு மனைவியையே சாரும். வேலைப்பழு பொதுப்பணிகள் என நான் வெளியே சென்றுவர பிள்ளைகளுக்குக் கல்வியூட்டி நல்ல பழக்க வழக்கங்களையூட்டி சுட்டிக்காட்டித் தட்டிக்கொடுத்து உற்சாகப்படுத்தி அவர்களை நல்ல நிலைக்குக் கொண்டுவர தாய் பட்டபாடுகளோ என் பங்கைவிட மிக அதிகமாகும். பிள்ளைகள் மூவரையும் அடித்து துன்புறுத்திய சம்பவம் எதையும் எனது 33 வருட இல்லற வாழ்வில் நான் கண்டதே கிடையாது. சிறிது கண்டிப்பான பேச்சுடன் அன்பான கட்டளைகளால் ஆதரவான அறிவுரைகளால் தாயவள் பிள்ளைகள் மூவரையும் வழி நடாத்தி நல்வழிப்படுத்தி வருவதுடன் எனக்கும் அவ்வப்போது ஆலோசனைகள் அறிவுரைகள் கூறி குடும்பத்தின் ஒளிவிளக்காகத் திகழ்ந்துகொண்டிருக்கும் என் மனைவி போற்றுதலுக்குரியவர். பாராட்டுதலுக்குரியவர்!... தாய்மைக்கு இலக்கணமாகவும் தூய்மையான அன்புக்கு வழி காட்டியாகவும் திகழும் தாயவள் என் மனைவி என்றும் எனக்குக் கிடைத்த பொக்கிஷமே... இவரின் நற்குணமும், பழக்கவழக்கங்களும், விட்டுக்கொடுப்பும், தியாகமும், விருந்தோம்பலும் அவரோடு பழகிவாழும் உறவினர்கள் நட்புக்கள் வட்டத்தில் பெரு மதிப்பை பெற்றிருப்பது எனக்கு மிகவும் ஆனந்தம் என்றே என்றும் கூறிக்கொள்வேன்.

# மருமகன் பிராங்ளின்...



எங்கள் குடும்பத்திற்குக் கிடைத்திருக்கும் எங்கள் மருமகன் பெயர் பிராங்ளின். நாங்கள் இந்து. இவர் கத்தோலிக்கர். எங்களைப் பொறுத்த அளவில் எம்மதமும் சம்மதம் என வாழ்ந்ததால் இவர் கிடைத்தது நல்ல பேறாகவே கருதுகின்றோம். எனது மகள் சிவதர்சினி 2012ம் ஆண்டு பங்குனி மாதம் திருமணம் செய்துகொண்டதால் இந்தத் தமிழ் மகனையும் எங்கள் குடும்பத்தில் ஒருவராக இணைத்துக்கொண்டுள்ளோம். இவரையும் எங்கள் இரண்டு மகன்மாரையும் பார்த்தால் யாரும் சகோதரர்கள் என்றே நம்புவார்கள். அவ்வளவுக்கு உடல்வாகு குண இயல்புகள் அமைந்திருப்பது நம்பமுடியாமலே இருப்பது ஆச்சரியப்பட வைக்கின்றது. ஜேர்மனியில் பிறந்து வளர்ந்து உயர் கல்விகற்று அரச வைத்தியசாலை ஒன்றில் உயர் அதிகாரியாகக் கடமையாற்றுகின்றார். எமது மகளுக்குக் கிடைத்த நல்ல கணவனாகவும் எமது குடும்பத்துக்குக் கிடைத்த நல்ல மருமகனாகவும் கிடைத்திருக்கின்றார். அவரின் தாய்-தந்தை குடும்பத்தவர்களும் வாழ்த்துக்குரியவர்களே. இவர் விளையாட்டுத் துறையில் அதிக ஈடுபாடுகொண்டுள்ளவர். கிறிபீல்ட் (Krefeld) நகரிலுள்ள ஜேர்மனிய உதைபந்தாட்டக் கழகத்தில் இணைந்து கடந்த 5 வருடங்களாக விளையாடி வருகின்றார். இவை மட்டுமல்லாது ரெனிஸ், பட்மின்டன் விளையாட்டுக்களில் அதிக ஈடுபாடுகொண்டு விளையாடி வருகின்றார்.

# மாமன் வீடு...

நான் மணம் முடித்து குடிபுகுந்த வீடு என் மனைவி வீடாகும். உரும்பராய் மேற்கு வல்லிபுரம்- பார்வதி தம்பதிகளின் வீடே என் புகுந்த வீடாகும். என் மாமனார் மாமி மட்டுமல்ல மைத்துனர்கள், மைத்துனிகள், சகலன்கள், மருமக்கள், பெறாமகன், மகள் மார், என யாவரும் என்னோடு அன்றும் இன்றும் அன்பாகவும் பண்பாகவும் நடந்து கொள்வார்கள். எத்தனையோ வாழ்வியல் சுமைகள் துன்பங்கள் வந்த போதெல்லாம் ஒன்றாய் கலந்து ஆறுதல் தெரிவித்து வாழ்வின் அடுத்த பக்கங்களுக்கு நகர்ந்து செல்ல வழிவகுப்பார்கள். அன்றைய காலத்தில் ஒரே வீட்டில் நாலு குடும்பங்கள் எவ்வளவு ஒற்றுமையாகவும் சந்தோஷமாகவும் வாழ்வு கழிந்தது. ஆனால் இன்று புலம்பெயர்வுகள் போர்ச் சூழலால் இடம்மாறி தனித்து வாழவேண்டிய சூழலுக்குத் தள்ளப் பட்டிருக்கிறோம் என்னும் போது கவலைதான். நான் புகுந்த வீட்டுக்காரர் யாவரின் குண இயல்புகளும் எனக்கு நன்றாகவே பிடித்துக் கொண்டது. உழைத்து வாழவேண்டும் என்ற சிந்தனைச் செற்பாடுகள். மற்றவர்களோடு எந்தவித பிணக்குகளுக்குப் போகாமல் போகாமல் மற்றவர்களுக்கு எந்தவித கெடுதல்களும் செய்யாமல் நேர்மையாக வாழவேண்டும் என்ற வாழ்க்கைப் பாடத்தை மேலும் புகட்டி வாழ்வில் உயர்ச்சிபெற வழிவகுத்த என் மனைவி குடும்பத்தவர்களை என்றுமே என் வாழ்நாளில் மறக்கமுடியாது.

# நான் பிறந்த ஊர்...




இலங்கைத் தீவின் வடபிரதேசம். தென்மராட்சிப் பகுதி, நாவற்குழி கிராமசபை வேலம்பராய் என்னும் சிறியஊர்தான் நான் பிறந்த ஊராகும். தச்சன்தோப்பு, கைதடி, மறவன்புலவு, கோவிலாக்கண்டி என்பன அயலூர்களாகும். மூன்று பக்கமும் அயலூர்களும் ஒருபக்கம் கோவிலாக்கண்டி-அரியாலைக் கடலும் சூழ்ந்திருக்கின்றது. பெரிய வளம்கொழிக்கும் ஊர் இல்லையாயினும் நெல்வயல்களும், தென்னை-பனை வளங்களும், கடல்வளமும் காணப்படுகின்றன. குடிநீருக்கு எக்காலத்திலும் எதுவித இடர்பாடுகளும் வந்ததில்லை. தென்னை-பனை சார்ந்த தொழில்களும் விவசாயம், தோட்டம், மீன்பிடி, தச்சுவேலை, கூலிவேலைத் தொழில்களும் அரச தொழில் செய்யும் மக்கள் உறவுகள் என வாழ்கின்றனர். விரல்விட்டு எண்ணக்கூடிய சிலரே அரசதுறைகளில் பெரிய பதவி வகிக்கிறார்கள். யாழ்ப்பாணத்திலிருந்து கேரதீவு-பூநகரி செல்லும் பிரதான வீதியின் அருகிலேயே எனது ஊர் அமைந்துள்ளது. தச்சன்தோப்பு என்ற தொடரூந்து நிலையம் இருந்தது. யுத்த அனர்த்தங்களால் இந்த நிலையம் அழிந்து காணாமல் போய்விட்டது. ஒரு கத்தோலிக்க தேவாலயமும் இருபது வரையிலான சிறிய பெரிய இந்துக்கோவில்களும் காணப்படுகின்றன. இந்த சிறிய ஊரில் சிறுவர் பாடசாலை ஒன்றும் 60 வருடங்களாக கல்வி அறிவூட்டும் "காந்தி சனசமூக நிலையம்" அமைந்துள்ளது. மக்கள் அனைவரும் தமது சொந்தக் காணியிலேயே வீடுகள்கட்டி வாழ்கிறார்கள். இவர்களின் பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் பலர் புலம்பெயர்ந்து பல நாடுகளில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இவர்களில் நானும் ஒருவனே!... நான் படித்த காலத்தில் விரல்விட்டு எண்ணக்கூடியவர்களே உயர்படிப்பை முடித்து அரச உத்தியோகம் பார்த்தனர். ஆனால் இன்று எனது உறவுகளின் பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் எனப் பலர் பட்டதாரிகளாகிப் பல துறைகளிலும் தொழில்புரிகின்றார்கள். மேலாக எனது சகோதரர்கள் இருவர் திரு. நடராசா அவர்கள் இப்பொழுதும் (துீ) (Judge of Peace) சமாதான நீதவானாகப் பதவி வகின்றார். மற்றைய சகோதரர் திரு.சரவணமுத்து அவர்கள் சமாதான நீதவானாக இருந்த காலத்தில் 1984ம் ஆண்டில் யாழ் பஸ் நிலையத்தில் இராணுவத்தினரால் சுடப்பட்டுக் காலமானர்ர். அடுத்து எனது ஒன்றுவிட்ட சகோதரர் திரு இராசநாயகம் அவர்களும் தற்பொழுது சமாதான நீதவானாக இருந்து ஊருக்குச் சேவை செய்துகொண்டிருக்கிறார்.

# எங்கள் குடும்பம்

எங்கள் குடும்பம் பெரிய ஒரு குடும்பமாகும். எனது தாய் தந்தையர் இந்த ஊரிலேயே பரம்பரை வழிவந்தவர்கள். இருவரும் அந்தக் காலத்தில் பெரிசாகப் படிக்காவிடினும் அனுபவமும் ஆற்றலும் கொண்ட பல்கலைக்கலகம் போன்றே விளங்கினார்கள் என்று கூறவேண்டும். தந்தையார் பெயர் வயிரமுத்து. கடும் உழைப்பாளி எங்கள் ஊர் மட்டுமல்ல அயல் ஊர் மக்களெல்லாம் தந்தையாரைத்: "துரை" என்று பெயர் சொல்லியே அழைப்பார்கள். கமக்காரனாகவும் தோட்டக்காரனாகவும் விவசாயியாகவும் தனது இறுதிக்காலம் வரை குடும்பத்துக்காகவே உழைத்தவர். மிகக்கடின உழைப்புக்கு இந்த ஊரில் எனது தந்தையாரையே பலர் உதாரணப்படுத்துவதை நான் சிறுவனாக இளைஞனாக இருக்கும் போதே பலர் பேசுவதைக் கண்டிருக்கிறேன். வைரமுத்து பெயர். வைரங்களும் முத்துக்களும் நிறைந்தது போல் தனது உடல் உழைப்பால் பிள்ளைகளை கண்டிப்போடும் வளர்த்தெடுத்த பெருமை அவருக்கு என்றும் உரித்துடையதாகும். 1985ம் ஆண்டு அவர் காலமானார். நான் அப்போது ஜேர்மனியில் ஓர் அகதி. இதன் காரணமாக அவரின் இறுதி நிகழ்வுகளில் கலந்து கொள்ள முடியாத துன்பத்திற்கு ஆளானேன்.

என் தாய்...அவள் பெயர் தங்கம்மா... வைரமும் தங்கமும் ஒன்று சேர்ந்த கலவைதான் நான். அவரின் பெயரைப் போலவே அவரின் மனமும் செயலும் அமைந்தன. அன்பு, பரிவு, பாசம், பண்பு நிறைந்தவர். மங்காத தங்கமாய் பதின்நான்கு முத்துக்களைப் பெற்றெடுத்து வாழ்ந்தும் ஊருக்கு வழிகாட்டியாகவும், நன்மதிப்பைப் பெற்றும் வாழ்ந்து காட்டியவர். தான் பெற்ற செல்வங்கள் அனைத்திற்கும் கல்வி ஊட்டி, வழிகாட்டி, அறிவூட்டி, ஆளாக்கி திருமண பந்தத்தில் இணைத்து அனைவரும் பாராட்டும் வகையில் பிள்ளைகளை உருவாக்கிச் சென்றிருப்பது தாயின் மிகப்பெரும் சாதனையே. வாழ வைத்த தெய்வத்தை இப்பொழுது அல்ல எக்காலத்தில் நினைத்தாலும் கண்ணீர் வரும். இப்படியாக எங்கள் குடும்பத்தில் ஒளி விளக்காக, குலவிளக்காக திகழ்ந்தவள் என் தாயவளே!... நான் வெளிநாடு வந்து 14 ஆண்டுகளின் பின் 1998ம் ஆண்டு நான் அவரைப் பார்ப்பதற்காகச் சென்று கொழும்பில் நின்ற பொழுது அவர் காலமானார். அப்போதை அரசபடைகளின் கெடுபிடியால் பிறந்த ஊருக்குப் போவதற்கும் விசா எடுத்தே கொழும்பிலிருந்து விமானமூலம் யாழ்ப்பாணம் செல்ல முடியும். விசா எடுப்பதில் பல கெடுபிடிகளால் தாயாரின் இறுதி முகத்தைக்கூடப் பார்க்கமுடியாத பாவியாய் ஊர் சென்று பின்னர் ஜேர்மனி திரும்பியதை எப்படி மறக்கமுடியும்.

ஒன்பது ஆண் ஐந்து பெண் இவ்வளவு பெரிய குடும்பம். மூத்தவர் தியாகராசா என்னும் பெயர்கொண்ட தியாகச் செம்மல். எம் தந்தையைப் போல் கடும் உழைப்பாளி. சகோதரர்களின் கல்விக்காக, திருமணத்துக்காக தன் வாழ் பூராவும் உழைத்து குடும்பத்தை உயர்த்திய தியாகி. மெழுகுதிரியைப்போல் தானும் உருகி உழைத்து எங்கள் குடும்பத்திற்கு ஒளிகொடுத்து உயர்த்திவிட்ட இவரை அயலூர் மக்கள் எல்லோரும் "தியாகு" என்றே அழைத்து மகிழ்ந்தனர்.

இவர் 2005ம் ஆண்டு காலமாகிவிட்டார். அடுத்தவர் பெயர் நடராசா. இவர்தான் எங்கள் ஊரில் முதன்முதலில் யாழ்ப்பாணம் சென்று யாழ் மத்திய கல்லூரியில் கல்வி பயின்று பின்னர் கொழும்பில் அரச வேலை பார்த்தவர். தற்போது தற்காலிகமாக லண்டனில் வசித்துவருகின்றார். இவர்தான் எங்கள் குடும்பத்தவர்கள் அனைவரையும் வழி நடத்தியவர். சகோதரங்களுக்குக் கல்வி கொடுத்ததிலிருந்து ஊர் மக்களைப் நன்றாகப் படிக்கும்படி செய்ய வைத்தவர். இவரின் வழிகாட்டலால் எத்தனையோ பேர் அன்றையநாட்களில் கல்வியில் உயர்ந்து விளங்கினார்கள். நமது ஊரில் வாசிகசாலை ஆரம்பிப்பதற்கும் விளையாட்டுத்துறையை ஊக்குவிப்பதற்கும் காரணகர்த்தாவாக விளங்கியுள்ளார். சமூகசேவை, அரசியல் வாழ்வால் எத்தனையோ பல விடைங்களை சகல மக்களுக்குமாக மேற்கொண்டவர். அடுத்து வந்தவர் சரவணமுத்து. இவர் ஓர் பேரூந்து சாரதியாகக் கடமையாற்றியவர். எங்கள் ஊரின் முதலாவது (J.P.) சமாதான நீதவான். மிகவும் கடவுள் பக்தியுள்ளவர். எங்கள் ஊர் மட்டுமல்லாது வடபகுதியில் பலரால் அறியப்பட்டவர். எங்கள் குடும்பத்தில் பெயர், புகழ் வளர இவரும் பிரதான காரணியாக அன்றைய காலத்தில் விளங்கியவர். 1984ம் ஆண்டு கடமையில் இருந்த வேளை இராணுவத்தினரால் சுடப்பட்டு இறந்துவிட்டார்.

மற்றைய ஆண் பெண் சகோதரர்கள் எல்லோரும் மணம் முடித்து பிள்ளைகள் பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் என கொடிபோல் வளர்ந்துள்ளனர்










எங்கள் குடும்பத்தின் இணைந்து கொண்ட இரத்த உறவுகள் பலர் வெளிநாடுகளில் பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் பூட்டப்பிள்ளைகள் எனச் சிறப்பாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.பலரும் பல வேலைகளையும் செய்து தமது குடும்பத்துக்கும் எங்கள் குடும்பத்துக்குமாக ஒன்றிணைந்து உழைக்கிறார்கள். அரச உத்தியோகம், பட்டதாரிகள், வியாபாரம், கணனித்துறை, வைத்தியத்துறை, கம்பனி என சகல துறைகளிலும் கால்பதித்து எல்லோரும் சொந்தக் காணி நிலத்தில் சுயமாக முன்னேறி நன்றாகவே வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இவர்களில் நானும் ஒருவனாக 1983ம் ஆண்டு முதல் ஜேர்மனியில் கால்பதித்து வாழ்ந்து வருகின்றேன்.

## வயிரமுத்து - தங்கம்மா நினைவுதின குடும்ப ஒன்றுகூடல்!...

Vairamuthu - Thangamma Family Day

எங்கள் குடும்பத்தின் மூலவேர்களான தாய் தந்தையரின் நினைவாக வருடாவருடம் ஒன்றுகூடும் நிகழ்வு லண்டனில் நடைபெற்றுவருகின்றது. 5வது தடவையாக இவ்வருடம் யூலைமாதம் 20, 21ம் தேதிகளில் லண்டனில் நடைபெற்றது. உலகத்திலே யாரும் இப்படிப்பட்ட நினைவு நாளைக் கொண்டாடுகிறார்கள் என நான் இதுவரை அறியவில்லை. அதாவது எங்கள் குடும்பத்தின் பிள்ளைகள் பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் இன்று உலகம்பூராவும் பரந்து வாழ்கிறார்கள். இவர்கள் அனைவரையும் வருடத்தில் ஒருமுறையாவது ஒன்றாய் கூடும் நிகழ்வாகவே இத்திருநாள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.

அந்த இருநாட்களும் பலநாடுகளிலும் இருந்து லண்டனுக்கு வருகைதரும் இரத்த உறவுகள் ஒருவருக்கொருவர் பேசி உறவாடி,விளையாடி மகிழ்ந்து உண்டு குடித்து ஆடிப்பாடி மகிழ்வார்கள். இதுமட்டுமல்லாமல் தமது பிள்ளைகள், பேரப்பிள்ளைகளின் கலைத்திறன்களையும் மொழியாற்றல்களையும் வெளிப்படுத்துவார்கள். தாய், தந்தை, மகள், மகன், பேரப்பிள்ளைகள் என மூன்று தலைமுறைகளும் ஒன்றுகூடி ஆடிப்பாடி உண்டு மகிழ்வது ஓர் அரியநிகழ்வாகவே அமைந்துவிடும். வயிரமுத்து-தங்கம்மா தம்பதிகளின் நினைவுப் பேருரைகளும் அவர்கள்பற்றிய நகைச்சுவை விடையங்களும் அவர்களின் வழிகாட்டல்கள் பற்றியும் கருத்துப்பரிமாற்றங்களும் இடம் பெறும்.

இந்த ஒன்றுகூடலின் போது இரு நாட்களும் விளையாட்டுப் போட்டி நடைபெறும் இந்தப் போட்டியில் பாலர், சிறுவர், இளையோர் முதியோர் எனப் பல தரப்பினரும் பங்குபற்றுவார்கள். அனைவருக்கும் பரிசுகளும் வழங்கப்படும். இதைவிட ஒவ்வொரு குடும்பங்களும் கொண்டுவரும் பலவித பண்டங்களும் உணவுகளும் பரிமாறி உண்டு களிப்பது மனதுக்கு எவ்வளவு ஆனந்தம். மேலாக இதே தினம் தாயகத்திலுள்ள கைதடி முதியோர் இல்லத்தில் வசிக்கும் அத்தனைபேருக்கும் எமது குடும்பம் சார்பில் உணவு வழங்கப்படுவது எமது

குடும்பத்தவர்களின் மனிதநேயப் பணியாகக் கருதுகின்றோம். நாம் புலம்பெயர்நாடுகளில் உண்டு மகிழ்ந்தால் மட்டும் என்றிராமல் தாயகத்தில் கைவிடப்பட்ட பெற்றோருக்கு எம்மாலான உதவிகளை வழங்குவதும் ஒரு பேறாகவே கருதுகின்றோம். வளரும் நம் தலைமுறைகளும் இப்பணியை மேற்கொள்ள ஒரு பாடமாகவும் சேவையாகவும் அமைவது பாராட்டத்தக்க விடையமாகும்.

வருடாவருடம் நடைபெறும் இந்த ஒன்றுகூடல் நிகழ்வைப்பற்றி உலகம் வாழ் நண்பர்களும் ஊர் உறவுகளும் எங்கள் குடும்பத்தைப் பற்றி தெரிந்தவர்களும் அறிந்து வியப்படைந்து வருவதுடன் பாராட்டையும் தெரிவித்துவருவது நமக்குப் பெருமையாகவும் ஆனந்தமாகவும் அமைகின்றது. வருடாவருடம் தொடர்ச்சியாக இடம்பெறும் இந்த ஒன்று கூடல் நிகழ்வை ஆரம்பிப்பதற்கு மூலகாரணமாக விளங்கிய எனது பெறாமகன் நடராசா.தமிழழகனையே சாரும் அவருக்குத் இச்சந்தர்ப்பத்தில் வயிரமுத்து-தங்கம்மா குடும்பம் சார்பில் இனிதான நன்றியைத் தெரிவித்து நிற்கின்றோம்.

ஜேர்மனி, இங்கிலாந்து, பிரான்ஸ், சுவீஸ்லாந்து, இத்தாலி, டென்மார்க், நோர்வே, சுவீடன், கனடா, நெதர்லாநது அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் எமது குடும்ப உறவுகள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்க விடையமாகும்.










# எனது இளமைப்பெயர்!...

எனக்குச் சூட்டப்பட்ட பெயர். சிவராசா. ஆனால் நான் ஊரில் வாழ்ந்தகாலம் வரை எல்லோரும் என்னை சாம் (Sam) என்றே அழைத்து வந்தனர். பலருக்கு என்பெயர் சிவராசா என்றுகூடத் தெரியாது. வீட்டில் ஊரில் எல்லோரும் சாம் என்றே அழைத்தனர். இப்பொழுதும் கூட புலம்பெயர்ந்து வாழ்ந்த நாடுகளில் வாழும் எனது உறவுகள், எனது பெறாமக்கள் மருமக்கள் பேரப்பிள்ளைகள் என யாவரும் சாம் என்ற பெயரையே பாவிக்கின்றனர்.

இப்பெயர் ஏன் எனக்கு வைக்கப்பட்டது என்று என் உடன்பிறந்தோரை கேட்டபொழுதுதான் இதன் உண்மை எனக்குத் தெரியவந்தது. அதாவது யாழ்ப்பாணத்தில் சாம் பிரக்கிராசி (வழக்கறிஞர்) ஒருவர் புகழ்பெற்று விளங்கியவர். இவர் யாழ் மாநகர சபையின் மேயராகக் கடமையாற்றியவர். அவர் அந்த நேரத்தில் புகழ்பெற்றவராக இருந்தபடியாலும் எனது குடும்பத்தவர்களுக்கு மிக வேண்டியவராக இருந்தபடியாலும் அவரின் பெயரை எனக்குச் சூட்டியதாகத் தெரியவந்தது. அதன் பின் என் இளமையிலிருந்து இன்றுவரை சாம் என்றே என்பெயர் புழங்கியது. வெளிநாடு வந்ததும் அந்தப் பெயர் பெரிசாகப் புழங்கவில்லை. ஏனென்றால் நட்புக்கள் எல்லோரும் புதிய முகங்கள். முன்பின் தெரியாதவர்கள். ஆதலால் சிவராசா என்ற பெயரே தற்போது வழங்கப்பட்டு வருகின்றது. தற்போது கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக என் மூத்த மகன் தனது பெயரை சாம்.சிவாஸ்கர் என மாற்றிக் கொண்டுள்ளான். ஏனோ தெரியவில்லை சாம் என்ற பெயர் உலகில் பிரகாசித்திருப்பதையும் அறிகிறேன்.

# உயிர் தப்பிய சம்பவங்கள்!...

1.

எங்கள் வீட்டில் சிறிய கிணறு ஒன்று இருக்கின்றது. 7 வயதில் தண்ணீர் அள்ளும் போது தவறி விழுந்துவிட்டேன். இதை ஒருவரும் காணவில்லை. நான் நீரில் தாண்டு தத்தளித்துக்கொண்டு நீந்திக்கொண்டு நின்றதாகவும் ஒரு மணி நேரத்தின் பின்பே என்னைத் தேடி வந்து மீட்கப் பட்டதாகவும் அறிந்தேன். எங்கள் ஊரின் குளத்தில் 5 வயதிலேயே நீச்சல் கற்றுக்கொண்டதால்தான் நான் உயிர்தப்பக்கூடியதாக இருந்தது. முதற்கண் எங்கள் ஊர் குளத்திற்கு நன்றி.

2.

எனது ஆட்காட்டிவிரலில் அரைவாசி துண்டாடப்பட்டிருக்கின்றது. இதனால் நான் ஒருவரையும் ஆட்காட்டிவிரலால் காட்டிப் பேசமுடியாது. இந்தவிரல் துண்டாடப்பட்ட சம்பவம் சுவையானதாக இருந்தாலும் வெட்டுண்டு விரல் பறந்தபோது எவ்வளவு துடித்து வேதனைப்பட்டிருப்பேன் என்று இப்போது எண்ணும் போது உடல் நடுங்கும்.

எங்கள் ஊரில் பனைவளம் அதிகம். நான் வளரும் வாழ்ந்த காலங்களில் பனம் பண்டங்களே அதிகமாகச் சாப்பிட்டிருக்கிறேன். கற்பகதருவான பனையில் வேரிலிருந்து நீண்டு உயர்ந்து வளர்ந்த மரத்தின் நுனிவரை அத்தனையும் மனிதருக்குப் பயன்படும். இதில் ஒன்றான பனம் பழத்தை உண்டுமுடிய அதன் பனங்கொட்டைகளை சேர்த்து பாத்திபோடுவார்கள் அது முளைத்து சிறிது காலத்தால் பனங்கிழங்கைத் தரும். அந்தப் பனங்கிழங்கிலிருந்த பனங்கொட்டையில் மிகவும் இனிப்பான ருசியான பூரான் என்று சொல்லப்படும் பொருள் இருக்கின்றது. அதை வெட்டி எடுத்துத்தான் ருசிக்க வேண்டும்.இதை வெட்டி எடுத்து ருசிக்க அப்போது எனக்கு 9 வயது. சிறுவர்கள் பட்டாளம் கூடிவிடும். அப்போது நான் பனங்கொட்டையைப் பிடிக்க செல்வநாயகம் என்ற எனது வயதுடைய உறவினன் வெட்டினான். அது குறிதவறி என் விரல்மீது விழ ஒரு வெட்டில் துண்டு இரண்டானது. துடித்துக்கொண்டிருந்த அந்தத் துண்டுவிரலை அப்போது விளையாடிக்கொண்டிருந்த ஏனைய சிறுவர்கள் மணலால் அள்ளி மூடிவிட்டார்கள் என்று அறிந்தேன். என்னை உடனடியாக யாழ் வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றதாகவும் அங்கு சிறிதுகாலம் சிகிச்சை பெற்று வீடுதிரும்பியதாகவும் சொல்லப்பட்டது. எனது விரல் துண்டிக்கப்பட்டாலும் எனது எழுத்துக்களை ஆசிரியர்களும் மாணவர்களும் பாராட்டுவார்கள். இருப்பினும் சில பாடசாலை நண்பர்கள் என்னை "மொட்டையா" என்றும் அன்போடு நகைச்சுவைக்காக அழைத்துவந்தனர்.

3.

எனக்குப் 12 வயது இருக்கும் என்று நினைக்கின்றேன். எங்கள் வீட்டில் ஆடு, மாடு, கோழி, பூனை, நாய் என பிராணிகளை வளர்த்துவந்தார்கள். அப்போது அவைகளைப் பராமரிக்கும் தொழில் சிறுவர்களான எனக்கும் பங்குண்டு. மாடுகளுக்கு புல், ஆடுகளுக்கு இலை குழை தினமும் வெட்டிப் போடவேண்டும். பாடசாலையால் வந்ததும் சாப்பிட்டுவிட்டு இந்தப் பிராணிகளுக்கு உணவு தேடவேண்டும். பின்னர் விளையாட்டு அதன்பின் படிப்பு என நாட்கள் ஓடும். இப்படியாக ஒருநாள் எமது வீட்டுக்கு அயல் காணிக்குள் சென்று அரச மரத்தில் ஏறி குழை வெட்டும்போது தவறி விழுந்தேன். இந்த அரசமரத்திற்குக் கீழே கறையான் புற்றுப்பிட்டிகள் இவை கல் போல் வைரமாக இருக்கும். அந்தப் புற்றுக்களிள் பாம்புகள் இருக்கும். அப் புற்றுப்பிட்டிக்குமேல் விழுந்திருந்தால் அன்றே எனது சரித்திரம் முடிவடைந்திருக்கும். நல்ல காலம் ஓலை வேலியில் விழுந்தபடியால் ஒரு கையில் முறிவு உடம்பில் பூவரசம் தடிகளின் குத்தல். உடனடியாக யாழ் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுப் பல மாதகாலங்களாகச் சிகிச்சை பெற்று வீடு திரும்பியதாக அறிந்தேன்.

'மற்றவர்கள் பாராட்டு புகழ் வேண்டும் என்பதற்காக ஆடம்பரமான ஆடைகளை அணிவோரை ஆண்டவன் தாழ்த்துவான்.'



4.

1977ம் ஆண்டு நான் இளைஞனாக துணுக்காய்ப் பகுதி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் பொது எழுதுவினஞுராக கடமைபுரிந்த வேளை...ஆடி மாதம் நாட்டில் இனக்கலவரம். அப்போது வவுனிக்குளம் பெரிய நீர்ப்பாசனக் குளத்தில் வாடி போட்டு அதாவது தற்காலிகமாக குடில்கள் அமைத்து தங்கிநின்று மீன்பிடித்தொழில்களில் ஈடுபடுவது தென்பகுதிச் சிங்கள மக்களின் ஒரு தொழிலாகும். கலவரம் உச்ச கட்டம் எங்களுடைய தமிழ் இளைஞர்கள் அந்தச் சிங்களவர்களைச் சுட்டு ஏழு, எட்டுப்பேர் பலியானார்கள். நிலமைகள் மோசமடையவே மாங்குளத்திலிருந்தும் மன்னாரில் இருந்தும் இராணுவம் படை எடுத்து வந்தனர். அவர்கள் வரும் வழியில் தான் எனது தலைமைக் காரியாலயம் அமைந்துள்ளபடியால் வந்த வேகத்தில் இராணுவத்தினர் யார் என்றும் பார்க்காமல் எனது காரியாலயத்தில்

வேலைபார்த்துக்கொண்டிருந்த ஆண் பெண் என அனைவருக்கும் அடித்தார்கள் காயம் விளைவித்தார்கள். பலர் இரத்தக்காயங்களுக்குள்ளானதில் நானும் ஒருவனாகக் காயப்பட்டு அருகிலுள்ள சிறிய வைத்தியசாலையிலும் வீட்டு வைத்தியமும் செய்துகொண்டேன். அப்போது வந்த இராணுவத்தினர் அங்கு தரித்து நின்ற துவிச்சக்கரவண்டிகளையும் அடித்து நொருக்கி அருகிலுள்ள கிணற்றிலும் தூக்கிப் போட்டார்கள். இராணுவத்தினரின் படை எடுப்பால் பயந்து அஞ்சி சிலநாட்கள் காடுகளிலும் படுத்துறங்கி உயிர் பிழைத்து அகதியாகி பெருவாரியான மக்களோடு காட்டுவழிப் பயணத்தை மேற்கொண்டு உழவு இயந்திரப் பெட்டியில் ஏறி மக்களோடு மக்களாக பல மைல் பிரயாணம் செய்து ஊர் போய்ச் சேர்ந்தேன்.

'திராட்சை வற்றலைப் போன்ற காய்ந்த தலையை உடைய ஒரு அழகில்லாத மனிதன் உங்களின் அரசியல் தலைவனாக இருப்பினும் அவனுக்கு நீங்கள் கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.'

# சன்சோனிக் கமிஷன்...

1977ம் ஆண்டு நாட்டில் இடம் பெற்ற இனக்கலவரத்தில் பல்லாயிரம் தமிழர்கள் கொன்றொழிக்கப்பட்டார்கள்...பல கோடி பெறுமதியான சொத்துக்கள் சூறையாடப்பட்டன. பல்லாயிரம் தமிழர்கள் சொந்த நிலங்களை விட்டு விரட்டப்பட்டனர். இது வரலாறாகிவிட்டது. அப்போது இந்த இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டவர்கள் சாட்சியம் அளிக்கலாம் என்று வெளிநாடுகளை ஏமாற்றுவதற்கு ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் திட்டம் ஏற்படாதியது. சன்சோனி என்பவர் இளைப்பாறிய பிரதம நீதி அரசர் தலைமையில் ஒரு விசாரணைக் கமிஷன் நியமிக்கப்பட்டது. பாதிக்கப்பட்டவர்கள் அவர்களிடம் சென்று முறைப்பாடுகளைப் பதிவுசெய்யலாம் என அறிவிக்கப்பட்டது. நான் வேலைபார்த்த நிர்வாகம் பாதிக்கப்பட்ட அத்தனைபேரையும் சாட்சியமளிக்கும்படி அறிவித்தது.

அனைத்து உத்தியோகத்தர்களும் 1978ம் ஆண்டு சாட்சியம் அளித்தோம். யாழ்ப்பாணம் பிரதான நூலகத்தில் சன்சோனியும் அவரது குழுவினரும் எங்கள் சாட்சியங்களை இரண்டு நாட்களாகப் பதிவு செய்தனர். வைத்திய சான்றிதழ்களையும் உடலில் ஏற்பட்ட காயங்களையும் நானும் என்னோடு வேலைபார்த்த ஆண் பெண் என யாவரும் நேரடியாகக் காண்பித்து பதிவுகளைச் செய்தோம். பதிவு மட்டும்தான் பதில் இல்லை. நீதியும் புறக்கணிக்கப்பட்டு நாடுபூராவும் அநீதி இழைக்கப்பட்ட சம்பவமாக முடிவடைந்தது. இப்படி எத்தனை கமிஷன்கள் தமிழர் வாழ்வில் வந்து போயின அத்தனையும் ஒன்றுமே எதுவும் செய்யவில்லை. அனைத்தும் பூச்சியமாகவே முடிவடைந்துவிட்டன.





# நான் படித்த பாடசாலை...

நான் படித்த பாடசாலையின் பெயர் யாழ்-நாவற்குழி மகா வித்தியாலயம். இப்பாடசாலை இருநூறு ஆண்டுகள் பழமை வாய்ந்ததாக அறிவேன். இப்பாடசாலையில்தான் நான் அரம்ப வகுப்பு முதல் உயர்வகுப்பு வரை கல்வி பெற்று வெளியேறியிருக்கிறேன். நான் படித்த காலத்தில் நான்குபேர் தலைமை ஆசிரியர்களாக இருந்திருக்கிறார்கள்.

1. திரு நதானியல்
2. திரு சங்கரப்பிள்ளை
3. திரு கந்தையா
4. திரு யோசப்

பல ஆசிரியர்களிடம் அதாவது இந்து, இஸ்லாம், கத்தோலிக்க ஆசிரியர்களிடத்தில் கல்வி பெற்றிருக்கிறேன். யாழ்ப்பாணத்துச் சாதி அமைப்பைச் சேர்ந்த பல சாதிய, சமய பல தொழில்கள் புரியும் பெற்றோரின் பிள்ளைகளுடன் ஒன்றாகச் சந்தோஷ மாகக் கல்வி கற்றிருக்கின்றேன். சிறுவயதிலிருந்து உயர் வகுப்புவரை கல்வி கற்ற மாணவ நண்பர்கள் பலர் இன்றும் என்னோடு தொடர்புகளோடுதான் வாழ்கிறார்கள்.

பள்ளிப் பாடங்களில் எனக்கு கணக்கு, புவியியல், தமிழ்ப் பாடங்கள் மிகவும் பிடித்தமான பாடங்களாக இருந்துள்ளன. இப்பாடங்களில் பல தடவைகள் அதிக புள்ளிகளைப் பெற்றும் சித்திபெற்றிருக்கிறேன். பல தடவைகள் ஆசிரியர்களின் பாராட்டையும் பெற்றிருக்கிறேன். 8, 9, 10ம் வகுப்புக்களில் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் எண்கணிதத்திற்கும் சமூகக்கல்விக்கும் (குடியியல், புவியியல், சரித்திரம்) பல தடவைகள் பரிசு பெற்றிருக்கிறேன்.

மாணவப் பருவம் என்பது எவ்வளவு இனிமையானது. அந்த இளம் வயதில் எவ்வளவு ஆனந்தம், எவ்வளவு குழப்படிகள். பாடசாலைக்குச் செல்லாமல் "கட்" அடித்த நாட்களும் உண்டு. சரஸ்வதிப் பூசை, இல்ல விளையாட்டுப் போட்டி, பரிசளிப்பு விழா என்றால் ஒரு வாரம் கொண்டாட்டம்தான். மாணவர்களுடன் சேர்ந்து சக மாணவிகளை கிண்டல் அடிப்பது, மை தெளிப்பது, ஆளுக்கொரு பட்டம் சொல்லி அழைப்பது, களவாகச் சினிமாப் புத்தகங்களை ஒன்றாகச் சேர்ந்து படிப்பது பாடுவது, நகைச்சுவைகளைச் சொல்லிச் சிரிப்பது, காதலுக்காக ஏங்கியவர்களுக்காக உதவுவது இப்படியாக மாணவ இளம்வயதுப் பருவத்தை எப்போது எழுதினாலும் இனிக்கும்.

இந்த விடையம் தலைமை ஆசிரியருக்கு எட்டியது. அடுத்தநாள் காலை வழிபாட்டு நேரம் (அசெம்பிளி) சுமார் 1.000 மாணவர்கள் மத்தியில் அதிபர் எங்கள் ஐந்து பேரின் பெயர் சொல்லி மேடைக்கு அழைத்தார். மேடையில் வைத்து ஐந்து பிரம்படி கைகளில் பதிந்த சம்பவம் இன்றும் மனதில் நிலைத்து நிற்கின்றது. நினைக்கும் போதெல்லாம் சிரிப்புத்தான்.



## உயர்வகுப்பு மாணவன்...

பாடசாலையில் உயர் வகுப்புப் படிக்கும்போது எனது தமிழ் எழுத்து அழகானது. தமிழ் மொழிப் பாடத்தில் அதிக புள்ளிகளை எடுப்பேன். கலை, இலக்கியத்தில் மிகுந்த ஈடுபாடுகொண்டிருந்தேன். எனது சிறு சிறு ஆக்கங்கள் அவ்வப்போது இலக்கிய மன்ற நிகழ்வுகளில் ஒலித்தது. பல தடவை கை தட்டல்களும் கிடைத்திருக்கின்றது. பின்னர் இலக்கிய மன்றத்தின் செயலாளராகவும் தலைவராகவும் கடமைபுரிந்து மன்றத்தை வளர்த்த பெருமையையும் தேடிக்கொண்டேன்.

## மாணவர் தலைவன்...

பாடசாலையின் கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் வளர்ச்சியையும் கருதி ஒவ்வொரு பாடசாலைகளிலும் மாணவர் தலைவர்கள், தலைவிகள் எனப் பாடசாலைகளில் கடமையாற்றுவார்கள். இவர்களைத் தலைமை ஆசிரியரே நியமிப்பார். அப்போது ஆறு மாணவர்கள் நியமிக்கப்பட்ட போது நானும் மாணவர் தலைவர்களில் (Senior Prefect) ஒருவராகத் தெரிவு செய்யப்பட்டு பாடசாலையைவிட்டு வெளியேறும் வரை அப்பதவியிலும் கடமைபுரிந்திருக்கிறேன். பல வகுப்புக்களைச் சேர்ந்த மாணவ மாணவியரோடு பேசிப் பழகி அவர்களை நல் வழிநடாத்திய அந்த நாட்கள் என்றும் இனிமையானதே...

இனிக்கும் மாணவப் பருவத்தைப் பற்றிய குறிப்புக்களை நினைத்து நினைத்து எழுதலாம். மாணவர்களுடன் வெளியே சென்று இளநீர், ஈச்சம்பழம், கொய்யாப்பழம், நாவல்ப்பழம், மாங்காய் எனப் பிடுங்கி உண்டு குடித்த நிகழ்வுகள் எத்தனை. பாடசாலைச் சுற்றுலாவாக மாணவர்களுடன் இலங்கைபூராவும் சுற்றுலா சென்று ஆடிப்பாடி, கண்டு களித்த பசுமையான நிகழ்வுகள் எத்தனை. கண் கண்ட மக்கள் ஊர்கள் இடங்கள் மலைகள், ஆறுகள், கண்கவர்ந்த காட்சிகள், இயற்கை வனப்புக்கள் அத்தனையும் இன்றும் நினைத்தால் இனிக்கின்றதே.

## சுப்பையா மாஸ்டர்...

சுப்பையா மாஸ்டர் கணக்குப்பாடம் படிப்பிப்பவர் 9ம் 10ம் வகுப்பிலே இவரிடம்தான் அடிக்கடி அடி வேண்டிப் படித்தபடியால்தான் கணக்குப் பாடத்தில் விசேட சித்தி கிடைத்தது என்று இப்போது எண்ணுகின்றேன். இவர் மாத்திரமல்ல ஆசீர்வாதம் என்ற ஆசிரியரின் கற்பித்தல் வழிகாட்டலில் தான் அதிவிசேட புள்ளி கிடைத்ததை இப்போது எண்ணி அந்த ஆசிரியப் பெருந்தகையை நினைத்து வணங்குகின்றேன். இந்த சுப்பையா மாஸ்டர் தனது வீட்டுச்சோலியுடன் வருவார் காலை 8, 9 மணிக்கே மிகவும் கோபமாகக் காணப்படுவார். வேலியில் போய் தடி பிடுங்கிவரும்படி மாணவர்களுக்குக் கட்டளையிடுவார்.நாங்களும் பிடுங்கி வந்து கொடுத்து அந்தத்தடியாலேயே அடி வேண்டுவோம். வயதுவந்த ஆண், பெண் என்று பாராமல் எல்லோருக்கும் சரமாரியாக அடிவிழும். இரு தரப்பினருக்கும் கண்ணீர் பொலு... பொலு என விழ மறுபக்கத்தில் சில மாணவர்கள் பகிடி பண்ண கல...கலவெனச் சிரித்துவிடுவோம். இப்படி எத்தனை சம்பவங்கள் அந்தப் பாடசாலை நாட்கள்.

## பிரம்படி வேண்டியது...

நான் 8ம் வகுப்பில் படித்துக்கொண்டிருந்த காலம். அப்போது ஒவ்வொரு வகுப்பினருக்குமிடையே ஒவ்வொரு வருடமும் தோட்டப் போட்டி நடைபெறுவது வழக்கம். மாணவர்கள் வீடுகளிலுருந்து கொண்டுவரும் விதைகளைப் போட்டு முளைக்கப்பண்ணி காய்கறிகள் உண்டுபண்ணுவதில் போட்டி. 9ம் வகுப்பாரோடு எங்களுக்குப் போட்டி. அவர்களின் வெங்காயப் பயிர் செழித்து வளர்ந்து நல்ல அழகாககத் தோற்றமளித்த வேளை இதைப் பொறுக்கமுடியாமல் பொறாமைப்பட்ட நானும் சில நண்பர்களும் அவர்களின் தோட்டத்தை காலால் உழக்கிச் சேதமாக்கி விட்டோம்.

## ஆசிரியருக்கெதிரான போர்க்கொடி...

அப்போது உயர் வகுப்புப் படித்துக் கொண்டிருந்த வேளை. ஆசிரியர் பெயர் தில்லைநாதன். இவர் மிகவும் கண்டிப்பானவர். அதே வேளை சாதியம் பார்ப்பதிலும் மிக்க வல்லவர். சரஸ்வதிப் பூசையின் போது என்னோடு படித்த சக மாணவி பெயர் முத்தம்மா அவரை நீ அது செய்யக்கூடாது இது செய்யக்கூடாது என ஒதுக்கப்பட்டபோது பிரச்சனை எழுந்தது. அப்போது நானும் உயர்வகுப்பு மாணவர்களோடு சேர்ந்து ஆசிரியரின் இந்த நடவடிக்கையைக் கண்டித்து ஆர்பாட்டம் செய்தோம். வீதிகளிலும் சுவர்களிலும் மதில்களிலும் அவரைப்பற்றி எழுதி எதிர்ப்பைத் தெரிவித்தேன். பின்னர் ஆசிரியர்-பெற்றோர்-மாணவர்கள் முன்னிலையில் ஆசிரியர் அவர்கள் மன்னிப்புக் கேட்டதோடு அந்தப் பிரச்சனைக்கு முடிவு வந்தது. ஆகவே இந்த மாணவர் பருவத்திலேயே சாதியம், சமஉரிமைக்காகக் குரல் கொடுத்திருக்கிறேன். இன்றுவரையல்ல இறக்கும் வரை சாதியத்துக்கும் ஒடுக்குமுறைகளுக்குமான எனது குரலும் எழுத்தும் ஒலித்துக்கொண்டே இருப்பது எனது இயல்பான குணமாகிவிட்டது.

## பாடசாலை விளையாட்டுப்போட்டி...

கல்வியோடு விளையாட்டும் இன்றுவரை எனக்கு விருப்பமான விடையமாகும். எனது சகோதரர்களும் இத்துறையில் ஈடுபாடுகொண்டிருந்தபடியால் எனக்கும் இதில் அதிக நாட்டம் ஏற்பட்டிருக்கலாம் என நம்புகிறேன். இப்போதும் நான் படித்த பாடசாலையில் அழகாகத் தோற்றமளிக்கும் விளையாட்டு அரங்கானது முன்னர் நான் 8ம் வகுப்புப் படிக்கும்போது பனை, பற்றைக் காடாகக் காட்சியளித்தது. அப்போது எனது ஊர் காந்தி சனசமூக நிலையம் உட்பட சில சனசமூக நிலையங்களின் அங்கத்தவர்களும் பழையமாணவர்களுடன் நானும் சேர்ந்து பல நாட்களாகப் பனைகளைத் தறித்து, பற்றைகளை வெட்டி அனைத்தையும் வேருடன் பிடுங்கி தரையைச் சமம்படுத்தி அந்த அரங்கை அமைத்தோம். அரங்கு அழகாக அமைக்கப்பட்டு முதலாவது இல்ல விளையாட்டுப் போட்டியில், சுந்தரர் (பச்சை நிறம்) இல்லத்தில் நானும் ஓட்டப்போட்டியில் பரிசுபெற்ற நிகழ்வு பசுமையானதே. உடலுழைப்பால் செப்பனிட்ட அந்த அரங்கில் முதலாவது போட்டிலிலேயே பரிசுபெற்றது ஒரு பாக்கியமாகவே கருதுகின்றேன்.

'உழைத்து உண்ணாமல் இரந்து வாழ்பவர்கள் குற்றவாளிகள்.
அவர்களுக்கு தானம் கொடுத்து உதவுபவர்களும் குற்றவாளிகளே.'

அந்தக் காலம் நான் மத்திய பிரிவில் 400 மீட்டர் ஓட்டப்போட்டி, நீளம் பாய்தல், பந்தெறிதல் போட்டிகள் மூன்றிலும் முதலாவது இடத்தைப் பெற்று அந்த வருடத்தின் சம்பியன் பட்டத்தையும் சம்பியன் வெற்றிக் கிண்ணத்தையும் பெற்றுக்கொண்டபோது எவ்வளவு ஆனந்தப்பட்டேன். அந்த வேளையில் என்னை உற்சாகப்படுத்திய மாணவ மாணவியரையும் ஆசிரியப் பெருந்தகைகளையும் இன்று என் கண்ணே சிந்திக்கையில் இளமைக்காலம் மீண்டும் வந்திடுமா என ஏங்குகின்றேன். இதைவிட வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி என்றால் சொல்லவும் வேண்டுமா.ஒவ்வொரு இல்லத்தவரின் பந்தல் அலங்காரம் மாணவ மாணவியரின் "கமோன்" என்ற உற்சாக வார்த்தைகள் இன்றும் காதில் ஒலிப்பதுபோல் காணப்படுகின்றது. பல வர்ண உடைகள், விநோத உடைப்போட்டி, கயிறு இழுத்தல் போட்டி, பழையமாணவர் ஓட்டப் போட்டி என்று எவ்வளவு ஆனந்தம். இது மட்டுமா வட்டார மாவட்ட உடற்பயிற்சிப் போட்டிகளிலும் தென்மராட்சி வடமாகாணப் போட்டிகளிலும் பல ஆண்டுகள் பங்குபற்றியிருப்பதுடன் பரிசில்களையும் பெற்றிருக்கிறேன்.

பின்பு நான் வளர்ந்து தொழில்புரியும் காலங்களில் எனது பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிக்கு இரு தடவைகள் நானும் சிறப்பு விருந்தினர்களில் ஒருவராகக் கலந்து கொண்டு சிறப்பித்திருக்கிறேன். என்னைப் படிப்பித்த ஆசிரியர்களின் முன்னிலையில் பழைய மாணவனாக சிறப்பு விருந்தினராக வெற்றிபெற்ற மாணவர்களுக்கு எனது கையால் பரிசளித்து மகிழ்ந்தது ஒரு கொடையாகவே எண்ணுகின்றேன். அந்த நேரத்தில் பெருந்திரளான விளையாட்டு ரசிகர்கள் மத்தியிலும் பொதுமக்கள் மத்தியிலும் என்னைக் கௌரவித்த ஆசிரியப் பெருந்தகைகளை இன்றும் வணங்கி மகிழ்கின்றேன்.

பிரதி உபகாரமாக எனது பாடசாலைக்கு ஜேர்மனியில் வசிக்கும் பழைய மாணவர்களோடு தொடர்பை ஏற்படுத்தி நிதிசேகரித்து 2005ம் ஆண்டில் அனுப்பியுள்ளேன். 1998ம் ஆண்டு நான் குடும்பமாக ஊர் சென்றபோது எனது பாடசாலைக்கு நேரடியாகச் சென்று நிதியுதவி அளித்து வந்தேன். இன்னும் சிறப்பாக என்னோடு கல்வி பயின்ற சக மாணவியான திருமதி. வசந்த அவர்களே தற்போது அதிபராக இருந்துவருவது எனக்கு மேலும் ஆனந்தத்தைத் தருகின்றது. வளரட்டும் அவரது கல்விப்பணிகள்.

'பெருந்துன்பம் ஏற்பட்டாலொளிய எவரும் பிறரிடம் இரந்துண்ணல் ஆகாது. இரப்பவன் தன்மானத்தையும் .மனிதத் தன்மையையும் இழந்து விடுகிறான்.'

# இன்றும் என்னால் மறக்கமுடியாத ஆசிரியப் பெருந்தகைகளும் என்னோடு கல்வி பயின்ற மாணவ மணிகளும்...

## ஆசிரியர்கள்...

| | |
|---|---|
| நதானியல் | - நல்லூர் |
| சங்கரப்பிள்ளை | - நாவற்குழி |
| கந்தையா | - கொக்குவில் |
| யோசப் | - நாவற்குழி |
| சுப்பையா | - நாவற்குழி |
| சோமசுந்தரம் | - அரியாலை |
| கந்தையா | - நல்லூர் |
| சொக்கலிங்கம் | - நாவற்குழி |
| அருணாசலம் | - மறவன்புலவு |
| தில்லைநாதன் | - நாவற்குழி |
| துரைராசா | - நீர்வேலி |
| காதர் | - யாழ்ப்பாணம் |
| ஆசீர்வாதம் | - இளவாலை |
| பாரதி | - அரியாலை |
| இரட்ணாம்பாள் | - அரியாலை |
| றோஸ் | - நாவற்குழி |
| பூமணி | - சாவகச்சேரி |
| பத்மா | - நுணாவில் |
| திருமதி முத்துக்குமார் | - சாவகச்சேரி |

## உயர் வகுப்பில் படித்த மாணவர்களும் பின்னர் அவர்கள் வகித்த பதவிகளும் தற்போது வசிக்கும் இடங்கள்

| | | |
|---|---|---|
| விஜயானந்தன் | - பொதுலிகிதர் | - நாவற்குழி/ஜேர்மனி |
| புலேந்தின் (அமரர்) | - பொதுலிகிதர் | - நாவற்குழி |
| தேவராசன் | - பரிசோதகர் | - ஜேர்மனி |
| பாலபாஸ்கரன் | - அரச உத்தியோகத்தர் | - நாவற்குழி |
| பாலசுந்தரம் | - பாடசாலை அதிபர் | - நாவற்குழி |
| தெய்வேந்திரன் | - லிகிதர் | - நாவற்குழி |
| சிவராசா | - முகாமையாளர் | - நாவற்குழி |
| தவலிங்கம் | - அரச உத்தியோகத்தர் | - நாவற்குழி |
| நாகராசா | - அரச உத்தியோகத்தர் | - மறவன்புலவு |
| மனோகரன் | - லிகிதர் | - கனடா |
| முத்துக்குமாரசாமி | - அரசஉத்தியோகத்தர் | - தச்சன்தோப்பு/கனடா |
| மயில்வாகனம் | - அரச உத்தியோகத்தர் | - நாவற்குழி/கனடா |
| சிறிதரன் (அமரர்) | - அரச உத்தியோகத்தர் | - நாவற்குழி/கனடா |
| சிவபாலன் | - டாக்டர் | - அவுஸ்திரேலியா |
| சிவயோகலிங்கம் | - சிரேஸ்டவிரிவுரையாளர் | - பேராதனை |

| | | |
|---|---|---|
| அமிர்தலிங்கம் | - அரச உத்தியோகத்தர் | - நாவற்குழி/லண்டன் |
| தில்லைநாதன் | - அரச உத்தியோகத்தர் | - நாவற்குழி/லண்டன் |
| சூசைநாதன் | - அரச உத்தியோகத்தர் | - நாவற்குழி/லண்டன் |
| சபாரத்தினம் | - கணக்காளர் | - கோவிலாக்கண்டி |

மாணவிகள்
வசந்தா
நிர்மலா
யோகாம்பிகை
யோகநாயகி
ஞானசோதி
லீலாவதி
கனகமணி
லலிதா
இராஜேஸ்வரி
புஸ்பவதி
முத்தம்மா

எனக்குக் கல்வி கற்பித்த பல ஆசிரியர்கள் இறந்துவிட்டார்கள் ஒரு சிலர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என அறிகின்றேன்.

மாணவர்கள் இருவர் இறந்துவிட்டார்கள் பலர் வெளிநாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பலர் தாயகத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இன்னும் சில மாணவ மாணவியரின் பெயர்களை மறந்துவிட்டேன். முடிந்த அளவு ஞாபகத்திலுள்ளவர்களைப் பதிவு செய்துள்ளேன்.

மாணவியரும் பலர் வெளிநாடுகளில் வசிக்கிறார்கள் சிலர் தாயகத்தில் வசிக்கிறார்கள்.

என்னோடு கல்வி பயின்ற மாணவ மாணவியர் இன்றும் சிலர் என்னோடு தொடர்பில் இருந்துவருகின்றார்கள். ஒரு சிலருடன் பழைய நினைவுகளை தொலைபேசியில் இரைமீட்டுக் கதைத்துப் பேசி மகிழ்வேன். வாழ்வில் மறக்கமுடியாத மாணவப்பருவம் என்றும் இனிமையானதும் சுகமானதுமாகும். மீண்டும் வருமா!...இந்த மாணவப் பருவம்!...

# வெற்றிக்கிண்ணங்களைப் பெற்றவர்கள்:-

எங்கள் ஊரவர்கள் கூடுதலானோர் நான் படித்த யாழ் நாவற்குழி மகாவித்தியாலயத்திலேயே கல்வி பயின்று வெளியேறியிருக்கின்றனர். கல்வியிலும் விளையாட்டுத்துறையிலும் சிறந்து விளங்கியிருக்கிறார்கள். விளையாட்டுத்துறையைப் பொறுத்த அளவில் பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் சம்பியன் கிண்ணங்களை எடுத்து வெற்றிவாகைசூடிய எனது ஊரவர்களை எனக்குத் தெரிந்தவரையில் பதிவு செய்கிறேன்.

1. காசிப்பிள்ளை
2. வேலையா (அண்ணர்)
3. சிங்கராசா
4. குணசிங்கம்
5. இராசலிங்கம்
6. சிவராசா (நான்)
7. அழகராசா (தம்பி)
8. அருள்முருகன்



# எங்கள் ஊர் நூல் நிலையம்...

ஈழத்தமிழினத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிகளுக்கு, ஒவ்வொரு ஊர்களிலும் அமைந்துள்ள வாசிகசாலை என்னும் நூல் நிலையங்களும் பெரும் பங்காற்றி வருவது போற்றத்தகுந்த விடையமாகும். அந்த வகையில் எமது ஊரில் அமைந்துள்ள "காந்தி" சனசமூக நிலையமும் ஒன்றாக விளங்குகின்றது. எனது வீட்டுக்கு அடுத்த வேலியில்தான் இந்த நிலையம் அமைந்துள்ளது. இன்றும் கம்பீரமாகத் தோற்றமளிக்கும் இந்த நூல் நிலையம் அறுபது ஆண்டுகள் கடந்து இயங்கி வருகின்றது என்பது சிறப்பான விடையமாகும். இந்த வாசிகசாலையின் தோற்றத்திற்கு ஆரம்ப கர்த்தாவாக விளங்குபவர் எனது சகோதரர் திரு நடராசா அவர்களே. சிறுவர், இளையோர், முதியோர் எனப் பல தரப்பினரின் கல்வி, கலை, விளையாட்டு, சமூக முன்னேற்றத்தை ஊக்குவிக்கும் நோக்கில் வருடாவருடம் பலவகையான விளையாட்டுப்போட்டிகளும் கலைத்திறன் போட்டிகளும் நடைபெறுகின்றன. இதைவிட அயலூர் கழகங்களுடனும் தென்மராட்சிப்பிரிவு, யாழ் மாவட்டப் போட்டிகளிலும் எனது ஊர் வீரர்கள் பங்குகொண்டு பல தடவை பரிசுகளைப் பெற்றிருக்கிறார்கள். இந்தப் போட்டிகளில் நானும் பல தடவை கலந்துகொண்டு பரிசுகளைப் பெற்றிருக்கிறேன்.

பாடசாலைப் படிப்புடன் எனது கல்வி, வாசிப்பு, விளையாட்டு, எழுத்து, பொதுஅறிவு எனப் பல்துறைசார்ந்த வளர்ச்சிக்கு இந்த வாசிகசாலை எனக்குப் பெரிதும் உதவிபுரிந்திருக்கிறது. அதாவது அன்றைய காலத்தில் நான் பாடசாலைவிட்டு வீடு வந்து சாப்பாடு முடித்துவிட்டு வாசிகசாலையில்தான் இளைப்பாறுவேன். புத்தகம் சஞ்சிகை வாசிப்போம். இதனால் வாசிப்பு எழுத்து பொதுஅறிவு, தமிழ்அறிவு வளர்ந்தது. அப்போது மாணவப் பருவத்தில் இந்த வாசிகசாலையில் என் வயதை ஒத்த பலருடன் ஒன்று கூடிக் கதைப்போம், அரட்டை அடிப்போம், கருத்துப்பரிமாறுவோம், விளையாடுவோம், வானொலி கேட்போம். மாலையில் பாடசாலை வீட்டுப் பாடங்களை ஒன்று சேர்ந்து செய்வோம். இப்படியாக வளர்ந்து பின்னர் நான் ஏனைய இளைய மாணவர்களுக்கும் கல்வி போதித்திருக்கிறேன். இதனால் பல மாணவர்கள் பரீட்சையில் நல்ல பெறுபேறுகளையும் பெற்றனர். கற்றலும் கற்பித்தல் வளர்ச்சிக்கு இந்த நூல்நிலையம் எனக்குப் பெரும் உதவி புரிந்திருக்கின்றது என்பது உண்மையான விடையமாகும்.

நான் இளைஞனாக இருக்கும் போது கிரிக்கட்போட்டிக்குப் பிற ஊர்க் கழகங்களுடன் விளையாடும்போதெல்லாம் எங்கள் கழகத்தின் அணித்தலைவராகக் கடமைபுரிந்திருக்கிறேன். வாசிகசாலையின் பொதுச் செயலாளராகவும் விளையாட்டு பகுதிப் பொறுப்பாளராகவும் பல ஆண்டுகள் கடமையாற்றிச் சேவைபுரிந்திருக்கிறேன். இதை விட கரம், தாயம், போன்ற உள்ளரங்க விளையாட்டுக்களையும் விளையாடி மகிழ்ந்திருக்கிறேன். ஒரு தடவை கிரிக்கட் கழக வீரர்களை அழைத்துக்கொண்டு வடமாகாண சுற்றுலாவுக்கும் சென்று வந்திருக்கின்றேன். இப்படியாக அன்றைய வாசிகசாலை நினைவுகள் என்றும் பசுமையானவையே.

எங்கள் ஊரில் பலதடவைகள் ஏற்பட்ட வெள்ள அழிவு, வறட்சி அழிவு காலங்களில் இந்த வாசிகசாலை ஊடாக யாழ் கச்சேரியுடன் தொடர்புகொண்டு நிவாரண உதவிக்காகப் பணம், உணவுப்பொருட்களை இந்த வாசிகசாலை பல தடவை பெற்று ஊர் மக்களுக்கு வழங்கி வந்திருப்பதுடன் அயலூர் மக்களுக்கும் கொடுத்து சமூக சேவை செய்த இந்த நிலையம் அன்றைய காலங்களில் மகத்தான பணியை செய்து மனிதநேயத்தை வளர்த்திருக்கின்றது. இதைவிட புதிய வீதிகள் அமைத்தல், பழுதடைந்த வீதிகளை திருத்தி அமைத்தல், குளக்கட்டை உயர்த்தித் திருத்தி அமைத்தல் போன்ற சிரமதானப் பணிகள் எனது ஊரவர்கள் ஒன்றுகூடி செய்யும் போதெல்லாம் நானும் அவர்களோடு சேர்ந்து சிரமதானப் பணிகளைச் செய்திருக்கிறேன்.

எமது வாசிகசாலை வருடா வருடம் ஆண்டு விழா கொண்டாடுவது வழக்கம். வடமாகாண அரசியல் வாதிகள், கல்விமான்கள், சமய சமூகசேவை பெரியவர்கள், பாதுகாப்பு அதிகாரிகள் என இவர்களை அழைத்துக் கொண்டாடப்படும் போதெல்லாம் நானும் சேர்ந்து பல உதவிகளைச் செய்திருக்கிறேன். சிங்கள, தமிழ், இஸ்லாமிய அரசியல்வாதிகளும் மந்திரிமார்களும் எமது வாசிகசாலை விழாக்களில் வந்து கலந்துகொண்ட போது அவர்களோடு கலந்துரையாடும் வாய்ப்பும் கிட்டியது. குறிப்பாக வடமாகாண கம்யூனிஸ்ட் வி.பொன்னம்பலம், டானியல், டொமினிக்ஜீவா, எம்.சி.சுப்பிரமணியம், இக்பால், பொலிஸ் அதிகாரி.நாதன், மன்னார் என்.எஸ்.ஏ. காதர், சண்முகதாசன் போன்றவர்களுடன் பழகும் வாய்ப்புக்கு இந்த நூல் நிலையம் பெரிதும் உதவியதை மனமார வாழ்த்துகின்றேன்.

'கடவுள் மாறாதவர், அவரைப் பற்றி மக்கள் தெரிந்து
கொண்டிருக்கும் எண்ணங்களே மாறிக்கொண்டிருக்கின்றன.'

# என் வயதுடைய எனது ஊர்த்தோழர்கள்...

எனது வயதையொத்த எனது ஊர்த்தோழர்களும் நண்பர்களும் என்றும் மறக்கமுடியாதவர்கள். குழந்தை, சிறுவர், இளைஞர் பருவகாலங்களில் எனது தாய்மண்ணில் நனைந்து கரைந்து ஒன்றாக வாழ்திருக்கிறேன். விளையாட்டு, ஒன்றுகூடல், கல்விபயிலல், சண்டைபிடித்தல் என இன்னோரன்ன நிகழ்வுகளோடு என்னோடு ஒன்றாய்க் கலந்து உண்டு குடித்து மகிழ்ந்த எனது ஊர் என் வயது ஒத்த நண்பர்கள் உறவுகளைப் பதிவு செய்வதில் பெருமகிழ்வு கொள்ளுகின்றேன்.

இரத்தினசிங்கம்
குணரத்தினம்
துரைசிங்கம்
சின்னக்கோன்
நித்தியானந்தன்
செல்வராசா
சுந்தரலிங்கம் (கனடா)
செல்வராசா
தங்கராசா (பிரான்ஸ்)
சிறிதரன் (லண்டன்)
முத்துராசா (ஜேர்மனி)
இராமச்சந்திரன் (அமரர்)
குணராசா (லண்டன்)

சிங்கராசா
குணசிங்கம்
செல்வநாயகம் (அமரர்)
இராசலிங்கம்
இராசநாயம்
தவராசா (கனடா)
நடராசா (கனடா)
யோகராசா (கனடா)
ராசன்
நாகராசா
இராமச்சந்திரன்
சரவணமுத்து (சரவணை)
அழகராசா (சகோதரர்) (லண்டன்)
சௌந்தரராசா (பெறாமகன்) (கனடா)

இவர்களில் ஒரு சிலர் கனடாவிலும் லண்டனிலும் வாழ்ந்து கொண்டிருக் கிறார்கள் பலர் இப்பொழுதும் ஊரில்தான் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அனைவரும் பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் எனக்குடும்பங்களோடு வாழ்கிறார்கள் சிலருடைய பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். 1998ம் ஆண்டு நான் ஊர் சென்ற பொழுது பலர் உள் நாட்டிலேயே இடம்பெயர்ந்து வாழ்ந்ததால் அவர்களைச் சந்திக்கமுடியாமல் போய்விட்டது. சிலரைச் சந்தித்துக் கதைத்துப் பேசியது பெருமகிழ்வாக அமைந்தவிடயமாகும். மீண்டும் இவர்களைச் சந்திக்க வேண்டும் என்ற ஆவலுடன்தான் வாழ்ந்துகொண்டிருக்கிறேன்.

# எங்கள் ஊர்க்குளம்

மனிதருக்கு உணவு எவ்வளவு முக்கியமானதோ. அந்த அளவிற்கு சுத்தம், சுகம் முக்கியமான விடையமாகும். எனது ஊர் ஒவ்வொருவரின் வீடுகளிலும் கிணறுகள் இருந்தாலும் பெரும்பான்மையோர் எங்கள் ஊர்க் குளத்தில் குளிப்பதையே விரும்புவார்கள். அதுவும் வெய்யில் காலமென்றால்அந்தக் குளிர் நீரில் குளித்தால் எவ்வளவு ஆனந்தம். மேலும் நண்பர்கள் ஒன்று சேர்ந்து குளித்து விளையாடும்போது எவ்வளவு சுகம்.நான் பிறந்து சிறு வயதிலிருந்து வெளிநாடுவரும்வரை இக்குளத்திலேயே குளித்து மகிழ்ந்திருக்கிறேன். இக்குளத்தில் எனது ஊர் மக்கள் மட்டுமல்ல பக்கத்து ஊர்களிலிருந்தும் மக்கள் வந்து நீராடிச் செல்வார்கள்.

இந்தக் குளம் எப்பொழுது தோண்டப்பட்டது அல்லது கட்டப்பட்டது என்று எனக்குத் தெரியாது. காலாதி காலமாக இக்குளம் இருப்பதாக அறிகின்றேன். இக்குளத்தின் மூலம் அருகிலுள்ள காய் கறித் தோட்டங்களுக்கு நீர்த் தேவைகளையும் நிறைவேற்றி வந்துள்ளது. ஓலைப் பட்டை, எத்தல் பட்டை என்பவற்றால் எங்கள் தோட்டத்திற்கு தண்ணீர் அள்ளி ஊற்றி காய்கறி பயிரிட்டு அவற்றால் பயனடைந்திருக்கிறேன். அப்பொழுது இந்தக் குளத்தில் சிறிய அல்லித்தாமரை ஆங்காங்கே காணப்பட்டன. 1980 ஆண்டளவில் எனது தம்பி அழகராசா தாமரைப்பூ வேர்களை எங்கிருந்தோ கொண்டுவந்து குளத்தின் பல பகுதிகளிலும் நீரில் புதைத்து விட்டார். அவை இப்பொழுது குளம் முழுவதும் தாமரைப் பூக்களால் நிறைந்து காட்சியளிக்கின்றன. மாரிகாலத்தில் இதன் அழகோ தனி அழகுதான். குளத்தைச் சுற்றிவரக் காணப்படும் நெல் வயல்கள் பச்சைப் பசேலென காட்சிதர, தென்னை பனை மரங்களின் காற்று வீச பல வர்ணப் பறவைகளில் ஒலி எழுப்ப பெண்கள் சிறுவர்கள் என நெல்வயல்களில் களை பிடுங்கிப் பேசி மகிழ்திடும் பொழுதுகள் ஒரு சுகமான பொழுதுகள்தான்.

இளைஞனாக நான் இருக்கும்போது ஊரவர்களோடு சேர்ந்து இந்தக் குளத்தை கோடைகாலத்தில் சேறுவாரி சுத்தம் செய்வோம். குளக்கட்டுக்களைப் பெரிதாக்க சிரமதானப்பணி செய்து செப்பனிடும் பணிகளிலும் ஈடுபட்டிருக்கின்றேன். சிறுவயதில் அந்தக் குளக்கட்டில் ஓடி விளையாடியிருக்கிறேன். குளத்தில் நீந்துபவர்களுக்காக எமது வாசிகசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டியில் சகல வயதினருக்கும் நீந்தல் போட்டி நடைபெறும். இப்போட்டிகளில் நீந்திப் பல தடவை நானும் பரிசு பெற்றிருக்கிறேன்.

‘மனிதன் தினந்தோறும் முதுமை அடைகிறான் ஆனால் பொருளாசையும். வயதின் ஆசையும் அவனுடன் இழமையோடு இருக்கின்றன.’

1989 - 1990 காலப்பகுதியில் யாழ்குடாநாட்டில் கடுமையாக யுத்தம் நடைபெற்றது. போர் உச்சகட்டம். இடம்பெயர்வு ஆரம்பம். யாழ் மாவட்டத்திலுள்ள பல ஊர் மக்கள் இடம்பெயர்ந்து எங்கள் ஊரில் தஞ்சம் புகுந்தனர். அப்போதெல்லாம் நமது ஊர் மக்கள் ஆதரவளித்து உணவளித்துக் காப்பாற்றியிருக்கிறார்கள். சில ஆண்டுகள் அங்கு வாழ்ந்த பிற ஊர் அகதி மக்களின் குளியல், உடுதுணிகள் கழுவிச் சுத்தம் செய்தல் தேவைகளை இக் குளம் நிறைவேற்றியிருக்கின்றது. இந்தக் குளத்தின் மகிமையை எப்போதும் அங்குவாழ்ந்த பிற ஊர் மக்கள் நன்றியோடு நினைவுகூருவார்கள்.

இக்குளம் எங்கள் ஊர் மக்களுக்கு மாத்திரமல்ல பிற ஊர் மக்களுக்கும் உதவிபுரிந்து வருவது சிறப்பான விடையமாகும். சில சமயங்களில் பிற ஊர்களிலிருந்து இளையவர்கள் ஒரு கூட்டமாக வந்து குளித்து நீச்சலடித்து மகிழ்வார்கள். எங்கள் ஊரில் கோடைகாலத்தில் கடும் வெப்பம். அந்தக் காலங்களில் நான் ஒரு நாளைக்கு மூன்று தடவை குளித்து உடல் வெப்பத்தை தணித்த சம்பவங்கள் நிறையவே உண்டு. அதாவது பாடசாலை போவதற்கு முன், பாடசாலையால் வந்தபின் ஒருதடவை, மாலையில் விளையாடிவிட்டு ஒருதடவை என மூன்றுமுறை குளித்து மகிழ்ந்திருக்கிறேன். இப்படியாக இக்குளத்தின் மகிமையை நான் வெளிநாட்டில் வாழ்ந்தாலும் அன்றைய நினைவுகள் என்றும் பசுமையாகவே மனதில் இடம்பிடித்துவிட்டன. மனிதர்கள் ஒரு குறிப்பிட்ட காலம் வாழ்வார்கள் பின்னர் மடிவார்கள். ஆனால் இக்குளங்களோ என்றும் பூமியில் நிலைத்து இருந்து மனிதர்களுக்கு உதவி புரிந்துகொண்டே இருப்பது எவ்வளவு சிறப்பான விடயமாகும்!...



# எங்கள் ஊர் கண்ணகை அம்மன் கோவில்

கோவிலில்லாத ஊரில் குடியிருக்கவேண்டம் என்று நம் முன்னோர் கூறுவார்கள். அந்தவகையில் எங்கள் ஊரில் பல சிறிய கோவில்கள் இருந்தாலும் வேலம்பராய் கண்ணகை அம்மன் கோவில் வடபிரதேசத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற கோவிலாக விளங்குகின்றது. இந்தக் கோவில் தோன்றிய வரலாறு எனக்குத் தெரியவில்லை. பல நூறு ஆண்டுகள் பழமைவாய்ந்ததாக கூறப்படுகின்றது. தற்போது இந்தக் கோவில் பொலிவிழந்து காணப்படுகின்றதாக அறிந்துள்ளேன்.

இக்கோவிலைச்சுற்றி மூன்று பக்கமும் தென்னந் தோப்புகள். ஒரு பக்கம் கோவிலாக்கண்டி-அரியாலை கடல் அமைந்துள்ளது. எங்கு பார்த்தாலும் வெள்ளைப் புழுதி மணல். வெய்யில் காலங்களில் வெறுங்கால்களுடன் நடந்தால் சூடு தாங்கமுடியாது. நான் சிறுவயது, இளம்வயதுப் பராயத்தில் கோவில் திருவிழாவைத் தவறவிடுவதில்லை. பத்து நாள் திருவிழா ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு ஊர் மக்களின் செலவில் திருவிழா நடை பெறுவது வழக்கமாகும். சிகரம், மின்னொளி, மேளக்கச்சேரி, பாட்டுக் கச்சேரி, சின்னமேளம் எனப் பலதையும் ரசித்து மகிழ்ந்திருக்கிறேன். கைதடிப் பழனியின் மேள அடியில் ஊரே அதிரும். கடலை, இளநீர், நுங்கு, விளையாட்டுப் பொருள், மரக்கறி என விற்பனை செய்பவர்களின் சத்தம். யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு முஸ்லீம் வியாபாரி அவரை எல்லோரும் காக்கா என்று அழைப்பார்கள். அவர் மளிகைப் பொருட்களை விற்பனை செய்ய சிறுவர் பெண்கள் தாய்மார் என கூட்டம் கூடி நிற்கும். கோவில் மணியும் அடிக்க திருவிழா, அபிசேஷகம் தேவாரம் என நடைபெற மக்கள் பக்தி வெள்ளத்தில் நிற்பார்கள். இவை எல்லாவற்றையும் கண்டும் ரசித்தும் ருசித்தும் மகிழ்ந்த அந்தப் பசுமையான நாட்களை மறக்கவே முடியாது.

பங்குனித் திங்கள் நான்கு கிழமையும் ஒரே சனக்கூட்டம் குளிர்த்தி என்று சொல்லப்படும் பங்குனி உத்தரக் கஞ்சி பெரிய கிடாரத்தில் தயாரிக்கப்பட்டு அனைவருக்கும் கொடுக்கப்படும். அந்தப் பங்குனி வெய்யிலுக்கு அந்தக் கஞ்சி எவ்வளவு குளிர்ச்சியாக இருக்கும். வயிறும் குளிரும் மனதும் குளிர்ந்துவிடும்... அப்பொழுது அது அமிர்தமாகவே இருக்கும். இதைவிட வைகாசி விசாகப் பெருநாளுக்கு பிற ஊர்களிலிருந்து பல நூற்றுக் கணக்கானோர் வந்து தங்கி திருவிழாவைக் கண்டுகளித்து அம்பாளை வழிபட்டு. அம்பாளின் இறை ஆசி பெற்றுச் செல்வார்கள். வாகனங்கள் நிறைந்து பக்தர்கள் கூட்டமும் இக்காலங்களில் அலை மோதும். இப்படியாக இக்கோவிலின் சிறப்பு தனிச்சிறப்பாக இன்றும் விளங்குகின்றது!...



# உள்நாட்டில் இடம்மாறி வாழ்வு...

இடம்பெயர்வு என்னும் போது போரால் நான் இடம்மாறவில்லை. எனது தந்தையாருக்கு வன்னிப் பிராந்தியத்திலுள்ள வவுனிக்குளம்-ஒட்டன்குளம் என்ற இடத்தில் 4 ஏக்கர் காணி 1965ம் ஆண்டளவில் அரசால் வழங்கப்பட்டிருந்தது. இதே போல் எனது சகோதரருக்கும் துணுக்காய் பிரதேசத்தில் 4 ஏக்கர் காணி அரசால் 1968ம் ஆண்டளவில் வழங்கப்பட்டிருந்தது. காடு அழித்து களனியாக்கி நெல்லும் உப உணவு காய்கறி வகைகளும் என் தந்தை என் சகோதரர்களால் பயிரிடப்பட்டு வாழ்வு மலர்ந்தது. அப்போது நான் பாடசாலையில் படித்துக்கொண்டிருந்தபடியால் விடுமுறை நாட்களில் இடையிடையே இப்பிரதேசத்திலேயே வாழவேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் தோட்ட வேலைகள் வயல் வேலைகளையும் செய்துவந்தேன்.

1972 பாடசாலைப் படிப்பு முடிய நானும் இடம்மாறி மல்லாவி-யோகபுரத்தில் வசிக்கும் போது துணுக்காய்ப் பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமை அலுவலகத்தில் பொதுலிகிதர் பதவி வெற்றிடம் இருப்பதாக அறிந்து அதற்கு விண்ணப்பித்து 1973ம் ஆண்டு அப்பதவி கிடைத்தது. அப்போது நாட்சம்பளமாக 20 ரூபா தரப்பட்டதை நினைக்க இப்பொழுதும் சிரிப்பாகத்தான் இருக்கின்றது. தொடர்ச்சியாக 1983 ம் ஆண்டு நான் ஜேர்மனிக்கு வரும்வரை பத்து வருடங்கள் அங்கே கடமைபுரிந்திருக்கிறேன்.

இப்பிரதேசம் ஒரு குடியேற்றப் பிராந்தியமாகும். யாழ்மாவட்டத்தின் பல பாகங்களிலிருந்தும் வந்து குடியேறியவர்கள் அதிகம். பல ஊர், சாதி, மதம், பழக்கவழக்கங்களைக்கொண்ட மக்களுடன் பேசிப் பழகி உண்டு குடித்து நன்மை தீமைகளில் கலந்து அவர்களோடு ஒன்றாக வாழ்ந்து அந்த மக்களைப் பற்றி நிறையவே படித்திருக்கிறேன். நானும் அங்கு ஒரு விவசாயியாகவும், தோட்டக்காரனாகவும் ஒரு உத்தியோகத்தனாகவும் அந்த மக்களோடு ஒன்றுபட்டு வாழ்ந்து வாழ்க்கைப் பாடத்தை கற்றிருக்கிறேன்.பலதரப்பட்ட குண இயல்புகளோடு வாழ்ந்த அந்த மக்களின் கல்வி,கலை,கலாச்சார, சமூக முன்னேற்றத்திற்கு என்னால் ஆன பங்களிப்புக்களை செய்திருக்கிறேன்.

ஆம் இந்த வன்னிப் பிரதேசத்தில் வன்னியைப் பூர்வீகமாகக் கொண்ட மக்களும் வாழ்கிறார்கள். அதாவது வன்னியை ஆண்ட பண்டார வன்னியன் வழித்தோன்றலின் பரப்பரை மக்களாவார்கள். இவர்களுடனும் நான் பழகி வாழ்ந்திருக்கிறேன். இந்த வன்னிப் பிரதேசம் பாலி ஆறு, பாரிய நீர்ப்பாசனக்குளம் வவுனிக்குளம் மட்டுமல்ல பல நூற்றுக்கணக்கான சிறு குளங்கள் ஆறுகள், மலைகள், நெல் வயல்கள், தோட்டங்கள், புல் வெளிகள், பண்ணைகள், குடியிருப்புக்கள், கல்விச்சாலைகள், கோவில்கள், வியாபார நிலையங்கள் , கொண்டாட்டங்கள் விழாக்கள் யாவற்றையும் தரிசித்து அனுபவித்து மகிழ்ந்தமை என் வாழ்வில் என்றும் மறக்கமுடியாக பசுமையான நிகழ்வாக அமைந்துவிட்டது. ஆனால் போரின் வடுக்களால் இந்தப்பிரதேசம் இன்று பொலிவிழந்து காணப்படுகின்றது. "பிறர் வாழச் சோறு போட்ட வன்னிப்பிரதேசம் இன்று மற்றவர்களிடம் கை ஏந்தி நிற்கின்றது" என்னும் போது பெரும் கவலையே!...

# யாழ் ஈழநாடு பத்திரிகை நிருபர்...

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்துகொண்டிருந்த ஈழநாடு பத்திரிகை அன்றைய காலத்தில் தமிழர் வாழும் பிரதேசங்களில் பிரதான செய்தித் தாளாக வலம்வந்துகொண்டிருந்தது. தினகரன், வீரகேசரி, தினபதி, மித்திரன் பத்திரிகைகளைப்போல் இப்பத்திரிகையையும் மக்கள் விரும்பிப் படித்து வந்தனர். அப்போது நான் வன்னிப் பிராந்தியமான மல்லாவி-யோகபுரத்தில் வசித்தேன். துணுக்காய்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் கடமைபுரிந்து கொண்டிருந்தேன். எனது சகோதரன் நடராசா அப்போது தினகரன், டெய்லி நியூஸ் (Daily News) பத்திரிகைகளின் நிருபராகக் கடமையாற்றியபோது நான் அவருக்கு எழுத்துப் பணிகளோடு உதவி வந்தேன்.வாசிப்பதிலும் எழுதுவதிலும் எனக்கு அதிக ஆர்வம் இருப்பதைக் கண்ட என் சகோதரர் யாழ் ஈழநாடு பத்திரிகையின் அப்போது பிரதம ஆசிரியராகக் கடமையாற்றிய இளைப்பாறிய தலைமை ஆசிரியர் (யாழ் பரமேஸ்வராக் கல்லூரி) சீனிவாசகம் அவர்களுடன் தொடர்புகொண்டு விண்ணப்பித்து ஈழநாடு பத்திரிகையின் வன்னிப்பிராந்திய நிருபராக 1976ம் ஆண்டு நியமிக்கப்பட்டேன். 1983 வெளிநாடு வரும்வவரை நிருபராகப் பணிபுரிந்தேன்.

அந்தப் பிரதேசங்களின் எனது செய்திகளும் உடனுக்குடன் பத்திரிகையில் வெளிவந்ததால் பலராலும் நான் நன்கு அறியப்பட்டவராகவும் விளங்கினேன். குறிப்பாக அப்போது துணுக்காய் பிரதேச உதவி அரசாங்க அதிபர்களாகக் கடமையாற்றிய திரு.குமாரசாமி, திரு மார்க்கண்டு, திரு.குணராசா (செங்கை ஆழியான்) பாண்டியன்குளம் உதவி அரசாங்க அதிபர் திரு.குலேந்திரன், மாவட்டக் காணி அதிபர் பரமேஸ்வரன், திரு. வேலுப்பிள்ளை (விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் தந்தை) திரு.சிவசுவாமி ஆகியோருடன் நெருங்கிப்பழகும் வாய்புக்கிட்டியதை பெரும் பாக்கியமாகவே கருதுகின்றேன். இவர்களை விட பல திணைக்களங்களில் கடமைபுரிந்த உயர் அதிகாரிகளுடன் பழக்கப்பட்டதுடன் அவர்களோடு சேர்ந்து கல்வி, விளையாட்டு, பொதுச் சேவைகளிலும் ஈடுபட்டிருக்கிறேன்.

அப்போது அப்பகுதி அரசதிணைக்களங்களில் கடமைபுரிபவர்களோடு சேர்ந்து கரபந்தாட்டம் விளையாடியிருக்கிறேன். இவை மட்டுமல்லாமல் இக்குழுவினருடன் நானும் சேர்ந்து கிளிநொச்சி றொட்றிக்கோ விளையாட்டு மைதானத்தில் பல கிரிக்கட் போட்டிகளிலும் விளையாடியிருக்கிறேன். வவுனியா நகரசபை விளையாட்டு மைதானத்திலும் இவர்களோடு சேர்ந்து விளையாடி மகிழ்ந்திருக்கிறேன். ஒரு பத்திரிகையாளன் என்பவன் மக்களிடம் தெளிவை ஏற்படுத்தி, விழிப்புணர்வை ஏற்படுத்தி, சமூகக் குறைபாடுகளை சுட்டிக்காட்டி நல்வழிப்படுத்தப்பட வேண்டிய பொறுப்பு இருக்கின்றது. அந்த வகையில் என்னால் இயன்ற கடமையை ஈழநாடு பத்திரிகையூடாகச் செய்திருக்கிறேன். ஊடகத் தர்மத்திற்கு பங்கம் விளைவிக்காமல் சுதந்திரமாகக் கடமைபுரிந்திருக்கிறேன் என்பது எனக்கு மிகவும் மன மகிழ்வை எப்போதும் ஏற்படுத்தி நிற்கின்றது.

# கூட்டுறவுத்துறையில் நான்...

நான் வன்னிப்பிரதேசமான மல்லாவி-யோகபுரம் பகுதியில் 1973 ஆண்டுகாலப்பகுதியில் வாழ்ந்துகொண்டிருக்கையில் எனது சகோதரர் கூட்டுறவுத்துறையில் அதிக ஈடுபாடுகொண்டிருந்தார். அப்போது துணுக்காய்ப் பகுதி பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்தின் மல்லாவிக் கிளைச்சங்கத்தில் முகாமையாளராக திரு.தம்பையா என்பவர் கடமைபுரிந்துகொண்டிருந்தார். அங்கே ஒரு உதவியாளர் தேவைப்பட்டதால் எனது முதல் வேலையாக நெல் அளவையாளர் வேலை கிடைத்தது. விவசாயப் பிரதேசம் என்றபடியால் ஒவ்வொரு நாளும் விவசாயிகள் உழவுஇயந்திரங்களில் மூடை....மூடையாகக் கொண்டுவரும் நெல்லை நிறுத்துக் கணக்கிட வேண்டியதே எனது வேலையாகும்.

அப்படியாக வேலை செய்கையில் தலைமைச் சங்கத்தில் பொதுலிகிதர் வெற்றிடம் இருப்பதை அறிந்து விண்ணப்பித்து 1973 ஏப்ரல்மாதம் அப்பதவி கிடைத்தது. பின்னர் கணக்குலிகிதர், கணக்குப் பரிசோதகர், எனப்பதவி உயர்வு பெற்று 1980ல் பிரதம கணக்காளர் பதவி கிடைத்தது. 1983 வரை அப்பதவியை வகித்துவிட்டு 1983ல் ஜேர்மனி வந்தேன். சுமார் 10 ஆண்டுகள் கூட்டுறவுத்துறையில் நிர்வாகிகள் பணிப்பாளர்கள், பணியாளர்கள் அரசஅதிகாரிகள், விவசாயிகள், வியாபாரிகள், பொதுமக்கள் எனப்பலதரப்பட்டவர்களோடு பழகும் வாய்ப்புக்கிட்டியது. பொது வாழ்க்கைப் பாடங்களை நிறையவே கற்றுக்கொண்டேன். அரச உத்தியோகத்தர்களின் தொடர்புகளும் அப்போது கிடைத்தமை பெரிய பேறாகக் கருதுகின்றேன்.

1973 - 1983பத்து வருடங்கள் கூட்டுறவுச் சேவைக்காலத்தில் தமிழ்-சிங்கள-இஸ்லாமிய அரச உயர் அதிகாரிகளுடனும் நண்பர்களுடனும் பழகியிருக்கிறேன். நிர்வாக ஒழுங்குகளைக் கற்றிருக்கிறேன். பலதரப்பட்ட ஊர், சாதி, சமய, பிரதேச வேறுபாடுகளைக்கொண்ட மக்களுடன் பழகியிருப்பதுடன் அவர்களின் நன்மை-தீமைகளிலும் கலந்துகொண்டிருக்கிறேன். உண்மையில் கூட்டுறவு என்பது ஒரு புனிதம் நிறைந்த சேவையாகும். சாதாரண மக்களின் வாழ்வுக்கு உறுதுணையானது."ஒருவர் பலருக்காகவும் பலர் ஒருவருக்காகவும்" என்றும் "கூடி வாழ்ந்தால் கோடி நன்மை" என்றும் புரிந்து கொள்ளத் தவறும் சிலராலும் சில அதிகாரிகளாலும் இதற்கு இழுக்கு ஏற்படுகின்றது. கூட்டுறவின் மகிமையைச் சரியாகப் புரிந்துகொண்டு கூடி நாம் வாழ்ந்தால் நமக்கு என்றும் நன்மையே கிடைக்கும் என்பதை அனுபவ ரீதியாக நான் கற்றுக்கொண்டேன் என்றே கூறுவேன்.

'உண்மை நன்மையின் பக்கம் வழிகாட்டுகிறது, நன்மையோ சொர்க்கத்துக்கு வழிகாட்டியாகும்.'

# வன்னிப்பிரதேச பொதுப்பணிகளில்

வன்னிப்பிரதேசமான மல்லாவி-யோகபுரம்-ஒட்டன்குளம் பகுதிகளில் எனது தந்தையாருக்கும் சகோதரருக்கும் காணிகள் இருந்தமையினால் பாடசாலை விடுமுறைகளில் நான் அங்கு சென்றுவருவேன். இக்காலங்களில் வயல்வேலைகள், தோட்டவேலைகளில் அவர்களோடு சேர்ந்து வேலை செய்வேன். 1973 பாடசாலைப்படிப்பை முடித்து அங்கு குடியேறி வாழ்ந்துகொண்டிருக்கையில்தான் 1973ல் துணுப்பாய்ப்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் வேலை கிடைத்தது. அத்தோடு யாழ் ஈழநாடு பத்திரிகையின் வன்னிப் பிராந்திய நிருபராகவும் பதவி கிடைத்தபடியால் வன்னியிலுள்ள பல சிறியகிராமங்களுக்குச் சென்று வந்திருக்கிறேன். நண்பர்கள் பலருடன் துப்பாக்கிகொண்டு காடுகளில் வேட்டைக்குப் போயிருக்கிறேன். மான்,மரை,பன்றி வேட்டையில் உயிர் ஆபத்து நிறைந்த சம்பவங்களைச் சந்தித்திருக்கிறேன். காட்டு யானைகளின் அட்டகாசத்தால் பல மைல் தூரம் காடுகளில் நடந்தும் ஓடியும் உயிராபத்தைச் சந்தித்திருக்கிறேன்.

பரந்த வயல்வெளிகள், புல்வெளிகள், சிறு நீர்ஓடைகள், வாய்க்கால்கள், குளங்கள், மேட்டுநிலப் பயிர்ச்செய்கை, ஏற்று நீர்ப்பாசனம் என பல வளங்களுடன் பாலி ஆறு என்னும்பெயர்கொண்ட ஆறும் ஓடுகின்றது. எங்கும் மக்கள் செறிந்து வாழ்கிறார்கள். வளங்கொழிக்கும் பிரதேசம். பசி பட்டினி அறியாத பிரதேசம். சுகாதார வசதிகள் குறைந்தாலும் பாலும் பழமும் காய்கறிகளும் நெல் தானிய வகைகளுக்கு என்றுமே பஞ்சம் கிடையாது.

வடமாகாணத்திலிருந்தும் பல ஊர் மக்கள் வந்து குறியேறி வாழ்கிறார்கள். பல சாதிய சமய பிரதேச மக்கள் வசித்து வருகின்றார்கள். அவர்களோடு நட்பாகவும் அன்பாகவும் பழகி வாழ்ந்திருக்கிறேன். பாடசாலைகள், விளையாட்டுச் சங்கங்கள், கிராமஅபிவிருத்திச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள் என பலதரப்பட்ட சங்கங்களோடு சேர்ந்து பல பொதுப்பணிகளில் ஈடுபட்டிருக்கிறேன். அவர்களின் வாழ்வியல் மேம்பாட்டுக்காக அரச அதிகாரிகள் ஆசிரியர்கள் கல்விமான்களோடு சேர்ந்து பல பொதுப் பணிகளில் ஈடுபட்டிருக்கிறேன். கோவில்களும், கொண்டாட்டங்களும், விழாக்களும் நிறைந்த இப்பிரதேசத்தின் விவசாய விழாவில் புகழ்பெற்ற பொப் இசைச் சக்கரவத்தி நித்தி கனகரத்தினம் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டபோது அவரோடு பேசி, ஆடிப்பாடி மகிழ்ந்திருக்கிறேன்.

1973 - 1983 காலப்பகுதியில் நான் அங்கு வாழ்ந்த காலத்தில் பல நண்பர்கள் தோழர்கள் என நட்புக்கொண்டு வாழ்ந்திருக்கிறேன். பசுமை நிறைந்த, பஞ்சம் தெரியாத அந்த வளம்கொழிக்கும் துணுக்காய்-பாண்டியன்குளம் - வவுனிக்குளம் பிரதேசத்தில் பல நண்பர்கள் இன்றும் மறக்கமுடியாதவர்களே. ஆனால் போரின் கொடுமையால் பல நண்பர்கள் இறந்துவிட்டனர். பலர் ஐரோப்பா, கடனா நாடுகளுக்கு இடம்பெயர்ந்துவிட்டனர். சில நண்பர்கள் இன்றுவரை என்னோடு தொடர்பில் இருந்துவருவது எனக்கு மகிழ்வாகின்றது.

# கூட்டுறவுச் சேவையில்...

1973 ஏப்ரல் மாத் பொதுலிகிதராக நியமனம் பெற்றேன்.
1973-1974 பொது லிகிதர்
1975-1976 கணக்கு லிகிதர்
1977-1979 கணக்குப் பரிசோதகர்
1980-1983 பிரதம கணக்காளர்

1978ல் யாழ்ப்பாணம் கூட்டுறவுக்கல்லூரியில் விசேட பயிற்சி பெற்றேன்
1979ல் கொழும்பு வருமானவரி தலைமை அலுவலகத்தில் பயிற்சி பெற்றேன்
1980ல் கண்டி-பொல்கொல்ல கூட்டுறவு முகாமைத்துவ நிலையத்தில் பயிற்சி பெற்றேன்.
1982ல் யாழ்ப்பாணம் கூட்டுறவுக்கல்லூரியில் உயர்தரப் பயிற்சி பெற்றேன்.

# கூட்டுறவுப் பணியாளர் சங்கம்...

துணுக்காய்ப் பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமை அலுவலகத்திலும் கிளைச்சங்கங்களிலும் அப்போது சுமார் 200 பேர்வரை கடமைபுரிந்தார்கள். இந்தப் பணியாளர்களின் உரிமைகள், சலுகைகளுக்காக ஒரு தொழிற்சங்கம் இயங்கிவந்தது. இச்சங்கத்தின் செயலாளராக 1978 - 1983வரை பதவி வகித்து சக பணியாளர்களின் நன்மதிப்பைப் பெற்றிருந்தேன். வேலை நிறுத்தப் போராட்டம், பணியாளர்களின் வருடாந்த ஒன்றுகூடல், சுற்றுலா, கூட்டுறவு விழா நிகழ்வுகளில் நானும் முன்னின்று உழைத்திருக்கின்றேன். பணிப்பாளர்சபை - கூட்டுறவு இலாகா அதிகாரிகளோடும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுப் பணியாளர்களின் உரிமைகள் சலுகைகளுக்காக உழைத்திருக்கிறேன்.

# வடபிராந்திய கூட்டுறவுப் பணியாளர் சம்மேளனம்...

வடமாகாணத்திலுள்ள நூற்றுக்கணக்கான கூட்டுறவுச் சங்கங்களின் கூட்டமைப்பு அப்போது யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் உருவாகியது. பின்னர் மன்னார் திருக்கோதீஸ்வரம் ஆலய மண்டபத்தில் பிரமாண்டமாகக் கூட்டம் நடைபெற்றது. பின்னர் வருடாவருடம் ஒவ்வொரு நகரத்திலும் நடைபெற்றுவருவது வழக்கமாகும். ஆயிரக்கணக்கான பணியாளர்கள் பங்குகொள்ளும் இச்சம்மேளனத்தின் நிர்வாகத் தெரிவில் வடபிராந்திய கூட்டுறவுப் பணியாளர் சபையின் உறுப்பினராகத் 1980ம் ஆண்டு தெரிவுசெய்யப்பட்டு வெளிநாடு வரும்வரை இதன் உறுப்பினராக இருந்து கடமை புரிந்திருக்கிறேன்.

# கூட்டுறவுத்துறையில் என்னோடு வேலை செய்தவர்கள்

1973 - 1983 காலப்பகுதியில் என்னோடு வேலை செய்தவர்கள். இவர்களை இப்பொழுதும் ஞாபகத்தில் வைத்திருக்கிறேன். ஒரு சிலர் இறந்துவிட்டனர். பலர் இடம்பெயர்ந்து பல நாடுகளில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். ஞாபகத்திலுள்ளவர்களையும் அவர்களின் பதவிகளையும் அவர்களின் பிறந்த ஊரையும் தற்போது வசிக்கும் நாடுகளையும் குறிப்பிடுகின்றேன்.

| | | | |
|---|---|---|---|
| சற்குணசேயோன் | - பொதுமுகாமையாளர் | - செட்டிகுளம் | - (அமரர்) |
| பொன்னுச்சாமி | - பொதுமுகாமையாளர் | - சரசாலை | - சுவீஸ்லாந்து |
| சிவசம்பு | - உதவிப்பொதுமுகாமையாளர் | - தெல்லிப்பழை | - கனடா |
| ஜெயரட்ணசிங்கம் | - கணக்காளர் | - யாழ்ப்பாணம் | - அமரர் |
| குஞ்சுத்தம்பி | - வங்கிமுகாமையாளர் | - மீசாலை | - ஜேர்மனி |
| கிருஷ்ணன் | - கணக்காளர் | - கரவெட்டி | - கொழும்பு |
| சண்முகம் | - கணக்குலிகிதர் | - கரவெட்டி | - கரவெட்டி |
| கந்தசாமி | - கணக்குலிகிதர் | - வேலணை | - ஜேர்மனி |
| செல்வராசா | - பொதுலிகிதர் | - மீசாலை | - பரந்தன் |
| நடேசபிள்ளை | - கழஞ்சியப்பொறுப்பாளர் | - துணுக்காய் | - அமரர் |
| கந்தசாமி | - லிகிதர் | - உயிலங்குளம் | - துணுக்காய் |
| விஜயகுலசிங்கம் | - கிளைமுகாமையாளர் | - நெடுந்தீவு | - கனடா |
| சண்முகரத்தினம் | - கிளைமுகைமையாளர் | - நெடுந்தீவு | - கனடா |
| பத்மநாதன் | - கிளைமுகாமையாளர் | - மல்லாவி | - சுவீஸ்லாந்து |
| தர்மராசா | - கிளைமுகாமையாளர் | - மல்லாவி | - மல்லாவி |
| அருணகிரிநாதன் | - கழஞ்சியப்பொறுப்பாளர் | - துன்னாலை | - கொழும்பு |
| புஸ்பவதி | - கிராமியவங்கிமுகாமையாளர் | - துணுக்காய் | - பிரித்தானியா |
| அழகுராணி | - பொது லிகிதர் | - நொச்சிமோட்டை | - துணுக்காய் |
| சுந்தராம்பாள் | - பொதுலிகிதர் | - மல்லாவி | - ஜேர்மனி |
| கமலராணி | - பொதுலிகிதர் | - கரவெட்டி | - யாழ்ப்பாணம் |
| கமலாவதி | - பொதுலிகிதர் | - நெடுந்தீவு | - யாழ்ப்பாணம் |
| மீனா | - கணக்குலிகிதர் | - துன்னாலை | - துன்னாலை |
| தில்லைநாதன் | - தலைவர்.ப.நோ.கூ.சங்கம் | - துணுக்காய் | - அமரர் |
| பூபாலசிங்கம் | - தலைவர்.ப.நோ.கூ.சங்கம் | - மல்லாவி | - பிரான்ஸ் |
| தில்லைநாதன் | - இயக்குனர்சபை உறுப்பினர் | - மல்லாவி | - கனடா |
| குலம் (செல்வரட்ணம்) | - இயக்குனர்சபை உறுப்பினர் | - மல்லாவி | - அமரர் |
| வ.ஐ.ச.ஜெயபாலன் | - இயக்குனர்சபை உறுப்பினர் | - மல்லாவி | - நோர்வே |
| ஜெயசீலன் | - இயக்குளர்சபை உறுப்பினர் | - மல்லாவி | - அமரர் |
| சுந்தரலிங்கம் | - இயக்குனர்சபை உறுப்பினர் | - வவுனிக்குளம் | - நோர்வே |

# பயிற்சியும் வேலையும்...

சிறுவனாக, மாணவனாக, இளைஞனாக இருந்தபோதெல்லாம் கூலி வேலை செய்திருக்கிறேன்.தோட்டவேலை, வயல் வேலை, களை பிடுங்குதல், அரிவுவெட்டுதல், சூடு அடித்தல் போன்ற வேலைகளும் குழை வெட்டுதல், வேலி அடைத்தல், வீடு வேய்தல், வாகனங்களில்மணல் ஏற்றுதல் எனப் பல வேலைகளைச் செய்திருக்கிறேன். மாட்டு வண்டி உழவு இயந்திரங்களில் நண்பர்களோடு சென்று கூலிவேலை செய்திருக்கிறேன். கட்டிட வேலை, தச்சுவேலைகளும் கூலித்தொழிலாளியாக வெலைசெய்திருக்கிறேன்.இந்தக்கூலி வேலை செய்த பணத்தில்தான் பல தடவைகள் பாடசாலைப் புத்தகம், கொப்பி, பேனா, அப்பியாசக்கொப்பி என வேண்டித்தான் கல்வி கற்றிருக்கிறேன் என்பது உண்மையான விடையமாகும்.

பாடசாலைப் படிப்பை முடித்து மல்லாவி-துணுக்காய்ப் பகுதியில் வாழ்ந்துகொண்டிருககையில் கிராம அபிவிருத்திப் பயற்சிக்காக துணுக்காய் பிரிவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நான்கு இளைஞர்கள் தெரிவுசெய்யப்பட்டார்கள். இந்த நால்வரில் நானும் ஒருவன். யாழ் அச்சுவேலியிலுள்ள கிராம அபிவிருத்திப் பாடசாலையில் (Rural Developmant School) ஒரு மாதகாலம் பயிற்சிபெற்றேன். இப்பயிற்சியில் பல செய்முறைப் பயிற்சிகளும் எழுத்துப் பயிற்சிகளும் பெற்றேன். அப்போது ஜேர்மனிய வெள்ளைக்காரர் ஒருவரிடம் பயிற்சி பெற்றது பெரிய கொடையாகவே கருதுகின்றேன். இதைவிட இந்தப் பயிற்சிக் கருத்தரங்குகளில் இலங்கை சர்வவோதய தலைவர் ஆரியரட்னா, வடபிராந்தியத் தலைவர் புங்குடுதீ திருநாவுக்கரசு (அமரர்) ஆகியோரின் பழக்கமும் பயிற்சியும் பெற்றது பின்னாளில் சமூகசேவை செய்துகொள்ள உறுதுணையாக அத்திவாரம் இட்டது என்றே கூறவேண்டும்.

வேலையில்லாமல் இளைஞனாக இருந்தபோது இலங்கை பொறியில் கூட்டுத்தாபனத்தில் (State Engineering Coparation) கட்டிடப்பகுதியில் கூலியாளனாக ஆறு மாதங்கள் கடமை புரிந்தேன். துணுக்காயில் அரசால் கட்டப்பட்ட மிகப் பெரும் நெற்களஞ்சியச்சாலை கட்டிடப் பணிவேலையே இதுவாகும். முதன் முதல் இங்குதான் சிங்கள நண்பர்களோடு சேர்ந்து வேலை செய்திருக்கிறேன். பின்னர் கொழும்புக்கு வேலை மாற்றம் வந்தபோது அதை விரும்பாமல் அந்த வேலையை நிறுத்திவிட்டேன்.

கண்டியில் அமைந்துள்ள இலங்கை அரசின் கூட்டுறவு கணக்கியல் முகாமைத்துவ நிலையம் (Accounts and Managment Center) இதில் பயிற்சி பெற்றேன். வடக்கு-கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த ப.நோ.கூ.சங்கங்களின் தலைமை அலுவலகக் கணக்காளர்களின் பயிற்சியானதால் நானும் பங்குகொண்டேன். வடக்கு-கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த பல தமிழ்-இஸ்லாம் நண்பர்களோடு பழகும் வாய்ப்புக்கிட்டியது பெரு மகிழ்ச்சியே. இப்பயிற்சியில் கொழும்பிலிருந்தும் வருகைதந்த தமிழ்-சிங்கள விரிவுரையாளர்களும் கூட்டுறவாளர்களும் கலந்துகொண்டு பயிற்சியளித்தது குறிப்பிடத்தக்க விடையமாகும்.

வடகிழக்கிலுள்ள ப.நோ.கூ.சங்கங்களின் கணக்காளர்கள் கொழும்பிலுள்ள அரச வருமான வரித்திணைக்கள (Income Tax Department) தலைமை அலுவலகத்துக்கு அழைக்கப்பட்ட போது நானும் சென்று பயிற்சி பெற்றேன். இத்திணைக்களத்தின் தமிழ்- சிங்கள- இஸ்லாமிய உயர் அதிகாரிகளிடம் பயிற்சி பெற்றது. பின்னாளில் எனது கணக்காளர் பதவியைத் திறம்படச் செய்வதற்குக் காரணமாகியது என்றே கூறுவேன்.

1983ல் புலம்பெயர்ந்து ஜேர்மனிக்கு வந்து அகதி அந்தஸ்த்துக்கோரி வாழ்ந்த போது வேலை செய்வதற்கோ அருகிலுள்ள நகரங்களுக்குச் செல்வதற்கோ சட்டம் இடம்கொடுக்கவில்லை. அவ்வளவு கடுமையாகச் சட்டம் இருந்துள்ளது. ஆறு மாதம் டொச் மொழிவகுப்பிற்குச் சென்று இந்தநாட்டு மொழியை சிறிது கற்றேன்... பின்னர் போக்குவரத்து அனுமதி வழங்கப்பட்டதால் அருகிலுள்ள கிறிபீல்ட் நகரத்தின் தோட்டப்பகுதிக்குச் சென்று தோட்டவேலை, இயந்திரங்கள் கழுவும் வேலைகள் செய்தேன். பின்னர் இராட்டிங்கள் நகரிலுள்ள தனியார் உணவுச்சாலையில் பாத்திரங்:கள் கழுவுதல் பிஸா உணவு தயாரிப்பவருக்கு உதவுதல் வேலைகளைச் செய்திருக்கிறேன். உணவுச்சாலையும் மூடப்பட எனக்கு வேலையும் இல்லாமல் போனது.

வீட்டிலிருந்து வீண் பொழுது போக்கக்கூடாது, உடல் நிலையும் பாதிக்கும் எனக்கருதி வேலை தேடினேன். டுசில்டோவ் நகரிலுள்ள தனியார் உணவுச்சாலையில் மீண்டும் வேலை. அதுவும் நீடிக்கவில்லை. வியாபார முயற்சியில் ஈடுபட்டேன் அதாவது சனி, ஞாயிறு நாட்களில் பூக்கடைகளிலும் சந்தைகளிலும் மொத்த விலைக்குப் பூக்களை வாங்கி டுசில்டோவ் நகரிலுள்ள பழைய நகர்ப்பகுதிக்குக் கொண்டு சென்று விற்பனை செய்வதாகும். அதாவது இப்பகுதியில்தான் பல நாட்டவர்களின் பெருந்தொகையான உணவுச்சாலைகள் இருக்கின்றன. சனி, ஞாயிறு, விடுமுறைதினங்களில் பெருந்தொகையில் பல நாட்டவர்களும் கூடி, குடித்து, ஆடிப் பாடி மகிழும்போதுதான் என்னைப்போல பல நாட்டவர் அங்கு பூ வியாபாரம் செய்வார்கள். அந்தக் கும்பலுக்குள் ஒவ்வொரு உணவுச்சாலையாக ஏறி இறங்கி பூ வியாபாரம் செய்தேன். இந்த வேலையில் பல அனுபவங்களும், சுவையான சம்பவங்களும் உண்டு. நினைத்தால் சிரிப்பு. இவையாவும் 1984 - 1989 கால 5 வருட காலத்தில் நடைபெற எனது மூத்த மகன் 1985லும் இளைய மகன் 1988லும் பிறந்தார்கள்.

1990ம் ஆண்டில் திருப்பம் ஏற்பட்டது. அரச அனுமதி பெற்று சட்டப்படி பதிவு செய்து வேலை ஒன்று கிடைத்தது. டுசில்டோவ் நகரிலுள்ள 400 அறைகள் கொண்ட சர்வதேச புகழ்பெற்ற ஹில்டன் ஹொட்டலில் (Hilton International Hotel) சிற்றூழியர் வேலை ஒன்று கிடைத்தது. நானாகவே இந்த வேலையைத் தேடி எடுத்துக் கொண்டேன் பின்னர் எனது நண்பர்கள் நாலுபேரை இந்த ஹொட்டலில் வேலைக்குச் சேர்த்துவிட்டேன்.

1995 ஆண்டில் வேலை மேற்பார்வையாளராகப் (Supervisor) பதவி உயர்வு கிடைத்தது.பல வெளிநாட்டவர்களுடனும் ஜேர்மனியர்களுடனும் ஒன்றாகச் சேர்ந்து வேலை செய்யும் அனுபவம் பெற்றேன். இரண்டுவருடங்கள் கழிய இந்தத் தாபனத்தின் ஒரு மாதத்தின் சிறந்த வேலையாளராகத் தெரிவுசெய்யப்பட்டேன். (Best Worker of the Month) சிறந்த பணியாளருக்கான பணப் பரிசும் நற்சான்றிதளும் பாராட்டும் முகாமைத்துவப் பணிப்பாளரால் எனக்கு வழங்கப்பட்டது. 2005ம் ஆண்டுவரை நீடித்த இந்த வேலையை ஹொட்டல் நிர்வாகம் தனியார் கம்பனியிடம் ஒப்படைத்தபடியால் நானும் இதர பணியாளர்கள் 20 பேரும் ஒரே நாளில் வேலையை விடவேண்டி வந்தது. 1990 -2005 வரையுள்ள 15 ஆண்டுகள் இத்தாபனத்தில் கடமையாற்றியிருக்கிறேன்.

2005-2007 டுசில்டோவ் பிரதான தொடரூந்து நிலையத்தில் அமைந்துள்ள ஞவழஉமாநகைஅ என்னும் பெயர்கொண்ட வியாபார நிறுவனத்தில் களஞ்சிய உதவியாளராகக் கடமைபுரிந்தேன். அந்தக்கம்பனியில் ஆள் குறைப்பு நடவடிக்கையால் அந்த வேலையும் இல்லாமல் போனது.

2008ம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை நான் வசிக்கும் நகரமான டியூஸ்பேர் நகர மையப்பகுதியில் அமைந்துள்ள வெஸ்ற் பீல் கசினோவில் (West Spiel Casino) கழஞ்சியப் பொறுப்பாளராகக் கடமையாற்றிக்கொண்டிருக்கின்றேன். சம்பளம் குறைவானாலும் ஊரோடு வேலை என்பது மனதுக்குச் சந்தோஷம்தான். ஓய்வூதியம் பெறும்வரை வேலை தொடரும் என நம்புகிறேன். செய்யும் தொழிலே தெய்வமாகும்.

எனது வாழ்நாள் சேவைக்காலம்...

| | |
|---|---|
| 1973 - 1983 தாயகத்தில் கூட்டுறவுத்துறையில் வேலை. | - 10 வருடங்கள் |
| 1984 - 1989 வெளிநாட்டில் பல துறைகளில் வேலைகள். | - 06 வருடங்கள் |
| 1990 - 2005 டுசில்டோவ் ஹில்டன் ஹொட்டல் வேலை | - 15 வருடங்கள் |
| 2005 - 2007 டுசில்டோவ் ஸ்ரொக்கைம் கம்பனி வேலை | - 03 வருடங்கள் |
| 2008 தொடக்கம் டியூஸ்பேர்க் வெஸ்ற் ஸ்பீல் கசினோ வேலை | - 06 வருடங்கள் |
| | ---------------------------- |
| | 40 வருடங்கள் |

'பெற்றோருக்குக் கீழ்ப்படியாமையைத் தவிர மற்ற எல்லாப் பாவங்களையும் ஆண்டவன் மன்னிக்கிறான்.'

# கூட்டுறவில் பெற்ற விருது...

கூட்டுறவின் மகிமை உணரப்படுவதும், கூட்டுறவால் மக்கள் வாழ்வு மேம்படுவதும் வறுமை நீங்குவதும் கூட்டுறவின் இலட்சியமாகக் கொள்ளப்படும். கூட்டுறவுத் துறையின் வளர்ச்சிப் பாதையில் வருடாவருடம் சர்வதேச கூட்டுறவு தின விழா இலங்கை பூராவும் நடைபெறுவது வழக்கமாகும். நான் துணுக்காய்பகுதி பலநோக்குக்கூட்டுறவுச்சங்க தலைமை அலுவலகத்தில் கடமையாற்றிக்கொண்டிருந்தவேளை 1980ம் ஆண்டு முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களிடையே கூட்டுறவு தினவிழாவையொட்டிப் பொது அறிவுப்போட்டி நடைபெற்றது. இப்போட்டியில் கலந்துகொண்டநான் மாவட்டத்தின் முதலாவது வெற்றியாளராகத் தெரிவுசெய்யப்பட்டு முல்லைத்தீவு கடற்கரை திறந்தவெளி அரங்கில் நடைபெற்ற கூட்டுறவு தின விழாவில் பரிசும் சான்றிதழும் பெற்று கௌரவிக்கப்பட்டேன்.

# கொள்ளைச் சம்பவம்...

1978ம் ஆண்டு தலைமை அலுவலகத்தில் கடமையாற்றிய வேளையில் பட்டப்பகலில் கொள்ளையர்கள் துப்பாக்கியுடன் புகுந்து அங்கு வேலைசெய்த எங்களை மிரட்டிப் பயமுறுத்தி, துப்பாக்கியால் சத்தவெடி சுட்டுப் பெரும் தொகைப் பணத்தைக் கொள்ளையடித்துச் சென்றனர். இந்தக்காலப் புகுதியில் வடபிராந்தியத்தில் பல கொலை, கொள்ளை, வழிப்பறிச் சம்பவங்கள் இடம்பெற்றுக் கொண்டிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். எனக்குக் காயம் எதுவும் ஏற்படவில்லை. பின்னர் மாங்குளம் பொலிசார் விசாரணை மேற்கொண்டனர். பிற்பாடு கள்ளர்கள் பிடிபட்டு முல்லைத்தீவு நீதி மன்றத்தில் அடையாள அணிவகுப்பு நடைபெற்றபோது கள்ளர்களைச் சரியாக அடையாளம் காட்டினேன். இச்சம்பவம் மறக்கமுடியாத நிகழ்வாக மனதில் பதிந்துவிட்டது.

# கூட்டுறவில் போராட்டம்...

கூட்டுறவுப் பணியாளர்களின் சம்பள, உரிமைப் போராட்டங்கள், வேலை நிறுத்தப் போராட்டங்கள் பல தடவைகள் நடைபெற்றபோது பலவற்றில் நானும் ஈடுபட்டிருக்கிறேன். 1977-1978 காலப் பகுதியில் சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத் தலைவர் இராசசுந்தரம் என்பவர் பெரும் அடாவடித்தனங்கள் செய்தார். அவர் கூறுவார் அப்போதய கூட்டுறவு மந்திரி இலங்கரட்தினாவும் அமைச்சர் குமாரசூரியரும் தனது இரு கைகள் எனவும் தன்னை ஒன்றும் செய்யமுடியாது என்றும் பெருமிதம் அடித்துக்கொள்வார். அப்போது அவரின் அடாவடித்தனங்களை எதிர்த்து வடமாகாண கூட்டுறவுப் பணியாளர்கள் சுமார் ஆயிரம் பேர்வரை ஒன்று சேர்ந்து யாழ் பேருந்து நிலையத்திலிருந்து யாழ் கச்சேரி வரை ஆர்பாட்ட ஊர்வலம் நடாத்தி அன்று முழுவதும் கச்சேரியை இயங்காமல் திணறடித்தோம். இப்படியாகக் கூட்டுறவுப் பணியாளர்களின் நலனுக்காக சாத்வீகப் போராட்டம் நடாத்தியது அன்று பெருமையாக இருந்தது என்றே கூறவேண்டும்.

# ஜேர்மனிக்குப் புலம்பெயர்வு...

நாட்டில் இனப்படுகொலைகளும், இடம்பெயர்வுகளும் உயிராபத்துக்களும் பெருகின 1983 திருநெல்வேலியில் இராணுவத்தினர்மீது விடுதலைப்புலிகள் நடாத்திய தாக்குதலில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். அப்போது நான் யாழ் கூட்டுறவுக் கல்லூரியில் உயர் பயற்சி மேற்கொண்டிருந்த காலம். ஒவ்வொரு நாளும் அந்த வீதியால் நான் போய்வருவது வழக்கம். சம்பவதினம் நானும் அவ்வழியால் சென்றபோது சம்பவ இடத்தில் இராணுவத்தினர் வழி மறித்து என்னையும் இன்னும் சிலரையும் தாக்கினர். நல்ல வேளை அப்பொழுது என்னிடம் சைக்கிள் இருந்த படியால் ஓடித்தப்பினேன். சிறு காயங்கள்தான் ஏற்பட்டது. மேலும் உயிராபத்துக்கள் அதிகரிக்கவே 1983 நவம்பர் மாதம் 24ம் திகதி நாட்டைவிட்டு வெளியெறி சில நண்பர்களுடன் மொஸ்கோ-கிழக்குப் பேர்ளின் வழியாக 25-11-1983 மேற்குப் பேர்ளினை வந்தடைந்தேன். காலடி வைத்த அன்றே காவல்துறையினர் பிடித்து சிறையில் அடைத்து விசாரணைகளை மேற்கொண்டுவிட்டு அடுத்தநாள் விடுதலை செய்தனர். அகதி விண்ணப்பம் கோரியபடியால் ஒரு மாதகாலம் வரை பேர்ளினில் அகதிமுகாமில் வாழ்ந்தேன்.பின்பு நூறன்பேர்க் என்ற இடத்திற்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து முன்ஸ்ரர்-காவிஸ்பேர்க் என்ற இடத்தில் ஆறுமாதம் வாழ்க்கை. பின்னர் 1984 மனைவியும் மகளும் நாட்டிலிருந்து வந்து சேர அவர்களோடு ஒன்றுசேர்ந்து டியூஸ்பேர்க் நகரில் குடியேறி வாழ்வு ஆரம்பமானது.எனது இரண்டு மகன்களும் 1985, 1988 ஆண்டுகளில் டியூஸ்பேர்க்கிலே பிறந்தார்கள்.

முப்பது வருடங்கள் ஜேர்மனியில் எத்தனை மனிதர்கள்...எத்தனை நிறத்தவர்கள், எத்தனை மொழிகள், எத்தனை சமயத்தவர்கள், எத்தனை பழக்கவழக்கங்களைக் கொண்டவர்கள்...இவர்களோடு பல ஆண்டுகளாக வேலை செய்திருக்கிறேன். பல மொழிகளைக் கொண்ட மக்களின் கலாச்சார பாரம்பரியங்களைப் புரிந்துகொண்டதுடன் அவர்களின் உணவுப்பழக்கங்களையும் கற்றிருக்கின்றேன். அவர்களின் உணவுவகைகளையும் ருசித்திருக்கிறேன்... பல இனத்தவர்களின் நன்மை-தீமைகளிலும் விழாக்கள் கொண்டாட்டங்களிலும் கலந்துகொண்டிருக்கிறேன். மனிதரில் எத்தனை வேறுபாடுகள் இருப்பினும் ஒன்றாய் கூடிப் பேசி ஆடிப்பாடி உண்டு குடித்து மகிழ்ந்து ஒற்றுமையாக வாழும்போது எவ்வளவு ஆனந்தம்.

இவர்களைவிட நமது நாட்டவர்கள் பல நூற்றுக்கணக்கானவர்களுடன் பழகிப் பேசி இருக்கிறேன். ஊர், பெயர், பிரதேசம் என முகம் அறியாத எத்தனையோ நட்புக்கள் என இன்றும் நட்பு நீடிக்கின்றது. நன்மை-தீமைகளிலும் விழாக்களிலும் கொண்டாட்டங்களிலும் கலந்துகொண்டு உறவாய் நட்பாய் வாழும் இந்த நிலை மனதுக்கு நிம்மதியை தருகின்றது.இப்பூமியில் வாழும்வரை அனைத்து இன மத நாட்டு மக்களுடனும் ஒற்றுமையாகவும் நட்பாகவும் வாழ்ந்து காலத்தை முடிக்கவேண்டும் என்பதே ஆசையாகும்.

# தமிழர் விளையாட்டுக் கழகம்-டியூஸ்பேர்க்

நான் வாழும் டியூஸ்பேர்க் நகரத்தில் ஆங்காங்கே சிதறி வாழும் தமிழர் விளையாட்டு ஆர்வலர்கள் 1985 காலப் பகுதியில் சிறு...சிறு குழுக்களாகச் சேர்ந்து சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில் ஆங்காங்கே பூங்கா பகுதிகளில் கிரிக்கட், உதைபந்து, கரப்பந்தாட்டம் என விளையாடி வந்தோம். என்னைப் போல் இந்த நகரத்தில் வசித்து வந்தவரும் 2010ம் ஆண்டில் அமரரான கனகலிங்கம் அவர்களும் விளையாட்டுத்துறையில் அதிக அக்கறை கொண்டவர். நாளடைவில் விளையாட்டு வீரர்களின் தொகை அதிகரித்தது. நமது சந்ததிகளை விளையாட்டுத்துறையில் அதிக அக்கறைகொள்ள வைப்பதற்காகவும், கல்வியும் விளையாட்டும் இரு கண்களாகக் கருதி 1992ம் ஆண்டு டியூஸ்பேர்க் தமிழர் விளையாட்டுக் கழகம் எனப் பெயர் சூட்டி ஆரம்பிப்பதற்கு எனது பங்களிப்பும் ஒரு காரணமாக அமைந்தது என்றே கூறுவேன். கழகம் வளர்ச்சி பெறவே வருடாவருடம் விளையாட்டுப் போட்டி, கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகளை நடாத்தி வந்தோம். விளையாட்டுப் போட்டி நடாத்தப்படும் போது அருகிலுள்ள முல்கைம், ஒபகௌசன், இராட்டிங்கள், கிறீபீல்ட், டுசில்டோவ் நகரங்களைச் சேர்ந்த தமிழ் மக்களும் இப்போட்டிகளில் கலந்துகொண்டு பரிசுகளைப் பெற்றிருப்பதுடன் விளையாட்டுவிழாவைச் சிறப்பித்திருக்கிறார்கள். இக்கழகத்தைப் பதிவு செய்வதற்காக என்னோடு எனது நண்பர் சோஸ்ற் என்ற நகரத்தில் வசித்த திரு. அருந்தவராசா அவர்களும். மொழிபெயர்ப்பாளர் முல்கைம் திரு. இரகுநாதன் அவர்களும் பெரும்பங்காற்றினர். 1995ம் ஆண்டு அரச அங்கீகாரம் பெற்ற கழகமாகப் பதிவுகண்டு இன்றுவரை திறம்பட இயங்கி வருகின்றது. ஜேர்மனியில் முதலாவது தமிழர் விளையாட்டுக் கழகமாகப் பதிவு பெற்றது சிறப்பான விடையமாகும்.

இக்கழகத்தை ஆரம்பிக்க உழைத்தவர்களில் நானும் ஒருவன் என்ற வகையில் கடந்த 20 வருடங்களாக இந்தக் கழகத்தின் போஷகராகப் பணிபுரிந்து வழிநடாத்தி வருகின்றேன். குறிப்பாக இக்கழகத்தை வழிநடாத்துவதில் அமரர் .கனகலிங்கம், அமலதாஸ், சிறிஸ்கந்தராசா, கோபாலசிங்கம் எனப்பலர் பெரும்பங்காற்றி நடாத்தி வருகின்றனர். இக்கழகத்தின் வீரர்கள் பயிற்சி பெற்று வெளி நகரங்களுக்கும் சென்று பல சுற்றுப்போட்டிகளில் பங்குகொள்வதுடன் பரிசுகளையும் பெற்றுவருகிறார்கள். பல போட்டிகளில் நானும் விளையாடி மகிழ்ந்திருக்கிறேன். இன்றும் மறக்கமுடியாத சில விளையாட்டு வீரர்கள் கனகலிங்கம் (அமரர்), இராமசாமி, இரத்தினசிங்கம், கோபாலசிங்கம், அமலதாஸ், சிறிஸ்கந்தராசா, ரவி, குகன், ஜெயராசா, பரம்சோதி, சிறி (அமரர்), கோபாலரட்ணம் (அமரர்) சிறி (எம்.ஜி.ஆர்), வசந்தன், விஜயசிங்கம், பிரபா, சிங்கப்பூர், சைனி, தியாகு.

இவர்களில் சிலர் தற்போது இடம்மாறி லண்டனில் குடியேறி வசித்து வந்தாலும் தொடர்புகள் நீடித்தவண்ணமே இருக்கின்றன.

# கல்விப்பணி

கேடில் விழுச்செல்வங் கல்வி
யொருவற்கு மாடல்ல மற்றை யவை...

-குறள்-

திருவள்ளுவரின் திருக்குறளின் சிறப்பை பாடசாலையில் படிக்கும் காலத்திலேயே அறிந்து கல்வியின் மகிமையைப் புரிந்துகொண்டுள்ளேன். ஒரு மனிதன் தேடுதற்கரிய செல்வம் கல்விச் செல்வமாகும். பணம், பொருள், புகழ், வசதி, வாய்ப்புக்கள் எவ்வளவு குவிந்து நம்மிடையே இருந்தாலும் கல்வி என்னும் செல்வம் இருக்காவிடின் இவற்றினால் எந்தப்பயனும் கிடையாது. ஆதலால்தான் தமிழர்கள் கல்விச் செல்வத்தை கண்போல் உயிரினும் மேலக மதித்துப் போற்றுகின்றனர். இப்படிப்பட்ட கல்விப் பணியையும் மேற்கொண்டு வந்திருக்கிறேன். 1984-1985 காலப்பகுதியில் நான்வாழும் டியூஸ்பேர்க் நகரில் ஆங்காங்கே 20-25 வரையினான தமிழ்க்குடும்பங்களே வாழ்ந்து வந்தனர். நமது தமிழ்மொழிக்கு அநியாயம் கெடுதல்கள் ஏற்பட்டபடியாலே, நாம் நாட்டைவிட்டுப் புலம்பெயர்ந்தோம். இங்கும்வந்து நமது எதிர்காலச் சந்ததிகள் நமது தாய்மொழியை இழந்துவிடக்கூடாது என்னும் நோக்கில் பெற்றோர்கள் பலர் ஒன்றுகூடி ஒரு தமிழருடைய வீட்டில் இருபது வரையிலான பிள்ளைகளை அழைத்து கல்வியைப் போதித்தோம். நாளடைவில் பிள்ளைகளின் தொகை அதிகரிக்க டியூஸ்பேர்க் செஞ்சிலுவைச்சங்கத்தினருடன் தொடர்புகொண்டு பிள்ளைகளை வீடு வீடாக சென்று வானில் ஏற்றிச் சென்று நகரத்திலுள்ள செஞ்சிலுவைச் சங்க காரியாலய அறை ஒன்றில் பாடசாலை இயங்கிவந்தது. வானில் ஏற்றி இறக்க வாகன உதவியையும் ஆசிரியர்களுக்கான சிறு கொடுப்பனவுகளையும் செஞ்சிலுவைச்சங்கமே மேற்கொண்டது. என்னோடு மொழிபெயர்ப்பளர் ஆனந்ததாஸ், திரு.இரகுநாதன் ஆகியோர் இப்பாடசாலையை வளர்த்தெடுப்பதற்கு உழைத்தார்கள். செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்த ஜேர்மனியர்.திரு பாஸிகா (Pasika) திருமதி கொனி (Conny) ஆகியோரின் உதவிகள் மறக்கமுடியாது.

இப்பாடசாலையில் திரு ரகுநாதனும் நானும் எனது மனைவி இராஜேஸ்வரி, டியூஸ்பேர்க் நகரைச் சேர்ந்த திருமதி. தவராணி கோபாலசிங்கம் டியூஸ்பேர்க் நகரைச் சேர்ந்த திருமதி.மரியதாஸ் திருமதி. தமிழ்வாணன் திரு ரவீந்திரன் ஆகியோர் கல்வி கற்பித்தனர். பின்னர் இடவசதி கருதி சர்வதேசத்தவர் கூடும் மண்டபத்திற்கு மாற்றப்பட்டு (International Zentrum) அங்கு இயங்கி வந்தது. இப்படியாக 5-6 ஆண்டுகள் கல்விப்பணி தொடரவே இங்குள்ள தமிழ் அரசியல் இயக்கத்தவர்களின் தலையீட்டாலும் பெற்றோரின் பலவீனத்தாலும், ஆசிரியர்கள் சிலர் பயமுறுத்தப்பட்டதாலும் பாடசாலையைத் தொடர்ந்து நடாத்தமுடியாத நிலை ஏற்பட்டது. டியூஸ்பேர்க் நகரில் 1991ம் ஆண்டு தமிழாலயம் என்னும் பாடசாலை ஆரம்பமாகியது. பிள்ளைகளின் வரவும் குறைவடைந்தது. ஒரே நகரில் ஒரு இடத்தில் ஏன் இரு தமிழ்பாடசாலை என எண்ணினோம். எங்கள் பாடசாலையில் படித்துவந்த

சிறுதொகை பிள்ளைகளையும் பெற்றோரையும் அழைத்து போட்டி போறாமையுடன் பாடசாலையை தொடர்ந்து நடாத்தமுடியாது...தமிழாயலத்தில் பிள்ளைகளைச் சேர்த்து கல்வி போதிக்குமாறு வேண்டிக்கொண்டோம். பலர் அப்படியே ஏற்றுச் செய்துகொண்டனர். இத்தோடு பாடசாலையின் தொடர் ஆசிரியர் பணிக்கு ஓய்வு ஏற்பட்டது என்றுதான் கூறவேண்டும்.

இதைவிட ஜேர்மனியில் இயங்கிவரும் அரசியல் சார்பில்லாத பல தமிழ்ப் பாடசாலைகளின் கல்விப் பணிக்கு இன்றுவரை அவ்வப்போது உதவி வருகின்றேன். பாடசாலைகளின் தமிழ்த்திறன் போட்டிகள், ஆண்டுவிழாக்கள், விளையாட்டுப் போட்டிகள், கலை கலாச்சார விழாக்கள் என வருடாவருடம் நடைபெறும் விழாக்களில் நடுவர்களில் ஒருவராகவும் சிறப்பு விருந்தினர்களில் ஒருவராகவும் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றி வருகின்றேன். ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் எனது செலவில் பல தடவைகள் புத்தகங்கள் அன்பளிப்புப் பொருட்களை வாங்கிக்கொடுத்து அவர்களை உற்சாகப்படுத்தி வருகின்றேன். இப்படியாகக் கல்விப் பணி என்பது எனது வாழ்நாளில் உயிர் மூச்சாக எண்ணி செயற்பட்டுவருகின்றேன்.

## ஜேர்மனி - தமிழ்க் கல்விச்சேவை (ஐரோப்பா)

1989ம் ஆண்டு ஜேர்மனியில் முதன்முதல் தோற்றுவிக்கப்பட்டதுதான் இந்த ஜேர்மன் தமிழ்க்கல்விச்சேவையாகும். அப்போது பல கல்விமான்களும் ஆர்வலர்களும் ஒன்றுசேர்ந்துதான் எந்தவித அரசியல் வேறுபாடில்லாமல் கல்வியே குறிக்கோளாகக்கொண்டு தொடங்கப்பட்ட இக்கல்விச் சேவை 2014ம் ஆண்டு தனது 25வது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடவுள்ளது. இது பெருமைக்குரியவிடையமாகும். இச்சேவையை ஆரம்பித்த நாள் தொடக்கம் இன்றுவரை தொடர்ந்து அர்ப்பணிப்போடு பொறுப்பாளராக இருந்து நடாத்திவரும் திரு.பொ.சிறீஜீவகன் அவர்கள் பாராட்டப்படவேண்டியவரே. வாழ்த்துகிறேன்.

தமிழ்ச்சிறார்களின் தாய்மொழி, கலை,கலாச்சாரம், பாரம்பரியங்கள் அழிந்துவிடாமல் பாதுகாத்துக் கொள்வதற்கும் வளர்த்தெடுப்பதற்கும் அன்றைய காலப்பகுதியில் முன்னின்று உழைத்த திரு.சிறீஜீவகன், முத்துச்சொக்கன், பாக்கியநாதன், நாகலிங்கம், செல்வராசா. அன்னராசா போன்றோரின் முயற்சியாலேயே இந்தக் கல்விச் சேவை தோற்றமானது. 1990 ஆண்டளவில் அரசியல் தலையீடு மிகமோசமாகியது போட்டி பொறாமை, பதவிமோகம் மேலோங்கியது. திணிப்பு, ஆதிக்கம், பதவி மோகம் எனக் கல்விமான்களையும் விட்டுவைக்கவில்லை. இதனால் இதிலிருந்து ஒருபிரிவினர் பிரிந்து சென்று இயக்கஆதரவு எனக்கருதப்பட்ட தமிழாலயம் என்னும் பெயரில் ஆரம்பித்தனர். ஜேர்மன் தமிழ்க் கல்விச் சேவையானது எந்தவித அரசியல், இன, மத, வேறுபாடுகள் இல்லாத சுதந்திர கல்விச்சேவை என்பதை அறிந்துகொண்டு 1990 ஆண்டு தொடக்கம் இணைந்து பணியாற்றி வருகின்றேன்.

1989ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இக்கல்விச் சேவை நாளடைவில் 1995ம் ஆண்டளவில் ஐரோப்பா தழுவிய வகையில் விரிவாக்கம் பெற்று தற்போது இயங்கி வருகின்றது. ஜேர்மனியிலுள்ள சுமார் 67 பாடசாலைகளுடன் பிரான்ஸ், சுவீஸ், டென்மார்க், நெதர்லாந்து நாடுகளில் இயங்கிவரும் தமிழ்ப் பாடசாலைகளும் இணைக்கப்பட்டு ஐரோப்பா தழுவிய ரீதியில் இயங்கிவருகின்றது. இந்தக் கல்விச் சேவையில் நான் 1990ம் ஆண்டுதொடக்கம் ஒரு நிர்வாகசபை உறுப்பினராகக் கடமைபுரிந்து வருகின்றேன்.

இச்சேவையினரால் முன்னெடுக்கப்படும் பல கல்வி அபிவிருத்தி முன்னேற்றத்திற்கு இணைந்து உழைத்துவருகின்றேன். நிர்வாகசபை உறுப்பினர் பதவியுடன் பரீட்சைக்குழு உறுப்பினர், பரீட்சை மேற்பார்வையாளர்குழு உறுப்பினராகவும் செயற்பட்டுவருகின்றேன். இவற்றைவிட பல ஆண்டுகளாக ஆசிரியர் கருத்தரங்கு, மாணவர்கருத்தரங்கு, பாடசாலைகளின் விளையாட்டுப்போட்டி, ஒன்றுகூடல்களில் உரையாற்றி வருகின்றேன். இயன்ற பல உதவிகளை மேற்கொண்டு வருகின்றேன். இந்தக் கல்விச் சேவையை கடந்த 24 வருடங்களாக கடும் உழைப்பு அர்ப்பணிப்புடன் வழிநடாத்திவரும் அதன் தலைவர் பொன்.சிறிஜீவகனின் பணி போற்றுதற்குரியதே. அவருடன் சேர்ந்து நானும் எனது நண்பர்களும் பணயாற்றிவருவது ஆத்ம திருப்தியை ஏற்படுத்தி வருகின்றது. இக்கல்விச் சேவையின் பெயரில் நான் சென்றுவந்த தமிழ்ப் பாடசாலைகள்...

| | |
|---|---|
| தமிழ்ப் பாடசாலை | - Geldern |
| தமிழ்ப் பாடசாலை | - Kaarst |
| தமிழ்ப் பாடசாலை | - Goslar |
| தமிழ்ப் பாடசாலை | - Neuss |
| தமிழ்ப் பாடசாலை | - Netherland |
| தமிழ்ப் பாடசாலை | - Swissland |
| அறிவாலயம் | - Oberhausen |
| நாவலர் தமிழ்ப்பாடசாலை | - Soest |
| திருவள்ளுவர் தமிழ்ப்பாடசாலை | - Dortmund |
| தமிழ்க் கல்விகலாச்சார பாடசாலை | - Essen |
| தமிழ்ப் பாடசாலை | - Stuttgart |
| கலைவாணி தமிழ்ப் பாடசாலை | - Münster |

'அதிகமான பேச்சு, அதிகமான தூக்கம், அதிகமான உணவு இவையே மனிதர்களில் ஆயுட்காலத்தை குறைத்துவிடுகின்றன.'

# மண் சஞ்சிகையும் நானும்

ஈழத்தமிழினம் புலம்பெயர்ந்து ஜேர்மனியில் வாழ்ந்த 1985 ஆண்டிற்குப் பின் அன்றைய காலகட்டத்தில் சில சஞ்சிகைகள்: ஜேர்மனியில் வெளிவந்தன. அநேக சஞ்சிகைகள் கையெழுத்துப் பிரதிகளாகவே வெளிவந்துகொண்டிருந்தன. குறிப்பாக வெகுஜனம், அறுவை, ஏலையா, சிந்தனை, தளிர், மகளிர் சஞ்சிகை எனச்சில சஞ்சிகைகள் வெளிவந்தன. எழுத்ததாளர்கள் கலைஞர்கள் ஆர்வலர்களால் என ஒன்றுகூடி கருத்துப் பரிமாறும் இலக்கியச் சந்திப்பு என்ற நிகழ்வு ஜேர்மனியில் ஆரம்பித்து ஐரோப்பா, கனடா என வியாபித்து இன்றுவரை நடைபெற்றுவரும் இலக்கியச் சந்திப்பு என்ற நிகழ்வு 2013ம் ஆண்டுவரை ஐம்பது நிகழ்வுகளை எட்டிப்பித்துள்ளது. இந்த நிகழ்வுகள் பலவற்றில் நான் கலந்துகொண்டிருக்கிறேன்.

அப்போது டியூஸ்பேர்க் நகரில் வசித்த திரு. அமிர்தநாதர் அவர்களும் நானும் நண்பர்கள் அவருக்கும் இத்துறையில் அதிக ஆர்வம் இருந்தபடியால் ஒன்றுபட்டு எடுத்த முயற்சியால் 1990ம் ஆண்டு தைப்பொங்கல் தினத்தன்று மண் சஞ்சிகை உதயமானது. இரண்டு வருடங்களில் கருத்துமுரண்பாடு காரணமாக அவர் விலகிவிடவே இன்றுவரை நானே இச்சஞ்சிகையின் பொறுப்பாசிரியராக இருந்து நடாத்தி வருகின்றேன். 1990ல் கையெழுத்துப் பிரதியாக வெளியிடப்பட்டது. 1993ல் இருந்து கணனிப் பதிவாகியது. தொடர்ந்து 10 வருடங்களாக மாதாந்த சஞ்சிகையாக வெளிவந்து பின்னர் இன்றுவரை இரு மாதத்திற்கு ஒரு இதழாக வெளிவந்துகொண்டிருக்கின்றது.

கடந்த 23 வருடங்களாக இச்சஞ்சிகைமூலம் ஆயிரக்கணக்கான சிறுவர்கள் தமது தாய்மொழியை கற்றிருக்கிறார்கள். இளையவர், புதியவர், பெரியவர்கள் என எழுத்துத்துறையில் காலூன்றி வளர்ந்திருக்கிறார்கள். இச்சஞ்சிகையின் வளர்ச்சிப் படிகளில் தாமும் வளர்ந்திருக்கிறார்கள். இன்னும் புதிய ...புதிய எழுத்தாளர்களை உருவாக்கி தாய்த்தமிழின் வளர்ச்சிக்கு பெரும்பங்காற்றி வருவதைப் பலர் அறிவர். தமிழ், கல்விப் பணிகளோடு தாயக ஆதரவற்றோர், வலுவிழந்தோர், அகதிகள் முதியோர் எனப் பல தரப்பட்டோருக்கும் உதவும் பணியை 1993ம் ஆண்டு தொடக்கம் மேற்கொண்டு வருகின்றது. வாசகர்கள் சிறுவர்கள் நலன்விரும்பிகள் என மனிதநேயம்மிக்க பலர் இச்ச்சிகையோடு இணைந்து கரம்கொடுத்து நிதி உதவிபுரிந்து தாயகத்தின் துயர் துடைப்பதில் பெரும் பங்காற்றி வருகிறார்கள். இச்சஞ்சிகைமீது அசையாத நம்பிக்கைகொண்டு மனிதநேயப் பணிகளைத் தொடர்கிறார்கள். இச்சஞ்சிகையின் உருவாக்கம் வளர்ச்சிக்குச் சில நண்பர்கள் ஒத்தாசைகள், உதவிகள், ஆலோசனைகள் வழங்குகிறார்கள். எனது மனைவி, பிள்ளைகள் மூவரும் முழுமையாக அர்ப்பணிப்பைச் செய்து வருகிறார்கள். எதிர்வரும் 2015 ஆம் ஆண்டில் 25வருடத்தை நிறைவு செய்யும் நோக்கில் செயற்பாடில் வீறுநடைபோடும் இச்சஞ்சிகையின் பிரதம ஆசிரியராக இருந்து செயல்படுவதை எண்ணி தாய்த் தமிழுக்கும் தமிழினத்துக்கும் என்னால் இயன்ற பங்களிப்பைச் செய்துவருகின்றேன் என மனம் மகிழ்கிறேன்.

# தாயகம் நோக்கியமனிதநேயப் பணிகள்...

எனது தாயார் சகோதரர்கள் வழிகாட்டல் ஒரு பாடமாகக் கொண்டிருந்தபடியால் பொதுச்சேவை, மனிதாபிமானம், பிறருக்கு உதவுதல், ஏழைகள் இல்லாதோர்மீது இரக்கம் காட்டுதல் போன்ற குணங்கள் இயல்பாகவே என்னிடமும் தொற்றிக்கொண்டது என்றே கூறுவேன். மண் சஞ்சிகை 1990ல் தோற்றம் பெற்றுத் தமிழ்பணி செய்து வருகையில் எனக்கும் ஏதாவது தருமப் பணிகள் செய்யவேண்டும் என்று ஒரு ஆதங்கம் ஏற்பட்டது. 1993ம் ஆண்டு டியூஸ்பேர்க் தமிழர் விளையாட்டுப் போட்டி நடைபெற்றபோது கலந்துகொண்ட போட்டியாளர்கள் பார்வையாளர்கள் முன்னிலையில் இலங்கையிலிருந்து அப்போது கிடைக்கப்பட்ட கடிதங்களையும் நிழல் படங்களையும் பார்வைக்கு வைத்து நிதி உதவிபுரியும் வண்ணம் கோரியிருந்தேன். "பிச்சைக்காரர் போல்" ஒவ்வொருவரிடமும் சென்று உண்டியல் நீட்டி பணம் சேகரித்தேன். அப்போது சேர்ந்த பணம் 340-00 டொச் மார்க். இத்தோடு விழாவிற்கு சிறப்பு விருந்தினராக வந்திருந்த எனது நண்பரும் மொழிபெயர்ப்பாளருமான முல்கைம் நகரைச் சேர்ந்த இரகுநாதன் 100-00மார்க்கை தந்து எனக்குப் பாராட்டையும் வழங்கினார். அத்தோடு நானும் 100-00 மார்க்கையும் சேர்த்து 540-00 டொச் மார்க் உடனடியாகவே யாழ் அரியாலையில் அமைந்துள்ள ஆதரவற்றோர் சிறுவர் இல்லத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டதோடு எனது இந்தப் பணி ஆரம்பித்து இன்றுவரை தொடர்கின்றது. 2012 டிசம்பர் மாதம் வரை 43.997-35 டொச் மார்க், 1500-00 பிரித்தானியா பவுண்ட், 38.664-10 யூரோ என மொத்தமாக தாயகத்தின் வடக்கு கிழக்கிலுள்ள பல இல்லங்களுக்கு நேரடியாக அனுப்பப்பட்டது பெரும் பணியாகவே கருதலாம்.

போரின் கொடுமையால் இடம்பெயர்வுப் பேரவலம், அகதிகளின் அதிகரிப்பு, சுனாமிப் பேரவலம் இறுதிப்போர் முள்ளிவாய்க்கால், வன்னிபெருநிலப் பரப்பில் மிகப்பெரும் அகதி முகாம் அவலங்களிலெல்லாம் நமது உறவுகள் எங்கே எல்லாம் ஓடி உயிரைக் காப்பாற்றினார்களோ அங்கே எல்லாம் மண் சஞ்சிகையும் துரத்தித் துரத்திச் சேவை உதவிபுரிந்திருக்கின்றது என்றே கூறலாம். வாசகர்கள், நண்பர்கள், சிறுவர்கள்,இளையோர்கள், என் உறவுகள் என ஐரோப்பிய தேசம் எங்குமிருந்தும் ஆதரவுக்கரம் நீட்டி தாயகம் நோக்கிய மனிதநேயப்பணிகள் பெருக உதவிபுரிந்தனர். அனைத்து அன்பு உள்ளங்களும் உதவிகள் புரிந்து வருகின்றனர். அனைத்து உள்ளங்களுக்கும் நன்றி கலந்த பாராட்டுதல்கள் உரித்தாகுக!...

உலகத்தில் எந்த ஒரு தமிழ்ச் சஞ்சிகையோ பத்திரிதிகையோ அல்லது வேறு ஊடகங்களோ இதுவரை மேற்கொள்ளாத மிகப்பெரும் பணியை மண் சஞ்சிகையூடாக நான் மேற்கொண்டிருப்பது மேற்கொண்டுவருவது புலம்பெயர் வரலாற்றுச் சாதனையாகவே கருதுகின்றேன். பெயர், புகழ், பதவி விரும்பாமல் ஆத்ம திருப்திக்காக மனித நேயக்கடமையாக தாயகம் நோக்கிய மனிதநேயப் பணிகள் இன்னும் தொடரும் என நம்புகிறேன்...

# போரும்... சுனாமியும்... மண் சஞ்சிகையும்...

நமது நாட்டில் கடந்த 30 ஆண்டுகளாக தொடர்ந்த ஆயுதப்போராட்டத்தாலும் 1994ல் இடம்பெற்ற மிகப்பெரும் கடற்சுனாமிப் பேரவலத்தாலும் லட்சக் கணக்கான மக்கள் மாண்டு மடிந்ததுடன் பல கோடி பெறுமதியான சொத்துக்கள் அழிக்கப்பட்டன. லட்சக்கணக்கான தமிழர்கள் நாட்டைவிட்டே ஓடிவிட்டனர். லட்சக்கணக்கான மக்கள் அகதிகளாக உள்நாட்டிலேயே இடம்பெயர்ந்து அகதிகளாக வாழத்தள்ளப்பட்டனர். இன்றும் மீள்குடியேறமுடியாத அரசியல் சூழ்நிலை இருந்த வருகின்றது. இப்படியாகத் தொடரும் மனிதப் பேரவலம் நமது நாட்டில் மக்களின் வாழ்வைச் சின்னாபின்னமாக்கி, இன்றுவரை உரிமை இழந்த, வாழ்விழந்த நிலையிலேயே மக்கள் வாழ்கிறார்கள். இது வரலாறு ஆகிவிட்டது. வாழ்வும் இப்படியாக மாறிவிட்டது.

இந்தப் பேரவலங்கள் நடைபெற்றபோதேல்லாம் மண் சஞ்சிகையின் வாசகர்கள் ஆதரவாளர்கள் நலன்விரும்பிகள் என அனைவரும் அவசரகால நிதி சேகரித்து மண் சஞ்சிகையூடாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவ்வப்போது உதவி புரிந்திருக்கிறோம். சுனாமி அனர்த்தத்தின்போது அடுத்த நாள் மாணவர்கள் சிறுவர்கள் என குளிரையும் பனியையும் பாராது வீதி...வீதியாகச் சென்று நிதிசேகரித்துத் தந்தார்கள். அப்பணம் முழுவதும் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு நேரடியாக அனுப்பி வைக்கப்பட்டது. இதைவிட முள்ளிவாய்க்கால் பேரவலத்தால் பாதிக்கப்பட்டு பல லட்சம் மக்கள் வவுனியா பாரியமுகாமில் இன்னலுற்றபோது எமது வாசகர்கள் இளையோர் என ஒன்று சேர்ந்து அவசரகால நிதி சேகரிப்பில் ஈடுபட்டு மண் சுஞ்சிகை ஊடாக அனுப்பி வைத்தோம். முக்கியமாக பிரித்தானியாவில் வசிக்கும் எனது நண்பர் செல்வராசா (முன்னாள் கணக்காளர் முல்லைத்தீவு பல நோக்குக்கூட்டுறவுச் சங்கம்) அவரிகளின் தனி முயற்சியினால் பெருந்தொகைப் பணம் சேகரிக்கப்பட்டு மண் சஞ்சிகையூடாக வவுனியா முகாம்களில் அப்போது தத்தளித்த பல குடும்பங்களுக்கும் ஆதரவற்ற சிறார்களுக்கும் உயிர்கொடுத்தோம் என்றும் கூறலாம்.

மண் சஞ்சிகையும் டியூஸ்பேர்க் தமிழர் விளையாட்டுக்கழகமும் ஒன்றிணைந்து 2005ம் ஆண்டில் ஐரோப்பிய கரபந்தாட்டச் சுற்றுப்போட்டி ஒன்றை நடாத்தி அதில்பெற்ற இலாபப் பணம் முழுவதும் தாயகத்தின் ஆதரவற்ற சிறார்களுக்கு அனுப்பி வைத்திருக்கிறோம். நான் வாழும் டியூஸ்பேர்க் நகரத்திலுள்ள ஜேர்மனிய அமைப்பு ஒன்றுடன் நட்புறவை ஏற்படுத்தி சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் மீள் குடியிருப்பு வாழ்வாதாரம் போன்றவற்றை மேம்படுத்த பெரும் தொகையான நிதி உதவி பெறப்பட்டு வடகிழக்கிலுள்ள சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் நிலையங்களுக்கு நேரடியாகவே அனுப்பி வைத்தோம். இப்படியாக பொதுப் பணிகள் தொடர்ந்தவண்ணமே வளர்கின்றது. உங்கள் மண் சஞ்சிகை!...

# ஒன்றரைக்கோடி தாண்டி!...

1990 ம்ஆண்டு தை மாதம் ஆரம்பிக்கப்பட்ட மண் சஞ்சிகை 1993ம் ஆண்டு தாயக ஆதரவற்றோருக்கும் உதவும் திட்டத்தை முன்னெடுத்து வருவதை நீங்கள்: அறிவீர்கள். 1993 - 2013 காலம் 20 ஆண்டுகளில் மண் சஞ்சிகையூடாகத் தாயகத்திற்கு நேரடியாக ஆனுப்பிய பணத்தின் பெறுமதி ஒன்றரைக் கோடி ரூபாக்களைத் தாண்டிவிட்டது. இந்த வருட நிறைவுக்குள் இரண்டு கோடியை எட்டிப் பிடித்துவிடும் என நம்புகிறேன்.

இந்தப் பேருதவியால் தாயகத்தின் ஊனமுற்றவர்கள், ஆதரவற்றவர்கள், அகதிகள், சுனாமியால் பாதிக்கப்பட்டவர்கள், இடம்பெயர்ந்தோர் என அனைவரின் வாழ்வாதாரத்திற்கு சிறிதளவு பங்காற்றியுள்ளோம். ஐரோப்பிய தேசத்தில் மண் சஞ்சிகையின் பணிகள் மீது நம்பிக்கைகொண்ட பல எழுத்தாளர்கள், சிறுவர்கள், இளையோர்கள் நண்பர்கள், உறவுகள், வாசகர்கள் என மனிதநேயம் படைத்தவர்களின் உதவியால் இப்பெரும் தொகைப் பணத்தை தாயகத்திற்கு அனுப்பி ஒரு வரலாற்றுச் சாதனையைப் புரிந்திருக்கிறோம் என எண்ணுகின்றோம்.

என்மீது நம்பிக்கை கொண்ட பலர். பல முகமறியாத நட்புக்கள் எழுத்தாளர்கள், கலைஞர்கள், சமூக ஆர்வலர்கள் எனச்சகல தரப்பினரும் என்னோடு ஒத்துழைத்து உதவிகள்புரிந்தபடியாலேயே இப்பெரும் தொகைப் பணத்தை நேரடியாக அனுப்பி அவர்களின் துயர் துடைப்பில் ஈடுபட்டிருக்கிறேன் என்னும் போது எனக்கு ஓர் ஆத்ம திருப்தியே. இச்சந்தர்ப்பத்தில் என்னோடு சேர்ந்து ஆதரவுக்கரம் நீட்டிய நீட்டிவரும் சகல தரப்பினருக்கும் இனிதான வாழ்த்துக்களையும் நன்றிகளையும் பகிர்ந்து நிற்கிறேன்.

புலம்பெயர் தேசங்களில் தமிழ் கல்விப் பணிகளோடு தாயகத்துக்கான சமூகப்பணியையும் தொடர்ந்து செய்துவர அனைத்துத் தரப்பினரும் தொடர்ந்து ஒத்துழைப்பு நல்குவார்கள் என நம்புகின்றேன். தாயக மக்களின் துயர் துடைப்பில் தொடரும் பணிகளால் பத்துக்கோடியாக உயரவேண்டும் என ஆதங்கப்படுகின்றேன். உங்கள் ஆதரவோடும் உழைப்போடும் இப்பணியைத் தொடர்ந்து முன்னெடுப்போம்.இப்பணியை இடைவிடாது முன்னெடுக்க திடசங்கற்பம் பூண்டு வாழ்க்கைப் பயணத்தில் பயணிக்கின்றேன்...

31.12.2012 வரை தாயகத்திற்கு அனுப்பிய பண விபரம்...

| | |
|---|---|
| டொச் மார்க் | - 43.977-35 |
| இங்கிலாந்து பவுண்ஸ் | - 1.500-00 |
| யூரோ | - 38.664-10 |

# ஊடகங்களோடு நான்...

1985 - 1990 காலப்பகுதிகளில் ஐரோப்பாவில் 5 - 10 வரையிலான சஞ்சிகைகள் வெளிவந்து கொண்டிருந்தன. 1990ம் ஆண்டு மண் சஞ்சிகை வெளிவரத்தொடங்கியது. பின்னர் பாரிஸ் ஈழநாடு, ஈழமுரசு, லண்டன் உதயன் ஜேர்மனி தமிழருவி, வெற்றிமணி, ஈழம் என பத்திரிகைகளும் வெளிவர ஆரம்பித்தன. பின்னர் 1990 - 1995 ஆண்டுகாலப் பகுதிகளில் 20 - 30 வரையிலான சஞ்சிகைகளும்: வெளிவந்து தமிழ் மக்களின் அறிவுப் பசிக்குத் தீனி போட்டன என்றே கூறலாம். ஐரோப்பாவில் முதல் தொலைக்காட்சி ஜேர்மனி-றெயின்பேர்க்கில் வசித்துவரும் திரு செல்வநாயகம் அவர்களால் பேர்ளினில் ஆரம்பமாகியது...சிலமாதங்களில் அது நின்றுவிட தமிழ் ஒளி தொலைக்காட்சி ஈழநாடு பத்திரிகை ஆசிரியர் திரு.எஸ். குகநாதன் அவர்களால் பாரிசில் TRT என ஆரம்பிக்கப்பட்டு பின் TTN எனப் பெயர் மாற்றம் பெற்று இயங்கிவந்தது. பின்னர் படிப்படியாக லண்டன் பாரிஸ் நகரங்களில் பல வானொலிகள் தோற்றம் பெற்று இயங்கிவந்தன. படிப்படியாகப் பல வானொலிகள் பத்திரிகைகள்,சஞ்சிகைகள் பல நெருக் கடிகளைச் சந்திக்கவே அவைகளில் பல நிற்றுவிட்டன. இப்போ விரல்விட்டு எண்ணக்கூடிய ஊடகங்களே இயங்கி வருகின்றன. தற்போது லண்டனில் உதயன் ஜேர்மனியில் வெற்றிமணி பத்திரிகைகளும் மண் சஞ்சிகையும்தான் தொடர்ந்து வெளிவந்துகொண்டிருக்கும் ஐரோப்பி ஊடகங்களாகும். இங்கு வெளிவந்த வெற்றிமணி, தழிழருவி, ஈழம் பத்திரிகைகளிலும் அறுவை, ஏலையா, வெகுஜனம், சிந்தனை, தளிர்,சிறுவர்அமுதம், கடல், குரல், போன்ற சஞ்சிகைகளிலும் கனடா உதயன், லண்டன் உதயன் பாரிஸ் ஈழநாடு பத்திரிகைகளிலும் ஐரோப்பிய பல வானொலிகளிலும் எனது ஆக்கங்கள் பிரசுரமாகியும் ஒலிபரப்பாகியும் தீபம் தொலைக்காட்சியில் சில ஆக்கங்கள் ஒலிபரப்பாகியும் இருக்கின்றன. லண்டன் தமிழ் வானொலியில் கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக தொடர்ந்து எனது கவிதைகள், இலக்கியங்கள், செய்திகள் என ஒலிபரப்பாகிவருகின்றமை குறிப்பிடத்தக்க விடையமாகும். எனது எழுத்துப் பணியை வளர்த்துவரும் இந்த வானொலியால் நானும் வளர்ந்து வருகின்றேன் என்னும் போது மிகவும் ஆனந்தம்.

இவற்றைவிட மலேசியா, செம்பருத்தி இதழ், இந்தியா இனியநந்தவனம், ஏழைதாசன் சஞ்சிகைகளிலும் எனது படைப்புக்கள் பல தடவைகள் வெளிவந்தன. இனிய நந்தவனம் சஞ்சிகை எனது பணியைப் பாராட்டி முகமறியாத என்னை தமது சஞ்சிகையின் அட்டைப் படத்தில் பிரசுரித்து கௌரவம் தந்தது என்னால் மறக்கமுடியாத விடயமாகும். தற்போது ஜேர்மனியில் அகரம் சஞ்சிகையிலும் எனது படைப்புக்கள் வெளிவந்துகொண்டிருக்கின்றன... இவற்றைவிட ஜேர்மனியின் பல பாகங்களில் இயங்கிவரும் தமிழ்ப்பாடசாலைகள், மன்றங்கள் விழா மலர்களிலும் பரதநாட்டிய அரங்கேற்ற மலர்களிலும் எனது ஆக்கங்கள் வாழ்த்துக்கள் அவ்வப்போது வெளிவந்துகொண்டிருக்கின்றன. ஜேர்மனியில் கடந்த ஒன்பது ஆண்டுகளாக இயங்கிவரும் ஐரோப்பிய தமிழ் வானொலியிலும் (ETR) ஆக்கங்களைப்படைத்துவருகின்றேன்.

# லண்டன் தமிழ் வானொலி...

எனது பொழுதுபோக்கு வானொலி கேட்பது, பத்திரிகை சஞ்சிகை வாசிப்பது, எழுத்து, விளையாட்டு என்பன சிறுவயதிலிருந்தே பழக்கப்பட்டவிடயமாகிவிட்டன. ஐரோப்பாவில் முதல் தோன்றிய பாரிஸ் எஸ்.குகநாதனின் தமிழ் ஒலி வானொலியை கேட்டுவருகையில் வாரத்திற்கு ஒரு நாள் ஒலிபரப்பாகும் லண்டன் தமிழ் றேடியோவின் ஒலிபரப்பும் அதில் சேர்ந்து ஒலிக்கும்போது கேட்டுக்கொள்வேன். அந்த ஒரு மணிநேர ஒலிபரப்பு என்னை மிகவும் கவர்ந்தது.

பின்னர் தனித்துவமாக லண்டன் தமிழ்வானொலி ஆரம்பித்தபொழுது அந்த வானொலியையே அதிகமாகக் கேட்பதற்கு நேரத்தை ஒதுக்கிக்கொள்வேன். மண் சங்சிகைக்கு எழுதிவரும் திருமதி கலைவாணி ஏகானந்தராசா அவர்கள் இந்த வானொலிக்கு எழுதும்படி என்னைத் தூண்டிவிட்ட பெருமையைப் பெறுகின்றார். 2003ம் ஆண்டளவில் இந்த வானொலிக்கு எழுதத்தொடங்கி பத்து வருடங்களாகின்றன இன்றுவரை தொடர்ச்சியாக எழுதிக்கொண்டிருக்கிறேன். இந்த வானொலியின் பணிப்பாளர், அறிவிப்பாளர்கள், நிகழ்ச்சித்தொகுப்பாளர்கள், கவிஞர்கள், பல்வகைக் கலைஞர்கள் என அதிக தொடர்புகள் இந்த வானொலியால் எனக்குக் கிடைத்தன என்பதை பெருமையாகக் கூறிக்கொள்ளலாம்.

இந்த வானொலியின் "அடுத்த தலைமுறை நோக்கி" என்ற வாசகம் எனக்கு வெகுவாகப் பிடித்துவிட்டது. அதிபர் நடாமோகனின் இனிமையான குரல், பேச்சுத், திறன், நகர்த்தும் போக்கு, சமூக அக்கறை, எதிர்காலச் சந்ததிகளை வழிநடாத்தும் முறை, சமூக மாற்றத்திற்கான சிந்தனை, அறிவியல் தேடல், தட்டிக்கொடுப்பு, சுட்டிக்காட்டல், அவர் எடுக்கும் ஒவ்வொரு முயற்சியும் செயற்பாடும் முற்போக்கானவையே. இவற்றோடு இணைவதற்கும் கருத்தொருமித்தலும் எனக்கு உடன்பாடு ஏற்பட்டது என்றே கூறுவேன். இன்றுவரை கடந்த பத்து ஆண்டுகளாக இந்த வானொலியுடன் இணைந்து கவிதைகள் கட்டுரைகள், இலக்கியங்கள், பொதுஅறிவுகள், வாராந்தச் செய்திகள், சிறப்புக்கட்டுரைகள் எனப் பலதரப்பட்ட விடயங்களை நான் எழுதிக் குவிக்க இந்தவானொலி ஒலிபரப்பாக்கி ஐரோப்பா தேசத்தில் எனக்கென்று ஒரு அந்தஸ்த்தைப் பெற்றுத் தந்தது என்றே கூறுவேன். எனது மனைவியும் முந்நூறு கவிதைகளுக்கு மேல் இந்த வானொலிக்கு எழுதியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும் இவை மட்டுமல்லாமல் மண் சஞ்சிகையூடாக என்னால் முன்னெடுக்கப்பட்டுவரும் தாயக ஆதரவற்றோர், வலுவிழந்தோருக்கான உதவும் பணிகளுக்காக என்னோடு சேர்ந்து உதவுவது மட்டுமல்லாமல் இத்திட்டத்தை விஸ்தரித்துச் செயற்படுத்தப் பேருதவி புரிந்து வருகின்றது. இந்த வானொலியின் நேயர்களும் சிறுவர் இளையோரும் ஒன்றிணைந்து பூரண பங்களிப்புச் செய்து வருகின்றார்கள். இந்த வானொலியின் அதிபர், பண்பாளர் திரு.நடாமோகன் அவர்களின் நட்புக்கிடைத்தமை பெரும் அதிஷ்டம் என்று நம்புகின்றேன். உலகில் தலைசிறந்த வானொலி என்றே இவ்வானொலியை நான் கருதுகின்றேன்.

# 500 கவிதைகள்...

கடந்த பத்து வருடங்களாக லண்டன் தமிழ்வானொலிக்கு வாராந்தம் எழுதி இதில் வெளிவந்த கவிதைகள் இந்த வருடம் 500 கவிதைகளை நிறைவு செய்துவிடும். ஆரம்பகாலங்களில் கவிதை எழுதுவதில் மிகக்குறைவான ஈடுபாடே இருந்து வந்தது. லண்டன் தமிழ் வானொலியின் அதிபர், அறிவிப்பாளர்கள்,விமர்சகர்கள், நேயர்களின் சுட்டிக்காட்டல்களும் தட்டுக்கொடுப்புக்களும் என்னை இத்தனை கவிதைகள் எழுதத் தூண்டின என்பதே உண்மையான விடையமாகும். இவ்வளவு கவிதைகளையும் எழுதிருக்கிறேன் என்னும் போது என்னாலே என்னை நம்பமுடியாமல் இருக்கின்றது. இப்படியாக 500 வரையிலான கவிதைகளை எப்படி எழுதி முடித்தேன். ஆச்சரியமான விடையம்தான். பல நாடுகளில் பல லட்சம் பேர் எனது கவிதைகளை கேட்டு ரசித்திருக்கிறார்கள் என்னும் போது மிகவும் சந்தோஷப்படுகின்றேன். இவர்களுக்கு நன்றிகூறும் வேளை எனது கவி எழுதும் பணி தொடர்பணியாகி விட்டது.

இவற்றைவிட கடந்த 20 ஆண்டுகளில் ஏனைய ஐரோப்பிய வானொலிகள், பத்திரிகைகள்,,

சஞ்சிகைகள் என நான் எழுதிய கவிதைகள் 200 க்கும் மேற்பட்டவையாகும். மொத்தமாக என் வாழ்நாளில் 2013ம் ஆண்டுவரை சுமார் 700 கவிகளை படைத்திருப்பது ஒரு சாதனையாகவே நான் கருதுகின்றேன். எனது ஆறாவது விரலான பேனாவுக்கு என்றும் தலை வணங்குகின்றேன்.

# 300 இலக்கியப்படைப்புக்கள்...

லண்டன் தமிழ்வானொலியில் வாராவாரம் ஒலிபரப்பாகி வரும் இலக்கிய நேர நிகழ்வுக்கு 2013 ஆகஸ்ட் மாதம் வரை சுமார் 300 சமகால இலக்கியங்களை தவளவிட்டிருக்கிறேன். லண்டன் தமிழ் வானொலி அதிபர் எப்போதும் கூறுவார். பழைய இலக்கியங்களையும் காவியங்களையும் புராணங்களையும் எழுதி நேரத்தைக் கழிக்காமல் சமகால யதார்த்த இலக்கியங்களைப் படையுங்கள் என எழுத்தாளர்களுக்கு அறைகூவல்விடுவார்.உண்மையைப் புரிந்துகொண்ட நான் சமூகக்கண்ணோட்டமுள்ள சமகால இலக்கியங்களையும் சமூகமாற்றம் சிந்தனைக்குரிய இலக்கியங்களையும் எழுதிவருகின்றேன். சமூகக்கண்ணோட்டத்துடன் சமகால நிகழ்வுகளைப் பிரதிபலிப்பாகவும் சிந்தனைத் தூண்டல், தேடல், அறிவியல் சம்பந்தமான விடையஙகள் எழுதிவருவதை லண்டன் தமிழ்வானொலி அழகுற ஒலிபரப்பி வருவது சிறப்பான விடையமாகும்... பல தரப்பட்ட உலகப் படைப்பாளிகள் எனது இலக்கியத்தையும் கேட்டு மகிழ்ந்து சிந்தித்துப் புதுயுகம் நோக்கிய பயணத்தில் இதுவும் ஒரு வெற்றியாகக் கருதலாம் என எண்ணுகின்றேன்.

# எனது படைப்புக்கள்...

## மண் சஞ்சிகை

மண் சஞ்சிகையானது 2013 ஆடி, அவணி மாதத்தோடு 160 இதழ்களை வெளியீடு செய்திருக்கிறேன். பல படைப்பாளிகள், ஆக்க இலக்கிய எழுத்தாளப் பெருமக்களதும் வளர்ந்துவரும் இளம் சந்ததிகளும் சிறுவர்களும் வாசகர்களும் பரிபூரண ஒத்துழைப்பால்தான் நான் பிரதம ஆசிரியராக கடமையாற்றி பல வித நெருக்கடிகளுக்கும் மத்தியில் வெளிக் கொண்டுவந்திருக்கிறேன். எதிர்வரும் 2015 ஆண்டு தை மாதம் 25 ஆண்டுகளை நிறைவு செய்யவிருக்கின்றது. ஐரோப்பா மட்டுமல்லாமல் புலம்பெயர் தேசங்களில் இப்படியாகத் தொடர்ந்து வெளிவந்துகொண்டிருக்கும் சஞ்சிகைகள் கிடையாது. இந்த மண் சஞ்சிகையே இந்த வரலாற்றுச் சாதனையை எட்டிப்பிடித்திருப்பது மகிழ்வுக்குரிய விடயமாகும். இந்த 160 சஞ்சிகைகளையும் நான் பெற்ற பிள்ளைகளாகவே கருதி என்றும் நான் வாழ்ந்துகொண்டிருக்கிறேன்.

## கல்லறைப்பூக்கள்

1976ம் ஆண்டு யாழ் ஈழநாடு பத்திரிகை நிருபர் பதவியோடு எழுத்துத் துறையில் காலடி பதித்தேன். 2001ம் ஆண்டு எனது 25 ஆண்டுகால பத்திரிகைத் துறையை நிறைவு செய்தேன். 2001ம் ஆண்டு ஆவணிமாதம் 25ம் தேதி "கல்லறைப் பூக்கள்" என்ற பெயரில் 50 சிறுகதைகளை எழுதி இந்தியாவில் அச்சிட்டு டியூஸ்பேர்க் நகரில் வெளியீட்டுவிழா செய்தேன். பல தமிழறிஞர்களும் நண்பர்களும் ஆர்வலர்கள் விமர்சனங்கள் செய்து இந்த விழா சிறப்புற நடைபெற்றது. இது எனது முதலாவது படைப்பாக அமைகின்றது. இன்றைய புலம் பெயர் சூழலையும் தாயக போர்க்காலச் சூழல், வாழ்வியல் சமூகசிந்தனைக் கருத்துக்கள் அதிகமாகக் காணப்பட்டதால் இந்த இதழுக்குப் பெரும் வருவேற்புக் கிட்டியது என்றே கூறுவேன். என்னை தட்டிக்கொடுத்து உற்சாகப்படுத்தியபடியால் மேலும் எழுத்து சமூகப் பணிகளில் தொடர வழி வகுத்தது என்றே கூறுவேன்.

## ஜேர்மனியில் தடம் பதித்த தமிழர்கள்

2003ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஜேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கம் உருவாக்கத்திற்கு எனது பங்களிப்பும் இருந்துள்ளது. இச்சங்கத்தின் ஆரம்ப கர்த்தாக்களில் நானும் ஒருவனாக இடம்பிடித்துக் கொண்டுள்ளேன். "பல கைகள் தட்டினால்தான் பலமாக ஓசை ஒலிக்கும்" என்னும் முதுமொழிக்கு இணங்க ஜேர்மனி சிதறிவாழும் தமிழ் எழுத்தாளர்களை ஒன்று திரட்டி இச்சங்கத்தை ஆரம்பித்தோம். இதன் தலைவராக நான் கடந்த பத்து வருடங்களாகக் கடமையாற்றி வருகின்றேன்.

இந்த எழுத்தாளர் சங்கத்தின் நிர்வாகிகளின் செயற்திறனால் ஜேர்மனியில் வசிக்கும் 24 எழுத்தாளர்களின் சுய விபரங்களைப் பெற்று "ஜேர்மனியில் தடம் பதித்த தமிழர்கள்" என்னும் பெயரில் வெளியீடு செய்யப்பட்டது 23-09-2006ல் வெளியீடு செய்யப்பட்ட ஆவணப்பதிவான நூலில் நானும் இடம்பிடித்துக் கொண்டது ஜேர்மனிய தமிழ் வரலாற்றில் தடம்பதித்துக்கொண்டேன் என்பதற்குச் சான்றாகும்.

## இலங்கை எழுத்தாளர்களின் விபரக்கொத்து.

ஜேர்மனியில் வசித்துக்கொண்டிருக்கும் தமிழ் எழுத்தாளர்களின் விபரங்களை உள்ளடக்கி "ஜேர்மனியில் இலங்கை எழுத்தாளரின் நூறாவது நூல் வெளியீட்டுவிழா" என்ற பெயரில் இலங்கை-கண்டியிலுள்ள சிந்தனை வட்டத்தின் அதிபர் திரு. புன்னியாமீன் அவர்களால் தொகுக்கப்பட்ட நூலில் நானும் இடம்பிடித்திருக்கிறேன். இந்த நூலின் அறிமுக விழா
16-03-2007 அன்று டியூஸ்போர்க் நகரில் நடைபெற்றது. அதிபர் புன்னியாமீன் கண்டியிலிருந்து லண்டனுக்கு வருகைதந்தும் ஜேர்மனிய விசா மறுக்கப்பட்டபடியால் அவர் விழாவில் கலந்துகொள்ள முடியாமல் போனதும் மறக்கமுடியாத நினைவுகளாகும். திரு புன்னியாமீன் அவர்கள் எழுத்தாளர் சங்கத்தின் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியிருப்பது குறிப்பிடத்தக்க விடையமாகும்.

## சிறுகதைத் தொகுப்பு.

தமிழ் எழுத்தாளர் சஞ்கத்தின் 2வது வெளியீடான "நிறங்கள்" என்ற பெயரில் வெளியான சிறுகதைகளின் தொகுப்பு நூலில் எனது சிறுகதைகளும் இடம்பிடித்துக் கொண்டன. 04-07-2009 அன்று இந்த நூல் டோட்முண்ட் நகரில் வெளியீடு செய்து வைக்கப்பட்டது. இந்த நூலில் ஜேர்மனிய 14 தமிழ் எழுத்தாளர்கள் இடம்பிடித்துக்கொண்டனர். எனது சிறுகதைகளும் இந்நூலில் இடம்பிடித்தமை எனக்கு மகிழ்வைத்தந்தன என்றே கூறுவேன்.

## கவிதைத் தொகுப்பு.

தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் 3வது வெளியீடாக "சங்கமம்" என்ற பெயரில் கவிதைக் குவியலாக என்னும் ஒரு நூல் வெளிவந்தது. இந்தக் கவிதைக்குவியலில் 18 எழுத்தாளர்கள் இடம்பிடித்துக் கொண்டனர். இதில் எனது கவிகளும் இடம்பெற்றமை எனக்கு மிக்க மகிழ்வை ஏற்படுத்தியது. இக்கவிதை நூலின் வெளியீட்டுவிழா 2012 யூன் மாதம் டோட்மூண்ட் நகரில் நடைபெற்றது.

# தமிழ் எழுத்தாளர் சங்கம் - ஜெர்மனி...

ஈழத்தமிழர்கள் பரவலாக வாழும் ஜேர்மனியின் பல பாகங்களிலும் பரந்து வாழ்கிறார்கள். இப்படியாகப் பரந்து வாழும் மக்களிடையே பல தமிழ் எழுத்தாளர்கள், கவிஞர்கள், கலைஞர்கள் எனத் தமிழை நேசிப்போரையும் தமிழ் ஆர்வலர்களையும் ஒன்று திரட்டி ஓர் சங்கமாக அமைக்கும் ஆரம்ப தாபகப்பணியில் திரு.சிவநேசன், திரு.இராசகருணா, திரு.மட்டுவில் ஞானக்குமரன் ஆகியோரோடு நானும் சேர்ந்த இச்சங்கத்தை ஆரம்பிப்பதற்கான பணிகள் வித்திடப்பட்டது. 19-04-2013ம் ஆண்டு தமிழ் எழுத்தாளர் சங்கம் நான் வாழும் டியூஸ்பேர்க் நகரில் ஆரம்பமானது. இந்த ஆரம்ப விழாவில் லண்டனில் இருந்து நூலகவியலாளர்.திரு செல்வராசா அவர்களும் கலந்துகொண்டார். பல நெருக்கடிகளின் மத்தியிலும் இச்சங்கத்தை வளர்த்தெடுப்பதில் பல நண்பர்கள் பல எழுத்தாளர்களும் கடந்த பத்து வருடங்களாக முன்னின்று உழைத்து வருகிறார்கள். இச்சங்கத்தின் தலைவராக இன்றுவரை நான் கடமையாற்றி வருகின்றேன்.

இலங்கையிலிருந்தும் ஐரோப்பிய தேசங்களிலிருந்தும் ஜேர்மனிக்கு வருகைதரும் எழுத்தாளர்களை கௌரவிப்பதும் அவர்களின் படைப்புக்களை வெளியீடு செய்வதும் அறிமுகம் செய்வதும் விழாவாக ஏற்பாடுகள் செய்து அவர்களைப் பெருமைப்படுத்தி வருவதுடன் அவர்களின் வெளியீடுகளையும் விற்பனை செய்து அவர்களுக்குச் சிறிய நிதிப்பங்களிப்பையும் செய்து அவர்களை உற்சாகப்படுத்தி வருகின்றோம். இதைவிட இளம் மற்றும் சிறுவர் எழுத்தாளர்களின் படைப்புக்களையும் வெளியீடுசெய்துவருவதுடன் வளர்ந்துவரும் இளம் எழுத்தாளர்களையும் இனங்கண்டு அவர்களை உற்சாகப்படுத்தி அடுத்த தலைமுறையினரையும் எழுத வைக்கும் அரிய பணியை இச்சங்கம் மேற்கொண்டு வருகின்றது. குறிப்பாக இலங்கையிலிருந்து வருகைதந்த ஈழநாடு பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியர் திரு. கோபாலரட்ணம், இந்த வருடம் காலமான உலகத் தமிழர் பேரவைத் தலைவர் டாக்டர் ஜனார்த்தனன், இலங்கை கல்வி அமைச்சின் முன்னாள் செயலாளர் கவிஞரும் எழுத்தாளருமான உடுவை தில்லை நடராசா போன்றோரைக் குறிப்பிடலாம்.

இந்தச் சங்கமானது எந்தவித அரசியல் மத இன பேதங்களுக்கு அப்பாற்பட்டு இயங்கி வருகின்றது. இருப்பினும் ஆரம்பத்தில் இணைந்துகொண்ட சிலர் சில கருத்து முரண்பாடு காரணமாக விலகியும் சென்றிருக்கிறார்கள். தமிழார்வம் சமூக அக்கறை கொண்ட பல எழுத்தாளர்கள் இன்றுவரை இச்சங்கத்தோடும் என்னோடும் சேர்ந்து தமிழ்வளர்ப்பதற்காக அரும்பாடுபட்டு உழைக்கிறார்கள். இவர்களுக்கு இச்சந்தர்ப்பத்தில் நன்றிகளையும் பகிர்ந்துகொள்கிறேன். நல்லறிவும் பகுத்தறிவும் தமிழ்மொழியும் மனிதநேயமும் வளர்த்தெடுப்பதில் இச்சங்கத்தினரோடு நானும் கை கோர்த்துப் பணிகளில் தொடர்கின்றேன் என்னும் போது மிகவும் மகிழ்வுகொள்கிறேன்.

# பெற்ற பரிசுகளும்...பட்டங்களும்...

1. ஜேர்மனியின் வடமேற்கு மாநிலத்தின் (NRW) தலைநகரான டுசில்டோவ் நகரிலுள்ள Hilton International Hotel உலகப் பிரசித்தி பெற்றதாகும். இதில் 1990ம் ஆண்டு தொடக்கம் 2005 ஆண்டுவரை 15 வருடங்களாகக் கடமைபுரிந்திருக்கிறேன். (அ) சுமார் 300 பேர் வரை கடமையாற்றும் இந்தத் தாபனத்தில் 1994 அக்டோபர் மாதத்தின் சிறந்த பணியாளராகத் தெரிவுசெய்யப்பட்டு பரிசும் சான்றிதழும் பெற்றுக்கொண்டேன். (ஆ) இதே ஹொட்டலில் "திட்டமிடல் பரிந்துரை" (Planning Advice) என்னும் தலைப்பில் அங்கு வேலை செய்பவர்களிடம் கருத்துக்கள் முன்மொழிவுகள் கோரப்பட்டபோது நானும் எனது பரிந்துரைகளை சமர்ப்பித்தேன். அதாவது நான் இலங்கையில் முகாமைத்துவம் கணக்கியல் பயின்றபடியால் இதை எழுத அடிப்படைக்காரணமாக அமைந்தது. எனது பரிந்துரையே ஹொட்டல் பணிப்பாளர்களினால் சிறந்ததாகத் தெரிவுசெய்யப்பட்டது. முதலாவது பரிசு பெற்ற எனக்கு 500 டொச் மார்க்குகளும் சான்றிதழும் கிடைத்தது நேர்மையான எனது தொழிலுக்குக் கிடைத்த பெரு வெற்றியாகவே கருதுகின்றேன்.

2. மண் சஞ்சிகையையின் பிரதம ஆசிரியரான எனது தமிழ்பணி, தாயக ஆதரவற்றோர் பணிகளுக்காக என்னைப் பாராட்டி ஜேர்மனி-பிறீமன் நகர தமிழ் மன்றம் "அற்றார் பசி தீர்த்தவர்" என்ற பட்டம் வழங்கப்பட்டு பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டேன்.

3. இந்தியா மணிமேகலைப் பிரசுரம், ஜேர்மனி ஈழம் பத்திரிகை, கலைவிளக்கு சஞ்சிகை ஒன்றிணைந்து 30.09.2000 ஆண்டில் ஜேர்மனி டோட்முண்ட் நகரில் நடாத்திய புத்தகத் திருவிழாவில் எனது பணிகளுக்காகச் சிறப்பு பரிசும் சான்றிதழும் கிடைக்கப்பெற்றேன். மணிமேகலைப் பிரசுரிப்பாளர் ரவி-தமிழ்வாணன் அவர்களிடம் பரிசுபெற்றது எனக்குப் பெருமை தந்தது.

4. ஏப்ரல் மாதம் 2010ம் ஆண்டு மண் சஞ்சிகையின் 20வது ஆண்டுநிறைவு விழா நடைபெற்றது. இந்த விழாவில் கடந்த 25 வருடங்களாக இயங்கிவரும் ஜேர்மனி தமிழ்க் கல்விச்சேவையினரால் "புகலிடச் சாதனையாளர் - 2010" என்ற பட்டம் வழங்கி பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டேன்.

5. இதை விட மண் சஞ்சிகையின் 5வது 7வது, 10வது, 15வது, 20வது ஆண்டு நிறைவு விழாக்களில் பல எழுத்தாளர்களாலும் பல மன்றங்களாலும் சேவை நலன் பாராட்டி வாழ்த்து மடல்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டிருக்கிறேன்.

அத்தனை பரிசுகளும் பட்டங்களும் எனது உழைப்புக்குக் கிடைத்த கௌரவமாகவே கருதுகின்றேன். இப்பணிகள் தொடரும் என நம்புகின்றேன்.

# ஆயிரத்தை (1000) தாண்டியுள்ளது...

1.

ஒவ்வொரு மனிதருக்கும் ஒவ்வொரு பொழுது போக்கு இருப்பது வழக்கமாகும். நான் சிறுவனாக இளைஞனாக வாழ்ந்த காலங்களில் பத்திரிகை சஞ்சிகை வாசித்தல், விளையாட்டு, நண்பர்களோடு அரட்டை அடித்தல், ஊர் சுற்றிப் பார்த்தல் எனப் பொழுது போக்குகள் அமைந்தன. இன்று கணனி, தொலைக்காட்சி, சஞ்சிகை, பத்திரிகை, புத்தகம் வாசித்தல் என விரிவடைந்துவிட்டது. ஆனால் இன்று நம்மவர்கள் மத்தியில் அதீத தொழில் நுட்ப கணனி வளர்ச்சியால் வாசிப்புப் பழக்கம் அடியோடு குறைந்துவிட்டது என்றே கூறுவேன். ஆனால் பலர் பல ஆண்டுகளாக வாசிப்புப் பழக்கத்தை கைவிடாது தொடர்கின்றனர். இவர்களில் நானும் ஒருவன். "வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்" என்று அறிஞர்கள் கூறுவதற்கிணங்க நான் பிரயாணங்களின் போதும் வேலைத்தலத்திலும் வீட்டிலும் வாசிப்பைக் கை விடாது தொடர்கின்றேன். 1983ம் ஆண்டு ஜேர்மனியில் வாழ ஆரம்பித்த காலம் தொடக்கம் இற்றைவரை ஐரோப்பியாவிலும் கனடா, இந்தியா, இலங்கை,சிங்கப்பூர், மலேசியா நாடுகளிலிருந்து வெளிவந்த வெளிவந்துகொண்டிருக்கும் ஆயிரத்துக்கும் அதிகமான புத்தகங்களைச் சேகரித்து வைத்திருக்கிறேன். வீட்டு நூலகமாகச் செயற்படுவதால் பலர் அடிக்கடி என்னிடம் பத்தகங்களை வேண்டிப் படித்துவருவது தமிழுக்கு நான் செய்யும் சேவையாகவே கருதி வாழ்கிறேன்.

2.

இங்கு 1000 ஐ தாண்டிவிட்டது என்னும் போது இன்னொரு விடையத்தையும் இங்கு பதிவு செய்கிறேன். மனிதர்கள் சிலருக்கு சில ஆசைகள் விருப்புக்கள் இருப்பது வழக்கமாகும். பழைய காசுகள், பலநாட்டுக் காசுகள் , பல நாடுகளின் முத்திரைகள், அரிய பொருட்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் சேகரிப்பதைப் பொழுது போக்காகக் கொண்டு வாழ்ந்து சாதனை படைப்பார்கள். எனக்கும் ஒரு புதுவித ஆசை பிறந்தது. அதாவது நான் வாழ்ந்த இந்த 60 ஆண்டுகளாக எழுத்து வேலைகளுடன் அதிக ஈடுபாடு கொண்டிருந்தமையால் எனது ஆறாவது விரலான பேனா மீது பெரும் ஆசை. ஒரு எழுத்தாணியால் எத்தனையோ சாதனைகள் உலகில் நிகழ்ந்திருக்கின்றன. சரியான ஒரு எழுத்தாளன் ஒரு ஆயுதம் தாங்கும் போராளியைவிட மேலானவன் எனவும் கூறப்படுகின்றது. மகாகவி பாரதியின் பேனா, திருவள்ளுவரின் எழுத்தாணி அன்றும் இன்றும் என்றும் உலகப்பரப்பில் உயர்ந்து நிற்பதைக் காண்கிறோம் அல்லவா!... அப்படிப்பட்ட பேனாமீதுதான் எனக்கும் அதீத ஈடுபாடு இருந்து வருகின்றது. இதனால் எனது ஆறாவது விரலான பேனாமீது காதல்கொண்டபடியால் பல நாடுகளைச் சேர்ந்த பல ரகமான பேனாக்களையும் சேகரித்து ஆயிரம் பேனாக்களை வைத்திருக்கின்றேன். சேகரிக்கும் படலம் ஆயிரத்தைத் தாண்டித் தொடர்கின்றது.

# 30 + 30 = 60 ஆண்டுகள்....

1953-08-31ம் திகதி பிறந்த நான் 30 ஆண்டுகளாகத் தாயத்தில் வாழ்ந்திருக்கிறேன். 1983ம் ஆண்டு நவம்பர் மாதம் ஜேர்மனியில் காலடி வைத்தேன். இந்த வருடம் 2013 நவம்பர் மாதம் முடிய 30 ஆண்டுகள் இந்த நாட்டில் வாழ்திருக்கிறேன். எனது வயதும் 60 வயதை எட்டிப்பிடித்துவிட்டது. இந்த 30 வருட வெளிநாட்டு வாழ்க்கையில் பல வாழ்க்கைப் பாடங்களைப் படித்திருப்பதுடன் பல வகையான அனுபவங்களையும் பெற்றிருக்கிறேன்.எத்தனை மதங்கள், எத்தனை நாட்டவர்கள், எத்தனை கலை பண்பாடு கொண்டவர்கள், எத்தனை வகை குண இயல்பு கொண்டவர்கள் , எத்தனை நிற பேதங்களைக் கொண்டவர்களோடு இவ்வளவு காலமும் பழகி வாழ்துவருவது எனக்குப் பெரியதோர் அனுபவமாக் கருதுகின்றேன்.

இந்த முப்பது ஆண்டுகளில் வெளிநாட்டு வாழ்வில் கடும் பனி, குளிர், வெப்பம் என இயற்கைத் தாக்கங்களோடு போராடி உழைப்பு என்னும் வண்டியில் பிரயாணம் செய்து வாழ்கைச் சுமையை குறைப்பதற்கு பாடுபட்டிருப்பதுடன் இந்த ஊதியத்தில் கணிசமான தொகையை பொது வேலைத் திட்டங்களுக்காகவும் செலவு செய்திருக்கிறேன். வெளிநாடு வந்த பல தமிழர்கள் நிறையவே பணம் சேகரித்துக் குவிக்க என்னைப் போன்ற சில சமூக ஆர்வலர்கள் தமது சொந்தப் பணத்தில் பொது வேலைகள் செய்து குடும்பத் தலைவிகளிடம் ஏச்சுப் பேச்சு வேண்டிய சம்பவங்களும் நிறையவே உண்டு. கொண்ட கொள்கையும் நம் சமூக அக்கறையும் ஆத்ம திருப்தியுமே என்னைப் போன்ற சிலர் இப்படிப்பட்ட பொதுப்பணிகள் செயகிறார்கள் என்பதே உண்மையான விடையமாகும். மனைவி பிள்ளைகளிடம ஏச்சு வேண்டியும் பொதுப்பணிகள் செய்துவரும் சில தியாகிகள் புலம் பெயர் தேசங்களிலும் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் என்பது உண்மையான விடையமாகும்.இவர்கள் போற்றுதலுக்குரியவர்களே!

இந்த அறுபது வயதில் முப்பது ஆண்டுகள் வெளிநாட்டு வாழ்க்கையில் காலம் கழிந்தது. பல வகையான துன்பங்கள் , சோகங்கள், இழப்புக்கள், பணச்செலவுகள் போன்ற நெருக்கடிகளைச் சந்தித்தாலும் யாவற்றையும் எதிர்கொண்டு ஓரளவு மனம் நிறைவோடு இன்பங்களையும் முன்னேற்றங்களையும் பெற்றிருக்கிறேன். தமிழர் வாழும் பல நகரங்களுக்கும் சென்று பல நிகழ்வுகளில் கலந்துகொண்டு பல தரப்பட்ட குண இயல்புகளைக் கொண்ட தமிழ் மக்களோடு பேசிப் பழகி நட்பாய் தோழமையுடன் அன்பாய் வாழ்ந்ததும் வாழ்ந்துகொண்டிருப்பதும் எனது பெற்றோரின் ஆசி என்றே நம்புகின்றேன். பல இன மத மொழி பேசும் மக்களோடு பல கலாச்சார பண்பாடுகொண்ட மக்களோடு நட்பாய், அன்பாய் வாழ்ந்து கொண்டிருப்பது மனித வாழ்வில் பெரும் கொடையாவே நான் கருதுகின்றேன். மறு பிறப்பிலும் இப்படியான வாழ்வு அமையவேண்டும் என பேராசை கொண்டிருக்கிறேன். நூறாண்டுகள் வாழ ஆசைப்படாவிடினும் வாழும் காலம்வரை, உடல் நிலை இடம்கொடுக்கும்வரை, ஏதாவது செய்துகொண்டிருப்பேன் என்பது எனது நம்பிக்கையாகும்!...

# 30 வருடங்கள் டியூஸ்பேர்க் நகரில்...

கடந்த முப்பது வருடங்களாக இந்த நகரத்தில் வாழ்ந்துகொண்டிருக்கின்றேன். சுமார் ஐந்து லட்சம் மக்கள் வாழும் இந்த நகரத்தில் 8 சபைகள் (Rathaus) உண்டு. அதாவது இவற்றைப் பிரிவுகள் என்றும் அழைக்கலாம். பல்லாயிரம் வெளிநாட்டவர்களும் வாழும் நகரில் நானும் ஒரு வெளிநாட்டவனாக குடியுரிமைபெற்று வாழ்கிறேன். முல்கைம், டுசில்டோவ், கிறீபீல்ட், ஒபகௌசன், ராட்டிங்கன், டின்ஸ்லாக்கன்,மோர்ஸ் என்னும் பெயர் கொண்ட ஊர்கள் சுற்றிவரக் காணப்படுகின்றன. பிரதான தொடரூந்து நிலையம், மிருகக்காட்சிசாலை, இரும்புத்தொழிற்சாலைகள், நிலக்கரித் தொழிற்சாலைகள், கைத்தொழில் இரசாயனத் தொழிற்சாலைகள், செயற்கைத்துறைமுகம், குடிவகைகளின் தொழிலகங்கள் உயர்ந்த பல கட்டிடங்கள், குடியிருப்புக்கள் என நிறைந்து காணப்படுகின்றன. நம்மவர்களும் இந்த நகரத்தில் பல பாகங்களிலும் செறிந்து வாழ்கிறார்கள். அண்மை நகரான டுசில்டோவ் நகரிலேயே நம்மவர்கள் பலர் வேலை செய்கிறார்கள் உணவுச் சாலைகள், விமான நிலையம், ஹொட்டல்களிலேயே மிக அதிகமானோர் வேலை செய்கிறார்கள். ஒரு சிலர் வர்த்தக வியாபாரத் தொழில்களிலும் ஈடுபட்டுள்ளனர். கடந்த 25- 30 ஆண்டுகளாக இந்த நகரத்தில் வாழ்ந்த நம்மவர் பலர் 1985 -1990 காலப்பகுதியில் கனடாவில் குடியேறிவிட இன்னும் பலர் 1995 - 2010 காலப்பகுதியில் இங்கிலாந்தில் குடியேறிவிட்டனர். இப்போ வேறு நகரங்களிலிருந்தும் இங்கு பலர் வந்து குடியேறியுள்ளனர் தற்போது 2013ல் சுமார் 500 பேர் வரை வசிக்கிறார்கள் என்பது எனது கணிப்பாகும்.

தற்போது இங்கு தமிழர்களின் மூன்று வியாபார தாபனங்கள் காணப்படுகின்றன. இந்து ஆலயம் ஒன்றை தாபிப்பதற்குப் பலர் முயற்சிக்கிறார்கள். 1985-1990 காலத்தில் தமிழ்பாடசாலை ஒன்று இயங்கியது. பின்னர் 1991 தொடக்கம் தமிழாலயம் என்னும் தமிழ்ப்பாடசாலை இயங்கிவருகின்றது. மன்றங்கள் எதுவும் இல்லை. மண் சஞ்சிகையும் தமிழர் விளையாட்டுக் கழகமும் அரச பதிவுபெற்று இயங்கி வருகின்றன. தமிழாலயவிழாவும் மண் சஞ்சிகையின் விழாவும் வருடங்தோறும் நடைபெற்று வருகின்றன. இவற்றைவிடப் பல குடும்ப விழாக்கள் அடிக்கடி நடைபெற்று வருவதால் தமிழர்கள் இவற்றின் ஊடாகவும் ஒன்று சேர்ந்து கலந்துரையாடும் சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

1980ல் குடியேறிய பல தமிழர்களின் சந்ததிகள் இன்று நல்ல நிலையில் இங்கு வாழ்கிறார்கள். பலர் வயது முதிர்வால் இறந்துவிட்டார்கள். பலர் கனடா, இங்கிலாந்து நாடுகளில் குடியேறி வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்... தமிழர்கள் நாட்டைவிட்டுப் புலம்பெயர்ந்து முதல்காலடி வைத்தநாடு ஜேர்மனிதான். இது வரலாற்று உண்மையாகும். பலர் பிற நாடுகளில் வாழ்ந்தாலும் சுற்றுலா என்னும்போது ஜேர்மனிக்கே வந்து பழைய நண்பர்களைச் சந்தித்துப் போகிறார்கள் என்னும்போது சந்தோஷம்தான். இருப்பினும் 1980 -1985 அண்டுகளில் வந்தவர்கள் சிலர் இப்போதும் இங்குதான் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் என்பது சிறப்பே!.

# மறக்கமுடியாத மனிதர்கள் சிலர்...

ஒருவருடைய மனிதவாழ்வில் எத்தனையோ மனிதர்களைச் சந்திக்கிறார்கள். அவர்களுடன் பேசிப் பழகி உறவாடுகின்றோம். பல இன,மத, நிற, மொழி, கலை, கலாச்சா, பண்பாடுகள் கொண்ட மக்களோடு பழகி வாழ்நாளை இன்பகரமாக வாழ்ந்து முடிக்கிறோம். இவர்களிடமிருந்து பெறப்படும் நல்ல விடையங்கள் எம் வாழ்நாளில் எத்தனையோ மாறுதல்களையும் திருப்பங்களையும் அனுபவங்களையும் தருகின்றதல்லவா. இவர்களோடு பழகிய வாழ்வானது நமது முன்னேற்றத்திற்கும் ஊன்றுகோலாக அமைந்து விடுகின்றன. தாயகத்தில் நான்1993 ஆண்டு வரை வாழ்ந்த போது எனது தொழில் காரணமாகப் பலதரப்பட்ட மனிதர்களோடு பேசிப் பழகி உறவாடி இருக்கின்றேன். இவர்களில் பல மனிதர்கள் இன்னும் என் மனதில் இடம்பிடித்துவிட்டார்கள். இவர்களில் சிலரை இங்கு நான் பதிவு செய்துள்ளேன்.

## சிவப்பிரகாசம்பிள்ளை - வவுனியா கச்சேரி உணவுக்கட்டுப்பாட்டு ஆணையாளர்

1974 -1978 காலப்பகுதியில் நான் பார்த்த உத்தியோகம் விடையமாக வாராவாரம் வவுனியா கச்சேரிக்குச் சென்றுவருவேன். அப்போது சந்தித்த உயர் அதிகாரிதான் திரு.சிவப்பிரகாசம்பிள்ளை. அப்போது அவரோடு காரியாலய விடமாக வேலைகளில் ஈடுபடும்போது அந்தக் காரியாலயத்தின் இலிகிதர்கள் தயாரிக்கும் கணக்குகளைப் பிரதமலிகிதர் (Chef Clerk) சரிபார்ப்பார். சாதாரணமாகப் பிரதமலிகிதர் பரிசீலனைசெய்து சரிபார்த்தால் ஆணையாளர் வெறும் கையொப்பம் மட்டும் இட்டுவிடுவார். ஆனால் இவர் அப்படி இல்லை. பொதுலிகிதர் தயாரித்த கணக்குகளையும் பிரதமலிகிதர் பரிசீலனை செய்த கணக்குகளையும் தானும் முற்றுமுழுதாகச் சரிபார்த்துத் தான் கையொப்பம் இடுவார். அப்படிக் கணக்கிலும் அரச நிர்வாகத்திலும் மிகவும் ஒழுங்காகவும் கடுமையாகவும் கடமையாற்றும் திறமைசாலியான இவரிடம் இவற்றை நானும் கற்றுக்கொண்டேன்.

மிகவும் நேர்மையான மனிதர். பழகுவதற்கு இனிமையானவர். அப்போது அவருக்கு 55 வயது கடந்திருக்கும். சில வேளைகளில் பகிடிவிட்டு யாவருடனும் பேசி மகிழ்வார். இதைவிடத் தனது உடலில் மிகவும் கவனமாக இருப்பார். தான் ஒவ்வொருநாளும் காலை மாலை என வவுனியா நகரசபைப் பூங்காவைச் சுற்றி நடைபயில்வதாகவும் கூறுவார். தனிப்பட்ட முறையில் நோக்கினால் சமயப்பற்று அறவே கிடையாது. பகுத்தறிவாளர் டாக்டர் ஆபிரகாம் கோவூரின் கொள்கைகளோடு ஒட்டிவாழ்ந்தபடியால் அவரிடமிருந்து பகுத்தறிவுக் கொள்கைகளையும் நான் படித்திருக்கிறேன்... மூடநம்பிக்கை கொண்டோரை அவர் நேரடியாகவே தாக்கிப் பேசுவார். அவரிடம் பெற்ற பகுத்தறிவுக் கொள்கைகள் இன்றுவரை என் மனதில் ஆழமாகப் பதிந்துவிட்டன. அவர் தற்போது உயிருடன் இல்லாவிடினும் அவரின் நினைவுகள் என்றும் மறக்கமுடியாத விடையமாகிவிட்டது.

# பற்குணம் - யாழ் கச்சேரி உணவுக்கட்டுப்பாட்டு ஆணையாளர் - வவுனியா

எனது காரியாலய விடையமாக அவரது காரியாலயங்களுக்குப் பல தடவைகள் சென்று வந்திருக்கிறேன். சந்தித்தபோதெல்லாம் உரையாடும் வாய்ப்புக் கிடைத்தது. மிகவும் வறிய குடும்பத்தில் பிறந்த இவர் அந்த ஊரில் அரசவேலை செய்பவர்களில் மிகவும் உயர்ந்த உத்தியோகம் பார்ப்பவராகக் காணப்பட்டார் என்பதை அறிந்துகொண்டேன். ஏழ்மையில் போராடிய குடும்பத்தில் பிறந்தபடியால் மிகவும் எளிமையானவராகவே காணப்பட்டார். திருகோணமலை, யாழ்ப்பாணம், வவுனியா கச்சேரிகளில் வேலை செய்த இவரிடம் கடமையுணர்வும் செயற்திறனும் என்னை வெகுவாகவே கவர்ந்தன. காரியாலய விடையங்களைத் தாமதமில்லாமல் விரைவாகச் செய்துமுடித்துவிடும் ஆற்றல் படைத்தவர். பொதுமக்களோடு நன்மதிப்பையும் பெற்றிருந்தார்.

இவர் சாவகச்சேரி - மந்துவில் என்னும் கிராமத்தில் பிறந்தவர். மட்டுவில் மகாவித்தியாலயத்தில் கல்விகற்றவர். மட்டுவிலுள்ள எனது (அக்காவின் கணவர்) அத்தானோடு (பரமசாமி) ஒன்றாகக் கல்வி பயின்றவர் என அறிந்துகொண்டேன். முதல் முறையாக இவரை நான் சந்திக்கும் போது எனது அத்தானின் பெயரைச் சொல்லியே அறிமுகமானேன். அன்றிலிருந்து எங்கே சந்தித்தாலும் சுகம் விசாரித்துக் கொள்ளுவார்.

ஒருதடவை வடமாகாணத்தில் பிரபல்யமான மட்டுவில் மோகனதாஸ் சனசமூக நிலையத்தின் வருடாந்த விளையாட்டுப் போட்டியில் நான் கலந்துகொண்டபோது இவரையும் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியது. இவ்வளவு பெரிய அரசாங்க அதிகாரி ஒரு பழைய சைக்கிளில் சாதாரண உடை அணிந்து ஓர் பார்வையாளன்போல் அங்கு வந்திருந்தார். அவரைக்கண்டு ஆச்சரியம் அடைந்தேன். அந்த விழாவின் சிறப்பு விருந்தினர் அவர். ஆனால் அந்த மக்களோடு சாதாரணமாக உரையாடிய விதம், பேசிய பேச்சுக்கள் எல்லாம் அவரின் சிறந்த குண இயல்புகளை எடுத்துக் காட்டின.

இன்றைய உலகில் அற்பர்கள் பலர் பெயரும் புகழுக்காகவும் எவ்வளவு அலைகின்றார்கள். ஏன் சிலர் பணம்கொடுத்தும் பட்டங்கள் பதவிகள் வேண்டிச் சூடிக்கொள்கிறார்கள். இன்னும் பலர் தமக்குத்தாமே பட்டங்கள் பதவிகளைச் சூடிக்கொள்கிறார்கள். ஆனால் அந்த மனிதன் அப்படிப்பட்டவர் அல்ல என்பதை நான் புரிந்துகொண்டு அவரின் நல்வழிகளையும் பின்பற்றி வாழ்ந்து வருகின்றேன். நாம் பிறந்த ஊரையும் அந்த மக்களையும் மறக்காமல் எப்போதும் சாதாரணமாகவே நடந்துகொள்ள வேண்டும் என்னும் பாடத்தையும் எளிமையையும் நான் அவரிடமிருந்தே கற்றுக்கொண்டேன்.

# மார்க்கண்டு - முன்னாள் அரசாங்க அதிபர் வவுனியா. வடகிழக்கு மாகாண அமைச்சின் முன்னாள் செயலாளர்.

திரு. மார்க்கண்டு அவர்கள் இலங்கை நிர்வாகசேவையில் (S.L.A.S) சித்திபெற்று காரியாதிகாரியாக (D.R.O) துணுக்காய் பிரதேசத்தில் பதவி ஏற்றுப் பல ஆண்டுகள்: கடமைபுரிந்தவர். பின்னர் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு கச்சேரிகளில் உணவு ஆணையாளர், கூட்டுறவு ஆணையாளர், விலைக்கட்டுப்பாட்டு ஆணையாளர் எனப்பல உயர் பதவிகளை வகித்து வவுனியா மாவட்ட அரசாங்க அதிபராகப் பதவி வகித்தவர். பின்னர் வடகிழக்கு மாகாண அமைச்சின் வடகிழக்கு பல்வெறு துறைகளின் செயலாளராகவும் கடமைபுரிந்தவர். தற்போது இளைப்பாறி கொழும்பில் வசித்து வருகின்றார்.

1973ம் ஆண்டிலிருந்து இவரை நன்கு எனக்குத் தெரியும். அன்றைய காலத்தில் மாங்குளம் துணுக்காய் வவுனிக்குளம் பகுதிகளில் பொலிஸ் நிலையங்கள் கிடையாது. பொலிசாரின் கடமைகளையும் நிர்வாக அமைதி ஒழுங்குகளையும் இவரே மேற்கொண்டு வந்தார். அந்த நிலையில் பொதுமக்கள் மத்தியில் பலருக்குப் பெரும் பயம் இருந்து வந்தது. பெரிய பெரிய சண்டித்தனம் உள்ளவர்கள், குழப்படிக்காரர் எல்லோரும் இவரைக்கண்டால் நடுநடுங்கி நிற்பார்கள் அந்த அளவுக்கு இவர் கடமை, கட்டுப்பாடு, நீதி நிலவுவதற்கு அரும்பாடுபட்டவர் என்றே கூறலாம். சமூக ஒழுங்கையும் நீதியையும் நிலைநாட்டுவதில் பலராலும் பேசப்பட்ட ஓர் உயர் அதிகரியாகவே அப்பொழுது காணப்பட்டார்.

எனது காரியாலய அலுவல்களாகவும் இவரோடு பழகும் அரிய வாய்ப்புக்கள் பல முறை ஏற்பட்டன. இவரிடம் செல்லும்போது அப்போது மனதில் சிறிது பயம். அந்த அளவிற்கு அவர்மீது ஒரு பயபக்தி இருந்துள்ளது. யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியாக் கச்சேரிகளில் அவரோடு பேசிப் பழகிக் கடமையாற்றிய சம்பவங்கள் நிறையவே உண்டு. இதைவிட உதவி அரசாங்க அதிபர் பிரிவு விளையாட்டு விழாக்களில் இவரின் ஜீப் வண்டியில் ஏறி வீதிகளில் உலாவந்து சந்தோஷப்பட்ட நாட்களும் பலஉண்டு.எக்காரியத்தையும் தாமதியாமல் உடனுக்குடன் சரிவரச் செய்து முடிக்க வேண்டும் என்னும் பாடத்தை நான் இவரிடமும் கற்றுக்கொண்டிருக்கிறேன் என்பது உண்மையான விடையமாகும்.

நான் புலம் பெயர்ந்து 1983ல் ஜேர்மனிக்கு வந்துவிட்டேன். 1983 ஆண்டளவில் இவரோடு தொடர்பை ஏற்படுத்தினேன். எனது கடிதத்திற்கு நடவடிக்கை எடுக்கும் பொருட்டு வடகிழக்கில் உடனடியாக உதவிகள் செய்ய வேண்டிய ஆதரவற்றோர் விபரங்கள், நிலைமைகளை நேரடியாகப் பார்வையிட்டு எனக்கு அறியத்தந்தார். இதற்காக அவர் வடகிழக்குப் பிரதேசங்களுக்கு விஜயம் செய்து இவற்றைத் திரட்டி எனக்கு அனுப்பி வைத்தமை குறிப்பிடத்தக்க விடையமாகும்.

அவரின் கடிதங்களின் படி வடகிழக்கிலுள்ள மேலும் பல இல்லங்களோடு தொடர்புகளை ஏற்படுத்தி போர்க் காலங்களில் இந்த ஆதரவற்றோர், முதியோர், ஊனமுற்றவர்கள் எங்கெல்லாம் இடம்மாறி வாழ்ந்தார்களோ அங்கெல்லாம் மண் சஞ்சிகை ஊடாகப் பெரும் பண உதவிகளைச் செய்து அரும்பணியாற்றினோம். இக்காரியத்திற்கு இவரும் உறுதுணையாக இருந்து செயற்பட்டார். இன்றுவரை செயற்பட்டு வருகின்றார். தற்போது இவர் அரச பதவியிலிருந்து ஓய்வு பெற்றாலும் அவரது மனம் ஓய்வு பெறவில்லை. அந்த அளவிற்கு நமது மக்களின் துயர் துடைக்க வேண்டும் என்பதில் உறுதியாக என்னோடு ஒன்றிணைந்து தமது உதவிகளையும் ஆலோசனைகளையும் வழங்கிவருகின்றார்.-இன்றுவரை அடக்கடி என்னோடு தொலை பேசி எடுத்து மண் சஞ்சிகைபற்றிய விமர்சனங்களையும் கூறிவரும் இவர் மண் சங்சிகைக்குப் பல தடவை தனது ஆக்கங்களை எழுதியிருக்கிறார். எழுதியும் வருகின்றார். மண் சஞ்சிகையின் விசுவாசியாகவும் வாசகராகவும் ஆலோசகராகவும் தனது பங்கை ஆற்றிவரும் இவரை நான் ஓர் தமிழ், சமூகப் பற்றாளராகவும் அடையாளம் காண்கின்றேன்.

திரு.மார்க்கண்டு ஐயா அவர்கள் இரண்டு மூன்று தடவை தனது பிள்ளைகளிடம் லண்டனுக்கு வந்து போனார். அப்போதெல்லாம் என்னோடு தொடர்பு கொள்ளத் தவறவில்லை. புலம் பெயர் தேசங்களில் வாழும் தனக்குத்தெரிந்த எழுத்தாளர்களையும் சமூக சேவையாளர்களையும் எனக்கு அறிமுகப்படுத்தி அவர்களோடு தொடர்புகளை ஏற்படுத்தித் தந்தார். இப்படியாகப் பலவழிகளிலும் மண் சஞ்சிகையின் வளர்ச்சியிலும் ஏன் என் வளர்ச்சிக்கும் அரும்பாடுபட்டு எனக்கு ஒத்துழைப்பு வழங்கி வருகின்றார். வயதில் முதிர்ந்த அறிவு ஆற்றலில் உயர்ந்த, சமூக அக்கறையில் திகழ்ந்த இந்தப் பெருந்தகையின் உறவும் நட்பும் எனக்குக் கிடைத்தது பெரும் கொடையாகவே நான் கருதுகின்றேன். இவர் தற்போது அரச சேவையிலிருந்து இளைப்பாறினாலும்நாட்டிலும், மண்ணியும், தமிழிலும், வாழ்வியலிலும் பெரும் அக்கறைகொண்டு உழைத்துவரும் பெரு மனிதராகவே நான் காண்கின்றேன். இந்தப் பெரு மனிதனோடு வளர்ந்துவரும் நட்பும் அன்பும் என்றும் என் நெஞ்சைவிட்டகலாதவை. இவரின் வாழ்க்கைப் பாடம் எனது வாழ்க்கைப் பாதையை நன்கு செப்பனிட்டுத் தந்தது என்றே கூறிக்கொள்வேன்.

'ஒரே ஒரு நற்செயலை மட்டும் தவறாது ஆற்றினால் போதும்!..
சொர்க்கம் உங்களைத்தேடி வரும்!..அந்தச்செயல்தான் உண்மை
பேசுதல்!...'

# கலாநிதி. குணராசா - (செங்கை ஆழியான்) உதவி அரசாங்க அதிபர்- துணுக்காய் பிரதேசம்

வவுனியா செட்டிகுளம் பிரதேச காரியாதிகாரியாகக் (DRO) கடமையாற்றிய இவர் நான் வசித்த துணுக்காய் பிரதேச உதவி அரசாங்க அதிபராக மாற்றலாகி வந்திருந்தார். அப்போது சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியது. பின்னர் எனது காரியாலய விடையமாக அடிக்கடி சந்திக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. மிகவும் அமைதியான மனிதர். சிறந்த நிர்வாக அதிகாரி.

இவரைப்பற்றி நான் ஏற்கனவே கேள்விப்பட்டிருக்கிறேன்... எழுத்தாளர் , இலக்கியவாதி, நூல் ஆசிரியர், நாவல் ஆசிரியர், கல்விசார் பாடப்புத்தகங்கள் எழுதுபவர் எனப் பன்முக ஆளுமை கொண்டவர் என்பதை நான் ஏற்கனவே அறிந்திருந்தேன். இவரின் புவியியல் பாடப்புத்தகத்தையும் பல வெளியீடுகளையும் பாடசாலையில் படித்திருக்கிறேன். இதில் சிறப்பு என்னவென்றால் இவரின் வினாவிடைப் புத்தகத்தை நான் இன்றுவரை மண் சஞ்சிகையின் சிறுவர் போட்டிகளுக்குப் பயன்படுத்தி வருகின்றேன் என்பது முக்கிய விடயமாகும்.

நான் அப்போது யாழ்-ஈழநாடு பத்திரிகையின் நிருபராக இருந்தபோது இவரோடு நெருங்கிப் பழகும் வாய்ப்புகிட்டியது. எனது காரியாலயத்துக்குத் தொலைபேசி எடுத்து என்னை தனது காரியாலயத்துக்கு வரும்படி அழைப்பார். அப்போ நான் அங்கு சென்று அவர் சொல்லும் செய்திகளை எழுதி பத்திரிகைக்கு அனுப்புவேன். அவர் ஒரு ஆசிரியர்போல் நல்ல தமிழில் உரையாடி எனது தமிழ் எழுத்து வளர்ச்சிக்கும் உறுதுணையாகவே இருந்திருக்கின்றார்.

இலங்கையில் பெரும் கல்விமானாகவும் பெரும் கலை இலக்கிய எழுத்தாளராகவும் திகழும் இவரின் பல நூல்களைப் படித்திருக்கிறேன். சமூகக்கண்ணோட்டம், தமிழின் சிறப்பு, தமிழரின் வரலாறு பாரம்பரியம், தமிழர் வாழ்வியல் விடையங்கள் என அவரின் அத்தனை படைப்புக்களும் எனக்கு மிகவும் பிடித்தமானவையே. சிறப்பாக இலங்கையில் வெளியான "வாடைக்காற்று" என்னும் தமிழ் சினிமாப்படத்தின் கதை ஆசிரியராகவும் விளங்கிப் புகழ்சேர்த்திருக்கிறார். இலங்கை ஜனாதிபதி விருதையும் பெற்று தமிழினத்துக்குப் புகழ் சேர்த்திருக்கிறார். ஐம்பது ஆண்டுகள் கடந்தும் எழுத்தை மூச்சாகக்கொண்டு இன்றுவரை வாழ்ந்துகொண்டிருக்கும் இவர் கடந்த இரண்டு வருடங்களின் முன்பு லண்டன் நகர் வந்திருந்தபோது தொலைபேசியில் இணைந்து உரையாடியது எனக்கும் அவருக்கும் மன ஆறுதலைத் தந்தது என்றே கூறுவேன். அவரின் நட்பை என்றுமே மறக்கமுடியாது. ஐம்பது ஆண்டுகள் கடந்த சிறந்த இலக்கியப் பெருமகன் இன்றும் யழ்ப்பாணத்தில் இலக்கியம் படைத்துக்கொண்டிருப்பது வரலாற்றில் பதியப்படும் விடையமாகும்

# கார்த்திகேசு உதவி அரசாங்க அதிபர் துணுக்காய்ப் பிரதேசம்

துணுக்காய் உதவி அரசாங்க அதிபர் காரியாலயமும், நான் வேலை செய்த துணுக்காய் பகுதி பல நோக்குக் கூட்டுறவுச்சங்க தலைமைக்காரியாலயமும் 200 மீட்டர் தூரத்திலேயே அமைந்திருந்தது. அப்போது உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தினர் எங்கள் தாபனத்தில் பல பொருட்களைக் கொள்வனவு செய்வார்கள். இது வழக்கமான விடயமாக இருந்து வந்தது. அப்போ நான் கணக்காளராகக் கடமைபுரிந்தபடியால் அவர்களின் காரியாலயம் சென்று கணக்குப் பார்த்து இவரிடம் ஒப்பம் வேண்டி காசோலைகளைப் பெற்றுவருவேன். இது எனது கடமையான படியால் அவரோடு பழகும் வாய்ப்புக் கிட்டியது.

இவர் மிகவும் எளிமையானவர் ஒரு உதவி அரசாங்க அதிபர் சாதாரண இலிகிதர்களின் இருக்கைகளில் இருந்து அவர்களோடு சரளமாகப் பேசிக் கதைத்து அவர்களோடு வேலை செய்வார். தனது பிரத்தியேக தனி அறையில் இருந்து கடமைபுரிவது மிகவும் குறைவே. சில சமயங்களில் தனது லிகிதர்களை அன்பால் வேண்டாத வார்த்தைகளால கூடப் பேசுவார்

மறுகணம் நட்பாகப் பழகுவார். இவற்றை நான் நேரடியாகவே கண்டிருக்கிறேன். இப்படியான இவரின் குண இயல்புகள் என்னையும் கவர்ந்துவிட்டன. அவ்வளவுக்குத் தனது கீழ் அதிகாரிகளுடன் நட்பாகப் பேசிப் பழகுவார்.

இந்தப் பிரதேசம் ஒரு விவசாயப் பூமியாகும் வடமாகாணத்திலிருந்தும் பல ஊர் மக்கள் குடியேறி இங்கு வாழ்ந்துவருவதால் பல தரப்பட்ட பிரச்சனைகளோடு நாடி வருவோரை அணுகி உடனுக்குடன் அவர்களின் குறைபாடுகளைத் தீர்ப்பதில் வல்லவர். ஒரு சம்பவம் இன்றும் என் ஞாபகப்பதிவில் அவரது காரியாலயத்தில் கடமைபுரியும் ஒரு லிகிதர் அன்று வேலைக்கு வரவில்லை. பொதுமக்களோ காரியாலயத்தில் நிறைந்துவிட்டனர். அவர் உடனே சுட்டியல்கொண்டுவந்து அலுமாரிப் பூட்டுக்களை உடைத்து கடிதக் கோவைகளை எடுத்துப் பரிசீலனைசெய்து பொதுமக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து அனுப்பினார். இப்படியாக இவரின் கடமை உணர்வையும் பொதுமக்கள் குறை தீர்ப்பதில் காரியமாற்றும் முறைகளும் எனக்குப் பாடமாகவே அமைந்தன.

அவருக்கென்று அரசால் கொடுக்கப்பட்ட விடுதியில் தனியாகத் தங்குவார். ஆனால் சமையல்காரர்களோ எப்போதும் மூன்று நாலுபேர் நிற்பார்கள். தனித்துச் சாப்பிடமாட்டார். இதைவிட தனது பரிவுக்குட்பட்ட கிராம சேவகர் பகுதிகளைப் பார்க்கப் போவதற்கு அரச ஜீப் வண்டி நின்றாலும் மாட்டுவண்டியை ஒழுங்குபண்ணி அதிலேயே சென்று பொதுமக்களின் குறைகளை அறிந்துவருவார்.வசதி வாய்ப்புக்கள் நிறைந்திருந்தாலும் இப்படியாகப் பொழுது போக்கிய மிகவும் எளிமையான அரச உயர் அதிகாரியுடன் பழகியதால் எளிமையான வாழ்வு முறைகளையும் கற்றிருப்பது எனக்குக் கிடைத்த வரப்பிரசாதமாகவே கருதுகின்றேன்.

# வேலுப்பிள்ளை - மாவட்டக் காணி அதிபர் வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திட்ட அதிபர்

வன்னிப் பிரதேசம் வளங்கொழிக்கும் பூமியாகும். வடபகுதி தமிழர்களுக்கு மட்டுமல்லாமல் நாட்டின் அத்தனை மக்களுக்கும் சோறுபோடும் பிரதேசமாகும் .ஆனால் இன்று நிலமை மாற்றமடைந்துள்ளது. அப்போது திரு.வேலுப்பிள்ளை அவர்கள் முல்லைத்தீவு மாவட்டம் முத்துஐயன்கட்டு நீர்ப்பாசனத் திட்டப்பணிப்பாளராக இருந்தவர். பின்னர் வவுனிக்குளம் பாரிய நீர்ப்பாசன குளத்தின் திட்ட அதிபராகவும் மாவட்டக் காணி அதிபராகவும் துணுக்காயிலுள்ள காரியாலயத்திலும் கடமைபுரிந்தார்.

இவர் கடமைபுரிந்த காரியாலய ஜீப் வண்டிகள் நான் கடமைபுரிந்த தாபனத்தின் பெற்றோல் நிரப்பு நிலையத்தில் எரிபொருட்களை நிரப்புவது வழக்கமாகும். மாதமுடிவில் கணக்கு முடிக்கும் பணிகளுக்காக அவரின் அலுவலகம் நான் செல்வேன். அப்போது அவரோடு பேசிப் பழகும் வாய்ப்பு கிட்டியது. மிக...மிக அமைதியானவர். நிர்வாகத்திறன்மிக்க அதிகாரி. பொதுமக்கள் குறைதீர்ப்பதில் வல்லவர். அன்றைய கால கட்டத்தில் துணுக்காயில் கடமைபுரிந்த அரச தாபனங்களின் உத்தியோகத்தர்கள் ஒன்றுசேர்ந்து கிரிக்கட் விளையாடுவார்கள் இந்த அணியில் நானும் சேர்ந்து விளையாடி இருக்கிறேன். துணுக்காயிலிருந்து கிளிநொச்சி, வவுனியா நகரங்களுக்குச் சென்று ஏனைய கழகங்களோடு நட்புரீதியாக கிரிக்கட் வியைாடுவோம் அச்சந்தர்ப்பங்களில் தமது காரியாலய ஜீப் வண்டியை எமது போக்குவரத்துக்குத் தந்து உதவுவார் இவர்.

அங்கு அப்போது பருத்தித்தறையைச் சேர்ந்த தம்பர் என்பவர் துணுக்காயில் உணவுச்சாலை ஒன்றை வைத்திருந்தார். அப்பொழுது அதுதான் பெரிய உணவகம். துணுக்காயில் கடமை புரியம் அலுவலகங்களின் அத்தனைபேரும் அங்குதான் காலை மதிய உணவுக்காக வருவார்கள். அப்போதெல்லாம் அவரோடு ஒன்றாக இருந்து உணவருந்தி பேசி மகிழ்ந்திருக்கிறேன். மாமிசம் உண்ணாத சைவப்பிரியரான இவருக்கு அருகில் இருந்து நான் மாமிச உணவை உட்கொண்டதை இப்போது நினைக்கையில் மனம் கூச்சமடைகின்றது. ஆனால் அவர் எந்தவிதமான அருவருப்புக்கள் கொள்ளாது இயல்பாகவும் நட்பாகவும் எடுத்துப் பேசிப் பழகுவார்.

மிகவும் அதையான மனிதர். மற்றவர்களோடு பேசும்போது சத்தம் கேளாது. அவ்வளவு அமைதியானவர். சிறந்த நிர்வாக அதிகாரி. கடமைபுரியும் உத்தியோகத்தர்களுடனும் பொதுமக்களுடனும் அமைதியாகவும் நிதானமாகவும் பேசி நிர்வாகப் பணிகளை மேற்கொள்ளுவார். அமைதியாக இருந்து ஆற்றல்மிகு பணிகளையும் ஆற்றலாம் என்ற அனுபவப் பாடத்தை நான் அவரிடமிருந்தே பெற்றிருக்கிறேன். அவரோடும் நான் பழகி வாழ்ந்தது பெரும் பாக்கியமாகவே கருதுகின்றேன்.

# தமிழ்மணி. பொன். சிறீஜீவகன் - தாபகர்-தலைவர் ஜேர்மனி தமிழ்க் கல்விச் சேவை (ஐரோப்பா)

ஜேர்மனியில் கடந்த 24 வருடங்களாக இயங்கி வரும் ஜேர்மன் தமிழ்க் கல்விச் சேவையின் தாபகர், தலைவர் திரு பொன்.சிறீஜீவகன் அவர்களின் தொடர்பு இருபது வருடங்களாகத் தொடர்கின்றது. கல்வியே உயிர் மூச்செனக்கொண்டு இயங்கும் இவரிடம் பல திறமைகளைக் கண்டுகொண்டேன். ஒரு வீட்டை நிர்வகிப்பது என்பது எவ்வளவு கடினம். ஆனால் இவரோ ஜேர்மனி மட்டுமல்லாது சுவீஸ், நெதர்லாந்து, பிரான்ஸ், டென்மார்க் நாடுகளிலும் தமிழ்ப் பாடசாலைகள் அமைவதற்கு ஊன்றுகோலாக இருந்து செயற்பட்டுவருகின்றார். ஐரோப்பா தழுவியரீதியில் தற்போது சுமார் அறுத்தேழு தமிழ் பாடசாலைகள் இவரின் தலைமைத்துவத்தின் கீழ் இயங்கி வருகின்றன.

கல்விப் பணிக்காக நானும் கடந்த 20 வருடங்களுக்கு மேலாக இவரோடு சேர்ந்து பணியாற்றிவருகின்றேன். ஐரோப்பாவில் இவரோடு பல நாடுகளுக்குச் சென்று கல்விப் பணியாற்றிவருகின்றேன். எத்தனையோ சோதனைகள், நிதிநெருக்கடிகள், பயமுறுத்தல்கள், உயிர் அச்சுறுத்தல்கள், பிரிவுகள் வந்தபோதெல்லாம் பயந்து ஒடுங்கி விடாமல் துணிந்து நின்று காரியமாற்றி வெற்றிகாணும் இவரிடம் பல பாடங்களை நான் படித்திருக்கிறேன். தமிழ் ஆழுமையுள்ள இவர் ஆசிரியர், எழுத்தாளர், கவிஞர், பட்டிமன்றப்பேச்சாளர், விமர்சகர், இலக்கியவாதி, படைப்பாளர் எனப் பன்முக ஆழுமைகொண்டவர். மேலாக ஜேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் உபதலைவராக் கடந்த பத்து வருடங்களாக கடமையாற்றி வருகின்றார்.

தமிழ்பற்று, சமூகப்பற்று நிறைந்த இவர் எந்தக்கருத்தையும் எப்போதும் துணிந்து கூறக்கூடியவர். எங்கு அநீதி கண்டாலும் தட்டிக்கேட்கும் மனவலிமை கொண்டவர். சமூக விஞ்ஞான மாற்றங்களோடு வாழும் இவர் பழம்பெரும் இடதுசாரி தலைவர்களின் வழிகாட்டலில் வளர்ந்தபடியால் பல்வகை ஆழுமைகளும் ஒருங்கே அமைந்த மனிதராக இவரைக் காண்கின்றேன். தமிழ்ப் பாடசாலைகளின் ஆசிரியர்கள் மாணவர்கள், பெற்றோர்கள், நிர்வாகிகள் எனப்பல தரப்பட்டவர்களோடும் அன்பாகவும் கண்டிப்பாகவும் சமூகநோக்கோடும் விளங்கும் இவரின் நட்பானது என்னையும் கவர்ந்தது. இவரின் ஆலோசனைகளும், வழிகாட்டல்களும் என் வாழ்விலும் பல மாற்றங்களை ஏற்படுத்தி நல்வழிப்படுத்தியன என்றே கூறுவேன். சமூகத்துடிப்பும் தாயகப்பற்றும், கல்விப்பற்றும் அநீதிகளைத் தட்டிக்கேட்கும் தைரியமும், ஆலோசனைகளும், அன்பும் , மரியாதையும் என்றும் இவர் மீது என்னை அக்கறைகொள்ள வைத்தது என்றே கூறுவேன். இவரின் நட்பும் தோழமையும் என்றும் நிலைத்து நிற்கும் என நம்பி வாழ்கின்றேன்.

'ஏழைகளின் தேவைகளை நிறைவேற்ற முயற்சி செய்பவன் எவனோ,
அவனது தேவைகளை ஆண்டவன் நிறைவேற்றி வைக்கிறான்.'

# திரு. நடா மோகன் - பணிப்பாளர். லண்டன் தமிழ் வானொலி

ஐரோப்பா தேசத்தின் தமிழ் ஊடகப்பரப்பில் இன்று பல வானொலிகள், இணைய வானொலிகள் என இயங்கிக்கொண்டிருந்தாலும் இந்தவானொலி என்பது ஒரு வித்தியாசமான வானொலியாக நான் அடையாளம் கண்டுகொண்டுள்ளேன். பல வானொலிகள் வெறும் சினிமாவும், அரசியலும், அரட்டைகளும் அடித்து நேரகாலத்தை வீணடித்துவருகின்றன. இன்னும் பல வானொலிகள் போட்டிகள் பொறாமைகளை வளர்த்து மக்களிடையே பிரிவுகளையும் பேதமைகளையும் ஏற்படுத்திக் குழப்பங்களையும் ஏற்படுத்திவருவதையே காணக்கூடியதாக இருக்கின்றன. வசதி வாய்ப்புக்கள் கூடியவுடன் யாரும் என்னவும் பேசலாம் எழுதலாம் என்ற நிலை வளர்ந்துவருகின்றது என்பதே உண்மையாகிவிட்டன. ஆனால் இந்த வானொலியோ உலகப்பரப்பில் ஒரு வித்தியாசமான அதிசயத்தக்க வானொலியாக வலம் வந்து கொண்டிருப்பதை நேரடியாகவே கேட்டும் அறிந்துவருகின்றேன்.

இந்த வானொலியின் இலக்கு, நோக்கம், "அடுத்த தலைமுறை நோக்கி" என்ற தாரக மந்திரத்தைக் கொண்டு இயங்கிவருகின்றது. இதுதான் இன்றைய ஊடகங்களின் இலக்காகவும் நோக்காகவும் இருக்கவேண்டும் என்பது எனது நோக்கமாகும். இக்கருத்தோடு உடன்பாடு இருந்தபடியால்தான் நான் இந்த வானொலியோடு கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக இணைந்து எழுதிப் பல ஆக்கங்களைப் படைத்துவருகின்றேன். உலகத்தில் எந்த ஒரு வானொலியும் செய்யாத பணிகளைச் செய்து இந்த வானொலி வெற்றிகண்டுள்ளது. பாலகர்கள், சிறுவர்கள், இளையோர்கள், வயதுவந்தவர்கள் குறிப்பாகப் பெண்கள் எனப்பல எண்ணங்கள்கொண்டோரை நல்வழிப்படுத்தி ஆரோக்கியமான எதிர்காலச் சமூகத்தைப் படைக்க இதன் பணிப்பாளர் திரு நடாமோகன் அவர்கள் அரும்பாடுபட்டு உழைத்து வருகின்றார். இவரின் பணிகள் உலகத்தமிழ் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பதியப்படுகின்றன. பல ஊடகவியலாளர்கள் காசுக்கும் பொருளுக்கும், புகழுக்கும் அலைந்து திரிகையில் இந்த மனிதர் பல அர்ப்பணிப்புக்களுடனும் தியாகங்களுடனும் ஊடகப்பணியை மேற்கொண்டுவருவது பாராட்டுக்குரிய விடையமே.

இன்றைய காலத்தில் இந்தவானொலில் பங்குபற்றும் சிறுவர் இளையோர் கவிதை, கட்டுரை, அறிவியியல், விஞ்ஞானம், கணனி, போன்ற பல துறைகளில் பரிணமித்து வருகிறார்கள். சுயமாகவே பாடல் கவி எழுதுவதும் இசை அமைப்பதும் இசைக்கோர்வைகள் செய்வதும் பாடுவதும் ஆடுவதும் நடிப்பதும் என முத்தமிழுக்கு அணிசேர்த்து மெருகூட்டி வருகிறர்கள். ஏன் பல நேயர்கள் 1000 வரை கவிதைகள் படைத்துள்ளனர். 100 பாடல்களைப் பாடியுள்ளனர். பல நூற்றுக்கணக்கான பாடல்களை தாமே எழுதி இசை கோர்த்து

இசை அமைத்துப் பாடியுள்ளனர். இது மட்டுமல்லாமல் வாழ்வியலுக்கு வேண்டிய பலதரப்பட்ட ஆக்கங்களைப் படைத்து வெற்றிகண்டுவருகின்றனர். உலகத்தில் எந்த ஒரு தமிழ் வானொலிக்கும் இப்படியாக ஆயிரக்கணக்கான பாடல்கள் பாடியவர்களையும் கவி புனைந்தவர்களையும் என் வாழ் நாளில் நான் கேள்விப்படவில்லை. இப்படியாக பரிணமித்துக்கொண்டிருக்கும் இந்த வானொலிக்கு நானும் 500 வரையிலான கவிதைகளைப் படைத்து வானொலியில் தவளவிட்டிருக்கிறேன். நானும் வளர்ந்து நேயர்களின் தமிழ்த் தாகத்துக்கும் தமிழ்கொடுத்திருக்கிறேன் என்னும் போது மகிழ்வுதான்.

இந்த வானொலியின் அதிபர் நடாமோகன் அவர்களின் ஆளுமை, நேர்மை, செயற்திறன், நோக்கம், பணிவு, அன்பு, குரல்வளம் அனைத்துமே என்னைக் கவர்ந்துவிட்டதால் கடந்த பத்து வருடங்குளுக்கு மேலாக அவருடன் நெருங்கிப் பழகிப் பல அனுபவங்களைப் பெற்றிருக்கிறேன். அவர் என் வயதைவிடக் குறைந்தவரானாலும் அவரின் அறிவு, ஆற்றல், செயல்பாடுகள் என்னைக் கவர்ந்தது என்றே கூறுவேன். தேடலும் முயற்சியும் தட்டிக் கொடுப்புகளும், சுட்டிக்காட்டல்களும், நேர்மையும் தியாகமும் அனைத்தும் பிடித்தவையே... மக்கள் மனங்களையும் கவர்ந்துள்ளது என்றே கூறுவேன். ஆடம்பரமில்லாத வாழ்வுமுறை சமூக மாற்றத்திற்கான அக்கறை, சமூகம்மீதான கண்ணோட்டம் அனைத்தும் ஒரு ஊடகவியலாளருக்கு இருக்கவேண்டிய அத்தனை பண்புகளையும் கொண்டிருப்பதால் இன்று உலகப்பரப்பில் தமிழர்களால் பேசப்படும் ஒரு சிறந்த மனிதராக நல்ல நண்பராகவே நான் கண்டுணொண்டுள்ளேன்.

இன்று இப்படிப்பட்ட ஊடகவியலாளர்களை இன்றைய தமிழ் ஊடகப்பரப்பில் காணவே முடியாது. எப்படிபட்ட பிரச்சனைகள் வந்தாலும் எதிர்காலச் சந்ததிகளை நல்வழிப்படுத்தி, தேடலும் முயற்சியும் உள்ள மனிதர்களாக மாற்றுவதற்குப் பெரும் பங்காற்றிவருகின்றார். மண் சஞ்சிகைக்கும் இந்த வானொலிக்கும் ஆக்கங்களைப் படைத்துவரும் பலரை மண் சஞ்சிகையின் தாயக உதவும் பணிகளுக்காகப் பல சந்தர்ப்பங்களில் உதவிக்கரம் நீட்டப் பண்ணிய பெருமையும் மனிதநேயச் செயற்பாடுகளும் நிறையவே இவரிடம் காணப்பட்டு வருகின்றது. மண் பற்றும் தாயகப்பற்றும் புலம்பெயர் வருங்காலச் சந்ததிகளின் தூர நோக்குப் பற்றும் நிறையவே காணப்படும் இந்த நல் உள்ளத்தோடு எனக்கு ஏற்பட்ட தொடர்பு என்னையும் மண் சஞ்சிகையையும் வளர்த்தெடுப்பதில் பெரும்பங்காற்றிவருகின்றார். இப்படிப்பட்ட சமூக நோக்குள்ள மனிதர் என்றவகையில் அவரின் அன்பும் மரியாதையும் தொடர்பும் இணைவும் பங்களிப்பும் என்றும் தொடரும் என நம்பிக்கை கொண்டுள்ளேன்.

'ஏழைகள்மீது இரக்கம்கொண்டு அவர்களுக்கு உதவிபுரிபவன் பகலெல்லாம் விரதம் இருந்து. இரவு முழுவதும் இறைவனைத் தொழுபவனைவிட உயர்ந்தவன்.'

# 40 வருடங்கள் தாண்டிய நட்பு!...

முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்
தகநக நட்பது நட்பு.

-குறள்-

ஒருவரைக் கண்டவுடன் மலர்ந்த முகத்துடன் சிரிப்பது நட்பன்று. நெஞ்சத்துள் அன்புடன் சிரிப்பதே உண்மையான அன்பாகும். "உண்மையான நட்பை ஆபத்தில் அறி" என்று எல்லாம் பொன்மொழிகள் உண்டு. மனித வாழ்வில் ஆரம்பத்தில் உடன் பிறந்த சகோதரர்கள் சகோதரிகள் வீட்டு உறவுகள் ஊரவர் என அன்பால் கட்டுண்டு வாழ்வார்கள். கால ஓட்டத்தில் சிறு...சிறு பிரச்சனைகள் ஏற்படவே உறவுகளிடையே பிரிவுகள் பிரச்சனைகள் எழுவது இயல்பாகிவிடும். ஆனால் உண்மையான நட்பும் அன்பும் உண்டானால் அந்த நட்பு பல்லாண்டுகள் உயிர்வாழும் என்பது அனுபவ ரீதியாக நாம் காணும் உண்மையாகும். எனது வாழ் நாளில் (40) நாற்பது ஆண்டுகள் கடந்து இன்றும் நட்போடும் தோழமையோடும் உண்மையாக வாழ்பவர்கள் நான்குபேரை இங்கு குறிப்பிடுவதில் பெரு மகிழ்வுகொள்கிறேன்.

## விஜயகுலசிங்கம்...

மல்லாவி-யோகபுரம்-துணுக்காய் பிரதேசத்தில் வாழ்ந்த காலத்தில் அரச கூட்டுறவுத் துறையில் இருவரும் பத்து வருடங்களாக ஒன்றாய் வேலை செய்தபோது ஏற்பட்ட நட்பானது இன்றுவரை நீடிக்கின்றது. அங்கு வாழ்ந்த காலத்தில் வேலை, விளையாட்டு, பொது வேலைத்திட்டங்கள், சுற்றுலா, தொழிற்சங்க நடவடிக்கைகள் எனப் பல துறைகளிலும் இருவரும் சேர்ந்து இயங்கிப் பல மாற்றங்களையும் பல செயற்பாடுகளையும் செய்திருக்கின்றோம்.இவர் 1980ல்ஜேர்மனி வந்து வசித்துவிட்டு 1987ல் கனடா நாடு சென்று அங்கு வசித்துவருகின்றார். 2013 வரையிலான இடைப்பட்ட காலத்தில் மூன்று தடவைகள் ஜேர்மனி வந்தபோதெல்லாம் எனது வீட்டில் தங்கி உண்டு அகமகிழ்ந்து செல்வார். மாதத்தில்மூன்றுநான்கு தடவைகளாவது தொலைபேசியில் கதைத்துக் கொள்வோம். இந்த நண்பனின்பேருதவியாலேயே நான் குடும்பமாக ஜேர்மனி வந்து ஓரளவு நல்லாய் வாழ்வதற்கு வழிவகுத்த இந்த நட்பை ஒருபோதும் மறக்கமுடியாது.

## புத்திசிகாமணி...

இவரின் ஊர் முல்லைத்திவு. நான் துணுக்காயில் வசித்தேன். 1980ம் ஆண்டளவில் அறிமுகம் ஏற்பட்டது. இவரின் நண்பர் என்னுடன் வேலை செய்த உயர் அதிகாரி. அப்போது நாம் இளைஞர்கள். எத்தனை அனுபவங்கள். சந்தோஷங்கள். நான் யாழ் ஈழநாடு பத்திரிகை நிருபராகவும் கடமைபுரிய இவர் வீரகேசரி பத்திரிகையின் நிருபராகக் கடமையாற்றினார்.

இருவரின் நட்பு அன்று தொடங்கி இன்றுவரை நீடித்துவருகின்றது. இருவரும் ஒன்றாக அன்று தேநீர்கடைகளில்கூட இருந்து செய்திகளை எழுதி அனுப்பியிருக்கிறோம். அன்றைய இளமைக் காலம் தொட்டு ஜேர்மனியில் வாழும் இன்றைய முதிர்ந்த பருவம் வரை ஒரே அன்பு, சிரிப்பு, நட்பு நீண்டு செல்கின்றது. அன்புக்கும் அடைக்கும்தாள் உண்டோ.

## விஜயானந்தன் - தேவராசா...

இருவரும் பாடசாலை நண்பர்கள். முதலாம் வகுப்புத் தொடக்கம் உயர் வகுப்புவரை ஒன்றாகப் படித்தவர்கள். ஒரே ஊரவர்கள். தற்போது ஜேர்மனியில் வசிக்கின்றார்கள். பாடசாலை சிறுவர், இளமைக்காலம்வரை அடிக்கடி தொலைபேசியில் பேசி மகிழ்வதுடன். அப்போது பெண் பிள்ளைகளோடு ஏற்பட்ட நட்புக்கள், நகைச்சுவைகள், காதல்கள் பற்றியெல்லாம் சந்திக்கும் போது அளவளாவி மகிழ்வோம். நாற்பது ஆண்டுகள் கடந்து நீண்டு உயர்ந்து வாழும் நட்பை என்னென்று சொல்வது. எங்களுடன் படித்த மாணவர்கள் பலர் வளர்ந்து திருமணம்செய்து தற்போது பல நாடுகளில் வாழ ஒரு சிலர் இப்போதும் ஊரில்தான் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். ஊார் சென்றபோதெல்லாம் அவர்களையும் வயதுபோன ஆசிரியர்களையும் சந்தித்துக் கதைத்துப் பேசியது இன்றும் பசுமையாகவே என் மனதில் இருக்கின்றது. இன்றுவரை இந்த இருவரும் அடிக்கடி என்னோடு பேசி மகிழ்ந்துகொண்டிருப்பது நட்பின் அடையாளமே...

## ஜேர்மனிய நண்பர்கள்...

எனது தனிப்பட்ட வாழ்வின் வளத்துக்கும் பொதுச் சேவைசெய்வதற்கான உயர்ச்சிக்கும் எப்போதும் என்னோடு துணையாக இருப்பவர்கள் எனது ஜேர்மனிய நண்பர்களே. ஏன் இந்தப் புத்தகத்தை எழுதத்தூண்டியவர்களும் எனது இனிய நண்பர்களே. பல இடங்களில் பல நண்பர்கள் இருந்தாலும் இந்த நண்பர்களே என்றும் என்னோடு துணையாக இருப்பவர்ளாவர். சந்தோஷத்திலும் துக்கத்திலும் உயர்ச்சியிலும் தாழ்ச்சியிலும் முன்னேற்றத்திலிம் வழிநடத்தலிலும் உறுதுணையாக இருந்துவருபவர்களாக திருவாளர்.கனகலிங்கம் (அமரர்), .சிறிஸ்கந்தராசா, சௌந்தரராசா, சிறீஜீவகன், அருந்தவராசா(தற்போது இலங்கையில் வாழ்கிறார்) புவனேந்திரன், பசுபதி, வரதராசா, புத்திசிகாமணி, பரிமளராசா, .கபிலன், .செல்வராசா (லண்டன்), குமரன், பத்மகுணசீலன் திருமதிகள்.கலைவாணி, கீதா, மீனா, கங்கா ஸ்ரான்லி,கலா, கிளி, நகுலா, ஜெயா.நடேசன், கௌசி, வசந்தா, புனிதமலர், பத்மாசினி, வேணி, சுந்தராம்பாள் ஆகியோரை குறிப்பிட்டுச் சொல்லலாம். இவர்களெல்லாம் என்னோடு சகோதரன் போலவும் நட்பாகவும் அன்பாகவும் பழகிவருபவர்கள். குடும்ப விழா ஆனாலும் பொது விழா ஆனாலும் அடிக்கடி சந்திக்கும் அன்புள்ளங்களாகும்... ஒரு கூட்டாக எந்தவித பேதங்களும் இல்லாமல் மனிதநேயத்துடன் அன்பால் அரவணைத்து நான் எடுக்கும் முயற்சிகளுக்கு ஆதரவளித்துப் பெருமை சேர்த்து தாங்களும் பெருமை பெற்று வாழ்வியலில் முன்னேறி உயர்ந்துகொண்டிருக்கிறார்கள் என்பதே உண்மை. என்றும் மறக்கமுடியாத நட்புகளுக்குத் தலை வணங்குகின்றேன்.

**என் வாழ்நாளில் என்னோடு பழகி உறவாடி மகிழ்ந்தவர்கள் வரிசையில் இன்றும் என் ஞாபகத்தில் பதிவானவர்கள் ...ஒரு சிலர் இப்பொழுதும் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். பலர் இறந்துவிட்டார்கள்.**

## அரசியல் பிரமுகர்கள்:-

| | |
|---|---|
| வ.ந.நவரத்தினம் - பாராளுமன்ற உறுப்பினர் | - சாவகச்சேரி |
| எம்.ஸி.சுப்பிரமணியம்- பாராளுமன்ற உறுப்பினர் | - யாழ்ப்பாணம் |
| இராசலிங்கம் - பாராளுமன்ற உறுப்பினர் | - உடுப்பிட்டி |
| குமாரசூரியர்-தபால் தந்தி அமைச்சர் | - கொழும்பு |
| ஆலாலசுந்தரம் - பாராளுமன்ற உறுப்பினர் | - நல்லூர் |
| ஆனந்தசங்கரி - பாராளுமன்:ற உறுப்பினர் | - கிளிநோச்சி |
| மாவை சேனாதிராசா - பாராளுமன்ற உறுப்பினர் | - யாழ்ப்பாணம் |
| திவ்வியநாதன் - பாராளுமன்ற உறுப்பினர் | - அம்பாறை |
| என்.எஸ்.ஏ.காதர் - ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி | - மன்னார். |
| ஜெயசீலன் - மாவட்டசபை உறுப்பினர் | - முல்லைத்தீவு. |
| சந்திரசேகரி - மாவட்டசபை உறுப்பினர் | - நெடுங்கேணி |

## அரச உத்தியோகத்தர்கள்:-

| | |
|---|---|
| மார்க்கண்டு - அரசாங்க அதிபர் | - வவுனியா |
| இராசநாயகம் - அரசாங்க அதிபர் | - கிளிநொச்சி |
| சிவசுவாமி - மேலதிக அரசாங்க அதிபர் | - யாழ்ப்பாணம் |
| கார்த்திகேசு - உதவி அரசாங்க அதிபர் | - துணுக்காய் |
| குணராசா - உதவி அரசாங்க அதிபர் | - துணுக்காய் |
| குமாரசாமி - உதவி அரசாங்க அதிபர் | - துணுக்காய் |
| பரமேஸ்வரன் - மாவட்டக்காணி அதிபர் | - துணுக்காய் |
| வேலுப்பிள்ளை - மாவட்டக்காணி அதிபர் | - துணுக்காய் |
| சிவராசா - கிராம அலுவலர் | - மல்லாவி-யோகபுரம் |
| சந்திரசேகரம் - தபால் அதிபர் | - துணுக்காய். |
| சிவப்பிரகாசம்பிள்ளை - உணவு ஆணையாளர் | - வவுனியா |
| பற்குணம் - உணவு ஆணையாளர் | - வவுனியா |
| காஜா முகைதீன் - அரச படவரைஞர் | - கொழும்பு |
| சுல்தான் - கல்லூரி அதிபர் | - கொழும்பு |

## கல்வி சார்ந்த நட்புக்கள்:-

சிவசுப்பிரமணியம் - கூட்டுறவு பயிற்சிக்கல்லூரி - யாழ்ப்பாணம்
யேசுராசா - கூட்டுறவு பயிற்சிக்கல்லூரி - யாழ்ப்பாணம்
இரத்தினம் - கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி - யாழ்ப்பாணம்
மகேஸ்வரா - கூட்டுறவுப் பயிற்சிக் கல்லாரி - வவுனியா
கலாநிதி.சிவராசா - சிரேஸ்ட விரிவுரையாளர் - பேராதனை
சிவயோகலிங்கம் - விரிவுரையாளர் - பேராதனை
இரா.கனகரட்ணம் - சிரேஸ்ட விரிவரையாளர் - கொழும்பு
சந்திரசேகரம் பாடசாலை அதிபர் - புத்தூர்
சிவஞானம் - ஆசிரியர் - நாவற்குழி - ஜேர்மனி
சில்வெஸ்ரர் - ஆசிரியர் - சுவீஸ்லாந்து
செல்லத்துரை - ஆசிரியர் - கைதடி
பொன்னுத்துரை - ஆசிரியர் - மட்டுவில் - ஜேர்மனி
முத்துச் சொக்கன் - பாடசாலை அதிபர் - உடப்பு
பரா மாஸ்டர் - ஆசிரியர் - மட்டுவில் - பிரித்தானியா

## ஏனைய தொழில்சார்ந்த நட்புக்கள்:-

நஞ்சன் - முகாமையாளர் - காங்கேசன்துறை - கனடா
சிவஞானம் - அரசதிணைக்களம் - புத்தூர் - பிரித்தானியா
பொன்னுத்துரை - விவசாயி - கைதடி - பிரித்தானியா
அப்புத்துரை - முகாமையாளர் - கைதடி - டென்மார்க்
இராசேந்திரம் - பொலிஸ் - கைதடி - டென்மார்க்
அல்பிரட் - கணக்காளர் - யாழ்ப்பாணம் - கனடா
பிலிப் - வைத்தியர் - மட்டுவில் (அமரர்)
சிவஞானம் - அரச உத்தியோகத்தர் - மட்டுவில் - ஜேர்மனி
சிவராசா - அரச உத்தியோகத்தர் - சாவகச்சேரி - ஜேர்மனி
துரைசிங்கம் - கிராம அலுவலகர் - மட்டுவில்
கந்தையா - அரச உத்தியோகத்தர் - மட்டுவில் - கனடா

'எங்களுடைய குற்றங்குறைகளைப் போக்கிக் கொள்ளாத நிலையில், மற்றவர்களுடைய குற்றங்குறைகளைக் குறித்துப் பேசாதீர்கள்.'

## கலை, இலக்கியம், எழுத்து, ஊடக, சமூகப் பணிகளோடு இணைந்த நட்புக்கள்:-

கோபலரட்ணம் - முன்னாள் பிரதம ஆசிரியர் - ஈழநாடு பத்திரிகை
செங்கை ஆழியான் (குணராசா) - மூத்த எழுத்தாளர்
டொமினிக் ஜீவா - மூத்த பத்திரிகையாளர்
தர்மகுலசிங்கம் - புதிய சிரித்திரன் இதழாசிரியர் - மட்டக்களப்பு
குகநாதன் - அதிபர் டன் ஒளிபரப்பு நிறுவனம் - யாழ்ப்பாணம்
கவிஞர் கந்தவனம் - மூத்த எழுத்தாளர் - கனடா
கனகசபாாதி - பாடசாலை முன்னாள் அதிபர் - கனடா
பாலமனோகரன் - மூத்த எழுத்தாளர் - டென்மார்க்
வ.ஐ.ச.ஜெயபாலன் - கவிஞர் - மூத்த எழுத்தாளர் - நோர்வே
முருகபூபதி - மூத்த எழுத்தாளர் - அவுஸ்திரேலியா
சிசு.நாகேந்திரன் - மூத்த எழுத்தாளர் - அவுஸ்திரேலியா
வேலணையூர் பொன்னண்ணா - கவிஞர் - மூத்த எழுத்தாளர் - டென்மார்க்
ஜீவகுமாரன் - எழுத்தாளர் - டென்மார்க்
இணுவையூர் தாஸன் - கவிஞர் - டென்மார்க்
மட்டுவில் ஞானக்குமாரன் - கவிஞர் - கனடா
சிவரஞ்சன் - எழுத்தாளர் - நோர்வே
நமசிவாயம் (நவாஸ்) தமிழார்வலர் - பாடகர் - நோர்வே
ஞானேந்திரன் - எழுத்தாளர் - சுவீஸ்லாந்து
ரவி-செல்லத்துரை - எழுத்தாளர் - சுவீஸ்லாந்து
விவேகானந்தன் - எழுத்தாளர் - சுவீஸ்லாந்து
கல்லாறு சதீஸ் - எழுத்தாளர் - சுவீஸ்லாந்து
ஜயந்திமாலா குணசீலன் - ஊடகவியலாளர் - சுவீஸ்லாந்து
வாகீசன் - தமிழ்ப்பாடசாலை பொறுப்பாளர் - சுவீஸ்லாந்து
வண்ணைத்தெய்வம் - எழுத்தாளர் - பிரான்ஸ்
சரீஸ் - கவிஞர் - பிரான்ஸ்
திருமதி.நவாஜோதி - ஊடகவியலாளர் - பிரான்ஸ்
காசிலிங்கம் மூத்த எழுத்தாளர் - பிரான்ஸ்
பாரதிதாசன் - கவிஞர் - பிரான்ஸ்
அரவிந்தன் - எழுத்தாளர் - பிரான்ஸ்
புங்கையூர் ராஜா - எழுத்தாளர் - நெதர்லாந்து
ஜெயம்.தங்கராசா - கவிஞர் எழுத்தாளர் - நெதர்லாந்து
திருமதி.சிவநேசன் - கவிஞர் - நெதர்லாந்து
ரவீந்திரன் - ஊடகவியலாளர் - ஜேர்மனி

| | |
|---|---|
| நடா மோகன் - ஊடகவியலாளர் | - லண்டன் |
| பரா.பிரபா - ஊடகவியலாளர் | - லண்டன் |
| திருமதி.நவஜோதி.யோகரட்ணம் - ஊடகவியலாளர் | - லண்டன் |
| யோகரட்ணம் - ஊடகவியலாளர் | - லண்டன் |
| இராஜமனோகரன் - கவிஞர் | - லண்டன் |
| செல்வராசா - ஆவணக்காப்பாளர் நூலகவியலாளர் | - லண்டன் |
| செல்வராசா - பொதுச்சேவையாளர் | - லண்டன் |
| முல்லை அமுதன் - எழுத்தாளர் | - லண்டன் |
| பரணிதரன் - ஊடகவியலாளர் | - லண்டன் |
| இராஜகோபால் - பத்திரிகையாளர் | - லண்டன் |
| பாவை.ஜெயபாலன் - கவிஞர் | - லண்டன் |
| திரு, திருமதி வேலாயுதம் -கல்வியாளர்கள் | - லண்டன் |
| சிவனடியான்.சிறிபதி - சமூக ஆர்வலர் | - லண்டன் |
| என்.ரி.ஜெகன் ஊடகவியலாளர் | - லண்டன் |
| த.சு.மணியம் - கவிஞர் | - லண்டன் |

## கழகங்கள், மன்றங்களின் நட்புக்கள்:-

| | |
|---|---|
| தர்மகுலசிங்கம் - அறிவாலயம் தமிழ்ப்பாடசாலை | - Oberhaus |
| நித்தியானந்தன் - அறிவாலயம் தமிழ்ப்பாடசாலை | - Oberhaus |
| ஜோர்ஜ் - தமிழ்ப்பாடசாலை | - Goslar |
| கனகநாதன் - தமிழ்ப்பாடசாலை | - Neuss |
| விக்னேஸ்வரன் - தமிழ்ப்பாடசாலை | - Essen |
| திருமதி. ரெஜினி சத்தியகுமார் - ஆடற்கலாலயம் | - Krefeld |
| கனகலிங்கம் - தமிழர்விளையாட்டுக்கழகம் | - Duisburg |
| கங்கேஸ்வரன் - தமிழர் விளையாட்டுக்கழகம் | - Geldern |
| சத்தியமூர்த்தி - இசைக்குழு அதிபர் - பாடகர் | - Ratingen |
| கண்ணன் - குரல் இணையத்தளம், சஞ்சிகை | - Bonn |
| சோமகுலநாயகம் - பசுமைவளத்திட்டம் சங்காளை | - Bremen |
| திருமதி.இராஜேஸ்வரி.லோகநாதன் - தமிழ்வானொலி | - Hannover |

'தன்னுடைய கண் முன்னே இருந்தாலும் இல்லாவிட்டாலும், தன்போன்ற மனிதரைக் காக்கக்கூடியவனே உண்மையான மனிதனாவான்.'

## கடந்த 25 வருடங்களுக்கு மேலாக ஜேர்மனியில் என்னோடு பேசிப் பழகிக் கலை, இலக்கிய, கல்வி, எழுத்து, சமூகப்பணிகளோடு இணைந்துகொண்டவர்கள் வரிசையில் இடம்பிடிப்போர்!...

| | | |
|---|---|---|
| சின்ன.இராஜேஸ்வரன் | - சிறுவர் அமுதம் சஞ்சிகை ஆசிரியர் | - Elsdorf |
| சிறீஜீவகன் | - தலைவர் ஜேர்மன் தமிழ்க் கல்விச்சேவை | - Kaman |
| அருந்தவராசா | - எழுத்தாளர், கவிஞர் | - Soest |
| புத்திசிகாமணி | - எழுத்தாளர், கவிஞர் | - Sundern |
| அம்பலவன்.புவனேந்திரன் | - கவிஞர், எழுத்தாளர் | - Duisburg |
| பசுபதி | - கவிஞர், எழுத்தாளர் | - Wuppertal |
| வரதராசன் | - கவிஞர், எழுத்தாளர் | - Düsseldorf |
| பத்மகுணசீலன் | - எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர் | - Kiel |
| சிறிஸ்கந்தராசா | - கவிஞர், எழுத்தாளர் | - Duisburg |
| அமிர்தநாதர் | - கவிஞர், எழுத்தாளர் | - Srilanka |
| முருகதாஸன் | - சஞ்சிகை ஆசிரியர் | - Oberhausen |
| கவிஞர் எழிலன் | - கவிஞர், எழுத்தாளர் | - Nürnberg |
| கவிஞர் முகில்வாணன் | - கவிஞர், எழுத்தாளர் | - Kaarst |
| பாக்கியநாதன் | - சஞ்சிகை ஆசிரியர் | - Dortmund |
| ராஜன்முருகவேல் | - சஞ்சிகை ஆசிரியர் | - Bremen |
| ராஜன் | - நடிகர்,வில்லுப்பாட்டுக் கலைஞர் | - Bremen |
| இந்துமகேஸ் | - சஞ்சிகை ஆசிரியர் | - Bremen |
| ரவீந்திரன் | - வானொலி அதிபர் | - Hamm |
| ராஜகருணா | - கவிஞர், எழுத்தாளர் | - Lüdenscheid |
| சிவநேசன் | - கவிஞர், எழுத்தாளர் | - Lüdenschied |
| பரமேஸ்-கோணேஸ் | - பாடகர் இசையமைப்பாளர் | - Korsenbroich |
| குமரன் (ஆசிரியர்) | - எழுத்தாளர், கவிஞர் | - Stuttgart |
| லோகநாதன் (அறுவை) | - எழுத்தாளர், கவிஞர் | - Neuss |
| குமரன் (கனகராசா) | - எழுத்தாளர், கவிஞர் | - Mönchenglad |
| சிங்கராசா | - எழுத்தாளர், கவிஞர் | - Halten |
| அன்ரன் யூட் | - எழுத்தாளர், கவிஞர் | - Hannover |
| கதிர்காமநாதன் | - எழுத்தாளர், கவிஞர் | - Ratingen |
| விஜயகுமார் | - எழுத்தாளர், கவிஞர் | - Duisburg |
| பரமவிஸ்வலிங்கம் | - எழுத்தாளர், பாடகர் | - Gelenkirchen |
| தனபாலன் | - எழுத்தாளர், கவிஞர் | - Berlin |
| சௌந்தரராசா | - உதவிஆசிரியர் (மண்) | - Duisburg |
| சுசீந்திரன் | - எழுத்தாளர் | - Berlin |

திருமதி.ஜெயா.நடேசன் --கவிஞர் - எழுத்தாளர் - Havixbeck
" கலைவாணி.ஏகானந்தராசா - கவிஞர் - எழுத்தாளர் - Weeze
" மீனா.சிவலிங்கம் - கவிஞர் - எழுத்தாளர் - Bonn
" வசந்தா.ஜெகதீசன் - கவிஞர் - எழுத்தாளர் - Gelenkirchen
" வேணி.கிருபாகரன் - -கவிஞர் - எழுத்தாளர் - Keil
" கெங்கா. ஸ்ரான்லி - -கவிஞர் - எழுத்தாளர் - Koln
" நகுலா.சிவநாதன் - கவிஞர் - எழுத்தாளர் - Selm
" கீத்தா.பரமானந்தன் - கவிஞர் - எழுத்தாளர் - Weeze
" சுந்தராம்பாள்.பாலச்சந்திரன் - கவிஞர் - எழுத்தாளர் - Differten
" கலா.மகேந்திரன் - வைத்தியர் - எழுத்தாளர் - Oberhausen
" கோசல்யா.சொர்ணலிங்கம் - கவிஞர் -எழுத்தாளர் - Mulheim
" புனிதமலர்.இராஜேஸ்வரன் - கவிஞர் - எழுத்தாளர் - Nurenberg
" பத்மாஷனி.மாணிக்கரட்ணம் - கவிஞர் - எழுத்தாளர் - Paderborn
" விக்னா.பாக்கியநாதன் - கவிஞர் - எழுத்தாளர் - Dortmund
" ஜஸ்மின்.பரிமளராசா - பாடகர் - Esloch

ஏனைய நண்பர்கள்

நித்தி - தமிழார்வலர் - Düren
செல்வராசா - தமிழார்வலர் - Düren
ஜெயக்குமார் - பொதுச்சேவையாளர்- Düren
செல்வநாயகம் - " - Rheinberg
சிறிதிருக்குமார் - " - Rheinberg
ஜெமினி - ஊடகவியலாளர் - Stuttgart
ஆறுமுகசாமி - பொதுச்சேவையாளர் - Stuttgart
ஜசக் இன்பராசா - நடிகர் - Soest
ரகுநாதன் - மொழிபெயர்ப்பாளர் - Mülheim
ரவி - பொதுச்சேவையாளர் - Mülheim
கண்ணன் - பொதுச்சேவையாளர் - Mülheim
சிறி - மொழிபெயர்ப்பாளர் - Essen
சுசீந்திரன் - எழுத்தாளர் - Berlin
சந்தோஷ் - எழுத்தாளர் - Berlin
பாலா - அறிவிப்பாளர் - Essen
கபிலன் - சமூகஆர்வலர் - Arnsberg
பரிமளராசா - சமூகஆர்வலர் - Esloch
அலெக்ஸ் - சமூகஆர்வலர் - Soest

ஸ்ரீ அகிலாண்டேச்வரி அருளகம்

SRI AGILANDESHWARY ARULAHAM

ARULMIHU AGILANDESHWARY SAMETHA AGILANDESUVARAR THIRUKOVIL

"May we protect tender hearted children with compassion"



# மணிவிழா அகவையில் வாழிய பல்லாண்டு.

தண்ணளியும், இரக்கமும், இங்கிதமும், மனவிரிவும், கொடைமடமும் வாய்க்கப்பெற்ற பெருமகனார் ஜேர்மனி வாசி மண் சஞ்சிகையின் ஆசிரியர், வவுனியா "அருளகம்"சிறார்களின் இல்லத்துடன் எட்டு வருடகாலம் தொடர்புகொண்ட பெருந்தகைஸ்ரீமான் வைரமுத்துசிவராஜா அவர்களின் பிறந்த நாள் மணிவிழாக்கொண்டாட்டச் செய்தி அறிந்து மட்டற்றமகிழ்வடைகின்றோம். அருளகத்துடன் தங்கள் தொடர்பு மிகவும் இறுக்கமானது இங்கிதமானதுபிறரு க்குகிட்டாதது.இந்நிலவுலகிலே படைக்கப்பட்ட உயிர்வர்க்கங்களுள் மனிதனே சிந்திக்கவல்லவனாய் இருக்கின்றான். மனிதன் மற்றைய மனிதனை மதிப்பதுஎன்பது தான் இன்றுள்ள மாபெரும்பிரச்சனையாயுள்ளது. அவலமானவாழ்விலே அபலைகளாக வாழுவோரை ஆதரித்தணைத்து உதவிபுரிவதென்பது இலேசானதொன்றல்ல. மாபெரும் மனவலிமை - திட்பம் வேண்டும். இத்தகுபணியிலே எமது அருளகத்தின் பன்முகப்பணிகளையும் நன்கு தெரிந்தும், தெளிந்தும் பெரியார்சிவராஜா அவர்கள் எமக்கு உறுதுணையாக எட்டு ஆண்டுகளாக உதவிவருகின்றார். அருளகத்தின்அரவணைப்பில் ஆனந்தமாயும், அறிவாயும் வாழும்பிள்ளைகளின் நான்கு பேரின் பராமரிப்புஉதவியை ஏற்று அன்புடனும், ஆர்வத்துடனும் கண்ணியத்துடனும், கவனத்துடனும் காலந்தவறாமலும்உதவிவருபவர் அன்பர் சிவராஜா அவர்கள். இத்தகு புண்ணிய சீலர்களது வாழ்க்கை அர்த்தமுள்ளது,அறியப்படவேண்டியது நமது மணிவிழா நாயகன் தமது விசாலமான தமிழ், தமிழினதாய்நாட்டுப்பற்றுக்காரணமாக ஒருபடி உயர்வான நிலையிலேயே மதிக்கப்படுகிறார். இனவுணர்ச்சிஎன்பது உதிரத்துடன் உறைவது, இனநலமென்பது பொதுநலத்தின் அப்பாற்பட்டது பிறர் வாழ்த்த தாம் வாழ்வோம் என்னும் கோட்பாட்டுடன் ஒத்துப்போகும் குணநல மேம்பாடு கொண்டவர் நமதுவைரமுத்து சிவராஜா அவர்கள். விருப்பார்வத்துடனும், நல்லெண்ணத்துடனும் வையத்து வாழ்வாங்குவாழும் சிவராஜா அவர்களது குடும்பத்தினருடன் நீடு சுகமாகவும், பலவளங்களும் பெற்று மேலும் புகழ்பெற்றுத் தொண்டுகள் ஓங்கி வளர ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரப்பெருமானின் திருவருளையிறஞ்சிப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

மணிவிழா நாயகர் தொண்டுகள் பெருக நீடுவாழ்க.

அன்புடன்

ஆறுமுகம் நவரத்தினராசா

நிர்வாகப்பணிப்பாளர் - அருளகம் சிறுவர் காப்பகம் வவுனியா-

VANNI REHABILITATION ORGANIZATION FOR THE DIFFERENTLY ABLED
VAROD
ENABLING BETTER WAYS FOR LIVING
Vavuniya - Killinochchi - Mullaithivu
4th Mile Post, Mannar Rd, Pampaimadhu, Vavuniya, Sri Lanka.
Telephone : 024-4925635
E-mail : varodserve@gmail.com
web site : www.disablesvanni.org

## வாழ்த்துச்செய்தி

இறைவன் அருள்தரும் இந்த நடப்பு ஆண்டில், எமது ஈழத்திருநாட்டில் பிறந்து அறுவதாபது அகவையில் அகமகிழும் **திருவாளர் வைரமுத்து சிவராசா** அவர்களிற்கு முதற்கண் இறையாசீரோடு கூடிய பிறந்தநாள் நல் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மனநிறைவு அடைகின்றேன்.

தனது முதல் முப்பது ஆண்டுகள் வாழ்வியல் அனுபவத்தை ஆசியாவிலும், தொடர்ந்து அடுத்த முப்பது ஆண்டுகள் அனுபவத்தை ஐரோப்பாவிலும் பெற்று, பல்வேறுபட்ட சமூகப் பணிகளோடு தன்னை ஈடுபடுத்தி, அறிவோடு ஆளுமையும் ஆன்மீகமும் முதிர்ச்சிபெற்று நிற்க அகவை அறுபதை அடைவது உண்மையில் ஆண்டவன் அருளே!

தான்பெற்ற ஒவ்வொரு அனுபவங்களையும் அத்தியாயங்களாக ஆக்கி **'அலைகள் அறுபது'** என்னும் பெயரில் நூல் ஒன்றை வெளியிட்டு, இளம் சமூக சிந்தனையோட்டத்தில் அலைய விடுவது அவரது பகிர்தல் என்ற பண்பாட்டையே பறைசாற்றி நிற்கின்றது. உண்மையில் இவ்வாறானதொரு அரிய முயற்சி காலத்தின் தேவையும் கூட. ஆகவே இந்நூலானது குறிப்பாக சிதறடிக்கப்பட்ட சிந்தனைகளோடு வாழ்ந்துவரும் எம் சமகால இளம் உள்ளங்களை ஒருகணம் ஊடுருவும் என்பது திண்ணம்.

எனவே சிவராசா அவர்கள் இனிவரும் காலங்களிலும் உடல், உள, ஆன்மீக நலன்களால் மென்மேலும் நிரப்பப்பெற்று வாழ்வாங்கு வாழ்ந்திட எல்லாம் வல்ல இறையருள் வேண்டி நிற்கின்றேன்.

அருட்தந்தை. அல்பேட் ஜோ அருள்ராஜா CMF
நிறைவேற்று இயக்குனர்,
வரோட், இலங்கை.

VANNI REHABILITATION ORGANIZATION FOR THE DIFFERENTLY ABLED
EXECUTIVE DIRECTOR
VAROD

2013.03.20

# வாழ்த்துச் செய்தி



ஜேர்மனியில் வாழும் திரு. வயிரமுத்து சிவராசா அவர்களின் 60வது பிறந்த தினத்தையொட்டி சிறப்பிக்கு முகமாக வெளியிடப்படும் "அலைகள் அறுபது" என்ற கருப்பொருள் நிறைந்த மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். தனது வாழ்க்கைப் பாதையில் சந்தித்த அனுபவங்களை ஒன்றுதிரட்டி மலராக பதிவுசெய்தல் போற்றுதற்குரியதாகும திரு. சிவராசா அவர்கள் ஜேர்மனியில் வாழ்ந்தாலும் தாய் நாட்டு மக்களை என்றும் மறப்பதில்லை. அன்னார் "மண்" பற்றுடையவர். அதனால் தான் "மண் சஞ்சிகை" பத்திரிகையின் ஆசிரியராகப் பணியாற்றுகின்றார்.

அதனால் தான் "மண் சஞ்சிகை" பத்திரிகையின் ஆசிரியராகப் பணியாற்றுகின்றார். தாய் நாட்டில் வாழ்ந்துவரும் வசதியற்ற, ஆதரவற்ற, பெற்றோர்களை இழந்த பிள்ளைகளுக்கு உதவுவதில் மிக்க ஆர்வமுடையவராக விளங்குகின்றார். இதன் அடிப்படையில் திருகோணமலையில் உள்ள ஸ்ரீ சண்முகா பெண்பிள்ளைகள் இல்லத்திற்கு பல வருடங்களாக ஆண்டுதோறும் தன்னால் இயன்ற நிதியுதவி வழங்கி வருகின்றார். இதுபோன்று பல மாவட்டங்களிலும் நிதியுதவி வழங்கி வருகின்றார். ஒருவர் வாழும் பொழுதே அவர்செய்த சேவையினை மதிப்பீடுசெய்து கௌரவிக்க வேண்டும். இது அவர்களுக்கு நன்றிக் கடன் செலுத்துவது மட்டுமன்றி புதியவர்களையும் ஊக்குவிக்கும் ஒரு செயற்பாடாகவும், பண்பாட்டு வளர்ச்சி அடையாளமாகவும் இருக்கும்.

இந்த வகையில் 30 ஆண்டுகளாக தன்னலமற்ற சேவையாற்றிவரும், பிறருக்காக வாழ்ந்து, வாழுகின்ற சிவராசா அவர்களின் அகவை அறுபதை நிறைவாகக் கொண்டாடுமுகமாக மணிவிழாவினை நடாத்துவதனையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். தன்னலமற்ற சேவையமைப்பு எல்லோருக்கும் அமையாது. அது இறைவனால் ஒருவருக்கு வழங்கப்பட்ட வரப்பிரசாதமாகும். அன்னாரது மணிவிழா மலருக்கு வாழ்த்துச்செய்தியை வழங்க எனக்கு அரிய சந்தர்ப்பத்தினை வழங்கியமையையிட்டு பெருமிதமடைகின்றேன். மண்வாசனையுடனும், அர்ப்பணிப்போடும் சிறப்பான வகையில் சேவையாற்றும் எமது அன்புக்கும் மதிப்பிற்குமுரிய ஐயா அவர்களை மனமார வாழ்த்துகின்றேன். ஐயா அவர்கள் மென்மேலும் திக்கற்றவர்களுக்கு சிறந்த சேவையாற்ற வேண்டுமென்று திருக்கோணமலை திருக்கோணேஸ்வர பெருமானை இறைஞ்சி அன்னார் ஆரோக்கியத்துடன் வையத்துள் வாழ்வாங்கு வாழவேண்டுமென்றும், பல்லாண்டு காலம் நலமுடன் வாழவேண்டுமென்றும் இதயபூர்வமாக வாழ்த்துகின்றேன்.

நன்றி மறப்பது நன்றன்று

செல்வி. விமலா நடராஜா
முகாமையாளர் ஸ்ரீ சண்முகா பெண்பிள்ளைகள் இல்லம்
திருக்கோணமலை

# வாழ்த்துக் கவிதை



யாழ் மண்ணின் மைந்தனாய் அவதரித்த
பெருமைக்கும் புகழுக்கும்
தலை நிமிர்ந்த எம் ஆசானே
சிவராஜா அவர்களே!
மண்ணின் மகத்துவம்
மண்ணின் மகிமை
மண்ணின் வரலாறு
மண்ணின் பெருமை புதுமை
இவையெல்லாம் மண் எனும் சஞ்சிகையில்
ஒளிவீச உயிர் கொடுத்த வள்ளலே
உம்மை இந்நாளில்
உவகையுடன் வாழ்த்துகின்றேன்
வாழ்கவென்று.
வாழ்க வளமுடனே.

Sis. Gladis
நிர்வாகி
ரூத் மிஷன்பெண்கள் இல்லம்
ஜெயபுரம் - கிளிநொச்சி.

# மணிவிழா நாயகனை பாராட்டி வாழ்த்துகின்றோம்.



60வது அகவைகாணும் வைரமுத்து சிவராசா அவர்களின் சேவையைப் பாராட்ட கிடைத்த சந்தர்ப்பத்திற்காக இறைவனுக்கு நன்றி கூறுகின்றேன். நாவற்குழி அன்னை பெற்றெடுத்த புகழ்பூத்த மைந்தர்களுள் சிவராசா அவர்களும் ஒருவர். அனர்த்தம் காரணமாக இடம்பெயர்ந்து சென்ற போதிலும் தன் தாய்த்திருநாட்டையும் தமிழ் மொழியையும் அவர் மறக்கவில்லை. மண் என்ற சஞ்சிகையை வெளியிட்டு புலம்பெயர் மக்களிடையே தமிழ் மொழியை வளர்ப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுக்கொண்டு இருப்பவர். பாடசாலை மாணவர்களுக்கான அடிப்படை வசதியான நீர் தேவையைப்பூர்த்தி செய்ய தன்னாலான பங்களிப்பை வழங்கியவர். பொதுச்சேவை செய்யும் நன்நோக்கம் கொண்டவர்.

"தோன்றிற் புகழோடு தோன்றுக" என்ற சான்றோர் வாக்கிற்கு அமைவாக வாழ்ந்து புகழ் பரப்பிக்கொண்டிருக்கும் வைரமுத்து சிவராசா அவர்கள் இன்று போல் என்றும் நீடூழி வாழ்ந்து இப் பூவுலகிலுள்ள மக்களுக்கு பயன்தரு மைந்தனாக வாழ மனதார வாழ்த்துகின்றேன்.

"வாழ்க வளமுடன்"

திருமதி.
வ. மேகலிங்கம்
அதிபர் யாழ் - நாவற்குழி மகா வித்தியாலயம்
யாழ்ப்பாணம்



என்னோடு கல்வி பயின்ற அன்றைய மாணவி, இன்றைய அதிபர்.

# காந்தி சன சமூக நிலையம் - நாவற்குழி கிழக்கு சிவராசாவின் 60வது பிறந்தநாளையொட்டிய எனது வாழ்த்துக் கவி.

தங்கத்தில் ஓர் வைரம் பதித்தாற்போல்
தரத்தினில் உயர்ந்து நின்று
மண்ணின் பெருமைசேர் நல்விருட்சம் போல்
மா உலகும் பெயர் சொல்லும்
விந்தைகள் பல புரிந்த வித்தகராம் சிவராசா!
முந்தைய அறிஞர்கள் வரிசையில் இன்று
சிந்தையில் சிக்கிடும் சிற்றலை இவன்
ஆண்டுகள் அறுபதை ஆண்டு இவன் வென்றவன்
மீண்டுமோர் சரித்திரம் படைத்திடத் துடிப்பவன்
புலம்பெயர் நாட்டிலும் மண்மணம் தந்தவன்
வலம்வரும் உலகினில் தன்பெயர் பதித்தவன்
திறம்பட செயலாற்றி வித்தகரானவன்
உரமுடன் விளையாடி கப்டனுமானவன்
மனங்களை வென்றிவன் சமூக வளங்களை சேர்த்தவன்
இனங்களின் வளர்ச்சிக்காய் தன்னலம் துறந்தவன்
தமிழ்த்தாயின் மகனிவன் வழி நான்கும் தெரிந்தவன்
கனிதரும் தரு இவன் தனியழகு கொண்டவன்
இன்னும் பல ஆண்டுகள் இனிதேவாழ வேண்டும்
செய்யும் செயலில் உன் பெயர் பதிய வேண்டும்
கண்ணும் இமையுமாய் நம் உறவு தொடர வேண்டும்
கடவுள் துணைகொண்டு நீ நீடூழி வாழ வேண்டும்.

திரு.இரட்ணசிங்கம் இரட்ணகரன்
தலைவர்-காந்தி சன சமூக நிலையம்

'பொருட்களை நிறையச் சேமித்து வைத்தல் செல்வம் அன்று.
நிறைந்த உள்ளத்தோடு இருப்பதே மேலான செல்வமாகும்.'

# நல்வாழ்த்துக்கள்



மண்ணின் ஆசிரியர் திரு.சிவராசா அவர்கள் 60வது வயதை அடைந்து மணிவிழா மலரை வெளியிடுவதை அறிந்து அகமும் புறமும் இன்புறுகின்றன. மலருக்கு வாழ்த்துக்களை அனுப்பி வைக்கக் கேட்டதையிட்டுச் சந்தோஷப்படுகின்றோம். ஈழநாட்டுச்சூழலால் புலம்பெயர்ந்தும் ஜேர்மனியின் மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதையிட்டுப் பெருமை அடைகின்றோம். "மண்" சஞ்சிகை ஊடாக சிவா செய்துவருகின்ற சேவைகளை பாராட்டுகின்றோம் புலம்பெயர்ந்த தமிழ்ப்பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியுடன், தான தர்ம கைங்கரியங்களிலும் தாய் மண்ணில் பாதிப்புற்ற மாணவ,

மாணவியர், இளம் பெண்களின் வாழ்வு வளம்பெற ஆதரவற்றோர் இல்லங்கள் நன்றாக இயங்க ஆற்றும் சேவைகளை சஞ்சிகை மூலம் அறிந்து சேவைகளை மெச்சுகின்றோம். என்ன செய்யப்பட்டு வருகின்றன என்பதை விட எப்படி நடத்தப்படுகின்றன என்பது உள்ளங்களை நெகிழ்ப்பதாக உள்ளது. இவற்றை முன்னெடுத்துச் செல்லும் முறை ஆற்றலை ஆளுமையை தலைமைப் பண்புகளை வெளிக்காட்டுகின்றன.குடும்பங்களிலுள்ள பிள்ளைகளைக் கல்விச் சேவைக்கான நிதி உதவியில் ஈடுபடுத்தும் உத்திகள், வித்தைகள் பாராட்டப்பட வேண்டியவை. அருமை!...அருமை!... இவை மற்றவர்கட்கு முன்மாதிரியானவையும்கூட. அன்பர் அவர்கள் சாதனையாளர். ஒளிமயமான எதிர்காலம் அருக்குண்டு. அவர் ஓர் ஆன்மீகவாதி.

அறிவு வளர்ச்சிக்கான ஏடு "மண்" என்றால் அது மிகையாகாது. "மண்" பயன்மிக்கது. தாய்நாட்டுப் பிள்ளைகளும் எழுத்தாளர்களும் கவிஞர்களும் பங்குபெற வாய்பளிக்கப் பட்டுள்ளது ஜனநாயகத்தை வெளிப்படுத்துகிறது... சிவா நல்ல இதயம் கொண்டவர் பழகுவதற்கு இனிமையானவர். எளிமையானவர். நேர்மையானவர். பெரும் முயற்சியாளர். மனத்திடம் கொண்டவர். எடுத்தகாரியத்தை முடிக்கும்வரை ஓயார். பொதுமக்கள் உறவைப் பேணி வருபவர். தன்னலம்பாராது பொதுச்சேவையிலும் பொதுத்தொண்டுகளிலும் தன்னை ஈடுபடுத்தி அர்ப்பணித்து உழைத்துவருகின்றார். ஜேர்மனிநாட்டில் தமிழ் இலக்கியச் சோலையை நறுமணம் கமழச்செய்பவர்களில் நண்பரும் ஒருவர்.

சிவா அவர்கள் தமிழ்மொழி, தமிழ் இலக்கியப் பற்றாளர். நல்ல எழுத்தாளரும்கூட. சிறுகதைகளை எழுதிப் புத்தகமாக வெளியிட்டுத் தனது எழுத்தாற்றலை வெளிக்காட்டி

யுள்ளார். ஒரு சமூகத்துக்கு வரலாறு இருக்க வேண்டும். அந்த இனத்துக்கான அடையாளம் தேவை. அதன் மொழி, கலை, கலாச்சாரம், பண்பாடு பேணப்படவேண்டும். பழையனவற்றை மீட்டுப் பார்க்க வேண்டும். ஒவ்வொரு சமூகமும் ஊரும் தத்தமக்கு என்று

ஆவணக்காப்பகங்களை ஏற்ற உரிய இடங்களில் கொண்டிருக்க வேண்டும். இந்த நோக்கில் நல்ல இலட்சியப்பாதையில் கொள்கைப் பற்றுடன் ஆக்க பூர்வமான காரியங்களில் நட்புடன் "மண்" போன்ற சஞ்சிகைகளும் பங்களிப்பது அவசியம்.

சிவாவின் அறுபதாவது அகவை மணிவிழா வரும ஆவணி மாதத்தில் நன்கு நிகழ எல்லாம் வல்ல ஆண்டவன் அருள் கிடைத்திடப் பிரார்த்திக்கின்றோம். மணிவிழா நாயகனுக்கு நல்ல தேகாராக்கியமும் எதிர்கால முயற்சிகள் யாவற்றிலும் வெற்றியும் பாக்கியங்களும், அதிஷ்டமும், கீர்த்தியும், புகழும் கிடைத்து அவர் தம் குடும்பத் தலைவி, பிள்ளைகள், பேரர்களுடன் இன்புற்று வாழ எல்லோரையும் வாழப்படைத்த பரம்பொருளை அருள்பாலிக்க வேண்டுகின்றோம்.

"தோன்றின் புகழோடு தோன்றுக அ∴திலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

"எண்ணிய எண்ணியாங் (கு) எய்துப எண்ணியார்
திண்ணியற் ஆகப்பெறின்"

சி. த. மார்க்கண்டு B.A. (Cey)
இளைப்பாறிய இலங்கை நிர்வாக சேவையாளர்
வடகிழக்கு மாகாண சபையின் முன்னாள் செயலாளர்
முன்னாள் அரசாங்க அதிபர் - வவுனியா மாவட்டம

'ஏராளமான செல்வத்தைத் தருமமாக வாரிவழங்குவதைவிடத் தனது குழந்தைக்கு நல்ல கல்வி கொடுத்தலே மேலானது.'

# நண்பர் சிவராஜா - ஒரு திறந்த புத்தகம்

நண்பர் சிவராஜா மணிவிழா நாயகனாகின்றார்.
அவருக்கு எனது குடும்பத்தின் சார்பில்
நெஞ்சார வாழ்த்துக்கள்.
மணி விழா நாயகன் நூற்றாண்டைக் கடந்து
வாழ வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

சமூக சேவையாளனாக இலக்கியவாதியாகக்
கால்பதித்து நிற்கும் நண்பர் சிவராஜாவுடன்
அவரது குடும்பத்தாரும் சமூகத்திற்காகவும்
இலக்கியத்திற்காகவும் தம்மை அர்ப்பணித்து
வருகின்றனர்.
ஜெர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கத்தின்
தலைவராகப் பணியாற்றும் நண்பர் சிவராஜா
ஜெர்மன் தமிழ்க் கல்விச் சேவை செயற் குழு
உறுப்பினராகவும் பதவி வகிக்கின்றார்.

கலலறைப் பூக்கள் நூலுக்குச் சொந்தக்காரரான
நண்பர் சிவராஜா நல்ல ஒரு கவிஞருமாவார்.

மண் சஞ்சிகையை கடந்த 23 வருடங்களாக
வெற்றிகரமாக நடாத்திவரும் நண்பர் சிவராஜா
வடக்கு கிழக்கில் உள்ள அனைத்து சிறுவர்
இல்லங்களுக்கும் உதவி செய்து வருகின்றார்.

இவரின் இந்தப் பணிக்கு ஜெர்மன் இலண்டன்
போன்ற நாடுகளில் உள்ளவர்கள் நிதியுதவி
செய்து வருகின்றனர்.இவ்வாறு நிதியுதவி
செய்பவர்களில் பெரும்பாலானவர்கள்
புலம் பெயர்ந்து வாழும் நமது இளைஞர்களும்
யுவதிகளும் என்பது போற்றுதலுக்குரியதாகும்.

வடக்கு கிழக்கில் உள்ள சிறுவர் இல்லங்களுக்கு
நண்பர் சிவராஜா இதுவரை 75 ஆயிரம் ஈரோவுக்கு
மேல் அனுப்பி உதவி செய்துள்ளார்.தற்போது
வடக்கு கிழக்கில் உள்ள சிறுவர்களைத் தத்தெடுத்து
அவர்களின் கல்வி மற்றும் வாழ்வாதாரத்தை
மேம்படுத்தும் திட்டத்தையும் முன்னெடுத்து வருகின்றார்.
நண்பர் சிவராஜா அவர்கள் ""ஒரு திறந்த புத்தகம்.""

ஏழை மற்றும் அநாதரவான சிறுவர்களுக்காக
அனுப்பப்படும் பணம் இலங்கையில் எந்தெந்த
சிறுவர் இல்லங்களுக்கு எவ்வளவு தொகை
அனுப்பப்பட்டுள்ளது என்ற விபரம் அனைத்தும்
ஒழிவு மறைவின்றி அனைவரதும் பார்வைக்காக
மண் சஞ்சிகையில் பிரசுரித்து வருகின்றார்.

உண்மை நேர்மை தியாகம் ஆகிய பண்புகளின்
மொத்த உருவமான நண்பர் சிவராஜா அவர்கள்
பல்லாண்டு வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

வி.தேவராஜ்
வீரகேசரி பத்திரிகை
மூத்த ஊடகவியலாளர்
இலங்கை



# அகவை 60 இன் வாழ்த்திதழ்

அகவை அறுபதில் பதியமிடும்
மண் ஆசிரியரே!
அன்பும் பண்பும் அகத்தினில்
நிறைவும் கொண்ட பண்பாளரே!
மண் என்ற சஞ்சிகை மூலம்
மக்கள் மனதைத் தொட்டவரே!
தாயகத்து சுவாசக்காற்றிலே
தரமாக துணை புரியும்
தன்னிகரில்லா தொண்டாளரே!
எழுத்தாளர் என்ற பெருமையுடன்
சமகால நிகழ்வுகளை சரித்திரமாய்
காவி வரும் சரித்திரப் பிரியனே!
உதவி என்ற உன்னதத்திற்கு
மணிமகுடம் நீங்கள்தான்!
தாய்தமிழை ஏழேழு தலைமுறைக்கும்
எடுத்தாளும் எழுத்தாளரே!
புலம் பெயர் சிறார்களை
எழுத்தோடு பதிக்க ஏணியான
தோணியான தோழரே!
துளிர்க்கும் உங்கள்
தாய்தமிழ் கனவு
தூய்மையாய் புடம் போடட்டும்
இன்று 60 வது அகவையில்
அடிபதிக்க அகமகிழ்வுடன்
வாழ்த்துகிறோம்.
வாழ்க மண் ஆசிரியரே!
வளர்க உங்கள் பணி.
அன்புடன் வாழ்த்தும்



தமிழ்மணி. திருமதி. நகுலா சிவநாதன் BA
Germany

# வணக்கம்.



ஈழத்து கலை இலக்கியர்கள் புலம் பெயர்ந்த பின்வாழ்வியல் ஓட்டங்களிடையேயும் தங்கள் மன ஆர்வங்களை இலக்கியமாக்கவே செய்கிறார்கள். வேர்களின் வாசம் மாறாமலும்,வாழ்வின் தடங்களை மறந்துவிடாமலும் இலக்கியம் செய்பவர்களிடையே திரு.சிவராஜா அவர்களும் ஒருவர்.

எழுத்தாளராகவும்,சமூகசேவையாளராகவும் எனக்கு அறிமுகமானவர்.தான் வாழும் மக்களிடையே கலை இலக்கியச் செயற்பாடுகளை தொடர்ந்து செய்துவரும் ஒருவரின் மன உணர்வுகள் பலரும் அறிந்ததே. எனினும் அவரின் விடாமுயற்சி தொடர்ச்சியாக மண் சஞ்சிகையை வெளியிட்டு வருவதுடன்,தாயக உறவுகளுக்கான உதவிகளையும் சோர்வின்றி செய்கிறார்.

இன்றைய சூழலில் புலம்பெயர் நாட்டில் பலநடவடிக்கைகளைச் சாத்தியமாக்கிய செயற்பாட்டாளர். நல்லதொரு சிறுகதையாளர் என்பதை "கல்லறைப்பூக்கள்" தொகுதி மூலம் நிலை நிறுத்தியவர்.

பல எழுத்தாளர் விழாக்களை நடாத்தியதுடன்,சக எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் பண்புகளைக் கொண்ட பன்முகச் செயற்பாடாளரை வாழ்த்துதல் முறையே. சிறுவர்களுக்கான அறிவு சார்ந்த விடயங்களை பகிர்வதுடன்,போட்டிகள் நடாத்தி,பரிசுகள் வழங்கியும் வருகிறார்.அவரது குடும்பம்,நண்பர்களின் ஒத்துழைப்புடன் நடாத்திவருகிறார்.கவிதைகள் எழுதுவதிலும்,லண்டன் தமிழ் வானொலி ஊடாக தகவல் திரட்டினையும் வாசகர்களுக்கும்,நேயர்களுக்கும் வழங்கி வருகிறார்.

ஜேர்மனிக்கு வந்து முப்பது வருடங்கள் ஆகிவிட்டதும் அவரின் அறுபதாவது பிறந்த நாளை நெருங்குவதும் காலம் நடந்து அல்லது கடந்து செல்கிறதை நமக்கு அவரின் வளர்ச்சி பற்றி சிந்திக்கவும் வைக்கிறது. அவரை இன்னும் வாழ்த்துவதின் ஊடாக அவரின் நட்பும்,பண்பும் வாழ்வின் தத்துவத்தை உணர்த்துவதாகவே எனக்குப்படுகிறது. கலை இலக்கிய உலகம் காற்றுவெளி சார்பாகவும் வாழ்க வென்று வாழ்த்துகிறோம்.

நட்புடன்,

முல்லை அமுதன்
எழுத்தாளர் - பத்திரிகையாளர்
லண்டன்

# வாழ்த்து



மண் சஞ்சிகை வ. சிவராஜாவுக்கு மணிவிழா வாழ்த்து! அறுபதாண்டு அகவை பலருக்குக் கிட்டலாம். குடும்பங்களோடு மகிழ்ந்து நிறைவு கொள்ளலாம். ஆனால், தமது தனித்துவம் மிக்க ஆளுமையாலும், நற்குண செய்கைகளாலும் சமூகத்தில் போற்றுதற்கு உரியவர்கள் சிலரே! இதய சுத்தியுடன் மானிடநேசிப்பை வெளிப்படுத்தும் படைப்பாளிகள் என்றும் பேசப்படுவதை அவதானிக்க முடிகின்றது. அவர்கள் கொண்டாடப்பட வேண்டியவர்கள். அந்த வகையில் 1990 ஆம் ஆரம்பிக்கப்பட்ட மண் சஞ்சிகை மூலம் அறிமுகமான ஆசிரியர் வ. சிவராஜா அவர்களுக்கு, அகவை அறுபதைக் கொண்டாடுவது மகிழ்ச்சி தருகின்ற ஒரு விடயம்.

உலகச் செய்திகள், பெரியார்கள் அறிமுகம், எழுத்தாளர்களைக் கௌரவித்தல், பண்டிகைகள். சிறுவர் வட்டம், பல்வகையான போட்டிகள், தகவல்கள்... என "மண்" சஞ்சிகை விரிந்து மலர்வது என்னைக் கவர்ந்தது என்றால் அது மிகை ஆகாது. புலம்பெயர்ந்த நாடு மட்டுமன்றி தாயகத்தில் துன்ப வலிகளை இன்னும் சுமந்துகொண்டு வாழும் எமது மக்களிற்கும் பல்வேறு சேவைகளை ஆற்றிவரும் வ.சிவராஜா அவர்களை மனது நிறைந்து பாராட்டுகின்றது!

பிறந்த நாட்டிற்குச் சேவை செய்வது கற்றறிவாளரின் கட்டாயக் கடமை என இற்றைக்கு இருபத்திநான்கு நூற்றாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த கிரேக்க தத்துவஞானி பிளேட்டோவின் கருத்து தவிர்க்கமுடியாது என் நினைவில் வந்து போகின்றது...

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் நண்பியும், எனது தந்தை எஸ். அகஸ்தியரின் இலக்கியத்தில் ஆர்வம் கொண்டவருமான ஸ்ரீமதி கலைவாணி ஏகானந்தராஜாவின் மூலம்தான் சிவராஜா அவர்களுடன் நேரடியாகப் பழகும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது.

ஜேர்மனி- டியூஸ்பேர்க்கில் ஜேர்மனிய தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைவராகச் செயற்பட்ட வ. சிவராஜா அவர்களின் ஏற்ப்பாட்டில் எனது தந்தையின் லெனின் பாதச் சுவடுகள் , மானிட தரிசனங்கள் ஆகிய நூல்களின் அறிமுகவிழா 2009 ஆம் ஆண்டு இடம்பெற்றது. அவ்விழாவிற்கு திரு.வ. சிவராஜா அவர்கள் தலைமை தாங்கி அவ்விழாவை ஜேர்மன்வாழ் எழுத்தாளர்கள், தமிழ் அறிஞர்கள், இலக்கிய ஆர்வலர்களுடன் மிகச் சிறப்பாக நடாத்தியிருந்தமையை இங்கு நன்றியோடு நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

அவ்விழாவை அழகிய கவிதைகளாலும், மாக்ஸிய சிந்தனைகளாலும் அலங்கரித்த கவிஞர் அம்பலவாணர் புவனேந்திரன், தமிழ்மணி க.அந்தவராஜா, ப.பசுபதிராஜா, தமிழ்மணி பொ.சிறீஜீவகன் மற்றும் திருமதி.ஜெயா நடேசன், ஸ்ரீமதி.கலைவாணி ஏகானந்தராஜா போன்றவர்களும் என் நெஞ்சில் நிழலாடுபவர்கள் என்பதனை இவ்வேளையில் குறிப்பிடுவது பொருத்தமானதாகும்.

அறுபதிற்கு பின்னர் அடியெடுக்கும் ஒவ்வொரு ஆண்டும் அகநிலைப்பட்ட சிந்தனைக்கு முதன்மை அளிக்கும் என்ற கூறுவதைக் கேட்டிருக்கிறேன். அந்த வகையில்

பணி செய்யும் பாங்கோடு
பலதுறைப் பணிகள் அகன்று
அணி செய்யும் குடும்பத்தோடு
ஆக்கமும் ஊக்கமும் சிறக்க
மணி செய்யும் ஒலிபோல
மங்கலம் மலர்கவென
மணிவிழா நாயகனை
மனதார வாழ்த்துகின்றேன்!

திருமதி. நவஜோதி ஜோகரட்ணம்
எஸ்.அகஸ்தியர் குடும்பத்தினர்
ஊடகவியலாளர்
லண்டன்

'தண்ணீரானது செடியை முளைக்கச் செய்வது போல, பொருளாசை மனதில் நயவஞ்சகத்தை முளைக்கச் செய்யும்.'

ஜேர்மன் தமிழ்க் கல்விச் சேவை (ஐரோப்பா)
( இலங்கைப் பாடத்திட்டத்திற்கு அமைய )
Tamilischer Bildungsverein Deutschland e.V. ( Europa )

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை"

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு மாடல்ல மற்றை யவை"

# புகலிடச் சாதனையாளர்

திருவாளர்.வைரமுத்து சிவராசா அவர்கள் தமது அறுபதாவது அகவை அடைவதை அறிந்து மட்டற்ற மகிழ்வு கொண்டு மனதார வாழ்த்துகின்றோம். அகவை அறுபது என்பது அவரது வாழ்வின் வைரமணிச் செயற்பாடுகளின் வெளிபாடுகளைக் காட்டும் பெரும் காலமாகும். இக்காலப் பகுதியில் அவர்கள் தாம்கண்ட, கேட்ட, செய்த, பெற்ற அனுபவங்களைப் பதிவுக்கு உள்ளாக்கி வெளிக்கொணர்வதை நாம் மிகுந்த ஆவலுடன் வரவேற்கின்றோம். பாராட்டுகின்றோம். பதிவுகள் எதிர்காலச் சந்ததியினர் அறிந்து கொள்வதற்கான சான்றாதாரங்களாக விளங்குவதுடன், அவர்களின் வாழ்விற்கு எடுத்துக்காட்டாக அமையும் என நம்புகின்றோம். பொதுவாழ்க்கையில் இருப்பவர்கள் தங்கள் அனுபவக் குறிப்புக்களைப் பதிவு செய்வதன் மூலம், தாங்கள் சமூகத்திடம் கற்றுக் கொண்ட விடயங்களையும், பெற்றுக்கொண்ட அனுபவங்களையும் பதிவு செய்யும் போது, வாசிப்பவர்கள் பல்வேறு விடயங்களையும் அறிந்து தாங்களும் சமூகத்துடன் இணைந்து செயற்படும் வாய்ப்புக்கள் கிடைக்க பெரும் துணை புரிவதாக அமையும்.

தனது அறுபது வருடகால வாழ்க்கையில், சமூகத்திற்கான பொதுச் சேவையில் ஈடுபட்ட திருவாளர் சிவராசா அவர்கள், எமது கல்விச் சேவையுடன் நீண்ட காலத் தொடர்பைப் பேணி வருகின்றார். 1991ஆம் ஆண்டு முதல் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு தொழிற்படத் தொடங்கியவர், 1995ஆம் ஆண்டு செயற்குழு உறுப்பினராகச் செயற்படத் தொடங்கினார். அன்றுதொட்டு இன்றுவரை கல்விச் சேவையுடன் இணைந்து அதன் வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு செய்து வருவதை நாம் நினைவு கூர்ந்து மனதாரப் பாராட்டி நன்றி கூறுகின்றோம்.

திரு.சிவராசா அவர்கள் பொதுச் சேவைப் பணியில் பல வழிகளிலும் செயற்பட்டு வருகின்றார். மண் சஞ்சிகையை நடாத்துவதோடு, அச்சஞ்சிகையின் மூலம் வாசகர்களிடம் நிதி சேகரித்து தாயகத்தில் இருக்கும் அனாதைப் பிள்ளைகளைப் பராமரிக்கும் நிறுவனங் களுக்கு அனுப்பி வருவதை யாவரும் நன்கு அறிவீர்கள். மேலும் தாயகத்தில் அனாதைகளாக்கப்பட்ட பத்துக்கு மேற்பட்ட பிள்ளைகளின் வாழ்விற்கான முழுச்செலவினையும், இங்கு வாழ்கின்ற நல்லுள்ளம் கொண்டவர்களைப் பெறுப்பேற்கச் செய்து நடைமுறைப்படுத்தி வருவது சாலச்சிறந்த செயற்பாடகும்.

மண் சஞ்சிகையின் மூலம் கலை, இலக்கியச் சேவைகளைச் செய்வதோடு, எமது தமிழ் சிறார்களுக்கான தமிழ்மொழி வளர்ச்சிக்கான பணிகளையும் செய்து வருகின்றமை பாராட்டுக்குரியதாகும். ஒவ்வொரு வருடமும் பல்வேறு விதமான தமிழ் அறிவுப் போட்டிகளை நடாத்துகின்றார். கட்டுரை, கவிதை, கதைகள் எழுதுதல் என்பன போன்ற போட்டிகளை நடாத்தி இளையவர்களையும் முதியோர்களையும் பங்குபற்றச் செய்வது மிகச்சிறந்த செயலாகும்.

இவ்வாறான மண் ஆசிரியரின் பல்வேறு சேவைகளைப் பாராட்டி, மண் சஞ்சிகையின் 10வது ஆண்டு நிறைவு விழாவில் அவரையும் அவர்தம் குடும்பத்தினரையும் பாராட்டி வாழ்த்தி, பொன்னாடை போர்த்தக் கௌரவித்து வாழ்த்துமடல் ஒன்றினை வழங்கினோம். 20வது ஆண்டு விழாவில் பொன்னாடை போர்த்திக் கௌரவித்து "புகலிடச் சாதனையாளர்" என்ற விருதினையும் வழங்கிக் கௌரவித்தோம். இவரது பல்முகச் சேவைகள் மேலும் மேலும் வளர வேண்டும் என்பதே எமது பேரவாவாகும். இத்தன்மை நீடித்த வாழ்வுடன் தொடர்ந்து செயற்பட வேண்டும். திருவாளர் வைரமுத்து சிவராசா அவர்கள் நல்நலத்தையும் நல்வளத்தையும் பெற்று வளமுடன் நீண்ட நெடிய காலம் வாழவேண்டும் என வாழ்த்துகின்றோம்.

பொ.சிறீஜீவகன்
தலைவர்-ஜேர்மன் தமிழ்க் கல்விச் சேவை
ஜேர்மனி



உலகளாவிய தமிழ் இணைய வெளியீடு

# குரல்

# KUTAL

World Wide Tamil Internet Publish

அன்புடையீர்!

கடந்த 23 ஆண்டுகளாய் மண் சஞ்சிகை ஆற்றிவரும் அளப்பரிய தொண்டு நாம் அனைவரும் அறிந்ததே. மனித நேயப்பணிக்கு மாதிரியாக, புலம் பெயர்ந்த நாள் முதல், புலம் பெயர் நாட்டினிலே தன்னை முழுமையாக மண் சஞ்சிகையுடன் இணைத்து வாழும் அரியதோர் எளிமை மிகு மனிதராக மண் ஆசிரியர் திரு. சிவராசா அவர்கள் ஒரு தொண்டனாக, நிடுநிலை வகிக்கும் ஒரு பத்திரிகையாளராக வாழ்ந்துகொண்டிருப்பது வரவேற்கப்படவேண்டியதும், வாழ்த்துதலுக்கும் உரியதாகும்.

நல்லவற்றையே நினைப்போம் - நல்லதையே செய்வோம் - நல்லவையே நடக்கும்! ஏன்ற சீரிய கருத்துக்களை சிரித்த முகத்துடன் சிந்தனைக்குரியதாக்கும் திரு. சிவராசா அவர்கள், சிந்தனையாளர்கள், புத்திஜீவிகள் வரிசையில் நிலையான இடம் பெறுவார் என்பதிலும், புலம்பெயர் தமிழர்கள் வரலாற்றில் அவர் சேவை நிச்சயம் ஒரு மைல் கல்லாக அமையும் என்பதிலும், எமக்கு எள்ளளவும் ஐயமில்லை.

சேவையைச் சாதாரணமாக்கி, நலிந்து மெலிந்து நடைப்பிணங்களாக நாம் பிறந்த நாட்டில், நாதியற்று வாழும் சிறார்கட்கு, ஆர்வத்துடனும் அக்கறையுடனும் திரு. சிவராசா அவர்கள் ஆற்றும் அரும்பணிக்கு, ஆங்காங்கே சிறுவர் இல்லங்களினதும், சிறுவர் பராமரிப்பு நிலையங்கள், அன்பு இல்லங்களினதும் நன்றிக் கடிதங்களே சாட்சியாகும். சில்லறைக்காக அரசியல்பேசி, ஆரவாரம் செய்து, மறைந்துபோனோர் மத்தியில் மானிடநேயத்திற்கு உயிர் கொடுத்து, உயிர்காக்கும் உயரிய பண்பாளராக பவனிவரும் சிவராசா என்னும் மாமனிதரின் செயல்பாடும், செயல்திறனும், மனிதனாக வாழத்துடிக்கும் ஒவ்வொருவருக்கும் ஒரு வழிகாட்டியாகும். தாய் மண்ணின் மீது இவர் கொண்ட மோகம் -மண்- என்ற மந்திரச் சொல்லால் அவர் பத்திரிகை ஆரம்பித்து, அதனை இருபத்து மூன்று ஆண்டுகளாய் வழி நடாத்தி வருவது, பிறந்த நாட்டிற்கும், புகுந்த நாட்டிற்கும் பலம் சேர்க்கும் பாலமாக, பணி செய்ய ஒரு பாதையாக, பத்திரிகா தர்மத்தை மட்டுமின்றி, அல்லல் படுவோர்க்கும் உதவும் பணியையும் செவ்வனே செய்ய உதவியது என்றே சொல்லலாம். இவை யாவும் மண்ணால் முடிகிறது. மண்ணுக்காக சிவராசாவால்

முடிகிறது. அளப்பரிய சேவை ஆற்றி அமைதியாகக் காட்சியளிக்க சிவராசா அவர்களால் மட்டுமே முடியும். இயற்கையின் சீற்றத்தால் சின்னாபின்னமாகிவிட்டவர்களையும், அரசியல் அசம்பாவித அனர்த்தங்களால் அவதியுற்றோரையும் அரவணைத்து, மண்ணின் வாயிலாக அவர்கட்கு உதவிட, மண்ணின் மைந்தர்களை ஊக்குவித்து, புண்பட்ட உயிர்களிற்கு புத்துணர்வு அளித்து, பரிதாபத்திற்குரியவர்களை உடன் பிறப்புகளாக்கி, தானும் உணர்ந்து தன்னைச் சார்ந்தவர்களையும் உணரவைத்து, உதவிக்கரங்களை நீட்டியவர், பாதிக்கப்பட்டோரிற்கு பாசக்கரம், கொடுத்தவர், மனிதநேயத்திற்கு மகத்துவம் பெற்றுத்தந்தவர் என்று திரு. சிவராசா அவர்களின் பணியை இன்னமும் நீட்டிக்கொண்டே போகலாம். இத்தனை பெருமதிப்புகட்கும் சொந்தக்காரரான சிவராசா அவர்கள் ஆண்டுகள் அறுபதில் அடியெடுத்து வைக்கும் இவ்வேளையில், காலத்தினால் செய்யும் உதவி ஞாலத்திலும் மாளப் பெரியது என்ற வள்ளுவன் வாய்மொழிக்கு எடுத்துக்காட்டாக தன் வாழ்நாளை அர்ப்பணித்து, நமக்கெல்லாம் ஓர் முன்மாதிரியாக வாழும் இவர் தன் நெறிபிறளா வாழ்வு, இன்னும் பல்லாண்டு காலம், இதே உத்வேகம் கொண்டு, இன்னமும் பல செல்வங்கள் கண்டு, வாழ்வாங்கு வாழ்ந்திடவே, இம் மடலை வாழ்த்தாக சமர்ப்பிக்கின்றோம்.

சோர்வின்றி திரு. சிவராசா அவர்கள் தம் சேவைப்பயணம் தொடர வல்லோனை வணங்கி வேண்டுகின்றோம்.

நன்றியுடன்.

**ஆசிரியர்கள்**

KUTAL குரல் (A World Wide Tamil Internet Publish)
www.Kutal.de.vu
email.: infokutal@gmx.de
Editors. Mr. Poopal Subramaniam & Mr. Kannan
Published By. Kanmani
Publication (Bonn, Germany)

'மரண வேளையில் நூறு காசு கொடுப்பதைவிட, உயிருடன் இருக்கையில் ஒரு காசு கொடுப்பதே மேலான செயலாகும்.'




# வெற்றிமணியும் சிவத்தமிழும் வாழ்த்துகிறது.

அன்புடன் மண் சஞ்சிகை ஆசிரியர் வ.சிவராஜா அவர்களுக்கு,

தங்கள் மணிவிழாக்காணும் செய்தி அறிந்து மட்டற்ற மகிழ்சி. நீண்டகாலமாக மண்சஞ்சிகை குறிப்பாக சிறுவர் நலம்கருதி பணியாற்றிவருவது யான் அறிவேன். நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் குறைவு, என்றாலும் நிறைவான பணிகளை தொடர்ந்து ஆற்றும் பணிகண்டு அறுபது அகவைகாணும் தங்களை வாழ்த்தாமல் இருக்க முடியாது.

ஒவ்வொரு மனிதரிலும் ஏதாவது ஒரு சிறப்பு இருக்கும். ஒவ்வொரு சஞ்சிகைளிலும் ஏதாவது ஒரு சிறந்த நோக்கம் இருக்கும். தாங்கள் தொடர்ந்து நடத்தும் மண் சஞ்சிகையில் எனக்குப்பிடித்தது தங்கள் மண்பற்று. அந்தப்பற்றுமீதியால் தாங்கள் தாயகத்தில் செய்யும் ஆக்கபூர்வமானபணிகளை நான் நீண்டகாலமாகக் கவனித்து வந்துள்ளேன்.

அமைதியான அத்தொண்டை நினைத்தபோதே இந்த வாழ்த்தை உடன் அனுப்பவேண்டும் என அனுப்புகின்றேன். தமிழுக்காக உழைப்பவர்கள் தரணியில் மகிழ்வுடன் வாழவேண்டும். அந்த மகிழ்ச்சி அவர்கள் பணிக்கு உந்துசக்தியாகத்திகழவேண்டும்.

வாழ்க தமிழுடன்
என்றும் தமிழுடன்

மு. க. சு. சிவகுமாரன்
பிரதம ஆசிரியர் வெற்றிமணி-சிவத்தமிழ்
யேர்மனி

# தமிழர் விளையாட்டுக் கழகம்
# டுயுஸ்பேர்க் ஜேர்மனி

அகவை அறுபது பூர்த்தியுடன்
பூத்துக் குலுங்கும் இனிய குடும்பத்துடன்
உற்றார், உறவினர், ஊராருடன்
மணிவிழாக் காணும்

திரு.வைரமுத்து சிவராஜா அவர்களுக்கு

எம் விளையாட்டுக் கழகத்தின்
நல் இனிய வாழ்த்துக்கள்

இன்னும் இவ்வளவு காலம் வாழ்க
என்று நாம் எல்லை போடவில்லை

வாழும்வரை வாழுங்கள் சுகத்தோடு
வாழும்வரை வாழுங்கள் மன நிறைவோடு
வாழும்வரை வாழுங்கள் மகிழ்வோடு
மொத்தத்தில் உங்கள்
மனம்போல் வாழுங்கள்

நீங்கள் வாழ்வது மண்ணுக்கு மழைபோல்
ஆதலால் காலமெல்லாம் வாழ்க!

எமது விளையாட்டுக் கழகத்தின் வேர் நீங்கள்
ஆதலால் நனைக்கின்றோம்
வாழ்த்துக்களால் என்றென்றும்!!

நிர்வாகக்குழு
தமிழர் விளையாட்டுக் கழகம்
டுயுஸ்பேர்க்-ஜேர்மனி

**தமிழ் எழுத்தாளர் சங்கம் - ஜேர்மனி**
**Tamilischer Schriftsteller Verein - Deutschland**
**Tamil Writer`s Association - Germany**

# சேவை மிக்கோன்!

எழுத்தாளர்சங்கம் உருவாகுவதற்கு பெரும்பங்கு வகித்து பத்து வருடங்களுக்குமேலாக இதன் தலைவராக இருந்து இன்றுவரை,திறம்படச்செயலாற்றி வருபவர் திரு வைரமுத்து சிவராசா அவர்கள்.எமது சங்கம் கடந்த பத்துவருடங்களில் செய்து விட்ட சாதனைகள் பல. புலம்பெயர் தேசத்தில் யேர்மன் நாட்டில் பல நூறு கிலோமீற்றர் தூரங்களில் வாழ்பவரை ஓன்றிணைத்து இப்படியொரு அமைப்பொன்றை உருவாக்கி செயல்படுத்துவதென்பது எவ்வளவு கடினம் என்பதை அறியாதவர் எவரும் இல்லை.இதன்வளர்ச்சிப்பாதையை நாம் பட்டியலிடலாம் அது எமது நோக்கமில்லையென்றாலும் ஒவ்வொரு செயற்பாட்டிற்கும் தலைவர் என்பவர் முக்கிய பங்கு வகிப்பார்,என்பது கட்டாயமே!

"அலைகள் அறுபது" எமது தலைவர் திரு சிவராசாவின் அறுபதாவது அகவையை முன்னிட்டு வெளிவரும் ஒரு பதிவு. இந்தப்பதிவில் எங்கள் வாழ்த்துக்கள் அவருக்குப்போய்ச்சேர்வது ஆரோக்கியமானதே!புலம்பெயர்ந்து எத்தனைபேர் வந்தபோதும் சமுதாய நற்பணிக்காக எத்தனைபேரால் நிற்கமுடிந்தது.இலங்கையில் வாழ்ந்தகாலத்திலேயே பத்திரிகைத்துறையில் கால்வைத்த இவரால், புலம் பெயர்ந்து வந்து ஆணித்தரமாக நின்று "மண்"என்ற சஞ்சிகையை கையெழுத்துப்பிரதியாகத்தொடங்கி இலக்கியஉலகத்தில் கால்வைத்தார்.எத்தனை எழுத்தாளர்கள் இதனால் உருவானார்கள்.கிட்டத்தட்ட160 இதழ் இதுவரையில் வெளிவந்திருக்கும் மண்சஞ்சிகை பல சாதனைகளை நிகழ்த்தி அசத்தியிருக்கிறது. சிறுவர்முதல் பெரியவர்வரை படித்து நிறைக்கவேண்டிய பல் சுவை விருந்துகள் இதில் படைக்கப்படுகின்றது.புலம்பெயர் தமிழ்ச்சிறார்களில் பெரும்பாலானோர் தமிழ்க்கல்வியைக்கற்பதற்கும், உலகப் புதினங்களை அறிவதற்கும்,எழுத்தாளராக மிளிர்வதற்கும் இச்சஞ்சிகை பெரும்பங்கு வகித்து வருகின்றது. என்பது மிகையாகாது. எம்சொந்தமண்ணை மறவாதிருக்க மண்ணைப்பற்றிய செய்திகளும்,புவியியல் அமைப்புப் பற்றிய அறிவையும் இது வளர்க்கின்றது. இதனூடாக இவர் ஆற்றிவரும் மனிதநேயப்பணியை யாராலும் பாராட்டாமல் இருக்கமுடியாது.தாய் மண்ணில் ஆதரவு அற்ற நிலையில் பல்வேறு அமைப்புகளில் வாழ்ந்துவருகின்ற சிறார்களின் வாழ்வாதாரத்திற்கும்,கல்விக்கும் இவர் நீட்டிவரும் ஆதரவுக்கரம்,அதனால் அவர்கள்வழங்கும் நெஞ்சார்ந்த ஆசிகளும்,நீண்டகாலம் அவரை நலமாக வாழவைக்கும், நல் விருந்தாக அமையும் என்பது திண்ணம்.

யேர்மன் தமிழ்க்கல்விச்சேவையில் இணைந்தகாலங்களும் அதனால்தமிழ்ச்சிறார்களுக்கு இவரால்கிடைக்கும் நன்மைகளும் பெரும்பங்கெனலாம். எந்தவேளையிலும் பொதுநோக்கு என்றால் மறுப்புத்தெரிவிக்காத இவரது மனிதநேயம் எங்கள் எழுத்தாளர்சங்கத்தில் தொடர்ந்து தலைவராகக் கடமையாற்றும் பெரும் தகுதியைத்தந்திருக்கிறது என்றால் மிகையாகாது. இவர்உருவாக்கியிருக்கும் இலக்கிய ஆக்கங்கள் ,கவிதைகள், கட்டுரைகள் சிறுகதைகள் என்பன ஏராளம்.

வானொலிநிகழ்ச்சிகளிலும்பங்கு பற்றி பலநேயர்களின் பாராட்டுக்களால் மனம் நிறைந்தவர்.அது மாத்திரமன்றி பட்டி மன்றங்கள்,கவியரங்குகள் என்று நிறையவே.இவர் ஆற்றிவரும் சேவைகளால் பூரிப்படைந்து, யாரிந்த பெருமகன், இவர் எப்படி இருப்பார் என்று கற்பனையில் அவருக்கு உருவம் கொடுத்துப்பார்த்திருப்பார்கள் பலர்.இதுவரையில் இவர்தான் சிவராசா என்று, என்றும் தனது புகைப்படத்தைப்பிரசுரித்து, விளம்பரப்படுத்தியதே கிடையாது. அலைகள் அறுபது அவரது புகைப்படத்தைத்தாங்கி வருகிறது,எமக்கெல்லாம் பெரு மகிழ்ச்சியைத்தரும். பலரின்ஆவலும் இதனால் பூர்த்தியாகும்.வரலாறு நல்லதுசெய்பவரை அடையாளப்பத்தாமல்விட்டதே கிடையாது.உரியநேரத்தில் உதவிபெற்றவர்களே இதற்குதவுவார்கள்.எப்போதும் சிரித்தமுகமும்,பிரச்சினைகளை அதேபோக்கோடு அணுகுகின்ற முறையும் பகைமறந்த வாழ்க்கையை அவருக்கு வழங்கியிருக்கிறது என்பதைத்தெளிவாக உணரலாம்.

எழுத்தாளர் சங்கத்தின் பலபுத்தக வெளியீடுகள்,பலருக்குப்பாராட்டு விழாக்கள்,இளைஞர் கவிதைத்தொகுப்பு,புத்தக விமர்சனங்கள் என்று இந்தப்பத்து வருட காலப்பகுதியில் தலைவராக நின்று வழி நடத்தியவர்.இனியும் பல வளர்ச்சிக்குரிய செயற்பாடுகளில்,பொதுச்சபை,நிர்வாக சபையுடன் இணைந்து செயற்படுத்துவார் என்பது திண்ணம்.அவர் மனதிற்கு ஏற்றவகையில் நல்ல மனைவி,பிள்ளைகள் என்று, குடும்பம் கிடைத்திருக்கின்றது. நல்ல மனைவி,நல்ல பிள்ளை நல்ல குடும்பம் தெய்வீகம்.அறுபது வயது,இதுஅதிகமில்லை, இன்னும் எத்தனையோ,காலங்கள் நலமாக வாழக்கூடிய நல் மனம் அமைந்திருக்கிறது.இன்னும்பல ஆண்டுகள் நலமாகவும்,வளமாகவும் வாழ்ந்து ஆற்றிவரும் தொண்டினை மென்மேலும்சிறப்புற தமிழும்,இந்த புலம்பெயர் மண்ணும் என்றும் புகழோடு வாழ வேண்டுமென்றும் எங்கள் சங்கஉறுப்பினரின் அன்பான வாழ்த்துக்களுடன், நாமும் வாழ்த்துகின்றோம்.

நன்றி

பொ. சிறிஜீவகன் - உபதலைவர்
பொன். புத்திசிகாமணி - செயலாளர்

# வாழ்த்து! (ஒபகௌசன்-அறிவாலயம் தமிழ்ப் பாடசாலை)

தாய்மண்ணில் இருந்து ஜேர்மனி நாட்டிற்குவந்து டிஸ்போர்க் நகரத்தில் வாழ்ந்துவரும் திரு. சிவராசா, உங்களுடன் இருபத்தொன்பது வருடங்களாக நட்புடன் பழகிக்கொண்டு வருகின்றேன்.

இந்த விஜயவருடம் ஆவணி மாதத்தில் 60வது பிறந்தநாளை கொண்டாடவுள்ளதாக தெரிவித்திருக்கிறீர்கள். நீங்கள் பிறந்தநாளைக் கொண்டாடும் வேளையில் எனது குடும்பத்தின் சார்பாக உங்களுக்கு எங்கள் வாழ்த்துக்களை முதலில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

உங்களுடன் நான் அறிமுகமான காலத்திலிருந்து நீங்கள் பொதுச்சேவை செய்வதை அறிந்து கொண்டேன். எல்லோருடனும் இன்முகத்துடன் பழகும் நீங்கள் "மண்" என்னும் சஞ்சிகைக்கு ஆசிரியராக இருந்து புத்தகத்தை வெளியிடும் நோக்கத்தைப் பாராட்டுகிறேன். புலம் பெயர்ந்த மண்ணில் எமது தாய்மொழியை வளர்த்து வரும் நீங்கள் "மண்" சஞ்சிகையில் இளம் சிறார்களுக்காக மலரில் பெரும் பகுதியை கொடுத்து போட்டிகள் நடாத்தி, மாணவச் சமூகத்திற்கு பரிசில்கள் வளங்கி ஊக்கப்படுத்துவது வரவேற்கக் கூடியதாக உள்ளது.

அடுத்து நீங்கள் இங்கு வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ்மக்களிடம் நிதி சேகரித்து தாயகத்தில் உள்ள சிறியோர் தொடக்கம் முதியோர்வரை பராமரிக்கும் இல்லங்கள் போன்றனவற்றிற்கு நிதியை அனுப்பி, அங்குள்ள ஆதரவற்ற பிள்ளைகளுக்கும் ஆதரவு கொடுத்துக் கொண்டுவருகிறீர்கள். பராமரிப்புஇல்லங்களில் உள்ள மாணவர்களுக்கு கல்வியைக் கற்பதற்கான வழிகாட்டியாக இருப்பதும், மாணவர்களும் பராமரிக்கும் நிர்வாகத்தினரும் நன்றி தெரிவிப்பதையும் "மண்" மூலம் தெரிந்து கொள்கிறோம். இங்கு எழுத்தாளர் சங்கம், ஜேர்மன் தமிழ்க்கல்விச் சேவை போன்றவற்றில் உறுப்பினராக இருந்து தமிழ்மொழி வளர்ச்சிக்காக சேவை செய்து கொண்டுவருகிறீர்கள்.

ஒபகௌசன் நகரத்தில் தமிழ்மொழியை வளர்க்கும் நோகத்துடன் "அறிவாலயம்" என்னும் தமிழ்ப்பாடசாலையை இங்குள்ள தமிழ்மக்களின் உதவியுடன் நாம் நடாத்திவருகிறோம். தமிழ்ப்பாடசாலை நடாத்தும் விழாக்களுக்கு, எங்களின் அழைப்பை ஏற்று விழாவில் பங்குகொண்டு, மாணவர்களை வாழ்த்துவதோடு நில்லாமல் அன்பளிப்பாக புத்தகங்களும் வழங்கியுள்ளீர்கள். எமது தமிழ்ப்பாடசாலையில் நடைபெறும் தமிழ்ப்பரீட்சைக்கு நீங்கள் மேற்பார்வையாளராக கடமை புரிந்துள்ளீர்கள். மாணவர்களுக்காக நீங்கள் செய்த சேவையை

தொடர்ந்தும் சேவை செய்வீர்கள் என்றும் நம்புகிறோம்.

உங்களைப்பற்றி அறிந்த அறியாத பல விடயங்களை "அலைகள் அறுபது" என்னும் நூல் மூலம் அறிய ஆவலுடன் உள்ளோம். மனிதநேயப்பணியும் நீங்கள் செய்யும் எல்லாப் பணியும் தடையில்லாமல் தொடரவேண்டும் என்று வாழ்த்துவதோடு, உங்கள் குடும்பத்தவர்களோடு சீரும் சிறப்புடன் பல்லாண்டு காலம் வாழவேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

வாழ்க வளமுடன்!... தங்கள் பணி வளர்க!
வாழ்த்துபவர்கள்!...

அறிவாலயம் தமிழ்ப் பாடசாலை சார்பில்
திரு. சி. தர்மகுலசிங்கம்
குடும்பத்தினர்
ஒபகௌசன் - ஜேர்மனி



# சிவராசா என்றொரு மனிதன்!...

நமது முன்னோர்களாகிய தமிழ் மூதாதைகள் வாழ்க்கை வட்டத்தினை அறுபது வருடங்களாக பிரித்து வைத்தார்கள். அந்த அறுபது வருடங்களும் தமிழ்ப் பெயர்களாலேயே அழைக்கப்பட்டன. அது பின்னாட்களில் ஆரியர் கைக்குள் அகப்பட்டு அறுபது வருடங்களும் சமஸ்கிருதப் பெயர்களாகின. அதுவே இன்று நம்மையில் உள்ள பஞ்சாங்கத்தில் உள்ள சித்திரை வருடப்பிறப்பில் வரும் வருடங்களின் பெயர்கள்.

இந்த அறுபது வருடங்கள் முடியும்போது மீண்டும் ஒன்றிலிருந்து தொடங்கும். எனது அருமை நண்பர் சிவராஜா அறுபது வருடங்களை முடிக்கும் போது அடுத்த வருடம் அவர் பிறந்த வருடத்திலிருந்து தொடங்கும். ஒரு வாழ்க்கை வட்டத்தினை நண்பர் சிவராஜா முடித்திருக்கிறார் என்பது மகிழ்ச்சியும், பெருமையுமான விடையமாகும். மனிதனுக்கு ஆறறிவு என்பது பொதுவானது. இன்று அவனது ஆறாம் அறிவாகிய பகுத்தறிவால் விரிவடைந்து பத்தறிவு என்றாகிவிட்டது. ஏழாம் அறிவாக கல்வியறிவு, எட்டாம் அறிவாக அனுபவ அறிவு, ஒன்பதாம் அறிவாக கல்வியாலும், அனுபவத்தாலும் பெற்ற பட்டறிவு பத்தாம் அறிவாக ஞானம்.

இந்த அறுபது வருடம் என்பது ஒரு மனிதன் தான் பெற்ற கல்வி அறிவாலும், அனுபவ அறிவாலும் முதிர்ச்சி அடைந்து பட்டறிவு பெறுகின்றான் என்பதனையே நமக்கு பறைசாற்றி நிற்கின்றது. நண்பர் சிவராஜா தனது பட்டறிவினை பிரயோகித்து நமது சமூகம் உய்ய ஆவன செய்வார் என்பது எனது திண்ணமான எண்ணம். நண்பர் சிவராஜாவை பல கோணங்களில் பல முகங்களில் பலருக்கு தெரிந்தாலும் அவர் ஒரு பொதுவுடமைவாதி என்பது பலருக்குத் தெரியாது. அவர் எமது சிந்தனை முகாமில் ஒரு தோழர் என்பது எனக்கு மகிழ்ச்சி. ஒரு பொதுவுடைமைவாதியினால் மட்டும்தான் சமூகத்தைப் பற்றிச் சிந்திக்க முடியும், சமூகப்பார்வை இருக்க முடியும். சமூகத்துக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்ற துடிப்பு இருக்க முடியும்.

அதனால்தான் அவரினால் பல சமூகத் திட்டங்களை முன்னெடுக்க முடிந்தது. அது மண், சிறுவர் இல்லம், பிள்ளைகளைத் தத்தெடுப்பது என்று விரிந்தது. ஜேர்மன் தமிழ்க் கல்விச் சேவையின் செயற்குழு உறுப்பினராக, ஜேர்மனி எழுத்தாளர் சங்கத்தின் தலைவராக, எல்லோராலும் விரும்பப்படும் நல்ல மனிதனாக தடம்பதித்து நடக்க முடிந்தது.

நானும் நண்பர் சிவராஜாவும் இருபத்தைந்து வருட நண்பர்கள். அதில் இருபது வருடங்களுக்கு மேல் மிகவும் பக்கத்திலிருந்து பழகியிருக்கிறோம். எத்தனையோ இரவுகளில் மணித்தியாலக் கணக்காக அரசியல், சமயம், தமிழ்க் கல்வி, சினிமா, மண் சஞ்சிகை என்று பலவிடையங்களை பேசியிருக்கிறோம். அப்போதெல்லாம் அவரின் சமூகப் பார்வையை, அக்கறையைப் பார்த்து வியந்திருக்கிறேன்.

பொதுவுடைமைக் கொள்கை பேசி ஏமாற்றுபவர்கள் மத்தியில், சந்தர்ப்பவாதிகள் மத்தியில், பொய்யும், ஏமாற்றும் புழுகுமாக, புகைச்சலும், காழ்ப்புணர்ச்சியுமாக வாழ்பவர்களைப் பார்த்து வெறுக்கத்தான் வருகிறது. மனிதர்களாகப் பிறந்தவர்கள் எல்லோருமே மனிதர்களாவதில்லை. அதிகமானவர்கள் விலங்கு மனிதர்காளகவே வாழ்கிறார்கள். செயல்களினால் சிறந்த சிவராஜா என்றொரு மனிதன் எனது நண்பன் என்று சொல்வதில், அவனுக்கு மணிவிழா என்பதில் எனக்கு பெருமைதான்.

அவன் மனிதன் என்ற அடையாளத்தை அடைவதற்காய் கொடுத்த விலை அதிகம் என்பதை நான் அறிவேன். சுயநலம் சார்ந்த உலகில் மண் என்றொரு சஞ்சிகை நடாத்தி கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் ஏழை எழுத்தாளன் நண்பன் சிவராஜா. ஆனாலும் சஞ்சிகையின் செயற்பாடுகள் சிகரத்தை தொட்டிருக்கின்றன.

ஒரு மனிதன் தனது எண்ணங்களை, கொள்கைகளை, செயற்பாடுகளை தனது குடும்பத்திலிருந்து தொடங்க வேண்டும். அதனை சிவராஜா சரியாகச் செய்வதனால்தான் அவரால் தனது செயற்திட்டங்களை வெற்றியுடன் தொடர முடிகிறது. அவரது மனைவியும் பிள்ளைகளும் அவரின் செயற்திட்டங்களுக்கு முழு ஆதரவும், ஒத்துழைப்பும் வழங்குகிறார்கள்.

மண்சஞ்சிகையினூடாக இலங்கையில் உள்ள சிறுவர் இல்லங்களில் வாழும் சிறுவர்களை தத்தெடுப்பது, ஒரு பிள்ளையின் முழுமையான செலவுக்காக வருடம் 480 யுரோ கொடுத்துதவுவது என்ற திட்டத்தினை சிவராஜா மண் சஞ்சிகையில் வெளியிட்ட போது அதில் முதலாவது நபராக வந்து உதவியவர் நண்பர் சிவராஜாவின் மகள் திருமதி.சிவதர்சினி பிராங்ளின். நாங்கள் செய்கிறோம் நீங்களும் செய்யுங்கள் என்ற இந்த எடுத்துக்காட்டு உன்னதமானது.

ஊருக்கு உபதேசம் உனக்கில்லை என்பவர் மத்தியில் சிவராஜா வித்தியாசமானவர். யாருடனும் கோபித்துக் கொள்வதில்லை என்ற அவரது பிடிப்பான கொள்கைதான் அவருக்கு புகலிடத்தில் நிறைய நண்பர்களைத் தேடித் தந்திருக்கிறது, ""இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல்" என்ற திருக்குறளை தனது தாரகமந்திரமாகக் கொண்டிருப்பது ஆச்சரியம்தான்.

பலர் அவரது கொள்கையை தமக்கு சாதகமாகப் பாவித்து இவரை ஏமாற்றிவிட்டாலும் இவர் கவலைப்படவே மாட்டார். ஒரு தெய்வீகச் சிரிப்புடன் அது பரவாயில்லை என்பார். பல இடங்களில் பார்த்து நான் வியந்திருக்கிறேன்.அதனால்தான் அவரை நான் மனிதன் என்று மதிக்கிறேன். அவர் ஒரு நிறைகுடம்.



புகலிடத்திலும், தாயகத்திலும் அவர் இன்னும் நிறையச் சேவைகள் செய்ய வேண்டும். அதற்காக அவர் நீண்டகாலம் நோய்நொடி இல்லாமல் வாழவேண்டும் என்று மனதார எனது அருமை நண்பனை வாழ்த்துவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

நண்பர் சிவராஜாவும், நண்பர் சிறிஜீவகனும் கல்விச்சேவையில், எழுத்தாளர் சங்கத்தில், மண்சஞ்சிகையில் எனக்களித்த சந்தர்ப்பங்கள் என்னைப் புகலிட வாழ்வில் வளர்த்துக்கொள்ள உதவியது எனபதனை எண்ணிப்பார்க்கும்போது சிவராஜாவை நண்பன் என்று சொல்வது சாலப்பொருந்தும்.

கல்விச்சேவை நடாத்திய எனது பிரியாவிடையில் சிவராஜா பேசமுடியாது நின்றது, என்னை வழியனுப்ப வந்து விமான நிலையத்தில் கலங்கிய கண்களுடன் கட்டிப்பிடித்து அழுது விடை கொடுத்தது எல்லாமே எனது வாழ்நாளில் மறக்க முடியாத நினைவலைகள்.

கல்விச் சேவைக் கருத்தரங்குகள், பட்டிமன்றங்கள், கவியரங்குகள், வள்ளுவர் விழாக்கள் என்று ஒன்றாகப் பிரயாணம் செய்து நிகழ்ச்சிகளை நடாத்தியிருக்கிறோம். நண்பர்கள் சிவராஜா, சிறிஜீவகன், புவனேந்திரன், புத்திசிகாமணி, நான் என்று ஐந்து பேரும், சகோதரிகள் கலாமகேந்திரன், கலைவாணி ஏகானந்தராஜா எல்லோரும் சேர்ந்து ஒன்றாக நடாத்திய நிகழ்ச்சிகள், கல்விச் சேவை விழாக்கள், மண் ஆண்டு விழாக்கள், எழுத்தாளர் சங்க நிகழ்வுகள், சோஸ்ற் நாவலர் தமிழ்ப் பாடசாலை விழாக்கள், மற்றும் பாடசாலை போட்டிகள் என்று எல்லாமே என் நினைவில் இன்னும் பசுமையாக தினம் தினம் நினைவலைகளில் வந்து போகிறது. எனது அருமை நண்பர்கள் ஜேர்மனியில், நான் மட்டும் தன்னந்தனியனாக இலங்கைத் தீவில்.

என்றென்றும் அன்புடன்

தமிழ்மணி .கே. கே. அருந்தவராஜா
(மேழிக்குமரன்)
வவுனியா

'தன்னுடைய சொந்த உழைப்பினால் தான் ஈட்டிய சிறு செல்வத்தினின்றும், தன்னாற்கூடிய மட்டும் அள்ளிக் கொடுப்பதே மிகச் சிறந்த தருமமாகும்.'

# அலை அறுபதில் ஆசையாய் என்வாழ்த்துக்கள்!

அன்பு நண்பன் சிவராசா!

எதை எழுதி வாழ்த்த என்று என் எண்ணங்கள் சிறகடிக்கும் முதல்சந்திப்பு முகம்பார்த்துச் சிரித்த கோலம், இப்போது என்றதுபோல் எல்லாமே நினைவில் வரும் நண்பன்சேயோன் நாட்டிவிட்ட நட்பு இது இன்று அவனில்லை என்றாலும் எமது நட்பினிலே அவனிருந்து வாழ்த்துகிறான் சுற்றிவர வயல்வெளிசுழன்று வீசும் தென்றல் பச்சைப்பசேலெனப் படர்ந்துவிட்ட புல்வெளி சின்னதாய் ஒருகுளம் சிலிர்த்துப்போய் ஒலுப்பூக்கள் அல்லியும்சேர்ந்து ஒன்றாய்குப்பென்று பூத்திருக்கும் அழகான அந்த இடம் அகலாது மனதைவிட்டு உயிலங்குளம் செல்லும்பாதை ஓரமாக தண்ணீர் வாய்க்கால்-அதில் சலசலத்து ஓடிவரும் உயிலங்குள நீரின்சத்தம் வாய்க்கால் கரையோரம் வளர்ந்து நிற்கும் சம்புப்புல்லு வீசுகின்ற காற்றுக்கு விருப்பமின்றி ஆடினாலும் அதன்அசைவுகளும் பார்க்கையிலே அழகாய்த்தோன்றும் பட்சி பறவைகளும் பதுங்குமிடம் இங்கேதான் பிரதானபாதை அதிலிருந்து உள்ளிறங்கும் ஒருபாதை துணுக்காய் ப.நோ,கூட்டுறவுச்சங்கம் என்ற பெயர்பலகை அந்தப்பணிமனையில் அன்றொருநாள் உன்னைக்கண்டேன் கணக்காளர் இவர்தான் என்றுகாட்டியவன் சேயோன் அறிமுகமானாய் அன்று அழகாகச் சிரித்தாய் நீ முதல்சிரிப்பு முழுவதுமாய் முகமலர்ந்து என் உளம்நிறைந்த இன்றுவரை இடர்வந்துநிறைந்தபோதும்பெரும் சுமை வந்து கனத்தபோதும் பகை உன்னைச் சூழ்ந்தபோதும் வெள்ளை மனம் இன்னும்மாறவில்லை வேதனையில் துவண்டதில்லை அந்தச்சிரிப்பென்னும் அகலவில்லை எந்தக்காலத்திலும் உனக்கிருக்கும் செல்வமது நான் உன்னைக்காதலித்த காரணங்கள் நிறையவே உண்டு.

எழுத்துலகில் ஈழநாடு இணைப்பினிலே நீயிருந்தாய் அந்தத்துறையில் தான் வீரகேசரியில் நானிருந்தேன் செய்திச் சேகரிப்பில் சேர்ந்து விட்ட எம்முயற்சி நல்லாய்த்தான் போனதங்கே நாடுவிட்டு வரும் வரையில் அலை அறுபது உன் ஆயுள்வாழ்வை குறிக்கும் செய்தி இந்த அலைகளில்அரை வாசிக்குமேல் நானுன்னோடு புலம்பெயர்ந்து வந்து இங்கேபுரியாதுவிழிக்கவில்லைநிலம் தன்னை மறக்காத உன் நேர்மைதனை உலகறியும் மண் என்ற சஞ்சிகையை மளமளவென்று ஆரம்பித்துமொட்டவிழத்து மலராக்கி இன்றுவரைவாடா மலராக வாசகரோடு வாழுகிறாய் மழலைப்பட்டாளத்தின் மாமாவாகதமிழைப்பயிற்றுவிக்கும் நல்லாசானாக இலக்கிய இன்பம் தரும் கர்த்தாவாக மண்ணின் செய்தியையும் உலகப் புதினங்களையும் உலவவிட்டு மகிழ்ந்து நிற்பாய் பொதுஅறிவுப்போட்டியென்று செய்திகளைச்சேகரித்து சிறுவர் மனம்மகிழ பரிசளித்து ஊக்கந்தந்தாய் பெரியோர்க்கும் ஏற்ற இதழாக மலர விட்டாய் எத்தனை எழுத்தாளர் மண்வரையில் உருவானார இதுவெல்லாம் ஒருபக்கம் இதற்கு மேலும்பலவுண்டு.



ஆதரவுக்கரம்நீட்டி அன்புள்ளோர் நிதிபெற்று மண்ணின் போரழித்து அனாதையாய்நின்றோர்க்கு ஆதரவற்றோர் நிதிவழங்கிஅவர்தமக்கு வாழ்வழித்தாய் இன்றுவரைதொடரும் இணையற்றசேவையது வயிற்றுப்பசிக்கும் அறிவுப்பசிக்குமாய் ஆற்றிவரும்தொண்டினை என்னசொல்லிப்பாராட்டஎந்த வார்த்தை நான்தேடஇன்று உனக்கு அறுபது வயதாச்சுஇதுவரையில்வாழ்ந்த வாழ்வே அர்த்தமாகும்அன்பான மனைவி அருமைச்செல்வங்கள் மூன்று உன்பெருமையைப் பேணிக்காக்கும் பிள்ளைகளாய்ப்பிறந்து மண்ணில்நண்பர்களாய் வளர்த்து நிமிர்ந்தாய்.

இதைவிட மகிழ்ச்சி வாழ்வு எவருக்குமேவந்திடாதுயேர்மன், தமிழ் எழுத்தளர் சங்கத்தின், தலைவராகிபத்துவருடங்கள் பலசேவை தனைப்புரிந்துவாராய் இலக்கியத்தொண்டிற்கு இடைவிடாது நீ உழைத்தாய் கல்விச்சேவையிலும் கனகாலம் உன்சேவைதமிழ்ப்பள்ளிக்கூடம் தான் தொடக்கி பாலர்கட்கு, தமிழ்க்கல்விதனைக்கொடுத்தாய் கல்லறைப்பூக்களென்ற காவியத்தொகுப்புத்தந்தாய் இந்நாளில், சரித்திரமே! உனைவாழ்த்தும் மண்ணில் வயிற்றுப்பசிதனைப்போக்கி வாழ்வளித்த வள்ளலென்று அங்கிருந்து வரும்வாழ்த்தே அகிலத்திலே உயர்ந்து நிற்கும் நெகிழும்அவர் உளம்கனிந்து நீடித்துவாழ்வாயென்று மலரும் அவர்வாழ்த்தே மங்கல கானமாகும் நலமானவாழ்க்கைக்கு உரமாகும் என்னருமை நண்பா! என்றும் உனைவாழ்த்தும் என்வாழ்த்தும், உனைச்சேரும் என்குடும்ப வாழ்த்துக்களும் இதில்சேரும்கலந்து ஒன்றாய்.

நன்றி.

பொன். புத்திசிகாமணி
கவிஞர்-எழுத்தாளர்
ஜேர்மனி

'இரு மனமும் இயைந்த பின்பு இன்புடன் செய்து கொள்ளும் திருமணமே சிறந்த திருமணமாகும்.'

# கூடிக் குலாவிய கூட்டுறவாளன் வாலிபன் இவன்!...

அகவை அறுபது...கணக்கிட்டுப் பார்க்கிறேன். கணக்காளர் சிவராசாவிற்கு வயது அறுபதா!... நம்பமுடியவில்லை. நாட்கள் நகர்ந்தன. வருடங்களும் பல ஓடிவிட்டன என்பதெல்லாம் உண்மைதான். இருந்தாலுமென்ன அந்தப் பொற்காலத்தின் இனிய நினைவுகள் மட்டும் வண்ணத்துப் பூச்சிகள்போல வரிசைகட்டிப் பறக்கின்றன.

வாலிபன் வயிரமுத்து சிவராசாவிற்கு வாய்த்திருந்த நண்பர்கள் கூட்டத்துள் நானும் ஒருத்தியாக இருந்த நாட்கள் நன்னாளாம் இந்நாளில் நினைவு மீட்டும்போது அறுபதிலும் இவரை இருபதாய்ப் பார்க்கிறேன். நாலாம் யூனிட் சங்கக்கடைக்குப் பக்கமாய் ஒரு ஓட்டுவீடு அங்கே ஒரு ஆச்சி இருந்தா... அப்புவும் இருந்தார்தான். ஆனாலும் ஆழமாய் மனதில் இருப்பவர் ஆச்சிதான். நாவற்குழி ஆச்சி என நாம் செல்லமாய் அழைத்த அழகுப்பெட்டகம் அவர். அவவின் மகனாய் இந்த வாலிபன் சிவராசா சைக்கிளை மிதித்தபடி எங்கள் வீட்டைத்தாண்டித் துணுக்காய் நோக்கி ஓடியபோது என் அம்மா சொல்வாள்... "பெடியன் யூனியனில வேலையாம்" இதனைத்தவிர வேறு எதுவும் பெரிதாய்த் தெரியவேயில்லை. பின்னொரு பொழுதில் இந்த வாலிபனருகில் ஒரு பணியாளராகும் பதவி கிடைத்தது சாதாரண லிகிதர்தான். ஆனாலும் அன்றைய காலத்தில் அது ஒரு பொற்காலம் என்பேன். அந்தப் பசுமையான நினைவுகளில் சில துளி...இன்று...மணிவிழாத் துளிகளாய்!...

கணக்காளர் சிவராசாவிற்கு நண்பர்கள் ஏராளம். அவர்களில் ஒருவர் ஜெயரட்ணசிங்கம். இவர் யாழ்ப்பாணவாசி. வன்னிக்கு வந்தார் வேலை ஒன்றைத்தேடி... குடாநாட்டுக்குள் குறுக்கு நெடுக்காகத்திரிந்த அந்த வாலிபனுக்கோ வன்னி புதிது. சரியான பஸ் எடுத்து துணுக்காய் வந்துசேர பட்டாரே ஒரு பாடு...அந்நாளில் மஞ்சள் வட்டம் பொறித்த இ.போ. ச. வண்டிகள் முருகண்டி தாண்டித் தூர இடங்களுக்குச் செல்வதாயறிந்தவர் அதில் ஓடி ஏறிவிடுவாராம்... இன்று நினைத்துப் பார்க்கிறேன். சிரிப்போ சிரிப்புத்தான். உள்நாட்டுக்குள்ளேயே உலகம் தெரியாமல் உலாவித்திரிந்த நாமெல்லாம் இன்று உலக நாடெங்கும் சிதறிவாழும் நண்பர்களாக மாறிவிட்டோம்... வியப்பாக இருக்கின்றது...

வாலிபன் சிவராசாவுக்குப் பக்கமாக ஒரு மேசை அது கணக்கு லிகிதர் அழகுராணியினுடையது. பெயரில் என்னவோ அழகு இருந்ததுதான். நிஜத்தை நினைத்துப் பார்க்கிறேன். கணக்குப் பகுதியில் பரீட்சைமீதி தயாரிக்கும் அழகுராணிக்கு முன் பற்களிடையே ஒரு...சிறு...இடைவெளி...சிரித்தால் ஒரு அழகுதான். அதனைவிடவும் அவள் அள்ளிப் பூசிய பவுடரை நினைத்துப் பார்க்கிறேன்...வாலிப வயது...அதுதான் அப்படி...

சம்போ...சிவசம்போ...நினைத்துப் பார்க்கிறேன்...வெள்ளை வேட்டி, வெள்ளைச் சட்டை, நாலு தலைமயிர், நன்றாய் வழித்த...சிவசம்பு இவர்தான் எங்கள் கொள்வளவு முகாமையாளர்

அவர் பேச்சில்கூட ஒரு நேர்த்தி தெரியும். இருந்தாலுமென்ன இந்தக் கணக்காளன் முன்னே சில தடவை உளறிக்கொட்டிய...அந்த நாட்களை நினைத்துப் பார்க்கிறேன். சிரிப்பே வருகிறது. சித்திரமேகலை என்றொரு சின்ன நண்பியும் இவரோடு அப்போது வேலை செய்தாள். துள்ளித் துள்ளி அவள் நடப்பது போலவே சற்றுக் கிறுக்கலாய் போடுவாள் மொத்தவிற்பனைச் சிட்டைகள். கணக்காளர் கண்டு கடிந்து பேசுவார். அவளோடு மெல்லதாய்ச் சிரித்து... "எனக்கிவர் அண்ணா மாதிரி" என்று நட்புடன் சொல்வாள்.

பத்துமணிக்குத் தேநீர் போடும்போது அப்போது எமக்கு உதவிசெய்யும் சிற்றூழியர் மகாலிங்கம் பெயரை மறக்கவே முடியாது... ஒலிவர்கடையின் பால்தேநீருக்கு வவுச்சர் எழுதும்படி கணக்காளர் அருகே நின்றதை நினைத்துப் பார்க்கிறேன். அன்று இவருக்கு எடுபிடியாய்... ஒரு மகாலிங்கம்... இன்று நாம் எல்லாம் இங்கு பலருக்கு எடுபிடியாய் தொழிலும் வாழ்வும்...சிரிப்பாயிருக்கு!...இன்னொருவன் தேவன் என்ற லிகிதரை இந்தக் கணக்காளர் பேசும் பேச்சுக்கே அளவில்லை. எப்போதும் கணக்குகளைச் சரிபார்ப்பதில் அவன் தவறுவிடுவான். பேச்சு வேண்டிய கையோடு மறுகணம் பகிடிகளைவிட்டு எல்லோரையும் சிரிக்கப்பண்ணிச் சமாளித்துவிடுவான். அவனுடைய பகிடிகளை இன்றும் யோசிக்கும்போது சிரிப்புத்தான்.

நினைத்துப் பார்க்கிறேன் சோக்காய்ச் சொல்ல இன்னொரு செய்தி எங்கள் தட்டெழுத்தாளர் தோழிக்குத் தமிழ்தான் தட்டத்தெரியும். ஒரு நாள்...அஜண்டாவை (Agenda) எடும் (நிகழ்ச்சி நிரல்) என்றார் இந்தச் சிவராசா. அவளோ அங்குமிங்குமாய்த் தடவிக்கொண்டிருந்தாள். தயாராக இருந்த அஜந்தாவைக் கண்டும் காணாதவள்போலத் தேடியகாரணம் என்ன!...நிகழ்ச்சி நிரல் என்று தமிழில் கேட்காதது இவரின் தப்புத்தான். தமிழில் பேசியிருந்தால் தடுமாற்றம இல்லாமல் கொடுத்திருப்பாளே...அன்று சிரித்ததை இன்று நினைத்துப் பார்க்கிறேன். வாலிபக் குறும்புகள்...சிரிப்போ சிரிப்புத்தான். இப்படியாக அங்கு கடமைபுரிந்த ஒவ்வொருவரும் ஏதோ ஒரு நகைச்சுவைகளையும் கடமையுணர்வுகளையும் கொண்டிருந்த நினைவுகள் என்றும் நிலைத்துவிட்டன என்றே கூறலாம். இன்று அந்நிய மொழியின் ஆழம் அறியாமலிங்கு அழவும் தோன்றுதே... ஆரிடம் சொல்லி அழ...சொல்லமுடியாமல் மறைப்பதை நினைத்துச் சிரிக்கிறேன்.

பொதுமுகாமையாளர் "பொ" அவர்கள் தன் இருக்கையில் தன்னையறியாமலே சிலநேரங்களில் தூங்கி விடுவார். பொருத்தமில்லா பதவி அவருக்குக் கிடைத்ததை நினைத்துச் சிரித்தோமன்று. சிரிக்கத்தெரியாத சாமியார் என்று சிறு சலசலப்பை உதிர்ப்பது கண்டும் காணாதவர் போலக் கணக்காளர் இருப்பார். நாகேஸ்வரி என்ற நல்ல தடித்த உருவம் கணக்கிட்டுப் பார்த்தால் எங்கள் கணக்காளர் அவளில் பாதிதானிருப்பார்

'நன்றியை மறப்போரும், தனித்து உண்போரும் மனிதர்களில் கீழோர் ஆவர்.'

இருந்தாலுமென்ன எல்லார் கணக்கையும் கேட்கும் ஆளுமை இருந்தது. F-9B - F-15 கணக்குப் பத்திரங்களைப் பரிசோதிப்பதுதான் எனக்கான வேலை. எப்போதும் ஒரு எடுபிடி வேலை. மேசைமீது குவியும் குப்பைபோல பேப்பர்கள். எரிச்சலாகவும் இருக்கும். சில்லறை முகாமையாளர்கள் சின்னத்தனமாய் செய்த சில்லறைக் கணக்குகள் பலப்பல. கள்ளக்கணக்கையே சரி எனக்காட்டும் படிவங்களனைத்தையும் பார்வைக்கு வைத்த வித்தையை நினைக்கிறேன். எல்லாம் தெரிந்தும் நட்புடன் நம்மை நடத்திச்சென்ற நல்லவன் இந்தக் கணக்காளன் என்பேன்.

பெயர்சொல்லி மகிழப் பல கதைகள் உண்டுதான். களஞ்சியப் பொறுப்பில் ஒரு. அருணகிரி என்பவர். அளவில்லாத சிக்கல்கள் தருவார்... ஆனால் சிரிப்பால் பலரை விழுத்தும் வித்தை அவருக்கிருந்தது. கண்டும் சீறாமல் சினக்காமல் வழி நடத்தும் தந்திரம் கணக்காளனுக்கு இருந்ததை மறுப்பதற்கில்லை. சூசை என்றொரு வாகனச் சாரதி...நான் கண்டதே இல்லை. கணக்காளர் மனதிலும் நன்றாக இடம்பிடித்தவர். அவ்வளவுக்கு நேர்மை, கண்ணியம், கட்டுப்பாடு நிறைந்தவர். அடக்கம் அமைதி அற்புத மனிதராய் இருந்ததைக் கணக்காளர் மெச்சுவார்.

கூட்டுறவாளராய் கூடி மகிழ்ந்த நாட்களை எண்ணி மகிழ்ந்திடும்போது...எங்களை இவரால் மறக்கவே முடியாது...அதுபோல் நல்ல நண்பனாய்...நல்ல சகோதரனாய் நடந்த இவரை நாமும் மறந்திடமாட்டோம். அதை நினைத்தே வாழ்த்துச் சொல்ல வந்துள்ளேன்.

வாழ்க்கை முழுவதும் வசந்தம் வீச
வாய்த்த மனையாள் வலது கையாவாள்
தோள்களிரண்டுமாய்த் தனயன்களிருக்க-நீவிர்
தோல்விகளின்றிப் பேரோடு வாழ்வீர்!...



பெருமைகொள் மகனாய் வாழ்வு மலர
அருமை மகளார் அருகிலிருப்பாள்
மருமகன் என்றும் மகனாயிருக்க-நீவிர்
விரும்பும் வாழ்வை நித்தமும் காண்பீர்!...

இளமையும் இனிமையும் என்றுமே நிலைக்க
பழமை நட்புக்கள் நிலைத்திட வேண்டும்
வாழ்க்கைச் சக்கரம் வளமாய் உருள-நீவிர்
வாழ்வில் நலமோடு வருடங்கள் நூறு வாழ்வீராக!...

திருமதி.சுந்தராம்பாள் பாலச்சந்திரன்
கவிஞர்-எழுத்தாளர்
ஜேர்மனி

# வாழ்வு அனைத்தும் வளம்பெறட்டும்!...



பிரார்த்திக்கும் கரங்களைவிட உதவும் கரங்களே உயர்ந்தவை... பாராட்டும் மனங்களைவிட பங்களிக்கும் கைகளே மகிழ்வைத் தரும். சிரிக்கும் இதயங்களைவிட சிந்திக்கும் இதயங்களே சிறப்பானவை. சீர்தூக்கும் பார்வையினைவிட சிருஷ்டிப்பவனே இங்கு தேவை என்னும் காலக்கருத்துக்களுக்குக் கருவூட்டி , வாழும் வாழ்க்கைக்கு வலுவூட்டி ஏழைகளின் இதயங்களில் இருக்கை போட்டு இருப்பவரே வணங்குகின்றேன்!... வாழி!...

அறுபது அகவைகளும் மக்களுக்காய் மலர்ந்து உதிராத சிரிப்பை உள்ளம் எங்கும் சுமந்து எதிரி இல்லாத வாழ்வை, மதியால் படைத்து அன்புக் கதிர்வீசும் கதிரவனாய் புதியவிதி செய்யும் வாழ்வு விரியட்டும் வீரியமாய். கலங்கரை விளக்குகள் பகலில் ஒளிர்வதில்லை. களங்கமறியா நிலவுக்கும் ஒரு நாள் ஓய்வு உண்டு. உதயவனுக்கும் இரவில் சற்று ஓய்வு. நீங்களோ ஓயாத அலையாய் ஒவ்வொரு நொடியும்உழைக்கும் உணர்வுக்கு உவமைதேடி அலைந்தாலும் ஈடாகாது. உலகைத் தந்தாலும் ஈடாகாது. தன்னை உயர்த்தி விண்ணைமுட்ட விளம்பரம் தேடும் வியாதிகள் மத்தியில் உன்னை உருக்கி உதவி மனம் பெருக்கி மண்ணை வென்ற மகிமை முன்னைவந்த எவருக்கும் முழுமையாக இல்லை பெருமை என்பது உண்மை.

பொன் மனப் புண்ணியனே பூதலம் எங்கும் புகழ் பரப்பி வாழ வாழ்க!...எல்லோரும் உங்களைப்போல் சிந்தித்திருந்தால் உதிராது காக்கப்பட்டிருக்கும் ஆயிரமாயிரம் உயிர்ப்பூக்கள்... இந்த அறுபது அலைகள் அதை உணர்த்தட்டும். அழித்து விளையாடும் அபாய உலகில் உயிர் அனைத்தும் மகிழ அள்ளிப்பொருள் தந்து தந்தையானவரே நன்றி!...நலம் வாழ்க!...அறுபது என்று சொன்னால் ஆச்சரியப்படும் மக்களெல்லாம் பெறுவதும் உங்களால் என்று பெருமை கொள்ளட்டும். காலம் இருக்கும்வரையும் கடமை என்ற உணர்வைக் கடந்து வாழி!...உள்ளவரை வாழி!... என்று உதவும் கரங்கள் ஓராயிரமாய் உயரட்டும். மக்களே தெய்வங்கள். மலரும் புது உலகம் மடமைகளை உடைத்து மாண்புகள் காணட்டும். அந்த உயர்ச்சிக்கு உங்கள் அகம் ஆதாரமாய் அடித்தளம் அமையட்டும். மழை வருவது முகிலுக்குத் தெரியும். மகவும் அழுவது தாய்மைக்குப் புரியும். மண்ணில் பிறந்து, மண்ணில் நடந்து, அந்த மண்ணுக்கே தாயாக இருப்பது கண்ணில் அன்பிருக்கும் மனிதருக்கு மட்டும் வானம் தரும் வரம். திங்களாக என்றும் திகழ, தெவிட்டாத தேன் தமிழால் வாழ்த்துகின்றேன்!... வாழி!...

திருமதி. ஜெயா. நடேசன்
கவிஞர் - எழுத்தாளர்

ஜேர்மனி



„மண்" சஞ்சிகை

கலை, இலக்கிய சமூக இருமாத இதழ்

„Mann" (Erde) Tamilisches Magazin



# அறிவித்தல்

எமது சொந்த நாட்டில் நடக்கின்ற இனக்கலவரங்களில் தாய், தந்தை, உற்றார், உறவினர்களை இழந்து அநாதை இல்லங்களில் அல்லற்பட்டு வருபவர்கள், போரினால் கை, கால் போன்ற அங்கங்களை இழந்தவர்கள், நிரந்தர முடமாக்கப் பட்டவர்கள், ஊனமுற்றவர்கள், அகதிகள், சுனாமியால் பாதிக்கப்பட்டவர் கள் ஆகியோருக்கு உதவும் நோக்கில் „மண்" சஞ்சிகையின் வாசகப் பெருமக்களும் இரக்க சிந்தனை படைத்த அன்பு உள்ளங்களும் மனமுவந்தளித்து வரும் நிதிஉதவியினால் 26.09.1991 தொடக்கம் 31.12.2012 வரை 43997,35 ஜேர்மன் மார்க்குகளையும், 32.476..50 யூரோக்களையும், 1500.00 பவுண்ஸ்களையும் நேரடியாக அனுப்பிவைத்துள்ளோம் என்பதை சகலருக்கும் அறியத்தருகிறோம்.

## யாழ்மாவட்டம்:

| | | DM | Euro | GB Pounds |
|---|---|---|---|---|
| அமல அன்னை அன்பகம் | அரியாலை | 1045.35 | ---- | ---- |
| பரமானந்தா அநாதை இல்லம் | வதிரி - கரவெட்டி | 1000.00 | ---- | ---- |
| செயற்கைக்கால் பொருத்தும் நிலையம் | ஜெயப்பூர் - யாழ்ப்பாணம் | 3000.00 | 350.00 | ---- |
| ஊனமுற்றோர் புனர்வாழ்வுக்கழகம் | யாழ்ப்பாணம் | 2000.00 | 1000.00 | ---- |
| அறவழி நிலையம் | சாவகச்சேரி | 1500.00 | 860.00 | ---- |
| மகேஸ்வரா இல்லம் | மானிப்பாய் | 500.00 | ---- | ---- |
| சிறிசாரதா ஆச்சிரம் | பருத்தித்துறை | 3000.00 | 200.00 | ---- |
| துர்க்கா மகளிர் இல்லம் | தெல்லிப்பழை | 1500.00 | ---- | ---- |
| ஞானசம்பந்தர் இல்லம் | உரும்பிராய் | 500.00 | ---- | ---- |
| யாழ்பல்கலைக்கழகம் | யாழ்ப்பாணம் | 5852.00 | ---- | ---- |
| வலுவிழந்தோர் வாழ்வகம் | உடுவில் - சுன்னாகம் | 4600.00 | 1750.00 | ---- |
| குருநகர் சிறுவர் இல்லம் | யாழ்ப்பாணம் | ---- | 200.00 | ---- |
| கிறிஸ்துவமாணவர் குருமடம் | யாழ்ப்பாணம் | ---- | 400.00 | ---- |
| யாழ்முத்துதம்பி ம. வித்தியாலயம் | திருநெல்வேலி | ---- | 200.00 | ---- |
| | | 24497.35 | 4960.00 | 00.00 |

## கிளிநொச்சி மாவட்டம்:

| | | DM | Euro | GB Pounds |
|---|---|---|---|---|
| குருகுலம் | கிளிநொச்சி | 1000.00 | ---- | ---- |
| கருணை நிலையம் | உருத்திரபுரம் | 500.00 | ---- | ---- |
| காந்தி நிலையம் | உருத்திரபுரம் | 500.00 | ---- | ---- |
| நவஜீவனம் | பரந்தன் | 500.00 | ---- | ---- |
| ஊனமுற்றோர் புனர்வாழ்வுக்கழகம் | கிளிநொச்சி | 5000.00 | 1250.00 | ---- |
| செஞ்சோலை சிறுவர் இல்லம் | கிளிநொச்சி | ---- | 400.00 | ---- |
| ரூத் பெண்கள் இல்லம் | கிளிநொச்சி | ---- | 5180.00 | 300.00 |
| யோகசுவாமிகள் திருவடி நிலையம் | வன்னேரிக்குளம் | ---- | 300.00 | ---- |
| | | 7500.00 | 7130.00 | 300.00 |

## திருகோணமலை மாவட்டம்:

| | | DM | Euro | GB Pounds |
|---|---|---|---|---|
| அன்பு இல்லம் | திருகோணமலை | 500.00 | ---- | ---- |
| சிறிசண்முகா இல்லம் | திருகோணமலை | 2000.00 | | ---- |
| சிவானந்தா தபோவனம் | திகோணமலை | 1000.00 | 2420.00 | ---- |
| நகுமான் சுனாமி இல்லம் | புல்மோட்டை | ---- | ---- | ---- |
| | | | 500.00 | |
| | | 3500.00 | 2920.00 | 00.00 |

## மன்னார் மாவட்டம்:

| | | DM | Euro | GB Pounds |
|---|---|---|---|---|
| திருக்குடும்ப கன்னியர் மடம் | பேசாலை | 500.00 | ---- | ---- |
| ஆயர் (மறைமாவட்டம்) | மன்னார் | 1000.00 | ---- | ---- |

**மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டம்:**

| | | DM | Euro | GB Pounds |
|---|---|---|---|---|
| | | - 6500.00 | - 2000.00 | - 300.00 |
| • இராமகிருஷ்ண மிசன் | • மட்டக்களப்பு | - 500.00 | - ---- | - ---- |
| • சிறுவர் இல்லம் களுவாஞ்சிக்குடி | • மட்டக்களப்பு | - 500.00 | - 200.00 | - ---- |
| • மாணிக்கவாசகர் சிறுவர் இல்லம் | • முறக்கொட்டாஞ்சேனை | - ---- | - 2155.00 | - ---- |
| • திருஞானசம்பந்தர் குருகுலம் | • களுவாஞ்சிக்குடி | - ---- | - 1630.00 | - ---- |
| • மட்டக்களப்பு மாவட்ட ஒன்றியம் | • மட்டக்களப்பு | - ---- | - 500.00 | - ---- |
| • யோகசுவாமிகள் பெண்கள் இல்லம் | • சித்தாண்டி | - ---- | - 1600.00 | - ---- |
| | | - 1000.00 | - 6085.00 | - 00.00 |

**முல்லைத்தீவு மாவட்டம்:**

| | | DM | Euro | GB Pounds |
|---|---|---|---|---|
| • உதய தாரகை நிலையம் | • மல்லாவி | - 1000.00 | - ---- | - ---- |
| • இனிய வாழ்வு இல்லம் | • புதுக்குடியிருப்பு | - ---- | - 400.00 | - ---- |
| • திருக்குடும்ப வாழ்வு இல்லம் | • முல்லைத்தீவு | - ---- | - 540.00 | - ---- |
| • பரிசுத்த இசிடோரின் சுனாமி இல்லம் | • முல்லைத்தீவு | - ---- | - 700.00 | - ---- |
| | | - 1000.00 | - 1640.00 | - 00.00 |

**வவுனியா மாவட்டம்:**

| | | DM | Euro | GB Pounds |
|---|---|---|---|---|
| • கிருபை சிறுவர் இல்லம் | • வவுனியா | - ---- | - 300.00 | - ---- |
| • அகிலாண்டேஸ்வரி அருளகம் | • வவுனியா | - ---- | - 6441.50 | - 300.00 |
| • ஊனமுற்றோர் மறுவாழ்வுச்சங்கம் | • வவுனியா | - ---- | - 500.00 | - ---- |
| • S. V. விஜயன் வைத்தியசாலை | • வவுனியா | - ---- | - ---- | - 600.00 |
| | | - 00.00 | - 7241.50 | - 900.00 |

**ஜேர்மனி:**

| | | DM | Euro | GB Pounds |
|---|---|---|---|---|
| • புனர்வாழ்வுக்கழகம் | • ஜேர்மனி | - ---- | - 500.00 | - 00.00 |
| | | - 00.00 | - 500.00 | - 00.00 |

**மொத்தம்** | 43.997,35 DM | 32.476.50 € | 1500,00 GB Pounds

இத்திட்டத்திற்கு நிதி உதவி புரியவிரும்பும் அன்பர்கள் கீழ்க்காணும் வங்கிவிபரத்திற்கு உங்கள் அன்பளிப்புகளை அனுப்பி உதவிபுரியுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

"சிறு துளி பெரு வெள்ளம்!......"

"இன்றே செய்வோம் அதை நன்றே செய்வோம்!......"

ஆசிரியர்
"மண்" சஞ்சிகை
Duisburg/Germany
01.01.2013"MANN" - ERDE e.V.

V. Sivarajah
Am Windhövel 18A
47249 Duisburg
Germany

Tel.: 0203/8073898
Fax: 0203/8073898
e-mail:
v.sivarajah@arcor.de

வங்கிவிபரம்:
BANKVERBINDUNG
„MANN" ERDE Verein e.V.
Sparkasse Duisburg
Konto-Nr.: 225 000 421
BLZ: 350 500 00

# மனிதநேய பண்பாளர்

சொல் ஒன்றும் செயலொன்றுமாய் மனிதர்கள் வாழும் இவ்வுலகில்இப்படியும் ஒரு மனிதரா? அதிலும் புலம்பெயர்வாழ்வில் பணத்துக்காக அல்லது புகழ் பதவி பட்டத்துக்காகவே எந்தக்காரியத்தையும் செய்பவர்கள் தான் அதிகம்.இவர்களுக்கிடையே ஓர் அற்புதமான மனிதரை நான் இற்றைக்கு 23 ஆண்டுகட்கு முன் சந்தித்தேன்.நோயிஸ் நகரில் நடைபெற்ற யேர்மன் தமிழ் கல்விச் சேவையின் பரீட்சைக்கு எமது பிள்ளைகளைக் கூட்டிச் சென்றோம்.அங்கு பரீட்சையாளர்களாக உதவி நின்றவர்கள் திரு.திருமதிசிவராஜா தம்பதியினர். அந்தப் பணியை தாம் சேவையாகவே செய்துவருவதாகக்கூறி எம்மையும்தம்முடன் இணைத்துக்கொண்டனர்.அன்றிலிருந்து அவர்களுடன் நெருங்கிப் பழகும்வாய்ப்பு கிடைத்தது.இதனால்அவர்களின்விரிந்துபட்டமனதையும் அவர்களின் பல்முகமான ஆற்றல்களையும் அறிந்துகொண்டேன்.திரு.திருமதி சிவராஜா புலம்பெயர் சிறார்களிடையே தமிழைவளர்பதற்காக தம்பிள்ளைகளையும் சேர்த்து தமிழ் பாடசாலைஒன்றைஉருவாக்கி நிர்வகித்ததுடன் இருவரும் ஆசிரியர்களாகக் கடமையாற்றினர். இதன்மூலம் அவர்களதுமூன்று பிள்ளைகளும் தமிழில் பாண்டித்யம் அடைந்ததுடன் புலம்பெயர் நாட்டில் தமிழை நாம் மறவாதிருக்க உதவும் மண் சஞ்சிகையின் 23 வருட சேவைக்கு கைகொடுத்துஉதவிவருகிறார்கள் என்பதையும் நானறிவேன். மண்சஞ்சிகைவிழாக்களிலும் இதர தமிழ்விழாக்களிலும் இவர்கள் பங்கு வியக்கத்தக்கதாக இருக்கும்.திரு சிவராஜா மண் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் மட்டுமன்றி யேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைவராகவும் யேர்மன் தமிழ் கல்விச் சேவையின் நிர்வாகியாகவும் மற்றும் விளையாட்டுத்துறையில் அதிக ஈடுபாடு கொண்ட இவர் டிபூஸ்பேர்க் தமிழர் விளையாட்டுக் கழகத்தின் போஷ கராகவும் இருந்து வருகின்றார். திரு சிவராஜா அவர்கள் மண் சஞ்சிகை மூலம் புலம்பெயர் நாட்டில் தமிழை வாழ வைப்பது மட்டுமின்றி அவரும் பலஊடகங்களுடன் இணைந்து சமுதாயச்சிந்தனைகளைத் தட்டிஎழுப்பும் வகையில் கதை, கட்டுரை, கவிதை, இலக்கியம் போன்ற பல படைப்புகளைத் தந்துகொண்டிருக்கிறார்.லண்டன் தமிழ் வானொலியின் நீண்டகால நேயரான இவர்அனைத்து ஆக்கங்களுடனும் நமதுநாட்டுச் செய்திகளையும் உலகசெய்திகளையும் கூட தொடர் பணியாக செய்து பல்லாயிரம் நேயர்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

இவைமட்டுமின்றிப் பட்டிமன்றம், கவியரங்கம்பான்றவற்றில் பங்கேற்பதுடன் மேடைப் பேச்சிலும் மிக அடக்கமாகப் பேசும்ஆற்றல் இவருக்கு உண்டு.பாடசாலைகள் மன்றங்கள் நடாத்தும போட்டி நிகழ்ச்சிகளில் இவருடன் நடுவராகப் பணிபுரியும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அப்போதெல்லாம் அவரது புலமையையும் நடுநிலமைவகிக்கும் பேராற்றலையும் கண்டு வியந்துள்ளேன். திரு சிவராஜா அவர்கள் சமுதாயப் பற்றை சிந்தனையில்மட்டுமின்றி செயலிலும் காட்டிய உத்தமர். இவர் சிறந்தநாட்டுப் பற்றாளர். பிறந்த மண்ணின் இன்னல்களைப் போக்கப் பாடுபடுபவர். நாட்டிலுள்ள பல சமூக அமைப்புகளுடன் நேரடியாக தொடர்பு கொண்டு

உதவிகளைச் செய்து வருகிறார். போர்ச் சூழலினால் பாதிக்கப்பட்டோர் சுனாமியினால் பாதிக்கப்பட்டோர் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டோர் மற்றும் தாய், தந்தையை இழந்த குழந்தைகள் பராமரிப்பற்ற பெரியோர் ,ஊனமுற்றோர், என்று தானும் தன் பிள்ளைகளும் முடிந்த உதவிகளைச் செய்வதுடன் தஞ்சம் புகுந்த நாட்டிலுள்ள தன் நண்பர்களையும் வாசகர்களையும் தன் பணியில் இணைத்து அளப்பெரிய மனிதநேயப் பணியை 23 வருடங்களாகச்செய்துவருவது போற்றப்பட வேண்டியதே.தமக்குத் தாமே பட்டங்களை சூட்டியும் பதவிகளைத் தேடியும் தலைக்கனம் பிடித்துத் திரியும் மனிதரிடையே இவர் ஒரு வித்தியாசமான மனிதர். அடக்கம், அன்பு,மனிதரை மதிக்கும் பண்பு கொண்டவர்.இவரது சமூகப் பணியை குறித்து எத்தனை பட்டங்கள் கிடைத்த போதும் தன் பெயரின் முன்னால் ஒருபோதும் அவற்றைச் சேர்த்துக் கொண்டதை யான் அறிந்ததில்லை.இவர் இன மதஅரசியல் பேதமற்ற மனிதநேயத்தை ஆதரிக்கும் சுதந்திரமான மனிதர். பல நூற்றுக்கணக்கான கவிதைகள், கட்டுரைகள், இலக்கியங்கள் என எழுதிக் குவித்த திரு சிவராஜா அவர்களின் 60ஆண்டு வாழ்வியலில் மோதிய அலைகளை அனுபவ பூர்வமாக இணைத்து "அலைகள் அறுபது" என்னும் நூலை அறுபதாவது வயதில் வெளியிடுவதையிட்டு நான்மனதார வாழ்த்திவரவேற்கிறேன்.என்னையும் மண் சஞ்சிகைமூலம் கதை, கவிதை, கட்டுரைகளை எழுதத் தூண்டியதுடன் பலமுறை பரிசில்கள் தந்தும் கௌரவித்துள்ளார்.என்னைப் போல் எத்தனையோ படைப்பாளிகளைத் தோற்றுவித்த திரு.சிவராஜாவின் பணி தொய்வின்றித் தொடரவும் அவர் சுகநலத்துடன் பல்லாண்டுகள் வாழவும் எல்லாம் வல்ல இறைவனின் ஆசி வேண்டிவாழ்த்துகிறேன்.

திருமதி .கலைவாணி .ஏகானந்தராஜா
சங்கீத ஆசிரியை
Dip.in.Music



# வாழ்த்து!...



வாழ்க்கை எனும் நதியில் ஓடுகின்ற நமக்கு எதற்கெடுத்தாலும் நேரமில்லை நேரமில்லை ஓயாத சலிப்பு குடும்ப வேலை பார்ப்பதற்கே பொழுதில்லை விரைந்திடும் கடுகதிவாழ்வு விரட்டிடும் காலம் இப்படி ஓடிடும்மனிதரிடை நான் மட்டுமல்ல என் குடும்பம் மட்டுமல்ல என்னோடு மற்றவர்க்கும் பயனாய் வாழ்கின்ற மனிதர் ஒருசிலரே அவர்களில் திருசிவராசா அவர்களையும் அவ்வழியே நான்காண்கிறேன் மனிதருக்குத்தேவையான மனிதநேயப்பணியை அமைதியாய் ஆடம்பரமற்று செய்துவருகிறார் தாயகத்திலே போரினால் இயற்கைஅழிவுகளால் பெற்றோரை உறவுகளை இழந்த குழந்தைகளைத் தெரிந்தெடுத்து ஐரோப்பிய நாடுகளில் வாழ்கின்ற உறவுகளின் உதவியோடு அக்குழந்தைகளுக்கு வாழ்வு கொடுத்ததோடு கல்விகற்கவும் உதவுகிறார் இன்னும் வாழ்விழந்த பெண்களுக்கான உதவிகள் இதைவிடவும் ஆதரவற்றோர் இல்லங்களுக்கு உதவுதல் பாடசாலைகளுக்கு உதவுதல் எனபலவகைகளிலும் தன் பணியை நீண்டகாலமாய் தொடர்கிறார் அத்தோடு தாய் மொழியை அழியாமல் காக்கும் பணியில் மண்சஞ்சிகை எனும் இதழை வெளியிட்டு குழந்தைகளையும் எழுத்தார்வம் கொண்டோருக்கும் எழுத்துப் பணியாற்றி தாய்மொழிச் சேவையிலும் தன்பணி தொடர்கிறார் இத்தனைக்கும் மேலாய் ஒவ்வொரு யூரோவிற்கும் கணக்கை எல்லோரும் பார்க்க வெளிக்கொணர்கிறார் இத்தனையும் எவ்வித ஆடம்பரமுமற்று அமைதியாய் சிரித்த முகத்துடன் எந்நாளும் பணியாற்றும் பண்புகண்டு எந்நாளும் மகிழ்வேன் அவர் பொறுமைகண்டு வியப்பேன் அவர் இந்த ஆண்டு தனது அறுபது வயதைகொண்டாடும் நந்நாளில் அவர் நோயற்றவாழ்வுபெற்று நீடுவாழவேண்டுமென என் குடும்பம் சார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.அவரின் மனிதநேயப்பணியும் தொடரவாழ்த்துகிறோம் இவரின் மனிதநேயப் பணியைப்பெற்ற அத்தனை நெஞ்சங்களின் வாழ்த்துக்களும் எப்போதும் உடனிருக்கும்.

திருமதி. கீத்தா பரமானந்தன்.
கவிஞர் - எழுத்தாளர்
ஜேர்மனி

# வாழ்த்துச் செய்தி

மண் சஞ்சிகை ஆசிரியர்.திரு.வ.சிவராசா அவர்கள் 2013 ஆவணிமாதம் தனது அறுபதாவது அகவை வைரவிழாவை குடும்பத்துடன் கொண்டாடுவதையிட்டு அவர் மேலும் பல்லாண்டுகள் பூரண சுகத்துடனும், மனமகிழ்வுடனும், செல்வச் சிறப்புடனும், ஆண்டவன் அருளுடனும் வாழ்ந்து மண் சஞ்சிகைக்கும் மண் சஞ்சிகையின் நோக்கங்களான கல்வி, கலை, இலக்கிய, எழுத்து, சமூகத்தொண்டு மலராக உலக வலம் வர மேலும் வாழ்த்தி எங்கள் உளம் கனிந்த வாழ்த்துச் செய்தியை அனுப்பி வைப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்... மேலும் திரு.சிவராசா அவர்கள் தனது மண் சஞ்சிகை ஊடாகத் தான் பிறந்த மண்ணில் அல்லலுறும் சிறார்களுக்காக நிதியம் ஒன்றை ஆரம்பித்து வாசகர்கள் மற்றும் மனிதநேயம் படைத்தோரின் ஆசியுடன் சிறிய அளவில் நிதி திரட்டி அதைப் பெருநிதியாக்கி தாயகத்திலுள்ள சிறுவர் மற்றும் வலுவிழந்தோர் இல்லங்களுடன் தொடர்பு கொண்டு தான் திரட்டிய பணத்தை அனுப்பி அவர்களிடமிருந்து பெற்ற பற்றுச்சீட்டுக்களை மண் சஞ்சிகையில் உடனுக்குடன் பிரசுரித்து பணம் எவ்வாறு செலவு செய்யப்பட்டது என்பதைச் செய்தியாகவும் புகைப்படமூலமும் அறியத்தந்து பணம் நல்கிறவர்களின் பெயர்களையும் மண் சஞ்சிகையில் பிரசுரித்து அவர்களை உற்சாகப்படுத்தி மேலும் பணம் கொடுக்கும் எண்ணத்தையும் தூண்டி வருகின்றார். இது ஒரு மனிதநேயப் பணியாகும். உதாரணமாக ஒரு பழ மரத்தை வளர்த்து அது பழம் நல்கும்பொழுது எவ்வளவு மகிழ்ச்சி கொடுக்குமோ அதைப் போன்ற செயலாகும்.

சிலர் ஈயார்கள் (கொடுக்கமாட்டார்கள்) சிலர் கொடுப்பார்கள். ஆனால் உரியவரை அடையுமா என்ற மனச்சந்தேகம். சிலருக்குக் கொடுக்க விருப்பமிருக்கும் ஆனால் சந்தர்ப்ப சூழ்நிலைகள் அவர்களை தவிர்க்க வைக்கின்றது. சிலர் நிறைந்த மனத்துடன் நாம் இன்று இந்த நிலையில் இங்கு வாழ்வதால். தாயக அன்பு உறவுகளின் சிறுவர்களுக்கும் கொடுத்து "பிறர் பிள்ளை தலை தடவ தன்பிள்ளை தானே வளரும்" என்ற நிறைந்த மனத்துடன் கொடுப்பார்கள் அதற்குக் காரணம் மண் சஞ்சிகை ஆசிரியரிடம் கொடுத்தால் அவர் உரியவர்களுக்கு அப்பணத்தை உத்தியோகபூர்வமாகக் பகிர்ந்தளித்து அவர்களிடம் பற்றுச்சீட்டையும் பெற்று மண் சஞ்சிகையில் பிரசுரித்துவிடுவார் என்ற பூரண நம்பிக்கை.

நடந்த போரின் அனர்த்தத்தால் காலத்தின் கட்டாயமாக மேலும் மேலும் பணம் சிறுவர்களின் நன்மைக்காகத் தேவைப்படுகின்றது. புலம்பெயர் நாடுகளில் சிவராசா மட்டுமல்லாது உலகம் பூராவும் பரந்து வாழும் ஈழத்மிழர் மத்தியில் பல சிவராசாக்கள் உடனடியாகத் தோன்றவேண்டும். அவர்கள் மூலம் தாயகச் சிறுவர்கள் பலர் நன்மைகள் பெறவேண்டும்.கடந்த காலப் போர்ச்சூலில் 2007ல் நான் பசுமை வளத்திட்டம் ஒன்றை யாழ் பிரதேசத்தில் ஆரம்பிக்கும் முகமாக எனது திட்டத்தை மண் சஞ்சிகைக்கு ஆசிரியர் வ.சிவராசா அவர்களிடம் எடுத்துக்கூறியிருந்தேன். எனது திட்டத்திற்கு"மண்" தேவைப்பட்டது. அதற்காக மண் சஞ்சிகை கை கொடுத்து உதவியதன் பேராக நான் முதலில் அகரம் அறிந்த யாழ்-



சங்கானை அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் 2008 அக்டோபர் 1ம் நாள் சர்வதேச சிறுவர் தினத்தன்று திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் கொழும்பு தினசரிப் பத்திரிகைகளில் செய்தியாகவும் நிழல் படங்களுடன் பிரசுரித்திருந்தன. இத்திட்டத்தின் முக்கிய அம்சமாக காலையில் பள்ளிச் சிறுவர்களுக்கும் சுற்றாடலிலுள்ள சிறுவர்பாடசாலைப் பிள்ளைகளுக்கும் பால், பழம், பொங்கல், இனிப்போடு கொப்பி, பென்சில், பேனா வகைகளும் மற்றும் பழம்தரும் மா, பலா, தோடை, எலுமிச்சை, தென்னங்கன்று, கொய்யா, நெல்லி போன்ற கன்றுகளும் விநியோகிக்கப்பட்டன.

2011 ஆண்டில் இதே திட்டம் அருகிலுள்ள கிராமமான சித்தங்கேணிக்கும் வியாபித்து கடந்த வருடம் 2012ல் சங்கானை - சங்கரத்தை - சித்தங்கேணி -சுழிபுரம் - சில்லாலை போன்ற கிராமங்களில் ஆறு பள்ளிக்கூடங்களில் கொண்டாடப்பட்டன. இந்த வருடம்சர்வதேச சிறுவர் தினம் யாழ் பிரதேசத்தில் பன்னிரண்டு சிறுவர் பள்ளிக்கூடங்களில் நடாத்துவதற்கு திட்டமிட்டு அந்தந்தக் கிராம அன்புறவுகளுக்கு பணம் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றேன்.

இந்த வாழ்த்துச் செய்தியில் நான் மண் சஞ்சிகை வாசகர்களையும் அன்பு உறவுகளையும் கேட்டுக்கொள்வது யாதெனில் தாயகத்திலுள்ள உங்கள் உறவுகளுடன் தொடர்புகொள்ளும்போது அங்கு இருக்கும் சிறுவர் பள்ளிக்கூட அதிபர்களுடன் தொடர்புகொண்டு இம்முறைவரும் சர்வதேச சிறுவர் தினமான அக்டோபர் முதல் தேதியில் புலம்பெயர்ந்துவாழும் உறவுகளிடம் பணம்பெற்று தருகிறோம் எனது திட்டத்தை நடாத்திப் பயன்தரும், பழம்தரும் மரக்கன்றுகளைக் கிராமங்களில் நாட்டினால் புலம்பெயர்நாடுகளிலிருந்து விடுமுறைக்குச் செல்லும் நம்மவர்கள் தங்கள் வீடுகளில் நல்ல சத்துள்ள பலவகை பழங்களை சுவையுடன் உண்டு மகிழ்ந்து வெளிநாடுகளுக்குத் திரும்பலாம். அத்துடன் தாயகத்தில் உள்ளவர்களுக்கு இந்த மரக்கன்று வளர்ப்பு ஒரு மூலதனமாகும். ஆகவே எனது திட்டத்தை மண்ணில் மண் சஞ்சிகை மூலம் நடைமுறைப்படுத்த உதவிய மண் சஞ்சிகை ஆசிரியர் திரு. வயிரமுத்து-சிவராசாவுக்கும் இப்பெருமை சேருகின்றது. மேலும் யாழ் மாவட்ட பசுமைவளத்திட்டத்தின் சாபில் நன்றியைத் தெரிவித்து எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சி வாழ்த்துகின்றோம்.!...

"மண்ணில் இன்று மரக்கன்று ஒன்றை நாட்டி நாளை பயன்பெறுவோம்"

சோம. சிவ.குலநாயகம்
யாழ்மாவட்ட பிரசித்த நொத்தாரிசும்
பசுமை வளத்திட்ட ஆர்வலரும்
பிறேமன்-ஜேர்மனி

# சேவைக்காக வளர்ச்சி! சேவையில் வளர்ச்சி!... சேவையினூடாக வளர்ச்சி!...

சாமஸ்ரீ சமூகத்திலகம் நாவற்குழியூர்
திரு.வயிரமுத்து-நடராசா J.P
(அகில இலங்கைக்குமான சமாதான நீதவான்)

No-14 Winsron Walk
Acton Greem Chiswick
London W4 5SW
United Kingdom

Samasri Samooga Thilagam. Navatkuliyoor
Mr.Vairamuthu-Nadarajah
(Justice of the Peace, Whole Island, Srilanka)

## மணிவிழா வாழ்த்துக்கள்

திரு. வயிரமுத்து - சிவராசா அவர்களின் 60வது அகவை மணிவிழாவையொட்டி "அலைகள் அறுபது" நூலுக்கு வாழ்த்துச் செய்தி எழுதுவதில் யானும் எனது குடும்பத்தினர் அனைவரும் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

"மண்" சஞ்சிகை ஆசிரியர் பல்வேறு கஷ்டப்பட்ட மக்கள் மத்தியில் வாழ்ந்திருந்தாலும் இவரிடம் எந்நேரமும் மனித நேயம் முன்னிலை வகிப்பதைப் பார்த்து எமது பெற்றோர், சகோதரர்கள் எமது குடும்பத்தவர்கள் யாவரும் பெருமகிழ்சியடைந்துள்ளோம்.

"மண்" ஆசிரியர் தாயகத்தில் துணுக்காய்ப் பகுதி பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்தில் முன்னர் கணக்காளராக இருந்தபோது நாட்டில் அப்போது மிகவும் தட்டுப்பாடான மகப்பேற்றுக்கு அத்தியாவசியமான பலசரக்குப் பொருட்களை சங்கத்திலிருந்து கொண்டுவந்து தன் சகோதரிகளுக்குக் கொடுத்து மகிழ்ந்ததை இன்னும் என்னால் மறக்கமுடியவில்லை. இப்படியாக வீட்டிலும் நம் சமூகத்திலும், நாட்டிலும், புலம்பெயர் தேசத்திலும் அர்ப்பணிப்புடன் கடமையாற்றுவதை எண்ணி எங்கள் குடும்பம் சார்ந்த வாழ்த்துக்கள்.

"மண்" சஞ்சிகை ஆசிரியர் பல்லாண்டுகாலம் வாழ்ந்து தன் குடும்பத்திற்கும் மற்றும் பொதுமக்களுக்கும் சேவைபுரிய எல்லாம் வல்ல ஆண்டவன் துணைபுரிவாராக!...

நன்றி...வணக்கம்!...

அன்புக்குரிய சகோதரன்
வ. நடராசா பிரித்தானியா

# தம்பி வாழ்க வளமுடன்!...

எனது உடன் பிறந்தவரே உமது 60வது பிறந்தநாள் அருளோடும் சிறப்போடும் நடைபெற வாழ்த்துகின்றேன். அறுபதாவது வயது ஒரு வரமாகும். நாம் ஒரு கொடியில் பிறந்தோம். இதைத்தவிர வேறென்ன பெருமை நமக்கு இருக்க முடியும். இதுவரையில் கடந்துவந்த பாதைகள் மிக அற்புதமானது. எங்கள் குடும்பத்தில் நீங்கள் மட்டும் தனியாக நின்று எழுத்து என்னும் காவியத்தை ஊருக்கும் உலகத்துக்கும் கொடுத்து எமக்கெல்லாம் பெருமை சேர்த்துவிட்டீர். வாழ்த்துக்கள். பொருளைக் கொடுக்கிறவன் புண்ணியம் செய்கின்றான். ஆனால் கல்வியைத் தருபவன் அந்தப் பரமபிதாவின் கமலச்சரணங்களைச் சென்றடைகின்றான். அதனால்தான் எழுத்து அறிவித்தவன் இறைவன் ஆகின்றான் என்று அருள்மொழியும் சொல்கின்றது.

இப்பூவுலகில் பிறவி எடுக்கும்போது எல்லோரும் தத்தமது கடமைகளை நிறைவேற்றி வருகின்றனர். நீங்கள் பிறவி எடுத்த இதுவரையில எப்படி நிறைவேறி வந்தனவோ அதுபோல மேலும் உமது பணிகள் சிரமமின்றி நடைபெற எனது இதயம் உம்மை வாழ்த்துகின்றது. கருமேகத்திலிருந்து மழை அதைவிடுத்துப் பிரிந்து வந்தால்தான் இந்த உலகம் வாழ்கின்றது. அப்படி மேகத்திலிருந்து பொழிகின்ற மழை நீரானது சகல மரம் செடி கொடிகளுக்கும் பலனயளிக்கும்போது ஒரு மரத்தில் வெண்ணிற மலரும் இன்னொரு மரத்தில் நீல நிற மலரும் வேறோர் மரத்தில் சிவப்பு மலரும் பூக்கின்றன இவை விந்தையல்லவா.

நாம் ஒரேகொடியில் மலர்ந்தும் நமக்குள் எவ்வளவோ வித்தியாசங்கள் உண்டு. இது மனிதப் பிறவியின் இயல்பான விடையமாகும். பிரியமானவரே பிறந்தோம், வளர்ந்தோம், வாழ்ந்தோம், மடிந்தோம் என்னும் நிலையிலிருந்து விலகி நாம் சிந்தித்து மகிழும்வண்ணம் உமது செயலாற்றல் நிறைந்து உமது வாழ்க்கையை நான் இனிய மனத்துடன் வாழ்த்துகின்றேன். இந்த மகத்தான காலத்திலே நம்மைப் பெற்ற தந்தை-தாய் உயிருடன் இல்லையே என்பது ஒன்று வேதனையாகும். அவர்கள் விண்ணுலகில் வாழ்ந்திருந்தாலும் உமது நலம் கருதி வாழ்த்துக்கள்கூறி நல் ஆசிகளும் அளிப்பார்கள்.

அன்பிற்குரியவரே!...ஈன்றபொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோர் எனக்கேட்டதாய்...தான்பெற்ற பொழுதை மகிழ்ச்சியினும் மிக மகிழும். தன் மகனைக் கல்விக் கேள்விகளால் நிறைந்தான் என்று அறிவுடையோர் கூறக்கேட்டதாய் மகனை ஈன்றபொழுதை விடப் பெருமகிழ்வு கொள்கிறாள். இதைக் கேட்கும் பெற்றோருக்கு எவ்வளவு மகிழ்ச்சி உண்டாகின்றது. ஐயத்தை நீக்கி நாம் உண்மை உணரல் அவசியமாகும். ஐயந்திரிபுறக் கற்றல் வேண்டும்.

இனிய சகோதரரே வள்ளுவர் மட்டும் எமது தாயாரை சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியிருந்தால் தாய்மை என்ற குறளில் இன்னும் எத்தனையோ விடையங்களைப் படைத்திருப்பார் அல்லவா!...தன் மகனைச் சான்றோன் எனக் கேட்டும் தாய்க்குப் பிறர் பாராட்டும் போது கிடைக்கும் மகிழ்ச்சிக்கு எல்லை இல்லையல்லவா. நம்மைப் பெற்ற மாதா இன்று இருந்திருந்தால் வள்ளுவர் போல் நின்று உம்மை வாழ்த்தியிருப்பார். ஆகவே மாதா-பிதாவின் ஆசி வேண்டி நாமும் எமது குடும்ப சார்பில் வாழ்த்துக்கள் கூறுகின்றோம். மனைவி, பிள்ளைகளுடன் சந்தோஷமாக வாழ்ந்து நீண்ட ஆயுள் பெற்று இன்னும் பல...பல வெற்றிகள் பெற்று வாழ மனமார வாழ்த்தி மகிழ்கின்றோம்!...

வாழ்க வையகம்!
இவ்விடம்
பிரித்தானியாவிலிருந்து
பாசமுள்ள சதோரன்
சீனிவாசன் குடும்பம்

## அண்ணன் சீனிவாசன் பற்றி!...

உடன்பிறப்பு அண்ணன் சீனிவாசன் பற்றிய எனது குறிப்புக்களையும் இதில் பதிவு செய்ய விரும்புகின்றேன். உயர்கல்வி பெறாவிடினும் ஒரு மேதையாக எங்கள் குடும்பத்தில் விளங்கிவருகின்றார். ஒரு நாட்டு அரசாங்கத்தில் பாதுகாப்பு அமைச்சர் ஒருவர் இருப்பார். இதேபோல் எங்கள் குடும்பத்தின் பாதுகாப்பு அமைச்சராகவும் ஓர் வீரனாகவும் இருந்துள்ளார். இளவயதில் இவருடைய கட்டுடல் எங்கள் குடும்பத்தில் யாருக்கும் இல்லை என்றே கூறுவேன். யாழ் மாவட்ட சைக்கிள் ஓட்ட வீரனாக, நீந்தல் வீரனாக விளங்கியிருக்கின்றார். வாழ்நாளில் பல தொழில்களையும் செய்து உழைத்து வாழ்ந்திருக்கின்றார். இயல் இசை நாடகத்துறையில் எங்கள் ஊர் மட்டுமல்ல யாழ் மாவட்டம் வன்னிப் பிரதேசங்களில் புகழ் பரப்பியுள்ளார். காத்தவராயன் கூத்து முதல் பண்டார வன்னியன் போன்ற நாடகங்களும் சமூகசீர்திருத்த நாடகங்களும் பல வற்றில் நடித்துப் பாராட்டுப் பெற்றிருக்கின்றார். சிறந்த பாடகர். சிறந்த பேச்சாளர். பிரித்தானியாவில் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் அவர் பிரயாணம் செய்த நிலக்கீழ் தொடருந்தில் (Underground Train) வெள்ளைக்காரப் பெண்மணி திடீரென குழந்தை ஒன்றைப் பிரவசிக்க பலர் உதவிபுரியாமல் திண்டாடிக்கொண்டிருந்த போது இவர் முன்னின்று பிரசவத்தைப் பார்த்து தாயையும் பிள்ளையையும் காப்பாற்றி பெரும் உயிர்காப்புப் பணியை மேற்கொண்டார். இவ்விடையம் அடுத்த நாள் இவரின் படத்துடன் லண்டன் பத்திரிகையான "கார்டியனில்" வெளிந்ததை அறிந்து எங்கள் குடும்பத்தவர்கள் மட்டுமல்ல பல வெள்ளை இனத்தவர்களும் நன்றிகளைப் பகிர்ந்து கொண்டமை அனைவருக்கும் சந்தோஷத்தை ஏற்படுத்தியது என்றே கூறுவேன். எமது தாயவளின் வழிகாட்டல்தான் இந்த மாபெரும் உதவி புரிய வாய்ப்பளித்தது என்றே கூறுவேன்...

# மண்ணை மறவா மனிதா... வாழ்க!

நாவற்குளியூர் வைரமுத்துவின் புத்திரன்
உரும்பிராயில் மணம் முடித்த உயர் பண்பாளன்
புலம் பெயர்ந்து யேர்மனியில் தடம் பதித்த தமிழன்
நிலம் மறவாது நீளும் பணி செய் சமூக சேவையாளன்
சஞ்சிகை ஒன்றை சளைக்காது நடத்தும் இலக்கிய ஆர்வலன்
சிரிப்போடு அனைவரையும் சினேகமாக்கும் சிறந்த மனிதன்
அகவை அறுபது காணும் அழகு கண்டோம்
இன்னும் ஆண்டுகள் நூறு வாழ்ந்திட வாழ்த்துகின்றோம்
மண் என்ற மகுடம் சூடி
மக்கள் சேவை ஒன்றேயே மந்திரமாக்கி
எழுத்து வழியே யுத்தம் செய்யும் போராளி - நீ
கணக்குகளை துல்லியமாய் தரும் கண்ணியவாதி
பணம் சேர்ப்பதும் ஊருக்காய்
பங்கு போடுவதும் இங்கு பழசு
அத்தனைக்கும் கணக்கினைக் காட்டி
சான்றுகளாய் பல மடல்களைக் காட்டி
உண்மையாய் இருத்தலில் நீ புதிசு
சிறியவர் முதல் பெரியவர் வரை
அனைவரையும் மண்ணுக்குள் ஈர்த்த ஆணிவேர் - நீ
வெள்ளையர் நாட்டில் சஞ்சிகை மூலம்
தமிழ் வளர்த்த தனிப்பெரும் தமிழன்
அறுபதாமகவை காணும் இந்நாளில்
உடல்நலம் மேவிட உன் புகழ் ஓங்கிட
இன்னும் பல்லாண்டுகள் வாழ்ந்து
இலக்கிய, சமூகப் பணிகள் ஆற்றிட
மனமார வாழ்த்துகின்றோம் நாம்!

மட்டுவில்' மானாவளையூரார்'
ஜேர்மனிவாழ் நட்புக்கள்

# அண்ணலே!...

உன்னை வாழ்த்துகின்றேன்
ஆயிரத்து தொள்ளாயிரத்து
ஐம்பத்து மூன்றுஆண்டினிலே
அவதரித்த யாழ் மண்ணின் புதல்வனே
அகிலம் தன்னில் உயர்ந்த ஆசானே
ஜேர்மன் போய் சேர்ந்தாலும்
எம் மண்ணில் எமது வாசம்
எங்கெல்லாம் மணம் வீச வேண்டும்-என்று
எழுதிய மண் வாசனை ஏட்டினை
ஏங்கி நின்றேன் நான் படிப்பதற்கு
காலம் வரும் போது கையில் கிடைத்ததனை
கண் கலங்கியே படித்திட்டேன்
காற்றினில் கலந்து வந்த மண் வாசனையை
காலமெல்லாம் மறக்கவே முடியாதாம்
பூநகர் என்னும் பூமியிலே நான்
பூமாலையுடன் காத்திருக்கின்றேன்
வாழ்த்திடவே-உம்மை
புன்னகை பூத்த ஆசானின் பூ முகத்தை
பூரிப்புடனே பார்க்க ஏங்குகின்றேன்
தந்தை இல்லை என்ற என் ஏக்கத்தினை
தயவாக தள்ளிச்சென்றது உங்கள் மண் வாசனை
உந்தன் திருமுகத்தை நான்
நேரினிலேபார்த்து வாழ்த்திடவே
நித்தமும் இறைவனை வேண்டி உம்
20x3வயது தொடங்கையிலே
இரு கரம்கூப்பி வாழ்த்துகின்றேன்
பல்லாண்டு காலம் வாழ்கவென.



கி. பிரியங்கன்
தரம் 11 - கிளிநொச்சி
ஜெயபுரம் ம - வி

ஈழத்தமிழனில் ஒருவனாய் அவதரித்த
ஈசனின் நாமம் கொண்ட
எம் சிவராஜா ஆசிரியர் அவர்களே!
உலகை ஆளும் சிவனுடைய
நெற்றிக்கண் ஒளி போல
உம் மண் சஞ்சிகை ஒளிவீசுதையா
துயர்கள் நீங்கிட கல்வியில் உயர்ந்திட
உணவு முதல் உறையுள் வரை
வழங்கி வரும் உங்களை
என் நாளும் நாம் மறவோம்.
அகவை அறுபதில் கால் பதிக்கும்
இந்நாளில் நூறாண்டு வாழ்கவென
ரூத் மிஸன் மாணவியராகிய நாம்
மனதார வாழ்த்துகின்றோம்.



செல்வி-சு.சுஜீவா
ரூத் மிஷன் பெண்கள்
இல்லம்
ஜெயபுரம் - கிளிநொச்ச

ஆயிரத்து தொள்ளாயிரத்து
ஐம்பத்து மூன்றாம் ஆண்டினிலே
வந்துதித்த சிவனின் நாமம் கொண்ட
சிவராஜா ஆசிரியர் அவர்களே!
அறுபதாம் அகவையினைத் தொடும் இந்நாளில்
அகிலமெல்லாம் போற்றிடவே
வாழ்த்துகின்றேன்.
மண் சஞ்சிகை மூலம்
உங்கள் நாமம் மல்லிகைச் செண்டாய்
மணம் வீசுகின்றது அவனியிலே
பாதகரால் சிதையுண்ட பாலகர்க்கு
பல வழியில் உதவுகின்ற உங்கள் சேவை
பாரெல்லாம் ஜொலிக்குதையா
பாங்குடனே வாழ்த்துகின்றேன்
பல்லாண்டு காலம் நீங்கள் வாழ்கவென்று.



செல்வி.தர்சிகா-மகேந்திரன்
ரூத் மிஷன் பெண்கள்
இல்லம்
ஜெயபுரம் - கிளிநொச்சி.

# மணிவிழாக்காணும் "மண்" ஆசிரியருக்கு எங்கள் மனம் நிறைந்த வாழ்த்துக்கள்

ஒரு மனிதனுடைய வாழ்நாளில் அறுபது வயது மிகவும் விஷேசமானதொன்றாகும். ஒரு மணிக்கு 60 வினாடிகள் போல் தமிழ் சாஸ்திரப்படி வெவ்வேறு பெயர்கொண்ட 60 ஆண்டுகள் நிறைவுபெற்று மறுபடி ஆரம்பிக்கும்போது 60 வயது பூர்த்தியாகின்றது. 60 ஆண்டுகள் வாழ்ந்து முடிந்ததை"சஷ்டியப்த பூர்த்தி" என்று அழைப்பர்.

அந்தவகையில் இலங்கையில் தென்மராட்சி-நாவற்குழி-வேலம்பராய் என்னும் சிற்றூரைப் பிறப்பிடமாகக்கொண்ட திரு.சிவராசா அவர்கள் தமிழ் வருடமாகிய"விஜய" வருடத்தில் 1953ம் ஆண்டு ஆவணித்திங்கள் 31ம் திகதி வயிரமுத்து-தங்கம்மா தம்பதிகளின் புதல்வராக ஈழமண்ணில் ஜனனித்து இன்று ஜேர்மனி நாட்டில் டியூஸ்பேர்க் நகரில் வாழ்ந்து வருகின்றார்.

ஒரு மனிதன் தனது வாழ்நாளில் முதல் 30 ஆண்டுகள் கல்விக்காகவும் பெயர், புகழுக்காகவும் செலவிடுகின்றான். 30 முதல்: 50 ஆண்டுகள் வரை மனைவி மக்களுக்காகச் செலவு செய்கின்றான். ஆனால் திரு.சிவராசா அவர்கள் 1990ம் ஆண்டு தை மாதம்"மண்" என்னும் கல்வி, கலை, இலக்கிய, சமூக சஞ்சிகை ஒன்றை ஆரம்பித்து இன்றுவரை அதன் பிரதம ஆசிரியராக இருந்து புகலிட மக்களுக்கும் ஈழ மக்களுக்கும் சேவை செய்து அனைத்து மக்களின் மனங்களில் இடம்பிடித்துள்ளார்.

திரு.சிவராசா அவர்களும் அவர் மனைவி மக்களும் நீண்ட ஆயுளுடன் எல்லாச் செல்வங்களும் பெற்றுச் சீரும் சிறப்புடனும் வாழ்க!...வாழ்க!...

என்று வாழ்த்தி நிற்கிறோம்!

அன்புடன்...
கலா-மகேந்திரன் குடும்பம்
ஜேர்மனி

'உள்ளச் செருக்கை அறவே ஒழித்து, மனமொன்றி உள்ளன்போடு உருகி நிற்கும் வழிபாடே சிறப்பான வழிபாடாகும்.'

# வாழவைத்து வாழ்கின்ற வாழ்வு வளம்பெற வாழ்த்துக்கள்

வாழ்க! வாழ்க!!
மனிதநேயப்பண்பு வாழ்க,
மண்ணை நேசிக்கும் மாண்பு வாழ்க,
உறுதி கொண்ட கொள்கை வாழ்க,

இத்தனை பண்புகளும் நிறைவாய் பெற்று இன்று பல மக்களின் வாழ்த்துக்களுடன் அறுபதாம்அகவையில் அகம் மகிழ்ந்திருக்கும் அண்ணன் சிவராஜா அவர்களை நானும் வாழ்த்துவதில்பெருமையடைகின்றேன்.

இன்று அறுபதாம் அகவையின் நிறைவு, ஆயினும் இன்னும் பல அறுபது அகவைகள் உங்கள்பணியின் சிறப்பு உங்ளை வாழ்த்தி வணங்கும். வாழ்க பல்லாண்டு.புலம் பெயர்ந்தாலும் தன் தளத்தை மறவாத மனிதநேயப்பணியும், புலம் பெயர் மண்ணில் தாய்மொழியை வளர்த்திட சிறுவர் முதல் பெரியவர்கள் வரை பயன் பெறும் மண் எனும் சஞ்சிகையும்தங்கள் அயராத உழைப்பில் தொடரும் பயணங்கள்.

அதிகாரப் போட்டிகளால் ஆதரவற்றுப்போன மக்களுக்கு மண்ணின் மைந்தன் என்ற உரிமையில் நீங்கள் நீட்டிய ஆதரவுக்கரத்தின் அணைப்பில் வாழ்கின்ற மக்களின் வாழ்த்தொலிகள்யாவும் இறையன்பின் வாழ்த்துக்களாகும்.தளராத உளைப்பில் தொடரும் உங்கள் பணி மென்மேலும் சிறப்புற்று மண்ணும் மொழியும் வளம்பெற்று பல்லாண்டுகள் உங்கள் வாழ்வும் சிறந்திருக்க இறையாசி வேண்டி வாழ்த்தி மகிழ்கின்றேன்.

அன்புடன்
கி. பரிமளராஜா
சமூக ஆர்வலர்
ஜேர்மனி

'எழைமக்கள் வறுமையால் மூடர்களாக இருக்கிறார்கள். செல்வர்கள் பேராசையால் மூடர்களாக இருக்கிறார்கள்.'

# அகவை அறுபது!...

அறுபதாவது பிறந்தநாளை, ஆவணி மாதம் கொண்டாடவுள்ள, இலக்கியங்களை நன்கு கற்ற, ஈகையாளரான, உண்மையாளரான, ஊர் போற்றுபவரான, எழுதுவதில் சிறந்த, ஏமாற்றத் தெரியாத, ஐம்புலன்களை அடக்கத் தெரிந்த, ஒற்றுமையைப் பேணும், ஓங்கிய எண்ணமுள்ள, ஔவியம் பேசாத "மண்" சஞ்சிகை ஆசிரியர் திரு சிவராசா அவர்களை வாழ்த்துவற்கு முன்பாக அவரைப்பற்றி எனக்குத் தெரிந்த ஒரு சில விடயங்களை இங்கு நான் குறிப்பிடவுள்ளேன். அதே நேரத்தில் தனது அறுபதாவது பிறந்ததினத்தையொட்டி இப்பெருமனிதன் வெளியிடவுள்ள "அலைகள் அறுபது" எனும் நூலில் இச்சிறியோனின் வரிகளும் இடம்பெறுவதையிட்டு மிகவும் பெருமைகொள்கின்றேன்.

கணக்காளராக தனது கடமையை ஆரம்பித்த திரு சிவராசா இலங்கையில் பிரபல பத்திரிகைகளில் ஒன்றான "ஈழநாடு" பத்திரிகையில் நிருபராகவும் கடமையாற்றினார். நாட்டு நிலமை காரணமாக 1983இல் புலம்பெயர்ந்து ஜேர்மனியில் குடியேறினாலும் இவரது தமிழ்ப்பற்றும் எழுத்தாற்றலும் சற்றும்குறையவில்லை. கணனி வசதியில்லாத அந்தக்காலத்தில் கையெழுத்துச் சஞ்சிகைகளை எழுதி வெளியிட ஆரம்பித்தார். தமிழ் பத்திரிகைகளோ சஞ்சிகைகளோ மருந்துக்கும் கிடைக்காத அந்தக்காலகட்டத்தில் இவர் எழுதிய சஞ்சிகைகள் புலம்பெயர் தமிழ் வாசகர்கள் கண்களுக்கு விருந்தாக அமைந்தன. இன்று 23 வருடங்களாக கிட்டத்தட்ட 160 "மண்" சஞ்சிகைகளை தமிழர்கள் கைகளில் தவழ விட்டிருக்கின்றார் என்றால் அந்தப் பெருமை முழுவதும் இச்சஞ்சிகை ஆசிரியர் திரு சிவராசா அவர்களையே சாரும்.

ஜேர்மனிய தமிழ் எழுத்தாளர் சங்கத்திற்கு தலைமை வகிக்கும் திரு சிவராசா ஒரு எழுத்தாளன் மட்டுமல்ல பல அறிஞர்களின் மாநாடுகளில் பங்கு பற்றியும், நடுவராகவும் கடமையாற்றியுள்ளார். இவை எல்லாவற்றிற்கும் மேலாக இவர் ஒரு சிறந்த சமூகசேவகனும் கூட. இன்று எம் தாய்நாட்டில் ஆதரவற்ற, ஊனமுற்ற, வலுவிழந்த சிறார்கள் தொடக்கம் முதியோர் வரை பெண்கள் முதல் ஆண்கள் வரை அங்கு எல்லா பகுதிகளிலும் உள்ள இல்லங்களுக்கூடாக நிதி உதவி பராமரிக்கின்றார். அதற்கான விபரங்களை தனது சஞ்சிகையிலேயே தகுந்த ஆதாரங்களுடன் வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்.

இது இவரது நேர்மைக்கு எடுத்துக்காட்டு. இச்சேவையை தான் செய்வதோடு மட்டும் நின்றுவிடாமல் தனது குடும்பத்தாரையும் மற்றும் பல வாசகர்களையும் இதில் ஈடுபடுத்தியுள்ளார். இது இவரது பெருமுயற்சி அல்லவா! "இல்லாதவர்களுக்கு கொடுத்து உதவி செய்வதே ஈகை எனப்படும்" என்ற வள்ளுவரின் கூற்றிற்கிணங்க வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த ஈகையாளரை உதவி பெறும் அனைத்து உள்ளங்களும் தினமும் வாழ்த்திய வண்ணம் இருக்கும்.

'தவறை மன்னிக்கும் குணம் ஒருவனின் உயர்ந்த பண்பாட்டைக் காட்டுகின்றது.'

வைர விழாக் காணும் திரு வயிரமுத்து சிவராசா அவர்கள் குடும்பத்தாருடன் பல்லாண்டு காலம் உடல் நலத்துடன் வாழ்ந்து தமிழுக்கும் தாய்நாட்டிற்கும் இன்னும் பல சேவைகள் செய்யவேண்டுமென இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

நட்புடன்...

சு. விக்னேஸ்வரன்
எசன் தமிழ்ப்பாடசாலை சார்பாக
ஜேர்மனி

# மண்ணை அணுகும் அரும்பெரும் செல்வன்

அகழ்வாரைத் தாங்குவது நிலம். அந்த நிலத்தில் உருவாகுவது மண். அந்த மண்ணானது தன்னகர்த்தே மனிதவர்க்கம் ,மிருகவர்க்கம் ,தாவரம் ,ஊர்வன ஆகியவற்றை தாங்கி நிற்கும் ஒரு மகத்தான பொருளாகும்.

இத்தகைய மகத்தான பொருளை மையமாக வைத்து மண் என்ற நாமத்தில் 160 இதழ்வரை பொறுமையுடனும் திறமைமிக்க ஆற்றலுடனும் சகல துறைகளும் அடங்கிய இச்சஞ்சிகையின் தந்தையாக விளங்கும் திரு வ. சிவராஜா அவர்களது 60வது வயதை முன்னிட்டு அகமிக வாழ்த்துவதில் பெருமிதம் கொள்கிறேன்.

மனிதநேயப் பணியில் மாசற்ற சேவையை மக்களுக்காகவும், நலன்புரி இல்லங்களுக்காகவும், தன்னலமின்றி சேவை மனப்பான்மையாக அயராது உழைத்து வரும் இவ் அண்ணலுக்கு எமது நல்லாசிகள்.

60வது வயதில் கால் பதிக்கும் சிவராஜா சகல செல்வங்களுடனும், ஆரோக்கியத்துடனும் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகிறேன். அவரது குடும்பத்தினருக்கும், மற்றும் அவரது உறவினர்களுக்கும் சிரம் தாழ்ந்த பாராட்டுகளையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.



இப்படிக்கு
த. பத்மகுணசீலன்
விஜயலக்சுமி ஞாபகார்த்தசிறுவர் கழகம்
கீல் நகர்
யேர்மனி

# வாழ்த்து...




ஜேர்மனி-டியூஸ்பேர்க் நகரிலே மண் என்ற விதை நிலத்திலே சமூகவியல், இலக்கியம் என்ற பரிணாமத்தோடு சஞ்சிகை என்ற சிறு கன்று நட்டு தமிழ்மொழி என்ற நீரூற்றி வளர்த்தெடுத்த விருட்சத்தின் மூலம் இரை தேடிக்கொண்டிருக்கும் எத்தனையோ பறவைகளுக்கும் ஆதரவுக் கரம் கொடுத்துக் கொண்டிருக்கிறார். 31-08-2013ல் அறுபது அகவையில் காலடி வைக்கும் மண் சஞ்சிகையின் ஆசிரியர் வயிரமுத்து-சிவராசா மாமா அவர்கள் இன்னும் பல தசாப்த அகவைகள் காணவேண்டும் என்று எல்லாம்வல்ல இறைவனை வேண்டிக் கொள்கின்றேன்.

செல்வன். பிரணவன் யோகராசா (யோகி)
டுசில்டோவ்
ஜேர்மனி

செல்வன்.பிரணவன் அவர்களை அவர் பிறந்தநாள் தொடக்கம் என்னோடு அறிமுகமானவர். தமிழ்-டொச்-ஆங்கில மொழிகளை நன்கே கற்றுக்கொண்டிருக்கிறார். தற்போது 18வயதை நிரம்பிய இவர் தனது ஒவ்வொரு வருட பிறந்தநாளுக்கும் தாயகத்திலுள்ள மாற்றுத் திறனாளிகளுக்கு மண் சஞ்சிகையூடாக நிதி உதவிபுரிந்து வருகின்றார். மனிதநேயம் மிக்க உதவியைச் செய்துவரும் யோகியையும் இவரது பெற்றோரையும் இச்சந்தர்ப்பத்தில் வாழ்த்துகின்றேன்.

# இனிய வாழ்த்துக்கள்!...

மண் இதழ் ஆசிரியர்...

அன்பின் சிவராசா அவர்கட்கு!...

தங்களின் அறுபதாவது பிறந்தநாள் இவ்வருடம் ஆவணி மாதத்தில் கொண்டாடவுள்ளதை அறிந்து எனது வாழ்த்தைத் தெரிவித்து நிற்கிறேன். மிகச் சந்தோஷம். இதற்கு நீங்கள் தகுதியானவர்களே!...

கடந்த பல வருடங்களாக மண் சஞ்சிகையை நடாத்திக்கொண்டிருக்கிறீர்கள் என்பதை நானும் நீண்டகால வாசகர் என்ற வகையில் அறிவேன். கலை இலக்கியத் தமிழ்ப்பணியோடு தாயகத்திலுள்ள பல ஆதரவற்ற இல்லங்களுக்கு உதவிகள் செய்கின்றீர்கள். மனிதநேயப் பணிகளுக்கு வாழ்த்துக்கள்.

நீங்கள் இன்னும் பல ஆண்டுகள் வாழ்ந்து புலம்பெயர் சிறார்களின் அறிவுப்பசிக்கு உதவவேண்டும். தாயக மக்களின் உணவுப்பசிக்கும் பல உதவிகள் மேலும் செய்ய வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். அத்துடன் ஒரு இனிய அன்பளிப்பையும் விரைவில் அனுப்பி வைப்பேன். அன்றைய டீயூஸ்பேர்க் தொடங்கி இன்றைய லண்டன்வரை நட்புத் தொடரோடு வாழ்த்துகிறேன்!...

அன்பின் நண்பன்
அரிச்சந்திரன்
லண்டன்

'எப்போதும் கீழே விழாமல் இருப்பது புகழுக்குரியதல்ல. விழும் போதெல்லாம் விழித்தெழுவதுதான் பெரும் புகழ் பெறும் வழி.'

# உச்சங்களின் உச்சத்தைத் தொடுக!...

மகிழ்ச்சியில் மனதுக்கு மிகமகிழ்ச்சி உண்டாவதெல்லாம்
மற்றவரை மகிழவைத்து மனதார மனம் மிகமகிழ்வதுதான்
புகழ்ச்சியிலும் போதைதரும் புத்துணர்வு வார்த்தைகளிலும்
புதைந்துபோய் வீழ்ந்துவிடாது புலம்பெயர்ந்த மண்ணிலே
இகழ்வாரையும் ஏற்றமுடன் ஏற்றுக்கொள்ளும்மனதுடன்-இன்றும்
இலங்குகின்ற சிவராசாவை ஏற்றமோடு நாம்வாழ்த்துகின்றோம்.!

மொழியைத்தொலைத்து மௌனித்தவர் பலரின்மத்தியிலே
மோகத்தால் பலமொழிகள் கற்றவர்கள் மிகசிலரிருக்கையில்
பழிபாவம் செய்திடாத பண்பினர் பாரில் பலருமுண்டு-தமிழை
பாங்குடன் மொழியாகப் பயில்வோர் இன்னும் பலருமுண்டு
விழியாக மொழியினை விருச்சமாய் வித்திட வாழும் சிலரில்
வீரியம்கொண்ட சிவராசாவை விருப்போடு வாழ்த்துகின்றோம்...!

மனிதம் மெல்லமெல்ல மறைந்துபோகும் இவ்வேளையிலே
மனிதரின் போக்குகளை மாற்றிடத்தான் மனம்கொண்டேயின்று
புனிதர்களைத்தேடுகின்ற புண்ணிய மார்க்கத்தைக் காட்டுகின்ற
பூக்களாய்ச் சிலபேர் புஷ்பித்து மண்ணில் புகழோடுவாழுகின்ற
புனிதம்மிக்கதோர் புனருத்தாரண பணியினுக்காய்-தம்மைப்
புதைத்தமனிதர் சிவராசா புகழ் புவியினில் நிலைத்துவாழ்க...!

கத்தும்கடலும் வான்வெளியும் காற்றும் சுற்றுச்சூழலும் உணவும்
களங்கம் கண்டு இவ்வுலகமே கன்றிப்போனபீதியில் நிதம்உழலும்
யுத்தம் இரசாயனம் குடிநீரில் உபாதைகள் சூழ்ந்துநின்று-பூமி
யுகம்யுகமாய் நாட்களையே உயிர்வாழப்போராடி கழித்திடவே
நித்தம்நித்தம் தவமியற்றுவதை நினையாது இருப்பவரையெலாம்
நிமிரவைத்திடவே உதவும்கரம் நேசஉள்ளம் சிவராசா வாழ்க!...

ஆதரவுக்கரம் நீட்டி பிறர்க்கு அன்பு செய்திடாமையெல்லாம்
அடுத்தவர் நலத்தினில் அக்கறை கொள்ளாமையென்றாகும்
அநாதரவானார் பலரின்று அல்லலுறும் அன்னை தேசத்தினில்
அவதியுறும் உடன்பிறப்புகளுக்கு அன்பையே மூலதனமாக்கி
அநாயாசமாக தம்முடனே ஆதரவுக்கரம் கொடுப்போரோடு-சேர்ந்து
அறவழியில் போராடிவென்றுவிட்ட அன்பர் சிவராசா புகழ்வாழ்க!...

புலம்பெயர்ந்த தேசத்தில் புத்திஜீவிகளையெலாம் ஒன்றிணைக்க
புதுப்புது முயற்சிகள் புற்றீசலாய் நடக்கும் பின்மறையும்காலை
பலம் பெருமைகாட்டி பாசாங்கு செய்வோர் பலரின்மத்தியினில்
பற்றோடு மொழிகலாசாரத்தைப் பாதுகாக்கும் பற்பலமுயற்சியில்
நலம்நேரம் பாராது நாடிவரும் நல்லவர் சிலருடன் -கைகோர்த்து
நன்நெறிப்படுத்தும் சிவராசா நலம்குன்றாத என்றென்றும்வாழ்க.!

இளையவர் திறனைக்கண்டு இயம்பிடும் நல்வகையிலினிலே
எழுத்தையும் கலைகளையும் ஏற்றமுடன் மிகஉயர்த்திடவே
முளையிலே இனம்கண்டறிந்து முழுமுனைப்போடு செயற்பட்டு
முன்னிலைப்படுத்திடும் அரியவிம் முயற்சிகள் தொடர்ந்திவே
சளைத்திடாத தொடராய் சாதனை பலநூறுபடைத்திட-தம்மை
சமர்ப்பணம்செய்து உழைத்திடும் சிவராசாவைவாழ்த்துகின்றோம்!

தாய்மொழிக் கல்வியின் தார்ப்பரியத்தை மிகஉணர்ந்தவாகளில்
தரணியில் பலபேர் தம்மைவருத்தியுழைக்கும் இவ்வேளைதன்னில்
வாய்மொழி இலக்கியமும் தமிழும் வரண்டுபோய் எதிர்காலத்தில்
வரலாறு தொலையும் ஆபத்தான எம்வறுமையைப்போக்கிடவே
நோய்களைத்தீர்த்திட எமக்காய் நோன்பினை நோற்றவராய்-மண்
நூலினைத்தந்திடும் சிவராசா நிறைந்து நலமாய் என்றும்வாழ்க!

நட்புடன்
அம்பலவன்புவனேந்திரன்
மற்றும் குடும்பத்தினர்
ஜேர்மனி



# அடிக்கட்டும் இன்னும் ஆயிரம் அலைகள்!...

சிறுத்த மனிதனைப் பெருத்து உயர்த்திட நிமிர்ந்த நன் நடை
விழுந்த உயிர்களை அணைத்து மகிழ்ந்திடச் சொரிந்த மா மழை
கறுத்த மனதினிற் புகுந்து குனிவினை அறுத்து அன்பிடை
எழுந்த அலை இது இதய நனைவினால் மகிழ்ச்சிப் புன்னகை!...

ஆளுகின்ற மனங்களில் அதிகார மமதை வெறிகளை
நூல் அறுந்த பட்டங்களாய் ஏற்றுக் காட்டிடப்படும் ஏழை பாளைகளை
பாமரங்கள் என்று எள்ளி நகையாடப்படும் பாள்வரங்களை
ஏற்றி நிலம் காக்க எம்மிடையே வந்த அன்பின் கொடை!...

நாட்டைச் சப்பித் துப்பி சதிராட்டம் போட்ட கூட்டம்
வேட்டைத் துப்பாக்கிகளை வீதி எங்கும் நிறைத்துவிட்டு ஓட்டம்
ஓட்டைத் தூக்கும் ஒட்டுத்துணி மனிதருக்குத்தான் திண்டாட்டம்
செட்டை கட்டிவந்த சேவகனன் சேவைக்குச் சொல்வோம் வணக்கம்!...

மண்தான் கொடுக்கின்றது மனிதனுக்கு என்று முகம்
மண்ணை விட்டோடி நாம் வெறுக்கின்றோம் அகம்
மண்ணுக்கும் ஒரு முகவரி கொடுக்கின்றது சிலரது மனம்
மண்ணில் நடந்தே விண்ணைத் தொட்டது உங்களின் குணம்!...

தலைவர்களைக் கடவுளாக நம்புகின்றவன் தமிழ்த் தொண்டன்
தலைவர்கள்தான் தொண்டர்களை வழிமாறி நடாத்தும் எத்தன்
இது எங்கள் சரித்திரங்கள் இரத்தத்தால் எழுதிய கதைகள்
உங்கள் வழியினிலே உயிர் பெற்றது ஓராயிரம் அலைகள்!...

படைப்பவன் எவனோ அவனே உலகில் பிரமம்
உழைப்பவன் எனவோ அவனோ அகிலத்தில் உரிமம்
காப்பவன் எவனோ அவனே கருணைக் கடவுள் - நீங்கள்
அனைத்துக்குமான உறவுப் பாலமாய் அன்பின் ஆழம்!...

வாழ்க்கை ஒரு முறை கிடைக்கும் நல்ல தவப்பயன்
அதை அவன் வாழ்வதற்கு என்றே தருகின்றது இயற்கை
வளரும் வேர்களைத் தேடி நீர் விட்டு வளர்க்கும் அன்பு இதயம்
இயற்கை போன்றே அற்புதமானதொரு மக்கள் உதயம்!...

## அலைகள் 60

அலைகள் சுழன்று அடித்தால்தான் அது ஆழ்கடல்
சுழன்று சுற்றி அடித்தால்தான் அது காற்று
கற்கள் விழ விழ சுற்றிக்கொண்டிருப்பதால் அது பூமி
மக்களுக்காய் போராடிக்கொண்டிருந்தால்தான் அவன் மனிதன்!...

நாடு நல்லதை நாடிச் செல்வது ரொம்பவும் இல்லை
நல்லதும் நாட்டை நாடிச்செல்வது எப்பவும் தொல்லை
கெட்டவைதான் நாட்டில் எல்லை தாண்டிப் போகும் நிலை
அறுபது அலைகள் எழுந்து இன்னமும் செய்யப்படும் புரட்சி அலை!...

விடியலை மறைப்பதற்குத் தான் எத்தனை கரு மேகங்கள்
விடுதலை பெறுவதற்கு மக்களிடம் இல்லை நம்பிக்கை வரங்கள்
பொன்னான உங்கள் வாழ்க்கை இன்னும் நூறாண்டுகள் வாழ்கவே
வாழ்த்திட வயதில்லை அண்ணலே வணங்குகிறேன் வாழி!...

நன்றி

ப.பசுபதிராசா
கவிஞர் - எழுத்தாளர்
ஜேர்மனி



# இனிய வாழ்த்துக்கள்!...



அறுபதாவது அகவையை சிறப்பாக கொண்டாடும் அண்ணர் சிவராஜாவுக்கு
மென் மேலும் சீரும் சிறப்பும் செல்வமும் பெற்று நோய் நொடி இன்றி
பல்லாண்டு காலம் மகிழ்வோடு வாழ வாழ்த்துகிறேன்

அறுபதை எட்டியும் இளமை மெருகுடன்
பார்க்கும் போது சிரித்த முகத்துடன்
பழகும் போது நண்பர்களிடம் நல்ல அன்புடன்
வாழும் போதும் மிகுந்த பண்புடன்
தான் பிறந்த மண்ணின் நேசத்துடன்
கடமைகள் செய்யும் நற் குணமுடன்
பிறருக்கு சேவை செய்யும் மனபான்மையுடன்
இருபத்தி மூன்று ஆண்டுகள் மண் இதழுடன்
வாழும் நற் தமிழன் தமிழ் பற்றுடன்
சிவராஜா என்னும் ஜேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்க தலைவர்
நூறு ஆண்டுகள் வாழ்க நூறாண்டுகள் வாழ்க
நோய் நொடி இன்றி நூறாண்டு காலம்

வாழ்க வாழ்க

கவி மீனா
கவிஞர்-எழுத்தாளர்
ஜேர்மனி

# வையத்தில் வைரமாய்

ஜனனத்தின் உவகையில் மகிழ்வித்த திருநாள்
வைரத்தின் பெருமையில் வாழ்ந்திடும் திருநாள்
பெற்றவர் பெருமிதம் பேரு உவகையில் நிறைந்திடும்
கற்றிடும் நிறைபணி சேவையில் புலப்படும்
மண்ணிதழ் காப்பினில் தாங்கிய தனித்துவம்
புலமதில் தமிழினை வளர்த்திட உழைத்தமை
எழுத்தினில் பலத்தினை தாய்தமிழ் சூடிட
மழலைகள் குழாமினை மகத்துவமாக்கிய
மண்ணிதழ் வீச்சினை தொடர்பணியாக்கிய
அயராத முயற்சியின் அர்ப்பணச் சுவாசம்
தொடராய்ப் பணியினை தொடரும் வீச்சும்
இலக்கிய யாப்பில் இனிதான படைப்பில்
வையகத்தமிழினை வற்றா ஊற்றாய் சங்கமம் செய்யும்
சரித்திரச் சான்று பொங்குது தமிழாய்
புவனத்தில் மொழியாய் எங்குமே மகிழ்வாய்
வைரத்தின் அகவை வைரமுத்து சிவராஜாவின் தகமை
மங்காத் தமிழின் வலம்புரி சங்காய் வாழ
வாழ்த்துக்கள் கோடி வாழ்த்துகிறோம் கூடி"
வைரத்தின் அகவைக்கு வாழ்த்துக்கள் கோடி.

வாழ்த்துக்களுடன்

திருமதி. வசந்தா ஜெகதீசன் குடும்பம்
கவிஞர்-எழுத்தாளர்
ஜேர்மனி

'சமாதானத்தின் முடிவில் யுத்தமும், யுத்தத்தின் முடிவில் சமாதானமும் ஒன்றோடொன்று பின்னிக்கிடக்கும் முரண் சக்திகள்.'

# வாழ்த்துப்பா!...

மண்ணின் மைந்தனே!
மண் சஞ்சிகையின் ஆசிரியரே!
பண்புடன் பழகும் சிவராஜா மாஸ்ரரே!
சமூகத் தொண்டு விரும்பி,
தமிழ் வளர்ப்பதில் ஆர்வலர்,
ஆடம்பரமின்றி அடக்கமாக,
அமைதியுடன் வாழ்பவர்,
கொஞ்சும் மழலைகள் தமிழிலில்
பிஞ்சு கரங்களால் எழுத,
தளம் அமைத்து கொடுத்தவரே!
வளம் பெற்று வளர்ந்திடவே!
மண் என்னும் சஞ்சிகையில்,
யாம் எழுதி ஆற்றல் பெற,
தாம் வழி வகுத்தனையோ.
எத்தனை எழுத்தாளர்,கவிஞர்.
அத்தனையும் உருவாக்கி,
தளம் தந்த பெருமைகுரியவரே!
பண்புடன் தன்னடக்கம்,
சமூகத் தொண்டில் உள்ளடக்கம்.
தாயகத் துன்புற்றோருக்கு,
தன்னாலாய உதவி புரிந்து,
தார்ப்பணிய உதவிக்காக,
மற்றவரை வழிநடத்தி,
மற்றவர் தரும் மணிகளை (பணம்)
தன் கையில் கோர்க்காது,
வறுமையுற்றோரிடம் சேர்ப்பது,
ஆசிரியரின் அற்புத சேவையே.
என்று தன் நலன் கருதி சேவை செய்வர் மத்தியில்
பிரதி பலன் பாராது உதவுபவர்.
கொடுக்கும் பணத்திற்கு தாயகத்தில்,
பற்று சீட்டு நகல்களை,
சஞ்சிகையில் போட்டு,நாமும் பார்க்க செய்வார்
உண்மையின் உறைவிடத்தை ஊர்ஜிதம் பண்ணி,
ஊருக்கு நன்மை செய்யும் இவர்,

இல்லறத்தில் அன்பான மனையாள்
நல்லறத்தில் நன் மக்கள்,
இவர்கள் இணைபிரியா அன்றில்கள்,
மணிவிழா நாயகன் சிவராஜா,
உண்மையான சமுக சேவகர்,ஊருக்கு உபகாரி
பண்பாகபேசி அன்பாக உறவாடும்
நட்பிற்கு நற்சான்றாய் நற்குணமுடையான்.
கலை கலாச்சாரத்தில்,கடமை, கண்ணியாமானவரே!
இன்று உமக்கு அகவை அறுபது,
பிறந்த வருஷம்,பிறந்த மாதம்,பிறந்த நட்சத்திரம்
ஆகிய மூன்று அம்சங்களும்
இன்று மீண்டு வர ஷஷ்டியப்த பூர்த்திவிழா காணும் நீவிர்
மகன்கள்,மகள்,மருமகன்,இவர்களுடன் சேர்ந்து
விழாக்காணும் நீவிர் புண்ணியம் செய்தவர்களே.
நூறாண்டுகள் நீவிர் நீடூழி வாழ்க
அன்புடன்

திருமதி. கெங்கா ஸ்ரான்லி
கவிஞர்-எழுத்தாளர்
ஜேர்மனி.



# அறுபதாம் அகவைக்கோர் அகம்மகிழ் வாழ்த்து!

அறுபதாம் அகவை அழகாய் மலர்ந்தது
அனுபவம் பதித்த முத்திரைகளோடு
நடந்த பாதை கடந்தே சென்றிட
தொடரும் பாதை திறந்தே வழிவிட
இளமை, இனிமை, இதந்தரும் பொழுதாய்க்
கழிந்த நாட்கள், கண் கலங்கிய பொழுதுகள்
உயர்வுகள் தந்த ஊக்கம் பெருமை
ஒருபடி இறங்கத் தடுமாறிய நிலைமை
எதிர்வந்த எதனையும் இயல்பாய் ஏற்று
மண்ணில் விதைத்த பயன்தரு விதைகள்
கண்ணெனக் கருதிய பொதுநலச் சேவைகள்
கருணை கொண்டு கண்ணீர் துடைத்திட
காலத்தால் செய்த கணக்கிட முடியாத
மாபெரும் உதவிகள், மாண்புறு உளப்பண்பு
அறமது போற்றும் சோர்வுறாப் பெருமனதால்
திறமேற்றும் அருந்தொண்டால் செம்மலெனச்
செயற்கரிய செம்மையுறு நற்செயலால்
தமிழினத்திற்கு பெரும் பயன் மேவச் செய்தே
எழிற்படுத்தும் நற்பணியீர்! சாயாத குறிக்கோளின்
தலைவனாக மண்ணுலகம் உள்ளவரை
நீடு வாழ்க! புகழ் நிலைத்து வாழ்க!

திருமதி. பத்மாஷனி மாணிக்கரட்ணம்
கவிஞர்-எழுத்தாளர்
ஜேர்மனி



# அகவை 60 நிறைவு

வாழ்த்து...!அறுபது ஆண்டின் முன்னர் வந்ததோர் விஜய ஆண்டில்
நாவற்குழியில் வைரமுத்து-தங்கம்மா
பெற்றோர்க்கு மைந்தனாய் தரணியில் பிறவி தந்தீர்
மீண்டுமேயந்த விஜயயாண்டு வந்ததால் தானே நீரும்
ஆண்டு அறுபதில் உறவுகள்கூடி மணிவிழாக் காணுகின்றீர்.!
அன்னை மடியினில் சிறிதுகாலம், பள்ளிப் படிப்பினில் சிறிதுகாலம்
காலத்தின் மரபுக்கேற்ப வாழ்ந்திட இல்லறத்தில்
கனிமொழியாள் இராஜேஸ்வரியை திருமண வாழ்விலேற்று...
முத்துக்கள் மூன்றை முறைபடிதானே பெற்றீா...!
முத்துக்கள் மூன்றுமின்று உயர்நிலைக் கல்விகொண்டு...
முழுமதியாய் மக்கள் முன்னிலை நிற்றல் கண்டோம்.நீவீரும்
மனையறம் பேணிக்காத்து அனைவரும் போற்றும் வண்ணம்
மக்கள்நலமதுபேணி துன்பத்தில்வாடும் மக்கள் உயர்வுக்காய்
உழைப்பதாலே நண்பர்கள், உறவுகள், பொர்துமக்கள்கூடி
மணிவிழாக் காணுகின்றார் வாழியவாழிய நீடுழி நீடுழி வாழியவே!
கனிவுடன் இனிதே இன்னும் பவளமும், வைரமும் கண்டு
மகிழ்வுறு மனித வாழ்வில் ஒளிவுறு முத்தும் கண்டு...!
வாழ்க்கையின் நிறைவு சொல்லும் வளர்பிறை ஆயிரம்கண்டு
நூறாண்டு நீவீர்வாழ்ந்து பல்லாண்டு பார்போற்றும் புகழோடு
வாழ்க,வாழ்கவென அம்பிகை அருள்வேண்டி வாழ்த்துகின்றோம்.
புலம்பெயர்சேவை தலைமுறையின் முன்னணி வரிசையிலே
ஜேர்மனியில் பார்த்துநாம் மகிழ்துநிற்கும் எம்நண்பர் !
நேர்த்திதவறாத நம்பிக்கை கொண்ட மண்சஞ்சிகை ஆசிரியர்
கூர்ந்த மதிகொண்ட சீர்கொண்டமனைவி இராஜேஸ்வரியோடு...!
இன்னும் பற்பலநூறாண்டு வாழ்வினில் இன்புற்று சிறக்கவாழ்ந்து.
மகிழ்வுடன் சீரோடு வாழ்க,வாழ்கவென மனதார வாழ்த்துகின்றோம்...!

இவ்வண்ணம்
அன்புடன் வாழ்த்துவோர்கள்

வேலணையூர் பொன்னண்ணா குடும்பம்
கவிஞர்-எழுத்தாளர்
டென்மார்க்

# ஏற்றிப்பாடல்

கடல்நீர் முகர்ந்து மழைநீர் தரும் முகிலன்ன
பணமனைநாடி பயன்தனைப் பகிர்ந்தளிக்கும்
பண்பாளன் சீரான் சிவராஜா அண்ணன் பெருமைதனை
பகரும் நாள் இதுவன்றோ பாடும்நாள் பெரிதன்றோ
ஊரார் மெச்சவே உலகத்தார் மனமறிந்து
தேராகும் கணனியால் தேர்வாகும் எழுத்துக்களை
தேர்ந்திழுத்து சேர்த்தணைத்து நூலாக்கும் பணியாலே
ஓயாத பொழுதுகளை உணர்வோடு உவந்தளிக்கும்
உத்தமனார் பற்றாளன் உவகைகொள் நாள் இதுவன்றோ
மன வெளிப்பாட்டுத் துணைக்கருவி எழுத்துக்களை
மனமுவந்து உவந்தளித்த தாயகச் சிறார்
பெருமைதனை நூற்துணை கொண்டு வெளிக்காட்டி
தளம் தந்து அநாதைச் சிறார் அன்பணைத்து அரவணைத்து
அகிலம் போற்றும் அன்னார் புகழ்பாடும் நாள் இதுவன்றோ
தனைக்காத்து தன் மனைகாத்து தன் தொழில்காத்து
பலர் நலம் வாழ நல்லவை யனைத்தும் காத்து
பணியெனப் பறைசாற்றி பலரறிய உரைக்காது
நயமாக நாவினிக்க பிறர் மனம் வருந்தா
பணியாற்றும் பேராளன் பாடும்நாள் இதுவன்றோ
வாழும்நாட்டு வளஞ்சேர்த்து வாழ்ந்தநாடு தனைக்காத்து
சேர்ந்த நாட்டுச் சுகம்கண்டு தாய்நாட்டு அநாதைகளின்
சொல்லொணாத் துயரனைத்தும் தீர்க்கவென ஆதரித்து
பேணித் துணை புரிந்து செயலாற்றும் காவலனார்
பத்தாறு ஆண்டுகண்ட மனமகிழ்வு போற்றி போற்றி
ஆண்டுகள் பல காண வேண்டும் அன்புள்ளம் சேரவேண்டும்
ஆயுள் வரை ஓயாது அநாதைகள் பேண வேண்டும்
சோர்வில்லா மனதோடு சேவைகள் பெருகவேண்டும்
வாழ்வாங்கு வாழ்ந்து புகழ் வையகம் பேச வேண்டுமென
இந்நன்னாளாம் பெருநாளில் மனமார வாழ்த்துகின்றேன்

கௌசி
சோலிங்கன்
கவிஞர்-எழுத்தாளர்
ஜேர்மனி

# 60வது அகவை

மண் இதழால் வாசனை உயருகிறது
அறிவுக் கண்களைத் திறக்கின்றீர்கள்
இழப்பினால் தவிக்கும் எங்கள்
இளம் சிறாருக்கும் இயலாதோருக்கும்
உதவிக் கரம் கொடுக்கிறீர்கள்!...

இந்த உலகத்தில் உங்கள்
இளமையில் பட்ட இன்னலில்
ஏற்பட்ட தியாகத்தைக்கொண்டு
நல்லதொரு கொள்கையோடு - நமக்கு
எடுத்துக்காட்டாய் வாழ்கிறீர்கள்!...

அறுபதாவது அகவையை அடையும்
உங்களை அகமகிழ உளம் மலர்ந்து
நீடுழிவாழ வாழ்த்துகின்றோம்
பல்லாண்டுகாலம் வாழ கடவுள்
துணைபுரிய வாழ்த்துகின்றோம்!...

செல்வன். ராகுல்
செல்வி. நந்தனா
கனகராசா (குமரன்) - ஜேர்மனி





# சென்றுவந்த நாடுகள்

உலகில் பெரிய சிறிய என இருநூறு வரையிலான நாடுகள் இருப்பினும் நான் ஒரு சில நாடுகளுக்கே சென்று வந்திருக்கிறேன். உறவுகள், நண்பர்களைச் சந்திப்பதற்காகவும் வேலை, சுற்றுலா விடையங்களுக்காகவும் இந்த நாடுகளுக்குப் பிரயாணம் செய்திருக்கிறேன். இந்த நாடுகளைப் பதிவு செய்கிறேன்.

1. இந்தியா
2. ரஷ்ஷியா
3. ஜேர்மனி
4. சுவீஸ்லாந்து
5. டென்மார்க்
6. சுவீடன்
7. நெதர்லாந்து
8. பெல்ஜியம்
9. லக்ஸம்பேர்க்
10. பிரான்ஸ்
11. இத்தாலி
12. பிரித்தானியா
13. டுபாய்
14. தாய்லாந்து
15. சிங்கப்பூர்
16. மலேசியா
17. ஐக்கிய அரபுக்குடியரசு

# சென்றுவந்த ஊர்கள்

தாயகத்தில் வாழ்ந்த முப்பது ஆண்டுகளில் நாட்டின் பல பாகங்களுக்கும் சென்று வந்திருக்கிறேன்.உறவுகள் நட்புக்களோடும் மற்றும் கல்வி, விளையாட்டு, வேலை, சுற்றுலா விடையங்களுக்காகவும் பல பாகங்களுக்கும் சென்று வந்திருக்கிறேன். இந்த ஊர்களை மறக்காமல் பதிவு செய்கின்றேன்.

## யாழ் மாவட்டம்:-

1. கைதடி
2. நுணாவில்
3. மட்டுவில்
4. சாவகச்சேரி
5. உசன்
6. சரசாலை
7. மீசாலை
8. எழுதுமட்டுவாள்
9. மிருசுவில்
10. கொடிகாமம்
11. வரணி
12. நெல்லியடி
13. அல்லாரை
14. கச்சாய்
15. அரியாலை
16. யாழ்ப்பாணம்
17. நல்லூர்
18. திருநெல்வேலி
19. கொக்குவில்
20. கோண்டாவில்
21. உரும்பராய்
22. ஊரெழு
23. புன்னாலைக்கட்டுவன்
24. பலாலி
25. சுதுமலை
26. தாவடி
27. இணுவில்
28. மருதனார்மடம்
29. உடுவில்
30. சுன்னாகம்
31. மல்லாகம்
32. தெல்லிப்பழை
33. மாவிட்டபுரம்
34. காங்கேசன்துறை
35. அளவெட்டி
36. மூளாய்
37. கந்தர்மடம்
38. மானிப்பாய்
39. ஆனைக்கோட்டை
40. சண்டிலிப்பாய்

41. தொண்டமனாறு
42. மறவன்புலவு
43. கேரதீவு
44. சங்குப்பிட்டி
45. கட்டுவன்
46. சங்கானை
47. வட்டுக்கோட்டை
48. பண்டத்தரிப்பு
49. மாதகல்
50. சுழிபுரம்
51. கோப்பாய
52. நீர்வேலி
53. புத்தூர்
54. ஆவரங்கால்
55. அச்சுவேலி
56. வாதரவத்தை
57. சிறுப்பிட்டி
58. கொழும்புத்துறை
59. ஊர்காவற்றுறை
60. வேலணை
61. மண்டைதீவு
62. அல்லைப்பிட்டி
63. மண்கும்பான்
64. நாவாந்துறை
65. சுருவில்
66. நாராந்தனை
67. புளியங்கூடல்
68. புங்குடுதீவு
69. நயினாதீவு
70. நெடுந்தீவு
71. இளவாலை
72. கச்சதீவு
73. கோவிலாக்கண்டி
74. காரைநகர்
75. கீரிமலை

## முல்லைத்தீவு மாவட்டம்:-

1. மாங்குளம்
2. ஒலுமடு
3. ஒட்டுசுட்டான்
4. முத்துஐயன்கட்டு
5. தண்ணீரூற்று
6. முள்ளியவளை
7. வற்றாப்பளை
8. முல்லைத்தீவு
9. புதுக்குடியிருப்பு
10. அளம்பில்
11. வன்னிவிளாங்குளம்
12. வவுனிக்குளம்
13. பாண்டியன்குளம்
14. ஒட்டன்குளம்
15. சிவநகர்
16. மல்லாவி
17. யோகபுரம்
18. துணுக்காய்
19. புத்துவெட்டுவான்
20. உயிலங்குளம்
21. தென்னியன்குளம்
22. தேறாங்கண்டல்
23. நட்டாங்கண்டல்
24. கல்விளான்
25 கோட்டைகட்டி
26. ஆலங்குளம்
27. கல்விளான்

## மன்னார் மாவட்டம்:-

1. வெள்ளாங்குளம்
2. விடத்தல்தீவு
3. உயிலங்குளம்
4. திருக்கேதீஸ்வரம்
5. மன்னார்
6. தலைமன்னார்
7. எருக்கலம்பிட்டி
8. பேசாலை
9. மடு
10. நானாட்டான்.
11. இலுப்பைக்கடவை

## கிளிநொச்சி மாவட்டம்:-

1. பூநகரி
2. கிராஞ்சி
3. வேரவில்
4. பளை
5. விடத்தல்பளை
6. அராலி
7. சங்கத்தார்வயல்
8. ஆனையிறவு
9. பரந்தன்
10. கரடிப்போக்கு
11. குஞ்சுப்பரந்தன்
12. கிளிநொச்சி
13. முருகண்டி
14. அக்கராயன்குளம்
15. வன்னேரிக்குளம்
16. உருத்திரபுரம்
17. திருநகர்
18. முரசுமோட்டை
19. புளியம்பொக்கணை

## வவுனியா மாவட்டம்:-

1. வவுனியா
2. நெடுங்கேணி
3. ஒலுமடு
4. நம்பைக்குளம்
5. ஓமந்தை
6. கனகராசன்குளம்
7. நொச்சிமோட்டை
8. செட்டிகுளம்
9. புதூர்
10. புளியங்குளம்

## கிழக்கு மாகாணம்:-

1. திருகோணமலை
2. கந்தளாய்
3. கிண்ணியா
4. வாழைச்சேனை
5. மட்டக்களப்பு
6. காத்தான்குடி
7. திருக்கோவில்
8. அம்பாறை
9. கல்முனை
10. நிந்தாவூர்
11. பொலநறுவை
12. பொத்துவில்
13. புல்மோட்டை

## ஏனைய பகுதிகள்:-

1. அநுராதபுரம்
2. சிகிரியா
3- தம்புள்ள
4. குருநாகலை
5. மிகிந்தலை
6. கண்டி
7. பேராதனை
8. பொல்கொல்லை
9. மாத்தளை
10. கபறணை
11. புத்தளம்
12. சிலாபம்
13. நீர்கொழும்பு
14. நுவரெலியா
15. பதுளை
16. பண்டாரவளை
17. நாவலப்பிட்டி
18. டிக்கோயா
19. குருநாகலை
20. பொல்காவலை
21. கட்டுநாயக்கா
22. மொறட்டுவை
23. காலி
24. மாத்தறை
25. அம்பாந்தோட்டை
26. கதிர்காமம்
27. ஹற்றன்
28. உடப்பு
29. முனீஸ்வரம்
30. மாபொல

'தேவையில்லாதபோது வாயை மூடிக்கொண்டிருங்கள். சரியான சந்தர்ப்பம் வந்தால் சொல்லுங்கள். சொல்வதை ஆணித்தரமாகச் சொல்லுங்கள்.'

# நிகழ்வுகள்: ஆகஸ்ட் - 31ல்

1422 - ஆறாம் ஹென்றி 9 மாத அகவையில் இங்கிலாந்தின் மன்னன் ஆனான்.

1864 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: அமெரிக்கப் படைகள் ஜோர்ஜியாவின் அட்லாண்டா நகர் மீது தாகுதலைத் தொடுத்தனர்.

1886 - தென் கரோலினாவில் சார்ல்ஸ்டன் நகரில் நிலநடுக்கம் ஏற்பட்டதில் 100 பேர் கொல்லப்பட்டனர்.

1888 - கிழிப்பர் ஜேக்கின் முதலாவது படுகொலை இடம்பெற்றது.

1897 - தொமஸ் எடிசன் முதலாவது திரைப்படம் காட்டும் கருவியான கினெட்டஸ்கோப்புக்கான காப்புரிமம் பெற்றார்.

1919 - அமெரிக்க கம்யூனிஸ்ட் கட்சி அமைக்கப்பட்டது.

1920 - போலந்தில் கமரோவ் என்ற இடத்தில் சோவியத் போல்ஷெவிக்குகளுடன் இடம்பெற்ற போரில் போலந்து வெற்றி பெற்றது.

1942 - மேற்கு உக்ரைன், டெர்னோப்பில் என்ற இடத்தில் காலை 4:30 மணிக்கு 5,000 யூதர்கள் பெல்செக் என்ற நாசி வதைமுகாமிற்கு அனுப்பப்பட்டனர்.

1945 - ஆஸ்திரேலியாவில் லிபரல் கட்சி ஆரம்பிக்கப்பட்டது.

1957 - ஐக்கிய இராச்சியத்திடம் ,ருந்து மலாயா கூட்டமைப்பு விடுதலை பெற்றது.

1962 - ஐக்கிய இராச்சியத்திடம் ,ருந்து திரினிடாட் டொபாகோ விடுதலை பெற்றது.

1968 - கார்.ஃ.பீல்ட் சோபர்ஸ் கிரிக்கெட் போட்டியொன்றில் ஒரு ஓவரில் 6 ஆறு ஓட்டங்களை எடுத்து சாதனை புரிந்தார்.

1978 - இலங்கையில் ஜனாதிபதி ஆட்சிமுறையை அறிமுகப்படுத்திய புதிய அரசியல் யாப்பு வெளியிடப்பட்டது.

1986 - கலிபோர்னியாவில் இரு விமானங்கள் வானில் மோதிக்கொண்டதில் 67 பேர் வானிலும் 15 பேர் தரையிலும் கொல்லப்பட்டனர்.

1986 - சோவியத் பயணிகள் கப்பல் "அட்மிரல் நகீமொவ்" கருங்கடலில் மூழ்கியதில் 423 பேர் கொல்லப்பட்டனர்.

1991 - சோவியத் ஒன்றியத்தில் இருந்து கிர்கிஸ்தான் வெளியேறி தனிநாடாக அறிவித்தது.

1994 - ஐரியக் குடியரசு இராணுவம் போர்நிறுத்தத்தை அறிவித்தது.

1997 - வேல்ஸ் இளவரசி டயானா பாரிஸில் கார் விபத்தில் கொல்லப்பட்டார்.

1998 - வட கொரியா தனது முதலாவது செய்மதியை ஏவியது.

1999 - புவெனஸ் ஐரிசில் பயணிகள் விமானம் ஒன்று விமான நிலையத்தில் இருந்து புறப்படுகையில் விபத்துக்குள்ளாகியதில் 65 பேர் கொல்லப்பட்டனர்.

2005 - பக்தாத்தில் அல் ஆயிம்மா பாலத்தில் கூட்ட நெரிசலில் சிக்கி 1,199 பேர் கொல்லப்பட்டனர்.

2007 - அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியை நடிகர் சரத் குமார் ஆரம்பித்தார்.

பிறப்புக்கள்

1569 - ஜஹாங்கீர், இந்தியாவின் முகலாயப் பேரரசின் மன்னன் (,. 1627)

1870 - மரியா மாண்ட்டிசோரி, இத்தாலியைச் சேர்ந்த கல்வியாளர் (,. 1952)

1944 - கிளைவ் லொயிட், மேற்கிந்தியத் தீவுகளின் துடுப்பாளர்

1979 - யுவன் சங்கர் ராஜா, தமிழ்த் திரைப்பட இசையமைப்பாளர்

இறப்புகள்

1814 - ஆர்தர் பிலிப், பிரித்தானிய கடற்படை அட்மிரல், காலனித்துவ நிர்வாகி (பி. 1738)

1963 - ஜோர்ஜெஸ் பிராக், பிரெஞ்சு ஓவியர் (பி. 1882)

1997 - டயானா, வேல்ஸ் இளவரசி (பி. 1961)

2001 - ஜி. கே. மூப்பனார் தமிழக காங்கிரஸ் தலைவர் (பி. ஆகஸ்ட் 30-1931)

சிறப்பு நாள்

மலேசியா - விடுதலை நாள் (1957)

திரினிடாட் டொபாகோ - விடுதலை நாள் (1962)

கிர்கிஸ்தான் - விடுதலை நாள் (1991)

'பிறர் நம்மைப் புகழும் புகழ்ச்சி பூவைப் போன்றது. நாம் அதன் வாசனையை நுகரலாம். ஆனால் அதை அப்படியே விழுங்கிவிடக்கூடாது.'

DÜSSELDORF

HILTON

BESTER VORSCHLAG DES MONATS

J A N U A R 1992

VON: Herrn Vyramuthu Sivarajah

Herr Sivarajah ist als Spüler in unserer Stewarding-Abteilung beschäftigt. Er hat vorgeschlagen, ein besseres Kontrollsystem im Stewarding zu etablieren, um Kosten für die Energie zu sparen.



Für diesen hervorragenden Vorschlag, den wir einführen werden, erhielt Herr Sivarajah DM 500,-- brutto als Dankeschön und Anerkennung. Herzlichen Glückwunsch - wir freuen uns mit ihr.

Personalbüro, 11.03.1992

DÜSSELDORF HILTON, ZWEIGNIEDERLASSUNG DER HILTON INTERNATIONAL (GERMANY) GMBH
GEORG-GLOCK-STRASSE 20, 4000 DÜSSELDORF 30, TELEFON (02 11) 43 77 0, TELEFAX (02 11) 4 37 76 50, TELEX 8 584 376




மண்


மண் சஞ்சிகை,


முடிவல்ல... ஆரம்பம்.










ாவலர் தமிழ்ப் பாடசாலை-சோஸ்ற்
Navalar Tamilische Schule-Soest


மண் சஞ்சிகை










மண் சஞ்சிகை,

STADTTEIL-ZEITUNG WDUS_2 Nummer 39 Mittwoch, 1

# In Gedanken ist er immer wieder in seiner alten Heima

Seit 1983 lebt Vyramuthu Sivarajah (51) als Asylant in Deutschland - und hilft seinen tamilischen Landsleuten hier und in Sri Lar

Von Martin Kleinwächter

Vyramuthu Sivarajah (51) bat 1983, als der Bürgerkrieg in seiner Heimat Sri Lanka ausbrach, um Asyl in Deutschland. 1984 holte er Frau und Tochter nach. Die beiden Söhne wurden hier geboren. Heute hält er in seiner Freizeit als Journalist die Tamilen in Deutschland zusammen - und engagiert sich für die Opfer der Flutkatastrophe vom 26. Dezember.

Sein Leben in Frieden als Asylant, im Hochhaus an der Angertaler Straße, hat Sivarajah damit bezahlen müssen, beruflich weit hinter seinen Möglichkeiten in der Heimat zurück zu stehen. Dort, in der Provinz Vavuniya, war er als Buchhalter tätig - und nebenbei als Reporter der Lokalzeitung. In Deutschland ist er Steward im „Hilton" in Düsseldorf. Mit fester Anstellung.

Sein ganzer Stolz sind die drei Kinder: Tochter Sivatharsini (22), die am Mannesmann-Gymnasium das Abitur gemacht hat und heute in Münster Biomedizin studiert. Sohn Sivasgar (19), ebenfalls frisch gebackener Abiturient, den es nach dem Zivildienst zum Studium nach Großbritannien zieht, und „Nesthäkchen" Sivakanth (16), der an der Gesamtschule Süd das Abitur anstrebt.

Die Söhne sprechen akzentfrei Deutsch. Der Vater hat es nie ernsthaft gelernt. „Das war ein großer Fehler", ist sich die Familie bewusst. Sechs Jahre lang, bis 1990, hatte Sivarajah Arbeitsverbot in Deutschland. Bis sein Asylverfahren abgeschlossen war. Verpflichtende Sprachkurse gab es damals nicht, ebenso keine berufliche Förderung. Die Zeit blieb ungenutzt. „Sinnlose Jahre", sagt er heute.

Der Mann mit dem strahlend weißen Lächeln ver-

**Wanheim**

Die Hochhaus-Siedlung an der Angertaler Straße

schrieb sich von Anfang an seinen Landsleuten in Deutschland und in der Heimat. Seit Januar 1990 gibt er „Erde" heraus, ein Monats-Magazin für Tamilen in Deutschland, das heute sechsmal jährlich erscheint. Darin wertet Sivarajah Zeitungen in tamilischer Sprache aus, die in Paris und London erscheinen, berichtet aus Deutschland und aus aller Welt, über Kultur und Sport. Vor allem aber: Er bietet darin tamilischen Kindern die Möglichkeit, die Muttersprache zu üben. Rätselaufgaben machen es möglich. Die Auflage ist zwar von 200 auf 150 gesunken. Schließlich kann heute auch tamilisches Satelliten-Fernsehen empfangen werden.

Aber was vom „Abo"-Preis von zehn bis 15 Euro jährlich für sechs Hefte übrig bleibt, wurde stets für gemeinnützige Zwecke in die Heimat transferiert. Bis heute 44 000 Mark und 4 600 Euro. Sie haben in Sri Lanka eine enorme Kaufkraft. Der verheerende Bürgerkrieg hat Hunderttausende von Kindern zu Waisen und viele von ihnen zu Krüppeln gemacht. Sivarajah zeigt Bilder von grauenhaften Verstümmelungen derer, die in Kontakt mit Landminen kamen. Ihnen Prothesen zu beschaffen, war einer der Zwecke. Ein dicker Stapel von Dankschreiben, alle in tamilischer Schrift verfasst, zeugt davon.

Ein erster Spendenaufruf für die Opfer der Flutkatastrophe in der jüngsten Ausgabe seines Magazins hat bereits 2 146 Euro erbracht. 500 Euro davon hat der Herausgeber bereits in die Heimat überwiesen, an die Hilfsorganisation „Tamils Rehabilitation Organisation" (TRO). Ein ehemaliger Parlamentsabgeordneter der Tamilen hat davon Kleidung und Nahrung für betroffene Heimkinder beschafft. „Der Rest wird gezielt weitergeleitet, sobald Nachricht da ist, wo der Bedarf am größten ist", sagt er.



Vyramuthu Sivarajah mit Bildern von Waisenkindern. Bild: Engel

Wohl bei den Waisenkindern. Sivarajah bittet um weitere Spenden auf sein Konto (Nummer 225 00 „Mann-Erde Sparkasse (B

## Inselstaat Sri L

Ehemalige Kolonie ringt um den

Nicht ganz so groß wie Bayern, rund 65 000 Quadratkilometer, ist die Insel Sri Lanka (früher Ceylon) vor der Südostküste Indiens groß. Allerdings leben dort fast doppelt so viele Menschen wie in Bayern: 19,3 Mio. 74 % von ihnen gehören der (überwiegend buddhistischen) Volksgruppe der Singhalesen an, 18 % der Minderheit der (überwiegend hinduistischen) Tamilen, die die gesamte östliche Küste besiedeln. Christen und Muslime bilden weitere Minderheiten. Ceylon wurde 1505 portugiesische Kolonie. Seit 1896 gehörte es zum britischen Weltreich, wurde aber 1947 in die Unabhängigkeit entlassen. Seit 1983 erschüttert ein Bürgerkrieg zwischen Singhalesen und Tamilen das Land. Mehr als 60 000 Menschenleben hat er bislang gekostet. Seit 2002 verhandeln Regierung und tamilische Rebellen über eine Beilegung ihres Konflikts. Die Friedensgespräche gerieten allerdings ins

Stocken. Der
heerende Flu
die von Tamil
küste herein,
Todesopfer. I
Elend könnte
gen Versöhnu

Sri Lanka i
Bauernland n
mem Klima. N
schen leben
dem Lande w
und Kaffee a
dem Rubber,
produkt. An

**HINTERG**

Fischfang be
nenland werd
gebaut.

Weniger als
Bevölkerung
len. Für je 5 0
es einen Arzt.
keit lag 2001 b
tion 2002 knap
zent. Das Br
pro Kopf lag
880 US-Dolla




MADE IN
KINGSTON













திரு.வயிரமுத்து சிவராசா அவர்கள் சுயநலம் கருதாது பொது நலமே கொள்கையாகக்கொண்டு வாழ்ந்து வருபவராவர். மண் சஞ்சிகையூடாக தாயகத்துக்கு ஆற்றிவரும் இவரின் சேவையோ அளப்பரியது. புலம்பெயர்ந்து வாழும் ஜேர்மனியிலும் இவரின் பணிகள் பாராட்டுக்குரியதே. அறுபதாவது அகவையைக் காணும் இவரை இத்திருநாளில் மனம் நிறைவோடு பாராட்டி வாழ்த்துகிறேன்.

க. பத்மகுணசீலன்
சிரேஸ்ட மொழிபெயர்ப்பாளர்
கீல்நகர் - ஜேர்மனி